# புது டயரி

கி. வா. ஜகந்நாதன்

விற்பனை உரிமை:

அமுத நிலையம் லிமிடெட்

46, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-600 014.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

உரிமை ஆசிரியருக்கே.

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1979.

விலை. ரூ. 10-00

வெளியீட்டாளர் :
காந்தமலை வெளியீடு,
சென்னை-28.

கற்பகம் அச்சகம், சென்னை-600 002.

# முன்னுரை

நம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ விதமான அநுபவங்களை நாம் பெறுகிறோம். பல்வேறு குணங்களையுடைய மனிதர்களோடு பழகுகிறோம்; பிறருடைய பேதைமையையும் சாமர்த்தியத்தையும் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் பல கிடைக்கின்றன. நம்முடைய பைத்தியக்காரத்தனத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நடக்கின்றன.

இவற்றையெல்லாம் நேரிலே பார்க்கும்போது நமக்கு அந்த நிகழ்ச்சியினால் விளையும் விளைவுக்கு ஏற்ற உணர்ச்சி உண்டாகிறது. ஆனால் அந்த நிகழ்ச்சிகள் நடந்து பல காலத்துக்குப் பிறகு அவற்றைச் சிந்தித்துப் பார்த்தால், அவற்றில் உள்ள விசித்திரத்தன்மை புலனாகிறது. முன்பு அந்த நிகழ்ச்சியில் ஈடுபட்ட பாத்திரமாக இருந்ததனால் அதன் நேரடி விளைவே தெரிந்தது. இப்போதோ ஏதோ ஒரு நாடகத்தைப் பார்ப்பதுபோல, வேறாக நின்று பார்க்கிறபோது நமக்கு உண்டாகும் உணர்ச்சி வேறானது; ஒரு வாழ்க்கை வரலாற்றைப் படித்துச் சுவைப்பது போலத் தோன்றுகிறது.

இப்படி நிகழும் உலகியலில்தான் எத்தனை விசித்திரங்கள்! ஒரு சிறிய நிகழ்ச்சியானாலும், அதனோடு தொடர்புடையவர்களின் மனநிலையை இப்போது நினைத்துப் பார்த்தால் நமக்கு ஒருவகையில் பற்றற்ற உணர்ச்சியே உண்டாகிறது. நடந்தவற்றை எண்ணி எண்ணிப் புன்னகை பூக்கும் வகையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கும்

வாழ்க்கை அநுபவங்களில் இப்படி, நினைந்து சிரிக்கும் பகுதிகள் இருப்பதனால் நாம் தளர்ச்சியடையாமல் வாழ்கிறோம். ''இடுக்கண் வருங்கால் நகுக'' என்று திருவள்ளுவர் சொல்வது எவ்வளவு உயர்ந்த கருத்து! முதலில் இடுக்

கண்ணுக முன்பு வந்ததை இப்போது நினைத்துச் சிரிக்க வேண்டும்; பிறகு இடுக்கண் வரும் போது சிரிக்கும் ஆற்றல் உண்டாகும்.

வாழ்க்கை அநுபவங்களில் மென்மையான நகைச் சுவையை உண்டாக்குபவற்றைப் பற்றி எழுதினுல் நாம் புன்னகை பூப்பது போல மற்றவர்களும் நகைச்சுவையை நுகர்வார்கள். ஏனென்ருல் அத்தகைய அநுபவங்கள் அவர்களுடைய வாழ்க்கையிலும் ஏற்பட்டிருக்கும்.

இத்தகைய அநுபவங்களை நிலைக்களமாக வைத்து மென்மையான நகைச்சுவை யமைய எழுதிய கட்டுரைகள் இவை. இவை பத்திரிகையில் வெளிவந்த போது, ''என்னுடைய அநுபவங்கள் உமக்கு எப்படி ஐயா தெரிந்தன?'' என்று கேட்ட அன்பர்களும் உண்டு.

இந்தக் கட்டுரைகளில் பல இடங்களில் என்னுடைய ஆசிரியப் பிரானைப் பற்றிய செய்திகள் வரும். அவர்களோடு பழகிய ஆண்டுகள் என் வாழ்க்கையில் அநுபவ முதிர்ச்சியைத் தந்த கால மாதலின், என் அநுபவத்தினிடையே அவர்களுடைய நினைவு இயல்பாகவே எழுகிறது.

இவற்றைப் புத்தக உருவில் தொகுத்து வெளியிடத் திருவருள் கூட்டுவித்தது. அந்தத் திருவருளை வழுத்துகிறேன்.

காந்தமலை
சென்னை-28

கி. வா. ஜகந்நாதன்
6-8-79

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | புது டயரி | ... 1 |
| 2. | குடைப் புராணம் | ... 12 |
| 3. | சென்ற இடம் எல்லாம்... | ... 23 |
| 4. | நோய்க்கு இடம் கொடு | ... 34 |
| 5. | ஞான தீர்த்தம் | ... 43 |
| 6. | பட்டி மண்டபம் | ... 52 |
| 7. | நாலாவது | ... 61 |
| 8. | உண்பதும் ஒரு கலை | ... 76 |
| 9. | எழுதுகோலின் அவதாரம் | ... 88 |
| 10. | கண்ணுக்கு அணிகலன் | ... 99 |
| 11. | என் புத்தகங்கள் | ... 109 |
| 12. | தலையசைத்தால் போதும்! | ... 119 |
| 13. | நடந்த கதை | ... 129 |
| 14. | கழுத்தில் விழுந்த மாலை | ... 138 |
| 15. | காது குத்தாதே! | ... 147 |
| 16. | பெயர் படுத்தும் பாடு | ... 155 |
| 17. | ஸார் பேப்பர்! | ... 164 |
| 18. | புரியாத சங்கடம் | ... 173 |
| 19. | தூங்குகிற சுகம் | ... 185 |
| 20. | தலையும் தவலையும் | ... 193 |
| 21. | பேசத் தெரியாதவர்களும் தெரிந்தவர்களும் | ... 200 |
| 22. | டிரிங் டிரிங்! | ... 208 |

# புது டயரி

# புது டயரி

சமீபத்தில் புத்தாண்டு பிறக்க இருந்தது.

ஒரு நல்ல டயரியாக வாங்கி நாள்தோறும் விடாமல் எழுதவேண்டுமென்று தீர்மானித்தேன். நல்ல டயரி யாக வாங்கவேண்டும்; கிடைப்பதற்குள் பெரியதாக வாங்க வேண்டும்.

'பெரியதாக வாங்கி எதை எழுதப் போகிறேம்?' என்ற எண்ணம் தோன்றினாலும் பிறகு அதுதான் சரி என்று நினைத்தேன். ஆம். அன்றன்று நடக்கும் நிகழ்ச்சி களை எழுதலாம். யாரை யாரைச் சந்தித்தோம் என்று எழுதலாம். யார் யார் என்னைப் பார்க்க வந்தார்கள் என்று எழுதலாம். முக்கியமான நிகழ்ச்சிகளையும், நான் எழுதிய கட்டுரைகளையும், பேசிய சொற்பொழிவுகளையும் பற்றி எழுதலாம். வேண்டுமானால் வரவு செலவுகூட எழுதி வைக்கலாம். தனித் தனி விவரமாக இல்லாவிட்டாலும் ஒரு நாளில் மொத்தமாக என்ன வரவு வந்தது, என்ன செலவு என்று எழுதலாம். இப்படி எழுதினால் ஒரு பக்கம் என்ன, இரண்டு பக்கம் கூட வேண்டியிருக்கும்.

எனவே, கடைக்குப் போய் எட்டு ரூபாய் கொடுத்து ஒரு பெரிய டயரியை வாங்கி வந்தேன். அதைப் பார்க்கிற போதே எனக்குப் பெருமையாக இருந்தது. ஒரு வருஷம் கழித்து அதைப் பார்த்தால் எப்படி இருக்கும்! என்னுடைய

வாழ்க்கையின் ஓர் ஆண்டுப் பகுதியே அதில் இருக்கும். இப் படித்தானே பெரிய மனிதர்களெல்லாம் டயரி எழுதி வைத்துக்கொண்டு சுய சரிதம் எழுதுகிறார்கள்? என் முன் னால் இருந்த டயரி, டயரியாகத் தோன்றவில்லை; என் னுடைய சுயசரிதத்தின் ஒரு பாகமாகவே தோன்றியது. அதைப் பத்திரமாக மேஜை டிராயரில் வைத்து மூடினேன்.

புத்தாண்டு பிறந்தது. பல் தேய்த்துவிட்டு வந்தேன். பால்கூடக் குடிக்கவில்லை. ஆம், என்னுடைய கடுமையான விரதத்தை இங்கே சொல்லிக் கொள்ளாமல் வேறு எங்கே சொல்வது? நான் காபி குடிப்பதில்லை; ஓவல்டின் அருந்து வதில்லை; போன்விடா சாப்பிடுவதில்லை; டீக்கூட நுகர்வ தில்லை; பால் சாப்பிடுவேன்; தப்பினால் ஹார்லிக்ஸ் சாப்பிடு வேன்; அவ்வளவுதான்.

பல் தேய்த்து வந்தேனா? வந்தவுடன் டிராயரிலிருந்த டயரியை எடுத்தேன். முதல் தேதிப் பக்கத்தைத் திருப்பி னேன். முதலில் பிள்ளையார் சுழி போட்டேன். பிறகு எழுதத் தொடங்கினேன்.

'இன்று இங்கிலீஷ்ப் புது வருஷம் ஆரம்பமாகிறது. ஜனவரி முதல் தேதி' என்று எழுதினேன். அதன் மேல் ஓர் யோசனை வந்தது. 'ஆங்கிலப் புத்தாண்டுத் தொடக்கம் என்று எழுதாமல் இங்கிலீஷையும் வடமொழியையும் கலந்து எழுதியிருக்கிறோமே! யாராவது நமது தமிழுணர்வைப்பற்றி ஐயப்பட்டால் என்ன செய்வது?' இப்படி எண்ணினேன்; இங்கே ஒன்றை அவசியம் சொல்லவேண்டும். நான் தமிழுணர்வு என்றுதான் நினைத்தேன். ஏனென்றால் இப்போதெல்லாம் தமிழறிந்தவர்களில் பல பல வகுப்புப் பிரிவினைகளைச் செய்திருக்கிறார்கள். தமிழ்ப்புலமை, தமி ழறிவு, தமிழ்த் தேர்ச்சி, தமிழ் அன்பு என்ற இவ்வளவும் தமிழுணர்வு இல்லாவிட்டால் வீணாகிவிடும். தமிழுணர்வு

உள்ளவன்தான் உயர்ந்த சாதி. மற்றவர்களெல்லாம் தாழ்ந்தசாதி. அதனால்தான் தமிழுணர்வு என்ற மேல்சாதியைப் பற்றிச் சொன்னேன்.

தமிழுணர்வு இல்லாதவன் என்று சொன்னால் என்ன செய்வது?

இது யார் கண்ணில் படப்போகிறது? இது என்னுடைய பிரைவேட் டயரி. எனக்கே சொந்தம். வேறு யாரும் பார்க்கக்கூடாது; பார்க்கவும் அனுமதிக்கமாட்டேன். அப்படியிருக்க, இதைப்பற்றி யார் விமரிசனம் செய்யப் போகிறார்கள்? என்னுடைய தமிழ்ப் புலமையையும் தமிழுணர்வையும் வேறு பிரித்துப் பார்க்க, இது அகப்பட்டால்தானே? 'சரி, மேலே எழுதுவோம்' என்று தொடங்கினேன்.

'முருகன் திருவருளால்' என்று எழுதி நிறுத்தினேன். 'முருகன் திருவருளால் இந்த டயரியைத் தவறாமல் எழுத வேண்டும்' என்ற என் விருப்பத்தைக் குறிக்க நினைத்தேன். முருகன் திருவருள் மட்டும் போதுமா? நம்முடைய சொந்த முயற்சியும் வேண்டாமா? எனவே, 'முருகன் திருவருளும் என்னுடைய இடைவிடாத முயற்சியும் கொண்டு ஒவ்வொரு நாளும் இந்த டயரியை எழுதுவதாக...' என்று எழுதி நிறுத்தினேன். மேலே என்ன போடலாம்? எழுதுவதாக எண்ணியிருக்கிறேன் என்று போடலாம். எண்ணம் போதுமா? அதில் ஒரு திண்ணம் வேண்டாமா? எழுதுவதாகத் தீர்மானம் செய்கிறேன் என்று எழுதத்தோன்றியது. அது கூட அவ்வளவு அழுத்தமாகப் படவில்லை. ஒருவாறு யோசித்து, 'எழுதுவதாக உறுதியை மேற்கொள்கிறேன்' என்று எழுதி முடித்தேன். ஒரு வாக்கியம் முடிந்தது.

மேலே என்ன எழுதுவது என்று யோசித்தேன். அப்போது என் மனைவி வந்து குரல் கொடுத்தாள்; "இங்கே

தான் இருக்கிறீர்களா? எங்கோ நண்பர் வீட்டுக்குப் போய் இட்டிலி பால் சாப்பிட்டு வரப் போயிருப்பீர்களாக்கும் என்றல்லவா எண்ணினேன்? உங்களுக்குப் பால் கீல் ஒன்றும் வேண்டாமா?''

''சரி வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டேன். இப்போதுதானே விடிந்திருக்கிறது? இப்போதே டயரியை எழுத முடியுமா? ஒரு நாள் நிகழ்ச்சி முழுவதையும் நினைவுக்குக் கொண்டுவந்து மாலையிலோ இரவிலோ எழுதுவதுதான் முறை.

போய்ப் பால் குடித்தேன். மற்றக் காரியங்களைப் பார்த்தேன்.

அன்று அலுவலகத்துக்கு விடுமுறை. ஜனவரி முதல் தேதியல்லவா? 'அடடா! இதையும் குறித்திருக்கலாமே?' என்று உள்ளே போய் டயரியை எடுத்து, 'இன்று அலுவலகத்துக்கு விடுமுறை' என்று எழுதிவிட்டு வந்தேன். பிறகு அன்று சில நண்பர்களைப் பார்க்கப் போயிருந்தேன். போன இடங்களில் பழம் கிடைத்தது; பால் கிடைத்தது. 'இங்கே எனக்குப் பழம் பால் கிடைத்தது' என்று ஒரு சிலேடையை உதிர்த்து வைத்தேன். அப்போதெல்லாம் என் ஞாபகம் என் டயரியிலேயே இருந்தது. டயரியில் இந்தச் சிலேடையையும் எழுத வேண்டும் என்று நினைவில் வைத்துக் கொண்டேன்.

மயிலாப்பூர்க் கபாலீசுவரர் கோயிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனம் செய்துகொண்டேன். என்னுடைய பிரார்த்தனைகளில், 'என்னுடைய டயரி இனிது நிறைவேற வேண்டும்' என்பதையும் சேர்த்துக் கொண்டேன்.

வீட்டுக்கு வந்து உணவு கொண்டேன். பிறகு சிறிது இளைப்பாறினேன். அப்பால் என்னைப் பார்க்கப் பல நண்பர்கள் வந்தார்கள். அவர்களில் ஒரு நண்பர், ''இந்த

வருஷம் பட்ஜட்டில் வரிகளெல்லாம் உயரும் என்று சொல்கிறார்களே!'' என்றார். நான், ''அப்படியா! வருஷம் பிறக்கிற போதே ஜனவரி வந்துவிடுகிறது. அதனுடைய பலன் மார்ச்சு மாதப் பட்ஜெட்டில் தெரியும்'' என்று ஒரு ஜோக்கை வெடித்தேன்.

நண்பர்கள் விடைபெற்றுப் போனார்கள். மாலை நேரம் வந்துவிட்டது. நேரே என் அறைக்குப் போய் என் மேஜையைத் திறந்தேன். என் அருமையான டயரியை எடுத்து வைத்துக்கொண்டேன். இன்று யார் யாரைப் போய்ப் பார்த்தோம் என்று எண்ணிப் பார்த்தேன். எல்லோரையும் நினைவுக்குக் கொண்டு வந்து எழுதினேன். பிறகு என்னைப் பார்க்க வந்தவர்களையும் எழுதினேன். மறவாமல் நான் பேசிய சிலேடையையும் ஜோக்கையும் இடையிலே பெய்தேன். கோயிலுக்குப் போனதை எழுதினேன்.

டயரிப் பக்கத்தில் முக்கால் பங்கு நிரம்பி விட்டது. என் வயிறே முக்கால் பங்கு நிரம்பி விட்டது போன்ற திருப்தி உண்டாயிற்று. அதற்கு மேல் எழுதவில்லை; சோம்பல் வந்துவிட்டது. இப்படியே எழுதி எழுதி நிச்சயமாக இந்த டயரி ஓர் அற்புதச் செய்திக் களஞ்சியமாகத் திகழப் போகிறது என்று பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

மறுநாள் எழுந்தேன். டயரியை எடுத்தேன். முதல் நாள் எழுதியதை எல்லாம் ஒரு முறை படித்துச் சுவைத்தேன்; பிறகு 'இன்று ஜனவரி இரண்டாந்தேதி' என்று எழுதினேன். அப்போது, 'இது என்ன பைத்தியக்காரத்தனம்! மேலேதான் அச்சுப் போட்டிருக்கிறானே! அதை மறுபடியும் ஒவ்வொரு நாளும் எழுத வேண்டுமா?' என்று எண்ணி எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன். 'சரி, இன்று

மாலையில் வந்து எழுதலாம்' என்று டயரியை மூடி வைத்து விட்டுக் குளிக்கப் போனேன்.

உணவு உண்டு அலுவலகம் போனேன். அங்கே சில நண்பர்கள் பார்க்க வந்தார்கள். "நான் முதல்முதலாக இந்தக் கதையை எழுதினேன். இதை எங்கே கொடுக்க லாம் என்று எண்ணியபோது உங்கள் ஞாபகம் வந்தது. என் முதல் படைப்பைக் கலைமகளுக்கு நிவேதனமாக்கு கிறேன்" என்று ஒருவர் தாம் எழுதிய கதையைக் கொடுத்துவிட்டுச் சொன்னார். தலைச்சன் பிள்ளையை மடத்துக்குக் கொடுப்பதுபோலவும், முதலில் பழுத்த பழத்தைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போலவும் அவர் நினைத்துக்கொண்டார் போலும்! நினைத்துக்கொள்வ தாவது! அவர் இதற்கு முன்பு எந்த எந்தப் பத்திரிகைக் கெல்லாம் போய் அலைந்தாரோ, யாருக்குத் தெரியும்? அதை யெல்லாம் சொல்வாரா? முதல் முதலாக எழுதும் கதையும் முதல் முதலாகப் பிறக்கும் பிள்ளையும் ஒன்றாகுமா? இது வெறும் வெள்ளோட்டம்.

இப்படி வேறு பலர் வந்தார்கள். பல கடிதங்கள் வந் திருந்தன. எல்லாவற்றிற்கும் பதில் எழுதினேன். "முருகப் பெருமானுடைய எந்தப் புறத்தில் வள்ளிநாயகி இருக் கிறாள்?" என்று ஒருவர் கேட்டிருந்தார். அவருக்குப் பதில் எழுதினேன். வேலைகளைக் கவனித்தேன். வந்திருந்த கதைகளையும் கட்டுரைகளையும் படித்தேன்.

மாலையில் வீட்டுக்குப் போனேன். சிற்றுண்டி உண்டு விட்டு டயரியின்முன் அமர்ந்தேன். இரண்டாந் தேதியின் கீழ் எழுதத் தொடங்கினேன். அலுவலகத்தில் கவனித்த வேலைகளை எழுதினேன். வந்தவர்களைப் பற்றி எழுதி னேன். வந்த கடிதங்களையும் எழுதிய பதில்களையும் எழுதலாமா என்று யோசித்தேன். சில பேருக்குத் திருமண

வாழ்த்துக்களை அனுப்பினேன். சில கூட்டங்களுக்கு, 'நன்கு நிறைவேறுக' என்று எழுதினேன். ஒருவர் இறந்த செய்தி தெரிந்து உரியவருக்கு அநுதாபக் கடிதம் அனுப்பினேன். இவற்றை எல்லாம் போய் எழுதிக் கொண்டிருக்கலாமா? முக்கியமான கடிதங்களையும் பதிலையும் எழுதினால் போதும் என்று தீர்மானித்தேன். அப்படியே சிலவற்றை எழுதினேன்.

பிறகு வீட்டு விலாசத்துக்கு வந்திருந்த கடிதங்களைப் பார்த்தேன்; பதில் எழுதிப் போட்டேன். அவற்றிலும் முக்கியமானவற்றைப் பற்றி டயரியில் எழுதினேன். இன்று முக்கால் பக்கத்துக்கு மேலே எழுதிவிட்டேன். ஆகவே அதிகத் திருப்தி. உடனே மூடிவைத்துவிட்டு வேறு வேலையைப் பார்க்கப் போய்விட்டேன்.

3-ஆம் தேதி. அலுவலகத்திலிருந்து வந்ததும் சோர்வாக இருந்தது. அதோடு சொல்லி வைத்தாற்போல இரண்டே நண்பர்கள் அலுவலகத்தில் பார்க்க வந்தார்கள். அதிகக் கடிதங்களும் இல்லை. ஆகையால், இராத்திரி எழுதிக் கொண்டால் போகிறது என்று எண்ணி வெளியிலே உலாவப் போய்விட்டேன்.

இரவு உணவுண்டு விட்டுப் படுக்கையை விரித்து அதில் உட்கார்ந்தபடியே டயரியை எடுத்து வைத்துக் கொண்டு, வந்த இரண்டு பேர்களைப் பற்றி எழுதினேன். கடிதங்களில் ஏதும் முக்கியமில்லை. மூன்று வரிகள் கூட நிரம்பவில்லை. என்ன எழுதுவது என்று திகைத்தேன். அப்போது ஓர் அற்புதமான யோசனை தோன்றியது. என்ன என்ன படித்தேன் என்று எழுதலாமே! நம்முடைய காலத்துக்குப் பிறகு நம்முடைய சந்ததிகள் இதைப் பார்த்து, 'அடேயப்பா! இவர் எத்தனை புத்தகம் படித்திருக்கிறார்!' என்று பிரமித்துப் போவார்கள்.

அன்று காலையில் திருக்குறள் பரிமேலழகருரை படித்துக்கொண்டிருந்தேன். திருமுருகாற்றுப் படையையும், அப்பர் தேவாரத்தையும் புரட்டிப் பார்த்தேன். திருக்குறளைப் படித்தேன் என்று பொதுவாக எழுதுவதைவிட இன்ன இன்ன அதிகாரம் படித்தேன் என்று எழுதலாம் என்று தோன்றியது. அப்படியே எழுதினேன்.

திருமுருகாற்றுப்படையை எப்படி எழுதுவது? கந்தனுக்கும் கண்ணனுக்கும் உள்ள ஒப்புமையைக் குறித்து நான் பேசுவதுண்டு. 'கண்ணன் கையில் வேல் உண்டு; கந்தன் கையில் குழல் உண்டு' என்று சொல்லி, 'நின்கையில் வேல் போற்றி' என்ற ஆண்டாள் பாசுரத்தையும் 'குழலன் கோட்டன் குறும்பல்லியத்தன்' என்ற திருமுருகாற்றுப் படை அடியையும் மேற்கோள் காட்டுவேன். இப்போது அதையும் அதைச் சார்ந்த இரண்டு மூன்று அடிகளையும் பார்த்தேன் இதை எழுதலாமா?

அப்போது பின் சந்ததியார்கள் இதைப் பார்க்கப் போகிறார்கள் என்ற ஞாபகம் வந்தது. திருமுருகாற்றுப் படையையும் அப்பர் தேவாரத்தையும் படித்தேன் என்று எழுதலாம். முழுமையும் படித்ததாக அவர்கள் நினைத்துக் கொள்ளட்டுமே! அதனால் நம்முடைய பெருமைதானே உயரும்? அப்படியே எழுதினேன்.

அப்பொழுது என் மனைவி பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்; "என்ன எழுதுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நாட் குறிப்புப் புத்தகம்!" என்று மிடுக்காகப் பதில் சொன்னேன்.

"அந்தப் புத்தகம் எதைப் பற்றி?"

"டயரி தெரியாது? அதுதான்."

"பூ! இதுதானா? ஏதோ பிரமாதமாகப் பெரிய புத்தகமாகத்தான் எழுதப் போகிறீர்களாக்கும் என்று எண்ணினேன். அவ்வளவு பொறுமை உங்களுக்கு எங்கிருந்து வந்தது என்றுகூட ஆச்சரியப்பட்டேன்.''

அதற்குமேல் டயரி ஓடவில்லை. பத்து வரிகளோடு அந்தப் பக்கம் முடிந்தது. படுத்துக் கொண்டேன்.

4-ஆம் தேதி இராத்திரி எழுதத் தொடங்கினபோது என்ன என்ன கடிதம் வந்தது, என்ன என்ன பதில் எழுதினேன் என்று சரியாக ஞாபகம் வரவில்லை இதற்காக மண்டையை உடைத்துக் கொள்வானேன் என்று, நான் படித்த புத்தகங்களை எழுத எண்ணினேன். அன்று ஒரு நாவல் படித்தேன்; அவ்வளவுதான். சில பத்திரிகைகளைப் படித்தேன். பத்திரிகைகளை எழுதலாமா? அதிலே ஒரு சங்கடம். எந்தப் பத்திரிகையை எழுதுவது? மாதப் பத்திரிகையை எழுதுவதா? இல்லை, தினப்பத்திரிகையும் சேர்த்து எல்லாவற்றையும் எழுதுவதா? இப்படி எண்ணும்போது எனக்கே சிரிப்பு வந்தது. எழுதுவதற்கு விஷயம் இல்லாமல் தவிக்கிற தவிப்பினால்தானே இப்படியெல்லாம் எண்ணத் தோன்றுகிறது? நாவலைமாத்திரம் எழுதினேன். அப்புறம் செய்த வேலைகள் இரண்டொன்றை எழுதி முடிவைத்து விட்டேன். அன்று என்னுடைய சுய சரித்திரப் பகுதி ஐந்தே ஐந்து வரிகள்!

ஐந்தாம் தேதி எனக்கு இருந்த சுவராசியம் குறைந்து விட்டது. இனிமேல் தொல்காப்பியத்தைப் பற்றிச் சில நூல் எழுதும் எண்ணம் உதித்ததாக எழுதி ஒப்பேற்றினேன். அதோடு சரி. ஆறுந்தேதி முதல் டயரி டிராயரில் தூங்கியது. என்றைக்காவது கட்டுரை எழுதினால் அதை மட்டும் அந்தத் தேதியில் குறித்துக் கொண்டேன்

பிப்ரவரி மாதம் முதல் தேதி பிறந்தது. அன்று புது ஊக்கம் உண்டாயிற்று. இன்று டயரியை எப்படியாவது

மீண்டும் எழுதத் தொடங்க வேண்டுமென்று மூர்த்தன்யமாக உட்கார்ந்தேன். எதை எழுதுவது? மூளை காலியாக இருந்தது. ஒன்றும் நினைவுக்கு வரவில்லை. பழக்கமும் விட்டுப் போய்விட்டது. காலையில் பத்திரிகையில் ஒரு பெருந்தலைவர் இறந்த செய்தி வந்திருந்தது. அதை எழுதினேன். போயும் போயும் மாசம் முதலில் இந்த மரணச் செய்தியையா எழுதுவது என்று உடனே அதை அடித்து விட்டு, அந்தப் பக்கத்துக் கடைசி இரண்டு வரிகளில் அதை எழுதினேன். மேலே, என்னைப் பார்க்க வந்த சாமியாரைப் பற்றி எழுதினேன். எவ்வளவு வேகமாக எழுத முனைந்தேனோ, அவ்வளவு வேகமாகச் சோம்பல் வந்துவிட்டது மனைவியும் வந்தாள். மூடி டிராயரில் வைத்து விட்டேன்.

மறுபடியும், எங்கேயாவது பேசப்போனால் அதை ஒரு வரியில் அந்தத் தேதியில் எழுதினேன். அப்படியே ஒன்று இரண்டு கட்டுரைகள் எழுதின தேதிகளைக் குறித்தேன். டயரி டிராயரில் தூங்கிக்கொண்டிருந்தது.

மார்ச்சு மாதம் முதல் தேதி வேதாளம் மறுபடியும் வந்தது. டயரியை எடுத்து வைத்துக் கொண்டேன். அப்பொழுது என் மனைவி வந்தாள். "என்ன, நீங்கள் டயரி எழுதப் போகிறேன் என்கிறீர்கள். முதலில் அஞ்சாறு நாள் எழுதியிருக்கிறீர்கள். பிறகு அங்கங்கே ஒரு வரி இரண்டு வரி மட்டும் எழுதியிருக்கிறீர்கள். இதற்குத் தானா எட்டு ரூபா கொடுத்து இதனை வாங்கினீர்கள்?" என்று கேட்டாள்.

"இதை நீ படித்துப் பார்த்தாயா?"

"ஏன், பார்க்கக் கூடாதா?"

"பிறருடைய டயரியைப் படிப்பது நாகரிகம் அல்ல, குற்றங்கூட என்று சொல்வார்கள்!"

"மற்றவர்கள்தாமே பார்க்கக் கூடாது?"

"நீ மற்றவள் அல்லவா?"

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நீங்கள் வேறு, நான் வேறு? நீங்கள் சங்ககாலக் கவிகளில் வரும் கணவன் மனைவி ஒற்றுமையைப் பற்றியெல்லாம் பேசுவீர்களே! இப்போது இந்த டயரி வந்து நம்மைப் பிரித்து விட்டதா?"

அவள் அழவில்லை. அடுத்த காட்சி அதுதான் என்று எனக்குப் பயமாகப் போய் விட்டது.

"இப்போது நீ என்ன செய்யச் சொல்கிறாய்?"

"வீட்டுக் கணக்கு எழுத நல்ல நோட்டு இல்லை. இதைக் கொடுங்கள். இதில் எழுதுகிறேன்."

"நானும் நினைத்தது தான்."

"என்ன நினைத்தீர்கள்?"

"டயரியில் வரவு செலவுகூட எழுதலாமென்று நினைத்தேன். என் உள்ளத்துக்குள் நீ இருக்கிறாய். ஆகையால் அதை உணர்ந்து கொண்டு, நான் செய்யாததை நீ செய்வதாகச் சொல்கிறாய். இந்தா, எடுத்துக் கொள்."

இதைவிடவா முன் உளறின உளறலுக்காகக் கேட்கும் மன்னிப்புப் பயனுடையதாக இருக்கும்?

அப்பாடி! என் தர்மபத்தினி டயரி எழுதும் அல்லலினின்றும் என்னை விடுதலை செய்து விட்டாள்!

# குடைப்புராணம்

**"எ**த்தனை தடவை சொன்னாலும் இந்த வீட்டில் யாரும் காதில் போட்டுக் கொள்வதே இல்லை. மழை இல்லாத காலத்தில் இந்தக் குடைகளை ஒக்கப் பண்ண வேணும் என்று தலை தலையாய் அடித்துக் கொண்டேன். யார் கேட்கிறார்கள்?" என்று இரைந்தேன்.

அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று மழை வந்துவிட்டது. மழைக் காலத்தில் மழை வராமல் என்ன செய்யும்? 'நான் அலுவலகம் போகிற வரைக்கும் நில்' என்றால் நிற்குமா? கம்பர், யாரோ வேலி என்ற பெண்ணுக்காக ஒரு சுவர் வைத்தாராம். தம்மை மறைத்துக் கொண்டு கூலி வேலை செய்ய முனைந்தபோது நடந்தது இது. எவ்வளவு தண்ணீர் விட்டு மண்ணைக் குழைக்க வேண்டும் என்பது அவருக்கு எப்படித் தெரியும்? மண்ணை எடுத்துச் சுவராக வைக்க வைக்க அது சரிந்து கொண்டே வந்தது. 'வேலி தரும் கூலி, நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ் சுவரே!' என்று பாடினாராம். சுவர் நின்று விட்டதாம். நான் என்ன கம்பரா? 'அலுவலகம் போகுமட்டும் நில்லாய் அருமழையே' என்று பாடத் தெரியும். ஆனால் என் பாட்டுக்கு அது நிற்குமா? அது தன்பாட்டுக்குப் பெய்துகொண்டுதானே இருக்கும்?

எங்கள் வீட்டில் ஐந்து குடைகள் இருந்தன. ஒன்றாவது ஒழுங்கானபடி இல்லை. இரண்டில் ஒரு கம்பி

இல்லை. ஒன்றில் இரண்டு கம்பிகள் முறிந்து விட்டன. மற்றொன்றில் துணியெல்லாம் பொத்தல். ஐந்தாவது குடையில் துணி, ஒரு கம்பியின் நுனியோடு தைத்த தையல் பிரிந்து மேலே ஏறியிருந்தது. முன்பே குடை ரிப்பேர்க் காரனிடம் கொடுத்து ஒக்கப் பண்ணி வைக்கச் சொல்லி யிருந்தேன். யாரும் கவனிக்கவில்லை. அதனால்தான் எனக்குக் கோபம். அலுவலகம் புறப்படும் அவசரத்தில் வெளியே மழை சடசடவென்று பெய்துகொண்டிருக் கிறது; குடையோ சரியில்லை. கோபம் வராமல் என்ன செய்யும்?

அப்போது என் இரைச்சலைக் கேட்டுவிட்டு என் இல் லத்தரசி வேகமாக வந்தாள். அவள் கையில் கரண்டியோடு வந்தாள். "என்ன இரைகிறீர்கள்? யாருக்கு என்ன வந்துவிட்டது?" என்று என்னை விடச் சத்தம் போட்டுக் கேட்டாள். அடுப்பில் ஏதோ கொதித்துக் கொண்டிருக்க வேண்டும். அதை அவளுடைய திருக்கோலமும் குரலும் காட்டின.

"இரையாமல் என்ன செய்வது? ஒரு குடையாவது சரியாக இருக்கிறதா? மழை இல்லாத காலத்தில் சரிப் படுத்தும்படி எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்?"

"அதெல்லாம் சரி. குடை ரிப்பேர்க்காரன் நம்மை விடக் கெட்டிக்காரன். மழைக்காலத்தில்தான் அவன் குடை ரிப்பேர் என்று கத்திக்கொண்டு வருகிறான்; மற்றச் சமயங்களில் அவன் பூட்டு ரிப்பேர் பண்ணுகிறான். அவ சியம் நேர்ந்தபோது எவ்வளவு கேட்டாலும் கொடுப் பார்கள் என்ற இரகசியத்தை அவன் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான். நான் என்ன செய்வது?"

இதற்குமேல் பேச எனக்கு வாய் இல்லை. பேசாமல் கம்பியோடு ஒட்டாமல் தையல் பிரிந்த குடையைக் கையில்

எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். குடையைப் பிரித்தால் ஒரு கம்பியின் நுனியில் துணி ஒட்டாமல் மேலே போயிருந்தது. குழந்தை தாறுமாருகத் துண்டை உடுத்துக்கொள்ளுமே, அப்படியிருந்தது. வேறு வழி இல்லாமல் அதைப் பிடித்துக்கொண்டு போனேன். அதாவது கிடைத்ததே! கம்பி உடைந்த குடைகளால் என்ன உபயோகம்? பஸ் அடிவரையில் அந்தக் குடை எனக்குக் கவசமாக உதவியது.

அன்று அலுவலகத்துக்குச் சிறிதுநேரம் கழித்துப் போனேன். 'கம்பியின் நுனியில் துணியை இழுத்து வைத்து ஊசியால் தைத்து விட்டால் குடை சரியாகிவிடும். இதைப் பார்த்து இவள் செய்யக் கூடாதா?' என்று கோபம் வந்தது. மாலையில் வீட்டுக்குப் போனவுடன் முதல் காரியமாக இதைத் தைக்கச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தேன்.

மாலையில் வீட்டுக்குள்ளே நுழையும்போதே அவளைக் கூப்பிட்டேன். "நீ தையல் மிஷின் வைத்திருக்கிறுயே! எதை எதையோ தைக்கிறுயே! இந்தத் துணியைக் கம்பியின் நுனியோடு வைத்துத் தைக்கப்படாது?" என்று கேட்டேன்.

அவள் இடிஇடியென்று சிரித்தாள். காலையில் கையில் கரண்டியோடு, முகத்தில் ஆத்திரத்துடன் நின்ற அவள் கோபத்தையும் இப்போது அவள் முகமெல்லாம் சிரிப்பு வழிய நின்ற கோலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். 'இந்தப் பெண்களுக்கு எப்படியெல்லாம் கோலங்களை மாற்றிக்கொள்ளத் தெரிகிறது!' என்றுவியக்காமல் இருக்க முடியவில்லை.

"ஏன் சிரிக்கிறுய்?" என்று கேட்டேன்.

"இந்தக் குடை நுனியைத் தையல் மிஷினில் தைக்க வேண்டும் என்று சொன்னீர்களே; அதை நினைத்துக் கொண்டு சிரித்தேன்."

"இதைத் தைக்க வேண்டும் என்றால், அதற்குச் சிரிப் பானேன்?"

"தைப்பதற்காகச் சொல்லவில்லை. மிஷினில் தைக்க வேண்டும் என்றீர்களே, அதற்காகச் சிரித்தேன். ஊசி யினால் தைக்கிறது இது" என்று விளக்கினாள்.

"சரி சரி, நீ ஊசியினால் தைப்பாயோ, உலக்கையினால் தைப்பாயோ, எனக்குத் தெரியாது. நாளைக்கு ஆபீஸ் போகிறபோது இது சரியாக இருக்க வேண்டும்."

"உத்தரவுப்படியே எசமான்! இப்போது டிபன் ஆறிப் போகிறது. சாப்பிடலாம் அல்லவா?" என்று கேலிச் சிரிப்போடு அவள் கூறினாள்.

நான் சட்டையைக் கழற்றிவிட்டு அவள் போட்ட உத்தரவுக்குப் பணிந்து சிற்றுண்டி உண்ணப் புறப் பட்டேன்.

நல்ல வேளையாக மறுநாள் பொழுது விடிந்ததும், 'குடைரிப்பேர்!' என்ற குரல் அமுதம் போல் என் காதில் விழுந்தது. வாசலில் பார்த்தேன். ஒரு முஸ்லிம் கிழவன் கையில் ஒரு கட்டுக் குடைக் கம்பி, பையில் ஏதோ கருவி கள் இவற்றுடன் பிரசன்னமானான். "இங்கே வா அப்பா!" என்று அவனை அழைத்தேன். அவன் என் வீட்டு வாசலில் தன்னுடைய சாமான்களை இறக்கி வைத்தான். உள்ளே போய் ஐந்து குடைகளையும் எடுத்தேன். நேற்றுக் கொண்டு போன குடையை என் மனைவி தைத்து விடுவாள் என்று எண்ணி, அதை மட்டும் வைத்துவிட்டு நாலு குடைகளை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தேன். கிழவன், "இவ்

வள்வுதானுங்களா?'' என்ருன். என்னிடமிருந்து ஒரு மலையளவு குடைகள் ரிப்பேருக்கு வருமென்று அவன் எதிர் பார்த்தாஞே என்ன?

''நாலு குடைகள்'' என்றேன்.

''கீழே போடுங்கள்'' என்ருன்.

ஒவ்வொரு குடையாகப் பிரித்துப் பார்த்தான். ''எல்லாம் படுமோசங்க. ரொம்ப வேலே கொள்ளுமுங்க'' என்று பீடிகை போட்டான்.

''எவ்வளவு நேரமாகும்?'' என்று கேட்டேன்.

''அதை இப்ப எப்படிச் சொல்லலாமுங்க? கம்பி ஒடிசல், துணி கிழிசல், காம்பு ஒடிசல்—இப்படி இருந்தா ஒவ்வொண்ணேயும் கவனிச்சுச் செஞ்சாத்தானே முடியும்? சரியாச் செஞ்சாத்தானே நாளைக்கு மறுபடியும் கூப்பிடு வீங்க.''

அவன் என்ன சொல்கிருன்? நாளைக்கு மறுபடியும் கூப்பிடுவதா? இவற்றை ஒக்கப் பண்ணிஞல் நாளைக்கே ஒடிந்து போய் மறுபடியும் இவனைக் கூப்பிட வேண்டுமா?

அவன் சொன்னதைப் பார்த்தால் ஏதோ மலையைப் புரட்டுகிற காரியம் போல இருந்தது. எவ்வளவு நேரம் ஆகுமோ? நான் அலுவலகம் போக வேண்டும். அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்க முடியுமா? இப்போதைக்கு இரண்டு குடைகளை ஒக்கப் பண்ணச் சொல்லலாம். இந்த எண்ணத்தின்மேல், ''சரி, சரி; ஒவ்வொரு குடையாக நீ ரிப்பேர் பண்ணு; நேரம் இருந்தால் எல்லாவற்றையும் சரி பண்ணலாம். நான் ஆபீஸ் போகவேணும்'' என்றேன்.

''ஐயா அவசரம் எனக்குத் தெரியாதுங்களா? இதோ ஜல்தி வேலே செய்து தர்ரேன். ஒரு அவர் போதும்.''

முன்பு அவன் சொன்னதைப் பார்த்தால் ஒரு நாள் முழுவதும் இதே வேலையாக இருக்க வேண்டும் போலத் தோன்றியது. இப்போது ஒரு மணியில் செய்து தருகிறேன் என்கிருனே!

"அதெல்லாம் சரி. முன்பே கூலி பேசிக்கொண்டால் உனக்கும் நல்லது; எனக்கும் நல்லது."

"நாலு கொடையிலும் புதுசாக் கம்பி போடணும். கம்பிகளைக் கோத்த ஒயர் ஒடிஞ்சு கெடக்குது. எல்லாத்தையும் களட்டிட்டுச் சரிப்படுத்திக் கோத்து வச்சுத் தைக்கணும். கிளிசலுக்கு ஒட்டுப் போடணும். இப்ப கம்பி விக்கிற வெலே எசமானுக்குத் தெரியாதா? கொடைத் துணி ஸ்பெஷல் துணியுங்க. நான் கடைலே வாங்கித் தான் வரதுங்க. பளைய கொடைத் துணியை வச்சுக்கறதில்லேங்க."

அவனைப் பேசவிட்டால் நான் குடையையும் சரிபண்ண முடியாது, அலுவலகத்துக்கும் போக முடியாது என்றெண்ணி, "சரி, சரி, அந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம். இந்த நாலு குடையும் ரிப்பேர் பண்ண என்ன கேட்கிருய்?" என்று கேட்டேன்.

"எசமான் கோவிச்சுக்கப்படாதுங்க. வேலேயோட கஸ்டம், சாமான்களோட வெலே நெலவரம் எல்லாம் பாத்துத்தானே கூலி சொல்லணுமுங்க? நான் என்ன ஆனே வெலயா கேக்கப் போறேனுங்க?"

"நீ ராமாயணம் அளக்கிறதாக இருந்தால் அதைக் கேட்க எனக்கு நேரம் இல்லே. இப்போதைக்கு இரண்டு குடைகளை மட்டும் சரி பண்ணித் தா" என்று சொல்லி இரண்டு குடைகளை எடுத்து வைத்துக் கொண்டேன்.

"அதையும் இப்படிக் குடுங்க. இதோ அரை அவரிலே எல்லாம் முடிச்சுத் தர்ரேன்."

"வேண்டாம்; வேண்டாம். அந்த இரண்டு குடையை ரிப்பேர் பண்ணு. நாளைக்கு வந்து மற்றவற்றைப் பார்க்கலாம்" என்று சற்றுக் கடுமையான தொனியோடு சொன்னேன்.

அவன் பேசாமல் ஒரு குடையை எடுத்துப் பிரித்தான். "இங்க பாருங்க; இதிலே ரெண்டு கம்பி ஓடைஞ்சிருக்குங்க. ஓடைஞ்ச கம்பி குத்தித் துணி கிளிஞ்சிருக்குங்க. மத்தக் கம்பிக எப்படியோ?" என்று சொல்லி ஒரு கம்பியை இழுத்தான் அது படக்கென்று உடைந்துவிட்டது.

"என்னப்பா இது? நீ இன்னொரு கம்பியையும் உடைத்து விட்டாயே! உன்னை ரிப்பேர் பண்ணச் சொன்னேனா? ஒடிக்கச் சொன்னேனா?" என்று கத்தினேன். என் குரலைக் கேட்டுவிட்டு உள்ளிருந்து என் மனைவி வந்து விட்டாள். "என்ன என்ன?" என்று கேட்டாள்.

"இங்க பாருங்கம்மா. அடாஸ் கொடை இது. ஒரு கம்பியைத் தொடறபோதே ஒடிஞ்சு போச்சு. ஏற்கனவே ஒடிஞ்ச கம்பி ரெண்டு. அதை ரிப்பேர் பண்ணிக் குடுத்த பெறகு எசமான் எடுத்துப் பிரிச்சா இந்தக் கம்பி ஓடைஞ்சுடும். அப்ப என்ன சொல்வாரு? இந்தப் பாவிப் பய நம்ம ஏமாத்திட்டாம்பாரு. நல்ல வேளை! நான் தொட்டேன். ஒடிஞ்சுட்டுது. இப்ப மூணு கம்பியையும் போட்டுத் துணியைத் தைக்கணும்."

என்னிடமிருந்து பொறுமை ஓடிவிட்டது. "ஏ கிழவா! நீ ரிப்பேர் பண்ணினது போதும். எல்லாவற்றையும் வைத்துவிட்டுப் போ" என்று இரைந்தேன்.

"ஐயாவுக்குக் கோபம் ரொம்ப வருது. சரி, இந்தக் கொடையை ரிப்பேர் பண்ணித் தர்ரேன். துணி தைக்கணும். கம்பி வெலை ஏறிப் போச்சு. இரும்பு ஜாமானெல்லாம் ஆகாசமட்டும் வெலை ஏறிடுத்துங்க."

"மறுபடியும் உன் கதையை அவிழ்க்காதே. சட்டுப் புட்டென்று சொல். இதற்கு எவ்வளவு வேணும்?"

"கம்பி ஒண்ணுக்கு ஒரு ரூபா ஆகும். கொடைத் துணி ஒரு ரூபா. கூலி ஒங்க மனசு போலத் தாங்க."

எப்படியோ பேரம் பண்ணி மூன்று ரூபாய் கொடுப்ப தாக ஒப்புக்கொண்டேன். கால் மணியில் குடையை ஒக்கப் பண்ணிவிட்டான்.

"ஏன் அப்பா, இந்தக் கால் மணி வேலைக்கா மூன்று ரூபாய்?" என்று கேட்டேன்.

"என்ன எசமான் அப்படிச் சொல்றீங்க? எனக்குக் கூலியே இல்லிங்களே. ஜாமான் வெலையே நாலு ரூவா. அதிலே ஒரு ரூவா கொறைச்சுட்டீங்க. என் கூலியிலே மண்ணைப் போட்டீங்க!"

எனக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன, பேசாத வார்த்தைகளைச் சொல்கிறாய்? மண்ணைப் போடுகிறதாவது! உன்னைக் கூப்பிட்டதே பிசகு" என்று சொல்லி அவனிடம் மூன்று ரூபாய் எடுத்து வீசி எறிந்துவிட்டுக் குடைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டேன்.

"நாளைக்கு வரட்டுமுங்களா?" என்று அவன் கேட்ட தற்கு நான் பதிலே சொல்லவில்லை.

விரைவில் நீராடினேன். உணவு உண்டேன். ஒக்கப் பண்ணின குடையை எடுத்துக் கொண்டேன். அப்போது ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஒருகால் இந்தக் குடை இடையிலே கம்பி முறிந்தால் என்ன செய்வது? நேற்றுக் கொண்டு போனதையும் பாதுகாப்பாகக் கொண்டு போக லாம் என்று அதை எடுத்தேன். அதன் துணி முன் போலவே தூக்கிக்கொண்டுதான் இருந்தது.

"ஏய்! என்ன இது? இதைத் தைக்கவில்லையா?" என்று கூச்சல் போட்டேன். அவள் வந்தாள், "நேற்றுக் கைக்காரியம் ஒழியவில்லை. இது என்ன, அஞ்சு நிமிஷ வேலை. நீங்கள் வைத்து விட்டுப் போங்கள். தைத்து வைக்கிறேன்" என்றாள்.

"நான் இதையும் எடுத்துக்கொண்டு போகிறேன். சாயங்காலம் வந்து கொடுக்கிறேன்; தைத்து விடு" என்று சொல்லி இரண்டு குடைகளையும் எடுத்துக்கொண்டு புறப் பட்டேன்.

அன்றைக்கென்று மழையே இல்லை. அலுவலகத் துக்குப் போனேன். நண்பர்கள், "இது என்ன ஸார், இரண்டு குடை?" என்று கேட்டார்கள். "ஒன்று ஸ்டெப்னி" என்று சொல்லி வைத்தேன்.

மாலையில் வீடு திரும்பியபோது இரண்டு குடைகளை யும் எடுத்துக்கொண்டு கிளம்பினேன். சிறிது தூற்றல் வந்தது. ஒக்கப் பண்ணின குடையை விரித்தேன். மளுக் கென்று சத்தம் கேட்டது. ஒரு கம்பி உடைந்துவிட்டது. கிழவன் சொன்னது சரியென்று பட்டது. இது நாலாவது கம்பி. கடவுளே என்று அதை மடக்கித் துணி தூக்கிக் கொண்ட குடையைப் பிடித்துக் கொண்டு பஸ்ஸைப் பிடித்து வீட்டை அடைந்தேன்.

"இந்தா, இதை இப்போதே தைத்துக் கொடு" என்று என் மனைவியிடம் சொன்னேன்.

"ஏன்? ரிப்பேரான குடை என்ன ஆயிற்று?" என்று கேட்டாள் அவள்.

"நாலாவது கம்பி உடைந்து போயிற்று; கிழவன் சொன்னது சரி" என்றேன்.

அவள் பாவம், எனக்குச் சிற்றுண்டி அளித்துவிட்டு என் முன்னாலே உட்கார்ந்து தைத்துக் கொடுத்தாள். 'நாளைப் போதுக்குச் சங்கடம் இல்லை' என்று எண்ணிக் கொண்டேன்.

மறு நாள் அந்தக் கிழவன் வந்தால் நயமாகப் பேசி மற்றக் குடைகளை ஒக்கப் பண்ணலாம் என்று நினைத்தேன். அடுத்த நாள் அவன் வரவில்லை. என் மனைவி தைத்த குடையோடு அலுவலகம் போனேன்.

அலுவலகத்திலிருந்து திரும்புகாலில்தான் அந்தச் சம்பவம் நடந்தது. பஸ்ஸில் ஏகக் கூட்டம்; ஏற முடிய வில்லை. அடுத்த நிறுத்தத்தில் பலர் இறங்குவார்கள். அங்கே போய் ஏறலாம். கையில்தான் குடையிருக்கிறதே! மழை பெய்துகொண் டிருந்தது. மெல்ல அடுத்த நிறுத் தத்தை நோக்கி நடந்தேன்.

திடீரென்று மழை அதிகமாயிற்று. எங்கிருந்தோ ஒரு காற்று அடித்தது பாருங்கள். என் குடை என் கையை விட்டுப் போய்விடும்போல் இருந்தது. அப்படியும் இப்படியும் திசை மாற்றிப் பிடித்தேன். சடக்கென்று குடை அப்படியே விரிந்துவிட்டது. காம்புப் பக்கத்துக்கு எதிரே, திரும்பி விரிந்துவிட்டது. கம்பிகளெல்லாம் விட்டுப் போயின. புயலில் அகப்பட்டவன் தலைக்கேசம் அலங்கோலமாக இருப்பதுபோல் கம்பிகள் ஒவ்வொரு திசையில் கால் பரப்பிக்கொண்டு நிற்கக் குடைத்துணி எதிர்ப்புறத்தில் மாறி விரிந்து நின்றது. என்மேல் வருணன் அபிஷேகம் செய்து கொண்டிருந்தான்.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு கம்பிகளைச் சேர்த்துக் குடைத் துணியைக் கொண்டு தலையை மறைத்துக் கொண்டேன். அடுத்த

பஸ்ஸில் ஏறி வீடு வந்தேன். உடம்பெல்லாம் சொத சொத வென்று நனைந்திருந்தது.

என் அற்புதக் கோலத்தைக் கண்டு என் வாழ்க்கைத் துணைவி பயந்து போனாள். "என்ன இது?" என்று அலறினாள்.

"ஒன்றும் இல்லை, உடையை மாற்றிக்கொண்டு சொல்கிறேன்" என்று உள்ளே ஓடினேன். மாற்றிக் கொண்டேன்.

"ஏன் இப்படி ஆயிற்று?"

"இந்தக் குடை சதி செய்துவிட்டது. மழைக்குப் பாதுகாப்பாக இருப்பதற்குப் பதிலாகத் திருப்பிக் கொண்டு மழையை ஏந்தும் கிண்ணமாகி விட்டது" என்று சொல்லி எல்லாவற்றையும் விவரித்தேன்.

"சரி, சரி; நாளைக்குக் குடை ரிப்பேர்க்காரன் வந்தால் எவ்வளவு கேட்டாலும் சரியென்று எல்லாக் குடைகளையும் ரிப்பேர் பண்ணிவிட்டு மறு காரியம் பார்க்க வேண்டும்" என்றாள் அவள்.

"அதை விட வேறு காரியம் செய்யப் போகிறேன். நாளைக்குச் சம்பளம் வரும். முதல் காரியமாக ஒன்றுக்கு இரண்டாகப் புதுக்குடை வாங்கி வரப் போகிறேன்."

அவள் யோசனையில் ஆழ்ந்தாள். எந்த விசேஷச் செலவுக்காக அவள் அதிகப் பணம் என்னிடம் கேட்க இருந்தாளோ, தெரியவில்லை!

# சென்ற இடம் எல்லாம்...

அவர் ஏழை. எவ்வளவு தூரமானாலும் நடந்தே செல்வார். ஆகையால் அவருக்குச் செருப்பு மிகவும் அவசியம். அதைக் கூடிய வரைக்கும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்தார். பழைய செருப்புப் பிய்ந்துவிட்டது. புதிய செருப்பு வாங்கினார். ஒருநாள் 'போகும் வழியில் ஒரு பெருமாள் கோயில் இருந்தது. உள்ளே போய்ப் பெருமாளைச் சேவித்துவிட்டுச் செல்லலாம் என்ற எண்ணம் எழுந்தது. காலில் செருப்பு இருந்தது. அதோடு கோயிலுக்குள் போக முடியாது. பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்ற விருப்பம் அதிகமாக இருந்தது. கோயிலுக்கு வெளியில் செருப்பைக் கழற்றிவைத்துவிட்டு உள்ளே சென்று விரைவாகத் தரிசனத்தை முடித்துக்கொண்டு வந்துவிடலாம். அதற்குள் யாராவது செருப்பை எடுத்துக் கொண்டு போய்விட்டால்? அவர் மனம் தடுமாறியது. 'சிறிது நேரந்தானே? அதற்குள் யார் எடுத்துக்கொண்டு போவார்கள்?' என்று சமாதானம் செய்துகொண்டு செருப்பை வெளியே கழற்றி வைத்துவிட்டுக் கோயிலுக்குள் நுழைந்தார். நேரே பெருமாள் சந்நிதிக்குள் சென்றார். தாயாரைப் பிறகு வேண்டுமானால் சேவித்துக் கொள்ளலாம். பெருமாளைச் சேவித்துக்கொண்டு போய் விடலாம்.

உள்ளே போன போது பட்டாசாரியார் இருந்தார். அவர் வந்த வைஷ்ணவரைக் கண்டதும், "அர்ச்சனை பண்ண வேண்டுமா?" என்று கேட்டார். "கற்பூரம் பண்ணினால் போதும்" என்று இவர் சொன்னார். அப்படியே அவர் செய்துவிட்டுத் தீர்த்தம் கொடுத்தார். சடகோபம் சாதிப்பதற்கு முன்பு பட்டாசாரியார் எதையோ தேடினார். சிறிது நேரமாயிற்று. வந்தவருக்கோ மிகவும் அவசரம். செருப்பை யாராவது தூக்கிக்கொண்டு போய் விடுவார்களோ என்ற அச்சம். பட்டாசாரியார் சடகோபம் சாதிக்கத் தாமதம் பண்ணினார். வந்தவர் பொறுமையை இழந்தார். "சுவாமி! சீக்கிரம் செருப்புச் சாதியுங்கள்" என்றார். அவருடைய உள்ளத்தில் இருந்த செருப்பின் ஞாபகம் வார்த்தையில் வெளியாகிவிட்டது. எங்கே என்ன வேலையில் இருந்தாலும் இறைவனை நினைக்க வேண்டும் என்று சொல்லி, 'செருப்பு வைத்துச் சேவடி தொழுமாப் போலே' என்று இந்த வரலாற்றை நினைப்பூட்டுவார்கள்.

இந்த அனுபவம் அந்த வைஷ்ணவருக்கு மட்டுமா உண்டாயிற்று? புதிய செருப்பு வாங்கின எல்லாருமே எங்கேயாவது நாலு பேர் நடமாடும் இடத்தில் அதைக் கழற்றி வைக்க நேர்ந்தால் அதையே நினைத்துக்கொண்டு தான் இருப்பார்கள். எல்லாருமே 'செருப்பு வைத்துச் சேவடி தொழுகிறவர்களே!'

ஒருகால் சில பேருக்கு அந்த நினைவு வராதிருக்கலாம். அவர்கள் பாக்கியசாலிகள். என்னைப் பொறுத்தமட்டில் நான் அந்த வைஷ்ணவர் கோஷ்டியில் சேர்ந்தவன்தான். எத்தனையோ ஜாக்கிரதையாக இருந்தும் பல ஜோடிச் செருப்புகளை இழந்திருக்கிறேன். அதுவும் அடிக்கடி கூட்டங்களுக்குப் போக வேண்டியிருப்பதனால் இந்தச் செருப்புத் தியாகம் மூன்று மாதத்துக்கு ஒரு முறையாவது நிகழ்வதுண்டு.

ஒரு முறை ராஜபாளையத்துக்குப் போயிருந்தேன். ஒரு கூட்டத்தில் பேச ஒப்புக் கொண்டிருந்தேன். மேடைக்குப் போவதற்கு முன் செருப்பை எங்காவது பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டுமென்று பார்த்தேன். என் எண்ணத்தை அறிந்த செயலாளர், ஓர் இடத்தைக் காட்டி, "இங்கே விடுங்கள்; யாரும் எடுக்கமாட்டார்கள்" என்றார். அவர் காட்டிய இடம் சற்றே ஒதுக்குப்புறமாக இருந்தது; ஒரு ஹாலில் இருந்தது. அங்கே செருப்பை விட்டு விட்டு மேடைக்குச் சென்றேன்.

கூட்டத்தில் நான் மட்டும் பேசினேன். அவைத் தலைவர் ஒருவர் இருந்தார். வரவேற்பு முதல் நன்றியுரை வரையில் எல்லாம் நடைபெற மூன்றுமணி நேரம் ஆயிற்று. கூட்டம் முடிந்தவுடன் செருப்பை விட்ட இடத்துக்குப் போய் அதைப் போட்டுக் கொள்ளலாம் என்று புறப்பட்டேன். "நானே எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று செயலாளர் போனார். நான், பேசின மேடையின் கீழே இறங்கிவந்து நின்றேன். அது பெரிய கலையரங்கம். போனவர் வரவில்லை. உடனிருந்த அன்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன் ஆனால் என் மனத்தில் செருப்பு ஞாபகமே இருந்தது. கால்மணியாகியும் போன நண்பர் வரவில்லை. "எங்கே, செருப்பை எடுத்துவரப் போனவர் வரவில்லையே!" என்று கேட்டேன். அவருடன் சென்ற ஒருவர் வந்து, "இதோ வந்து விடுவார்" என்றார்.

அரை மணி ஆயிற்று. செருப்புத் தொலைந்து போயிற்று என்றே தீர்மானித்துக் கொண்டேன். உடன் இருந்தவர்கள் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். என்னை அழைத்துச் செல்ல வேண்டிய காரையும் காணோம். "அவசரமாகப் பக்கத்தில் போயிருக்கிறார்; வந்துவிடுவார்" என்று அன்பர்கள் சொன்னார்கள்.

செருப்புத்தான் காணவில்லை; காருக்கு என்ன வந்து விட்டது?

முக்கால் மணி ஆயிற்று. அப்பாடி! செயலாளர் காரில் வந்தார். கையில் ஓர் அட்டைப் பெட்டியுடன் வந்தார். காரிலிருந்து இறங்கி வேகமாக ஓடிவந்தார். "இதைப் போட்டுப் பாருங்கள்" என்று அட்டைப் பெட்டியிலிருந்து ஒரு ஜோடிச் செருப்பை எடுத்து வைத்தார். என் செருப்புக் கெட்டுப் போய்விட்டது. அவர் செருப்புக் கடைக்குப் போய்ப் புதியதாகச் செருப்பை வாங்கி வந்திருக்கிறார்! நல்ல வேளை! அது என் காலுக்குச் சரியாக இருந்தது.

"எதற்காக விலை கொடுத்து இதை வாங்கினீர்கள்?" என்று அன்பரைக் கேட்டேன். நான் கேட்டது வெறும் ஒப்புக்குத்தான். செருப்புப் போய்விட்டதே என்று அந்த முக்கால் மணிநேரம் என் மனம் பட்ட பாடு எனக்குத் தானே தெரியும்?

"நான்தான் மிகவும் பாதுகாப்பான இடம் என்று ஓரிடத்தைக் காட்டினேன். அந்த இடத்துக்கு யாரும் வர மாட்டார்கள், அப்படி வந்தாலும் செருப்பைத் திருடமாட்டார்கள் என்று நினைத்தேன். என் நினைப்பு, பொய்யாகி விட்டது!" என்றார் அவர்.

"இப்படிப் பல இடங்களில் பரதாழ்வார்கள் வந்து என் மிதியடியை எடுத்துப் போயிருக்கிறார்கள்" என்று சொன்னேன். பரதப் பயல்கள் என்று சொல்லியிருப்பேன். அப்படிச் சொன்னால் நாகரிகமாக இராதென்றெண்ணிப் பரதாழ்வார்கள் என்று சொன்னேன்.

கல்யாணம் விசாரிக்கப் போனால் அநேகமாகச் செருப்பு மறைந்து போய்விடும். இப்படிச் செருப்புப் போகாமலிருக்க ஒரு நண்பர் ஒரு வழி சொன்னார். "மகாத்மா காந்தியே இந்த வழியைச் சொல்லியிருக்கிறார்" என்று அவர் அதைச்

சொன்னார். 'காந்தியடிகள் எப்போது எங்கே சொன்னார்?" என்று ஆராய நான் முற்படவில்லை. யார் சொன்னால் என்ன? என் செருப்பைத் தொலையாமல் நான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அந்த நண்பர் தம் கருத்தையே காந்தி சொன்னதாகப் பொய் சொன்னால்தான் என்ன? அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. "என்ன வழி? சொல்லுங்கள்" என்று கேட்டேன், "கூட்டத்துக்குப் போனால் கையில் ஒரு பையை எடுத்துக்கொண்டு போங்கள். உள்ளே போகும்போது செருப்பைப் பைக்குள் போட்டுக் கொள்ளுங்கள். எங்கே உட்காருகிறீர்களோ, அங்கே அந்தப் பையைக் கீழே போட்டு அதன்மேல் உட்கார்ந்து கொள்ளுங்கள். நீங்கள் செருப்பைப் பைக்குள்ளே வைத்திருப்பது யாருக்கும் தெரியாது. கையில் எடுத்துக்கொண்டு போனால் உள்ளே கொண்டுபோக முடியாது. ஆகையால் அதை மறைத்துக்கொண்டு போக இப்படி ஒரு வழி சொல்லியிருக்கிறார் காந்தி" என்றார்.

"இதற்கெல்லாம் காந்தியை ஏனையா இழுக்கிறீர்?" என்று சொல்லியிருப்பேன். சொல்லத் துணிவு வரவில்லை.

அந்த மனிதர் சொன்ன தந்திரம் நல்லதுதான். ஆனால் கூட்டத்தில் சொற்பொழிவைக் கேட்கப் போகிறவர்கள் அப்படிச் செய்யலாம். மேடையின்மேல் ஏறிப் பேசப் போகிறவர்கள் அப்படிச் செய்யலாமா?

ஒரு முறை இந்தத் தந்திரத்தை மேற்கொண்டேன். கையில் ஒரு பையை எடுத்துக்கொண்டு பேசப் போனேன். மேடைக்குப் போவதற்குமுன் செருப்பைப் பையில் போட்டுக்கொண்டு மேடைக்குப் போய் நான் அமரும் நாற்காலிக்கு அருகில் அந்தப் பையை வைத்துக் கொண்டேன். ஏதோ புத்தகம் கொண்டு வந்திருப்பதாக மற்றவர்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்று நினைத்தேன்.

கூட்டத்தில் நானும் மற்ருெருவரும் பேசினேம். எங்களுக்கு மாலை போட்டார்கள். பேச்சு முடிந்தவுடன் நாங்கள் எழுந்திருந்தோம். அதற்குள் அங்கிருந்த அன்பர் மேஜையின்மேல் நான் கழற்றி வைத்திருந்த மாலையை எடுத்தார். அருகில் கீழே வைத்திருந்த என் பையில் அதை வைக்கலாம் என்று பையை எடுத்திருக்கிருர். நான் வேறு எங்கோ பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தேன். அவர் பையை எடுத்ததைப் பார்க்கவில்லை. அவர் பையைத் திறந்திருக்கிருர். பையில் நான் கழற்றி வைத்திருந்த செருப்பு! அவர் கையில் நான் கழற்றி வைத்திருந்த மாலை! அவர் திகைத்திருக்க வேண்டும். "என்ன ஸார் இது!" என்று அவர் ஆச்சரியத்தோடு கூவியபோதுதான் அவரைத் திரும்பிப் பார்த்தேன். உண்மை தெரிந்துவிட்டது. "அது கெட்டுப் போகாமல் இருக்க..." என்று நான் சொல்லும் போதே இடிஇடியென்று சிரித்தார். அவருக்குத் தெரியுமா என்னுடைய அநுபவங்கள்? அவர் கையிலிருந்த பையையும் மாலையையும் தனித்தனியே வாங்கிக் கொண்டேன். இனி இந்தப் பைத்தியக்காரத்தனம் செய்யக்கூடாது என்று தீர்மானித்தேன். காந்தி சொன்ருல்தான் என்ன? கடவுளே சொன்ருல்தான் என்ன? செருப்புக்கு மாலை போடுகிற வேலை நாகரிகமாக இருக்குமா?

என்னுடைய நண்பர் ஒருவரிடம் இப்படி அடிக்கடி செருப்புத் தொலைகிற அனுபவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தேன். "ஓவ்வொரு தடவையும் இருபத்தைந்து முப்பது ரூபாய் பணம் கொடுத்துப் புதுச் செருப்பு வாங்க வேண்டியிருக்கிறது' என்றேன்.

"அதற்காகத்தான் நான் அதிக விலை போட்டுச் செருப்பே வாங்குவதில்லை. ஐந்து ரூபாய்க்குள்ளேதான் வாங்குவேன்" என்ருர் அவர்.

"அது நெடுநாள் வராதே!"

"மூன்று நான்கு மாதங்கள் வந்தால் போதாதா? ஒவ்வொரு தடவையும் இருபத்தைந்து ரூபாய் போட்டு வாங்கிப் பறி கொடுப்பதனால் எவ்வளவு நஷ்டம் உண்டாகிறது?"

அவர் சொல்வது நியாயமாகவே பட்டது. அவருடைய உபதேசத்தின் படியே அடுத்த முறை செருப்புத் தொலையும் போது செய்யலாம். ஏன், இப்போதே மலிவுச் செருப்பு ஒன்றை வாங்கி வைத்துவிட்டால் சமயம் வரும்போது உபயோகித்துக் கொள்ளலாம். ஐந்து ரூபாய் தானே? அது ஒரு பிரமாதமா?

அன்று மலிவாக ஐந்தரை ரூபாயில் ஒரு ஜோடி செருப்பு வாங்கினேன். நடுவில் அட்டையை வைத்துத் தைத்திருந்தார்கள். சொல்லி வைத்தாற் போல மறுநாளே நல்ல செருப்புக் கெட்டுப்போயிற்று. ஒரு கல்யாணத்தில் தான் தொலைந்து போயிற்று. 'நான் இருக்கும்போது நீ வேறு ஒன்றை ஏன் வாங்கினாய்?' என்ற சக்களத்திக் கோபம் போலும்! மறுநாள் அலுவலகம் போகும்போது புதிதாக வாங்கின மலிவுச் செருப்பைப் போட்டுக் கொண்டு போனேன். கனமே இல்லாமல் இருந்தது அது.

அடுத்த நாள் மழை பெய்தது. மழை நின்றபிறகு அலுவலகம் போகிற போது ஈரமான ரோடில் நடந்ததனால் செருப்பு ஈரமாயிற்று. உள்ளே உள்ள அட்டை நனைந்து போகவே செருப்புக் கனமாக இருந்தது. ஒருவிதமாக அலுவலகம் போய்ச் சேர்ந்தேன். மாலையில் வீட்டுக்குத் திரும்பினேன். ஒரு செருப்பின் வார் அறுந்து போயிற்று. 'காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறி' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. அந்தப் பழமொழி உண்டான காலத்தில் செருப்பின் விலை கால் ரூபாய் அரை ரூபாயாக

இருந்திருக்க வேண்டும். அஞ்சும், இருபத்தஞ்சும் போட்டு வாங்கியிருந்தால் கழற்றி எறியத் தோன்றுமா?

வார் அறுந்த செருப்பை எப்படிப் போட்டுக் கொண்டு நடப்பது? கையிலே தூக்கிக் கொண்டு நடப்பதற்கும் அவமானமாக இருந்தது. அருகில் பத்திரிகைகள் விற்கும் கடையிருந்தது. அதுவரையில் செருப்பை எப்படியோ காலிலே இழுத்துக் கொண்டு வந்தேன். காலைப் பத்திரிகைப் பிரதிகள் சில விற்காமலே இருந்தன. நான் ஒரு பத்திரிகையை விலைக்கு வாங்கினேன். கடைக்காரன், "இது காலைப் பத்திரிகை" என்று சொன்னான். நான், "தெரியும்! அதுதான் வேண்டும்" என்றேன். அவன் என்னை உற்றுப் பார்த்தான். 'இப்படியும் ஒரு பைத்தியம் உண்டா?' என்று பார்த்திருக்க வேண்டும். நான் பத்திரிகையை வாங்கிக் காலில் இருந்த செருப்பை அதில் வைத்துப் பொட்டலம் கட்டிக் கொண்டேன். மடிக்கிறபோது அந்தப் பக்கத்தில் ஒருவர் படம் இருந்தது. என் செருப்பை அவர்மேல் படும்படி வைத்து மடித்தேன். அவரைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. என் கோபத்தைக் காட்டச் சரியான சந்தர்ப்பம் கிடைத்ததென்று மகிழ்ச்சி அடைந்தேன். பஸ் ஏறி இறங்கி வீட்டுக்குப் போகும் வழியில் ஒரு செருப்புச் செப்பனிடும் தொழிலாளி இருந்தான். அவனிடம் பொட்டலத்திலுள்ள செருப்பை எடுத்துச் சரிபண்ணித் தரச் சொன்னேன். அவன், "என்னங்க ஐயா, இப்படி நனைச்சு வச்சிருக்கீங்களே? இது அட்டைச் செருப்பாச்சே! ஒரு தரம் நனைஞ்சா இது உபயோகப்படாதே!" என்றான். "இந்த வாரை மட்டும் தைத்துக் கொடு; மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றேன்.

அவன் வாரைத் தைத்துத் தந்தான். பத்திரிகைக் காகிதத்தை எறிந்துவிட்டுச் செருப்பைப் போட்டுக்கொண்டு

கம்பீரமாக நடந்தேன். எங்கள் வீட்டு வாசற்படிக்கு முன் போகும்போது படி தட்டியது. அப்போது ஒரு காற் செருப்பிலுள்ள அட்டை பிதுங்கி வெளியிலே வந்து விட்டது. ஒரு பக்கம் எனக்குக் கோபம். ஒரு பக்கம் திருப்தி. அது பிய்ந்ததனால் கோபம். நல்லவேளை! வீட்டு வாசலுக்கு வந்த பிறகு பிய்ந்ததே என்று திருப்தி.

மலிவுச் செருப்பு வாங்கினால் நமக்கு ஒத்து வராதென்று மறுபடியும் இருபத்தைந்து ரூபாய் போட்டுச் செருப்பு வாங்கினேன். ஒரு நாள் ஒரு வார இதழில் ஒரு குறிப்பு வந்திருந்தது. "செருப்புக் கெட்டுப் போகாமல் இருக்க ஒரு வழி" என்று தலைப்பில் இருந்தது. ஆவலோடு பார்த்தேன். "கல்யாணத்துக்கோ மக்கள் கூடும் கூட்டத்துக்கோ போகும்போது பல சமயங்களில் நம்முடைய செருப்புத் தொலைந்து போகிறது. அப்படித் தொலையாமல் இருக்க ஒரு வழி உண்டு. இரண்டு செருப்புக்களையும் ஒரே இடத்தில் போடாமல் தனித்தனியே வேறு வேறு இடத்தில் போட்டால் யாரும் ஒற்றைச் செருப்பை எடுத்துக் கொண்டு போக மாட்டார்கள்" என்று இருந்தது. இது நல்ல யோசனையாகப் பட்டது.

சில நாள் கழித்து ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன். செருப்புகள் மலையாகக் குவிந்திருந்தன. பத்திரிகையில் வந்திருந்தபடி செய்துபார்க்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததென்று மகிழ்ந்தேன். அந்தச் செருப்புக் குவியலுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு செருப்பை வைத்தேன். மற்றொன்றை வேறு ஓரிடத்தில் வைத்தேன். அப்போது அங்கே ஒரு பையன் இருந்தான். "என்ன ஐயா, ஒற்றைச் செருப்போடு வருகிறீர்கள்?" என்று கேட்டான். "ஒன்று தொலைந்து போய் விட்டது" என்று சொல்லிவிட்டு விறுவிறு என்று உள்ளே போய்விட்டேன். அவன் மேலே ஏதாவது கேள்வி

களைக் கேட்கப் போகிறேனே என்ற எண்ணம்; என் மனத்துக்குள் இந்த முறை செருப்புத் தொலையாத வகையில் பத்திரப்படுத்திவிட்டோம் என்ற திருப்தி இருந்தது. கல்யாணம் விசாரித்துவிட்டு உள்ளே போட்டிருந்த ஒற்றைச் செருப்பைப் பார்த்தேன். அதைக் காணவில்லை. சுற்றியுள்ள இடங்களில் தேடினேன். கிடைக்கவில்லை. மற்றொரு செருப்பை விட்ட இடத்திலே போய்ப் பார்த்தேன். அதையும் காணவில்லை. நிச்சயமாக அந்தப் பையன்தான் இரண்டையும் எடுத்துப் போயிருக்க வேண்டும். அவன் நான் வெவ்வேறு இடங்களில் வைப்பதைக் கவனித்திருக்கிறான். பிறகு எடுத்துக்கொண்டு போயிருக்கிறான்.

அவனுக்கு இந்தச் செருப்புக் காலுக்குச் சரியாக இருக்குமா? அவன்தான் அதைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது என்ன? யாருக்காவது விற்றுவிடுகிறான். அவன் என்ன, செருப்பைப் பணம் கொடுத்து விலைக்கா வாங்கினான்? நாலு ரூபா அஞ்சு ரூபாய்க்கு விற்றுவிடுகிறான்; கிடைத்த வரைக்கும் லாபம்!

செருப்பைத் தொலைக்காமல் இருக்க நானறிந்த இந்தத் தந்திரமும் பலிக்கவில்லை. செருப்புப் போடாமலே இருந்துவிட்டால்? காலஞ்சென்ற எழுத்தாளர் ரா. ஸ்ரீ தேசிகன் செருப்பே போடுவதில்லை. திருமுருக கிருபானந்த வாரியாரவர்கள் செருப்புப் போட்டு நான் பார்த்ததில்லை. நானும் அப்படியே இருந்துவிட்டால் என்ன? நான் தீர்மானம் பண்ணினால் போதுமா? இவ்வளவு காலம் செருப்பைப் போட்டு நடந்து வந்த என் காலையல்லவா கேட்க வேண்டும்?

'கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்று ஒரு பாட்டு உண்டு. அதை என்னிடமே பல அன்பர்கள் சொல்வதுண்டு. இனிமேல் அப்படி யாராவது சொன்னால்

நான் அதற்குப் பதிலாக ஒரு வெண்பாவைச் சொல்லலாம் என்று எண்ணியிருக்கிறேன்.

கூட்டம் நடக்கும் இடம்,
　　கோயில், மணநிகழ்ச்சி,
ஆட்டம் இசைநிகழும்
　　அவ்விடங்கள்-வாட்டமுற்றுக்
கன்றிநையக் காணமல்
　　போகுமே,கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் செருப்பு!

# நோய்க்கு இடம் கொடு

ஆகா! இந்த உலகந்தான் எவ்வளவு அதிசயமானது! உலகத்தில் உள்ள மனிதர்கள்தாம் எவ்வளவு நல்லவர்கள்! நம்மிடத்தில் எத்தனை பேருக்கு அன்பு! எத்தனை பேருக்கு நாம் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்ற ஆசை! முன் பின் பாராதவர்களெல்லாம் எவ்வளவு அன்பு காட்டுகிறார்கள்! நம்மை யார் கவனிக்கப் போகிறார்கள் என்று இருந்த எண்ணமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டதே!

இப்படியெல்லாம் எனக்கு ஆனந்த உணர்வு எழுவதற்குக் காரணம் என்ன தெரியுமா? நான் இரண்டு நாள் மருத்துவமனையில் படுத்திருந்தேன்; பிறகு டாக்டர்களின் கட்டளையின்படி வீட்டில் பத்து நாள் ஓய்வு எடுத்துக் கொண்டேன். அந்தக் காலத்தில் நண்பர்களுக்கு என்னிடம் உள்ள அன்பு வெள்ளத்தை உணர்ந்துமகிழ்ச்சியால் பொங்கினேன். கோபத்தால் பொங்காமல் மகிழ்ச்சி பொங்கும் படி என்னை ஆக்கின அந்த நோய்க்கு நான் மிக மிக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். "நோய்க்கு இடம் கொடேல்" என்று ஔவைப் பாட்டி சொன்னாள். பாவம்! அவள் காய்ச்சலாகப் படுத்திருந்தபோது யாரும் அவளைக் கவனித்திருக்க மாட்டார்கள். பாட்டிதானே? குடும்பம் இல்லை, பிள்ளை குட்டி இல்லை. யார் கவனிக்கப் போகிறார்கள்? அதனால் அவளுக்கு நோயைக் கண்டு பயம் உண்டாகியிருக்கிறது.

நான் சொல்கிறேன், **'நோய்க்கு இடம் கொடு'** என்று. எனக்கு உண்டான அநுபவத்தால் அப்படிச் சொல்லுகிறேன். என்ன அநுபவம் என்று கேட்கிறீர்கள்?

நான் அலுவலகத்துக்குப் புறப்படும்போது தாகமாக இருந்தால் "தண்ணீர்!" என்று கேட்பேன். யாரும் கவனிக்க மாட்டார்கள். "தாகமாக இருக்கிறது, தண்ணீர் தாருங்கள்" என்று மறுபடியும் கேட்டால், "எல்லோரும் கை வேலையாக இருக்கிறோம். நீங்களே போய் எடுத்துக் குடியுங்கள்" என்று பதில் வரும். வீட்டுக்குள் ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கக் கூடாதோ? நானே போய் எடுத்துக் குடிக்க வேண்டுமாம்! அப்படி என்ன தலை போகிற வேலையோ தெரியவில்லை.

நர்ஸிங்ஹோமில் இருந்தபோதோ, கொஞ்சம் முனகினால் போதும்; "ஹார்லிக்ஸ் சாப்பிடுகிறீர்களா? வெந்நீர் தரட்டுமா? ஆரஞ்சு ரஸம்?" என்று அடுக்கடுக்காகக் கேட்பார்கள். நான் எதையும் கேட்பதில்லை. சும்மா ஆயாசத்தால் முனகுவேன். அதைக் கேட்டு ஹார்லிக்ஸும் வெந்நீரும் ஆரஞ்சு ரஸமும் வந்து நிற்கும். வாயைத் திறந்து தண்ணீர் வேண்டும் என்று கரடியாய்க் கத்தினாலும் காதில் போட்டுக் கொள்ளாத பேர்வழிகள், இப்போது ஆசார உபசாரம் செய்ய முந்துகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? எனக்குத் திடீரென்று கொம்பு முளைத்துவிட்டதா? அல்லது நான் தேவனாக மாறிவிட்டேனா? உண்மையைச் சொல்லப் போனால், நான் இப்போது எனக்குள்ள இயல்பான வலிமையை இழந்து படுத்திருக்கிறேன். டாக்டருக்கு அடிமையாகி நோயாளியாகப் படுத்திருக்கிறேன். அப்போது என்னிடத்தில் இல்லாத சிரத்தை, அப்போது கிடைக்காத உபசாரம், இப்போது உண்டாவதற்கு என்னுடைய நோய் தானே காரணம்? ஆகவே மரியாதையெல்லாம் அந்த

நோயினுல் கிடைக்கிறது என்றுதானே சொல்ல வேண்டும்? அதனுல்தான் அந்த நோயை நாம் வரவேற்க வேண்டும் என்கிறேன்.

மருத்துவ மனையிலிருந்து வெளிவரும்போது ஓர் அன்பர் வந்தார். அவர் ஏதோ கேள்வி கேட்டார். நான் பதில் சொல்லும்போது ஒரு ஜோக் அடித்தேன். அதை அவர் ஒரு பத்திரிகையில் எழுதிவிட்டார். அவர் நான் சொன்ன சிலேடைக்காக அதை எழுதினுர். ஆனுல் அந்தச் சிலேடையோடு, நான் மருத்துவமனையில் இருந்த செய்தியும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட அன்பர்கள் சிலேடையை ரசித்தார்களோ இல்லையோ, நான் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்ததை அறிந்தார்கள். என் உடல் நிலையை விசாரித்துக் கடிதங்கள் வரலாயின. அந்தக் கடிதங்களில் அன்பர்கள் தங்கள் அன்பைக் கொட்டியிருந்தார்கள். உபதேசத்தையும் தாராளமாக வழங்கியிருந்தார்கள். மருத்துவமனையில் வந்து பார்த்தவர்களும், வீட்டில் வந்து பார்த்தவர்களும் எனக்காக மிகவும் இரங்கி, இனிமேல் நான் இப்படிச் செய்யக் கூடாது, அப்படிச் செய்யக் கூடாது என்றெல்லாம் அறிவுரை கூறினுர்கள். 'நாம் எவ்வளவு பெரிய மனிதர் ஆகிவிட்டோம்! எத்தனை பேர் நம் நலத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கிருர்கள்!' என்று எண்ணி எண்ணிப் பூரித்தேன். நோய்க்கு நன்றி கூறினேன்.

அப்பர் சுவாமிகளுக்குச் சூலை நோய் வந்தது. சைவராகப் பிறந்த அவர் சைன மதத்தில் சேர்ந்து அங்கே ஆசார்ய பதவியை வகித்து வந்தார். திடீரென்று அவருக்குப் பொறுக்க முடியாத வயிற்று வலி வரவே, அவர் துடிதுடித்துப் போனுர். சைனர்கள் மணி மந்திர ஔஷதங்களால் அவருடைய நோயைப் போக்க முயன்ருர்கள்; நோய் நீங்கவில்லை.

நோயின் துன்பம் தாங்க முடியாமல் அப்பர் சுவாமிகள் தம்முடைய தமக்கையாராகிய திலகவதியார் இருந்த திருவதிகைக்குச் சென்று அவர் காலில் விழுந்தார். அவருடன் திருக்கோயில் சென்று இறைவனைப் பணிந்து பாடினார். அவருடைய வயிற்றுவலி நீங்கியது. வயிற்றுவலி வந்ததனால்தான் மீட்டும் சிவசமயத்தை அடைந்து இறைவன் திருவருளைப் பெற முடிந்தது. அதனால், 'இந்த வயிற்று வலிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?' என்று மன முருகி அவர் கூறினார்.

எனக்கும் வயிற்றில்தான் கோளாறு உண்டாயிற்று. உணவு இறங்கவில்லை; மலச்சிக்கல் ஏற்பட்டது. அமைதியே இல்லை. அந்த நிலையில் பெங்களூரில் நடைபெற்ற அருணகிரி நாதர் ஆறுவது நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பேசினேன். அப்போது நோய் கடுமை ஆயிற்று. சென்னைக்கு வந்தவுடன் எங்கள் குடும்ப டாக்டரிடம் காட்டினதில் அவர் உடனே மருத்துவமனையில் சேர்த்து விட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துவிட்டார்.

எனக்கு இவ்வளவு தடபுடல் வேண்டாமென்று தோன்றியது. பேதிக்கு மருந்து சாப்பிட்டால் போதும் என்ற எண்ணம். எங்கள் டாக்டர் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவரைப் போல என்னிடம் உரிமை கொண்டாடுவார். "நீங்கள் மருத்துவமனையில் சேர்ந்து உடம்பைப் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லாச் சோதனைகளும் செய்து கொண்டே யாக வேண்டும்" என்று அடித்துப் பேசினார்.

என் குடும்பத்தினர் அவருடைய உத்தரவைக் கண்டு அலந்து போனார்கள். என்னவோ, ஏதோ என்று பயந்தார்கள். எனக்கு மட்டும், 'ஒன்றும் இல்லாததற்கெல்லாம் இந்த டாக்டர் ஏன் இப்படிக் கலவரப்படுத்துகிறார்?' என்றுதான் தோன்றியது. "மருத்துவமனைக்குப் போவது அவசியமா?"

என்று என் குடும்பத்தாரிடம் கேட்டேன். "நோயாளிக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல உரிமை கிடையாது. நீங்கள் பேசாமல் டாக்டர் சொன்னபடி கேளுங்கள்" என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக என் மனைவி சொன்னாள். "எல்லாச் சோதனையும் பண்ணினால் வீண் செலவாகுமே!" என்றேன் நான். "அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று கேட்டான் என் மூத்த மகன்.

ஜனநாயக யுகத்தில் பெரும்பான்மைக்குத்தானே மதிப்பு? மருத்துவ மனையில் சேர்ந்தேன்.

எங்கள் குடும்பத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் எத்தனையோ வேலைகள்! "அந்தப் புத்தகங்களையெல்லாம் அடுக்கி வைக்க வேண்டும். கொஞ்சம் உதவி செய்யுங்கள்" என்றால், "ஆமாம், வேறு வேலைகள் இல்லையோ? தலைக்கு மேல் வேலைகள் குவிந்து கிடக்கின்றன" என்பார்கள். அத்தகையவர்கள் இப்போது ஒருவர் மாற்றி ஒருவர் மருத்துவமனையே கதியாகக்கிடந்தார்கள். அடிக்கொரு தரம் நர்ஸிடம் கேள்வி கேட்டார்கள். அவள் பொறுமையாகப் பதில் சொன்னாள். நச்சு நச்சென்று கேட்டால் யாருக்குத்தான் கோபம் வராது? ஆகவே அவளுக்குச் சில சமயம் கோபம் வந்தது.

கையில் ஊசி குத்தி ஸலைன் ஏற்றினார்கள். ஸலைன் நிரப்பிய பாட்டில் மேலே தொங்கியது. சொட்டுச் சொட்டாக அது என் நரம்பினூடே இறங்கியது. "கையை அசைக்காதீர்கள்" என்று எச்சரித்தாள் நர்ஸ். அவளுக்கு மேல் உடன் இருக்கும் என் மனைவி எச்சரித்தாள்; மகன் எச்சரித்தான்.

டாக்டர் வந்து பார்த்துச் செல்வார். உடனே அவரைப் பின்பற்றி ஓடுவார்கள் என் குமாரர்கள். ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்ற பயம்! டாக்டரைக் கேள்விக்

களைகளால் துளைத்திருப்பார்கள். அவருக்கும் கோபம் வந்திருக்கக்கூடும்.

இவ்வளவு கவலை, குழப்பம், கவனம், சிரத்தை, சுறுசுறுப்பு, கட்டுக் காவல், உபசாரம், அன்பு—எல்லாம் இப்போது ஏன் வந்தன? முன்பெல்லாம் இந்த அன்பு எங்கே? திருவாளர் நோயார் என்னிடம் வந்து சேர்ந்த தனால் வந்த பெருமை அல்லவா இது? அதனால்தான், 'நோய்க்கு இடம் கொடு' என்று ஆத்திசூடியைத் திருத்தி விடலாமா என்று எனக்குத் தோன்றுகிறது.

வைணவர்கள், பெரியவர்களுக்கு நோய்வந்தால்,' நோய் வாய்ப்பட்டிருக்கிறார்கள்' என்று சொல்வதில்லை; 'நோவு சாத்திக் கொண்டிருக்கிறார்கள்'' என்பார்கள். அதாவது நோய் அவரைத் துன்புறுத்தவில்லையாம். ஆடையைக் கட்டிக் கொள்வது போலே, மாலையைச் சாத்திக் கொள்வது போலே, அவர்களே திருவுள்ளம் கொண்டு நோயைத் தம்மிடம் இருக்கும்படி பணித்திருக்கிறார்களாம். எனக்கு உண்மையிலே 'நோவு சாத்திக் கொள்ளும்' திறமை இருந் தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்! என்னுடன் வாழ்கிறவர்கள், என் நண்பர்கள் முதலியவர்களின் அன்பைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், உடனே அந்த நோயை எடுத்து மேலே சாத்திக் கொள்ளலாம் அல்லவா?

இரண்டே நாள் நான் மருத்துவமனையில் இருந்தேன். உண்மையைச் சொல்கிறேன். அந்த இரண்டு நாள் இரண்டு யுகங்களாக இருந்தன. என் நண்பர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் படுத்திருந்தபோது போய்ப் பார்த்து வந்திருக்கிறேன்; என்னாலான பணியையும் செய்திருக் கிறேன். என் குடும்பத்தினர் மருத்துவமனையில் இருந்த போதெல்லாம் கவலையுடன் இருந்து கவனித்திருக்கிறேன். அப்போது சில சமயங்களில் ஒரு பைத்தியக்கார எண்ணம்

மனக்குத் தோன்றும். "இந்த நர்ஸிங்ஹோம் அநுபவம் எப்படி இருக்கும்? நம் கையைக் கட்டிப் போட்டு ஸலைன் ஏற்றினால் நம்மால் தாங்க முடியுமா?' என்று எண்ணி யிருக்கிறேன்.

நான் முருகனை வழிபடுகிறவன். என்னுடைய வேண்டு கோளிற் பலவற்றை அவன் நிறைவேற்றி வருகிறான். அந்த அருளாளன், என் எண்ணத்தை அறிந்து, 'உன் எண்ணப்படியே இந்த அநுபவத்தை நீயே அடைந்து பார்' என்று கருணை பாலித்தான் போலும்! ஏன் இப்படிச் சொல் கிறேன் என்றால், டாக்டர் பல சோதனைகள் செய்து என் உடம்பில் அடிப்படையான கோளாறு ஏதும் இல்லை என்று சொல்லிவிட்டார். இரத்த பரிசோதனை செய்தார்; அதில் சர்க்கரை இல்லை; வேறு குற்றம் இல்லை. நீர் பரிசோதனை ஆயிற்று; அதிலும் ஒரு குறையும் இல்லை. இரத்த அழுத்தம் அளவுக்கு மிஞ்சி இல்லை; குறைவும் இல்லை. இதய நிபுணர் வந்து பார்த்தார்; ஒன்றுமே இல்லை என்று சொல்லி விட்டார். மற்றத் துறையினர் செய்த சோதனையினால் கிடைக்காத மகிழ்ச்சி, இதய நிபுணர் சோதனையின் முடிவு தெரிந்தவுடன் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் ஏற்பட்டது.

இப்போது வயசானவர்களுக்குத் திடீர் திடீரென்று இதயநோய் வருகிறது. எனக்கு அப்படி ஏதாவது வருமோ என்று என் மனைவி மக்கள் பயந்தனர். அப்படி ஒன்றும் இல்லை என்று அறிந்து அவர்கள் ஆறுதல் பெருமூச்சு விட்டார்கள். எனக்கு மகிழ்ச்சி உண்டானதற்கு அது காரணம் அன்று. என் இதயத்தில் தீங்கு இல்லை, நான் நல்ல இதயம் படைத்தவன் என்று டாக்டர் சொல்லிவிட்டதில் எனக்கு அளவற்ற திருப்தி. எனக்கு மற்றப்பலத்தைப் பற்றி அவ்வளவு அக்கறை இல்லை. படிப்பைப்பற்றி பணத்தைப்பற்றிக் கவலை இல்லை. வல்லவனாக இருக்க

வேண்டும் என்று நான் ஆசைப்படுவதில்லை; நல்லவனாக இருக்க வேண்டும் என்பதே என் குறிக்கோள். இதைப் பல சமயங்களில் வெளிப்படுத்தியிருக்கிறேன். இப்போது நான் நல்ல இதயம் உள்ளவன் என்று சர்ட்டிபிகேட் கிடைத்து விட்டதே! இதைக் கண்டு மகிழாமல் இருக்க முடியுமா? இந்தச் சோதனையும் அதன் விளைவினால் உண்டான மகிழ்ச்சியும் எப்படி வாய்த்தன? எல்லாம் இந்த நோயினால் தானே? ஆகவேதான் சொல்கிறேன், 'நோய்க்கு இடங் கொடு' என்று.

மருத்துவமனையில் இருந்த போது நான் எதிர்பாராதவர்களெல்லாம் வந்தார்கள்; பார்த்தார்கள்; ஆறுதல் சொன்னார்கள்; எத்தகைய உதவியானாலும் செய்யத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். வீட்டுக்குப் போன பிறகோ, பத்திரிகை மூலமாகத் தெரிந்து கொண்டவர்கள் பலர் வந்தார்கள். மேல் மாடியில் ஓய்வாகப் படுத்திருந்தேன். டாக்டரின் உத்தரவுப்படி வருகிறவர்களை 'ரேஷன்' பண்ணி அனுப்பினார்கள் வீட்டில் உள்ளவர்கள். அதனால் எனக்குச் சங்கடமாக இருந்தது.

வந்தவர்கள் எல்லாரும், "நீங்கள் நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும்; வெளியூர்களுக்குப் போவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்" என்று உபதேசித்தார்கள். ஒருவர் தம்முடைய புத்தகத்துக்கு முன்னுரை எழுத வேண்டுமென்று என்னிடம் கொடுத்திருந்தார். அவர் வந்தார். "நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அதிகமாகப் பேசக்கூடாது; எழுதக் கூடாது" என்றார். "அப்படியே செய்ய முயல்கிறேன்' என்று சொன்னேன். அவர் எழுந்து போவார் என்று எண்ணினேன். ஆனால் தயங்கித் தயங்கி நின்றார். "ஏதாவது சொல்ல வேண்டுமோ?" என்று கேட்டேன். "ஒன்றும் இல்லை. நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்துகிறேன். நான் கொடுத்த

புத்தகத்தை ஓய்வு நேரத்தில் பார்த்துச் சிறிய முன்னுரை எழுதிக் கொடுத்தால் போதும். அவசரம் இல்லை. ஆனால் அச்சகத்தார் நெருக்குகிறார்கள். உங்களுக்குத் தெரியாதா, அச்சு வேலை நச்சுவேலை என்று? எப்போது முடியுமோ அப்போது எழுதித் தாருங்கள். நான்கு நாள் கழித்து வரட்டுமா?'' என்றார்.

அவர் என்னை ஓய்வாக இருக்கச் சொல்கிறார். ஆனால் அவருக்கு முன்னுரை மட்டும் எழுதிக் கொடுந்தால் நல்லது; அதுவும் நான்கு நாளுக்குள் எழுதிக் கொடுக்க வேண்டு மென்பதைக் குறிப்பாகச் சொல்லிவிட்டார். நான், "பார்க் கலாம்'' என்று சொல்லி அனுப்பினேன்

ஒப்புக் கொண்ட நிகழ்ச்சிகளை நிறுத்திக் கொண்டேன் என் மூளை படுவேகமாக வேலை செய்தது. அன்பர்கள் எத்தனை அன்பாக என் உடல் நலத்தைப்பற்றி விசாரித்தார் கள்! "நீங்கள் பல ஊர்களுக்குப் போய் அலைய வேண்டாம். உடம்பு சரியானவுடன் எங்கள் ஊருக்கு மட்டும் ஒரு முறை வந்து பேசிவிட்டுப் போங்கள். நேரே இங்கே வந்து இறங்கிப் பேசிவிட்டு இரவே போய்விடலாம். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சிலர் கடிதம் எழுதினார்கள். அவர்களுக்குத்தான் என் உடல் நலத்தில் எவ்வளவு அக்கறை! நான் பல இடங்களுக்குப் போகாமல் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும் என்ற உப தேசத்தை எவ்வளவு அன்போடு செய்கிறார்கள்! என் சொற் பொழிவைத் தம் ஊரில் மாத்திரம் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொள்வதில் எத்தனை உரிமையையும் ஆவலை யும் அன்பையும் காட்டுகிறார்கள்!

இத்தனையும் அந்த நோயினால் வந்த பிரபாவம். இப்போது, 'நோய்க்கு இடங் கொடு' என்று நான் சொல் வது எவ்வளவு அநுபவ பூர்வமான மணிமொழி என்று தெரிகிறதல்லவா?

# ஞான தீர்த்தம்

"ஞான தீர்த்தம் இன்னும் தயாராகவில்லையா?'' என்று கேட்டார், அந்தப் பெரியவர். அவர் சுப்பிரமணிய பூஜை செய்கிறவர். கிருகஸ்தராக இருந்தாலும் மகான்; தம் நலமே கருதாதவர். ஞான தீர்த்தம் என்று குறிப்பிட்டது எந்தத் தீர்த்தம் என்று எனக்கு தெரியவில்லை. அப்போது பிற்பகல் மூன்று மணி இருக்கும். பூஜையெல்லாம் முடிந்து நண்பகல் உணவு உண்டு இளைப்பாறி எழுந்திருந்தார். அப்போது எந்தத் தீர்த்தத்தைக் கேட்கிறார்? எதற்காகக் கேட்கிறார்? எனக்கு விளங்கவில்லை.

"இதோ தயாராகிவிட்டது; கொண்டுவருகிறேன்'' என்று உள்ளிருந்து பதில் வந்தது. சிறிது நேரத்தில் இரண்டு தம்ளர் டபராக்களில் ஞானதீர்த்தம் வந்தது. என்னவென்று தெரிகிறதல்லவா? சாட்சாத் காபிதான்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "என்ன, இதைப் போய் ஞானதீர்த்தம் என்கிறீர்கள்? நான் வேறு ஏதோ புனிதமான தீர்த்தம் என்றல்லவா நினைத்தேன்?'' என்றேன்.

"இது இல்லாவிட்டால் மூளை வேலை செய்யாது. எந்த வேலையும் ஓடாது. நமக்கு மூளை இருந்தாலும் அதற்குச் சுறுசுறுப்பு ஏற்றுவதற்கு நாளைக்கு இரண்டு தடவையாவது இந்த ஞானதீர்த்தம் வேண்டியிருக்கிறது'' என்றார்

அந்தப் பெரியவர். அவர் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

'காலையில் எழுந்தவுடன் படிப்பு' என்று பாப்பாவுக்குப் பாரதி பாடியிருக்கிருர். 'காலையில் எழுந்தவுடன் காபி' என்று அவர் பாடியிருக்க வேண்டும். ஒருகால் அப்படித்தான் எழுதி மறுபடியும் திருத்தியிருக்கலாம். காலையில் காபி இல்லாவிட்டால் நம்முடைய முகத்தில் அசடு வழியும். சில பேருக்குக் கோபம் பொங்கும். வீட்டில் உள்ள இல்லத்தரசிகளுக்குக் காபி இருந்தால் போதும்; சாப்பாடுகூட வேண்டாம்; மங்குமங்கென்று வேலை செய்வார்கள்.

என்னுடைய மாமா வீட்டில் சிலகாலம் இருந்து படித்து வந்தேன். என் தாயைப் பெற்ற பாட்டி இருந்தாள். அவளுக்குக் காலையில் காபி வந்தால்தான் உயிரே வரும். மாட்டுப் பெண்ணிடம் கேட்க மாட்டாள். பயமோ, கவுரவமோ தெரியாது. குறிப்பிட்ட நேரத்தில் அவளுக்குக் காபி கொடுக்காவிட்டால் பாத்திரம் உடைபடும். அவள் வாய் புலம்பிக் கொட்டும். ஒரு தம்ளர் காபி உள்ளே போனல்தான் ஆவேசம் அடங்கும். இப்படி அநேகமாக எல்லார் வீட்டிலும் நடக்கும் என்றே நான் நினைக்கிறேன்.

காபி சாப்பிடாவிட்டால் தலைவலி வந்துவிடும். இந்தக் காபிக்கும் தலைவலிக்கும் என்ன சம்பந்தம்? ஒருகால் மூளை மக்கர் பண்ணி அதனால் தலைவலி வந்து விடுகிறதோ? வைத்திய சாஸ்திரம் என்ன காரணம் சொல்லுமோ தெரியாது. தலைவலிக்கும் காபிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. காபி இல்லாவிட்டால் தலைவலி வருகிறது. ஆனல் தலைவலி வந்தபோதெல்லாம் காபி குடித்தால் போய்விடுமா? காபி சாப்பிடாமல் வரும் தலைவலிக்குத்தான் அது மருந்தே ஒழிய மற்றத் தலைவலிகளுக்கு அது மருந்து ஆகாது. அப்

படியிருந்தால் அமிர்தாஞ்சனத்தைத் தேட வேண்டி யதில்லையே!

பல பேருக்குக் காபி சாப்பிடாவிட்டால் குடல் வேலை செய்யத் தொடங்குவதில்லை; காலையில் அது சுத்தமானால் தானே வேலைகளைச் சரிவரச் செய்யலாம்? அதற்காகக் காபியை விளக்கெண்ணெய்க்குச் சமானம் என்று சொல்லி விடலாமா? அது அமிர்தம் அல்லவா? சில விசேஷ காலங்களில் அது தலைவலி மருந்தாகப் பயன்படுகிறது; சில சமயங்களில் விளக்கெண்ணெய் வேலையைச் செய்கிறது; அவ்வளவுதான்.

காபி என்றால் எல்லா ஊர்க் காபியும் ஒன்றாகிவிடுமா? 'பிளாக் காபி' என்று வெறும் டிகாக்ஷனைக் குடிக்கிறார் களாம், அமெரிக்காவில். பிராங்க்ளின் என்ற அமெரிக்க அறிஞர் ஒருவர் பாரிஸ் மாநகரில் நடைபெற்ற உலகத் தமிழ் மகாநாட்டில் பேசினார். அப்போது தமிழ் நாட்டில் அவர் பெற்ற அநுபவத்தைச் சொல்கையில், "காரைக் குடியில் பிராமணர்கள் காபியைப்போல எங்கும் பார்த்த தில்லை" என்று சொன்னார். கறுப்புக் காபியைக் குடிக்கும் அந்த அமெரிக்கருக்கல்லவா தெரியும் தமிழ் நாட்டுக் காபியின் அருமை?

அப்போதே காபிக் கொட்டையை வறுத்து அப்போதே அரைத்து டிகாக்ஷன் இறக்கி நல்ல கெட்டியான பாலில் அதை விட்டு அளவாகச் சர்க்கரை போட்டுச் சாப்பிட் டால்... ஆ! அமிர்தம் என்று புராணத்தில் கேட்கிறோம்; அதற்கு ஈடாகுமா? அதை ஆற்றும்போதே அதன் நறு மணம் எவ்வளவு இனிமையாக இருக்கிறது! தமிழ் நாட்டுக் காபி ஓர் உணவு; நாவுக்குச் சுவையானது; மூக்குக்கு மண மானது; வயிற்றுக்கு நிறைவானது; மூளைக்குச் சுறுசுறுப்பு ஊட்டுவது.

சிவபெருமானுடைய மூர்த்தங்களில் சோமாஸ்கந்த மூர்த்தம் என்பது ஒன்று. பரமசிவன், பார்வதி, அவர்களிடையில் முருகன்-இப்படி எழுந்தருளியிருக்கும் கோலம் அது. ஒவ்வொரு சிவாலயத்திலும் இந்த மூர்த்தியைப் பார்க்கலாம். காபியைச் சோமாஸ்கந்த மூர்த்தி என்று நான் சொல்வது வழக்கம். பால்தான் பரமசிவன்; டிகாக்ஷன் பார்வதி; சர்க்கரை முருகப்பெருமான்! காலையில் காபி சாப்பிடும்போது இந்த உபமானம் நினைவுக்கு வந்தால் புண்ணியந்தானே? அதனால்தான் இதைச் சொல்லி வைக்கிறேன்.

கல்யாணங்களில் சம்பந்திச் சண்டை உண்டாகும். அநேகமாகப் பாதிக்குமேல் காபியினால் வந்த சண்டையாகவே இருக்கும். குறித்த காலத்தில் காபி வரவில்லையென்று பிள்ளை வீட்டுக்காரர்கள் கோபித்துக் கொள்வார்கள். "புதுப்பால் வந்தவுடன் போட்டுக் கொடுக்கலாம் என்று இருந்தேன்" என்று பெண்ணைப் பெற்றவர் சமாதானம் சொல்வார். "புதுப்பால் சாயங்காலம் கறப்பான்; அதற்கப்புறந்தான் காபி கிடைக்குமோ?" என்று மாப்பிள்ளையுடன் வந்திருக்கும் ஓர் இளைஞன் சொல்வான். அநேகமாக அவன் தன் வீட்டில் தண்ணீர்க் காபியைச் சாப்பிடுகிறவனாக இருப்பான். இங்கே மாப்பிள்ளைக் கட்சிக்கு வக்காலத்து வாங்கி ஜபர்தஸ்துப் பண்ணுவான்.

மாப்பிள்ளை வீட்டுக்கு வேண்டியவர்கள் வந்து கொண்டேயிருப்பார்கள். அப்போதப்போது காபி கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். சில சமயங்களில் நேரமாகிவிட்டால் காபிக்கு சிறிது ஜலதோஷம் பிடித்துவிடும். பெண் வீட்டுக்காரர் என்ன, பாற்கடலா வைத்திருக்கிறார்? காபி சற்றே தரம் மாறியிருந்தால் பிள்ளை வீட்டுக்காரர்களுக்குக் கோபம் வந்துவிடும். "முக்கியமான மனிதர் வந்தாரே என்றுதானே காபிக்குச் சொல்லியனுப்பினேம்?

இந்தத் தண்ணீர்க் காபியையா கொடுத்தனுப்புவது? காபி ஆகிவிட்டதென்றால் நான் ஹோட்டலிலிருந்து வருவித்துக் கொடுத்துவிட்டுப் போகிறேன். இப்படி எங்களை அவமானப்படுத்த வேண்டாம்'' என்று மாப்பிள்ளை வீட்டார், சண்டைக்குத் தொடங்கி விடுவார்கள். மற்றச் சீர் வகைகளில் குறைவு இருந்தாலும் சரி பண்ணி விடலாம்; அதைக் கவனிக்காமல் கூட இருப்பார்கள். அடே அப்பா! இந்தக் காபி விவகாரம் இருக்கிறதே, இதனால் இராம ராவண யுத்தம், பாரதப் பெரும் போரே உண்டாகிவிடும்.

சரியான காலத்தில் காபி சாப்பிடாவிட்டால் காபி சாப்பிட்டதன் சுவாரசியமே கெட்டுவிடுகிறது. அதனால் தான்,

> ''பெறுமவற்றுள் யாம் அறிவ தில்லை, உறுபொழுதில்
> காபிடீ அல்ல பிற''

என்று முன்பு ஒரு குறளைப் பாடினேன்.

> '' விருந்தின் பயனெல்லாம் வீணாகும் காபி
> அருந்தத் தராமல்விட் டால்''

என்பது அநுபவத்திலே எழுந்த மற்றொரு குறள்.

ஓர் இரகசியம் சொல்கிறேன். நான் காபி சாப்பிடுவதில்லை. காபியின் சுவையை அடியோடு அறியாதவன் அல்ல. இளமையில் சாப்பிட்டேன்; பிறகு விட்டு விட்டேன். என்னுடைய ஆசிரியப் பிரானாகிய டாக்டர் ஐயரவர்கள் காபி சாப்பிடுவதுண்டு. அவர்கள் இளம் பிராயத்தில் காபி சாப்பிடவில்லை. பிறகு சாப்பிட்டார்கள். அப்போது தம்முடைய தந்தையாருக்குத் தெரியாமல் சாப்பிட்டார்களாம்.

பிற்பகல் நேரத்தில் அவர்கள் காபி பருகும்போது நான் அருகில் இருப்பேன். "உனக்குக் கொடுக்காமல் நான் சாப்பிடுகிறேனே!" என்று வருந்துவார்கள். அவர்கள் உள்ளம் வேதனைப்படுவதை அறிந்து அவர்கள் கொடுக்கும் காபியை உண்டேன். பிறகு இருவேளையும் காபி சாப்பிடத் தொடங்கினேன். அவர்கள் அமரரான பிறகு மறுபடியும் காபியை விட்டுவிட்டேன்.

காபி சாப்பிட மீட்டும் தொடங்கியபோது என்னுடைய அன்னையார் இருந்தார்கள். நான் காபி சாப்பிடுவதைக் கண்டு அவர்களுக்குப் பெருமகிழ்ச்சி. அப்போது ஒரு விசித்திரத்தைக் கவனித்தேன். காபி தாய்ப் பாசத்தையும் மாற்றிவிடுகிறது என்பதை உணர்ந்தேன். நான் பகலுணவு உண்ண நேரமானால் என் அன்னையார் உண்ணமல் காத்திருப்பார்கள். எத்தனை நேரமானாலும் சரி, உண்ணமல் இருப்பார்கள். ஆனால் காபி விஷயத்தில் அப்படி இல்லை; எனக்குக் கொடுக்காமலே சாப்பிட்டு விடுவார்கள். அப்போதுதான் காபியின் வலிமையை உணர்ந்தேன். தாயன்பையும் மாற்றும் கொடிய பானம் அது. இப்படிச் சொல்லாமல், பற்றை மறக்கச் செய்யும் ஞானதீர்த்தம் அது என்றும் சொல்லலாம் அல்லவா?

ஞான தீர்த்தம் என்று சொன்னவுடன் எனக்கு விட்ட கதை ஞாபகத்துக்கு வருகிறது. அந்தப் பெரியவர் காபியை ஞானதீர்த்தம் என்று சொன்னரே; அப்போது இரண்டு தம்ளரில் காபி வந்தது என்று சொன்னேன் அல்லவா? எனக்கும் சேர்த்துத்தான் வந்தது. "நான் காபி சாப்பிடுவதில்லையே!" என்று சொன்னேன். அந்தப் பெரியவர் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார். "எப்போதுமே சாப்பிடுகிறதில்லையா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றேன். "இது பெரிய விஷயம். தவம் என்றுதான் சொல்ல வேண்டும்" என்று பாராட்டினர்.

காபி சாப்பிடாமல் இருப்பதனால் எனக்கு எவ்வளவு மதிப்பு உண்டாகிறது தெரியுமா? பெண்டு பிள்ளைகளைத் துறந்து போன துறவிக்குக்கூட அவ்வளவு மதிப்பு இருப்பதில்லை. "உங்களுக்குத் தலைவலி வருகிறதில்லையா?", "அதெப்படி உங்களைச் சுற்றி எல்லாரும் காபி குடிக்கும் போது நீங்கள் சும்மா இருக்கிறீர்கள்?", "எப்படி உங்களுக்குக் காபியை விட்டிருக்க முடிகிறது?" என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்வியைக் கேட்கிறார்கள். சாதம் சாப்பிடாமல் இருந்தால்கூட அதைப் பெரிய விரதமாகக் கருதமாட்டார்கள் போலிருக்கிறது, காபி சாப்பிடா விரதம் பெறுகிற கவுரவத்தை நினைக்கிறபோது.

காலையில் வேறு எதைச் சாப்பிட்டாலும், "காபி சாப்பிட்டாயிற்றா?" என்றுதான் கேட்கிறார்கள். காபி என்பதற்குக் காலைப்பானம் என்று அர்த்தம் வந்து விட்டது.

நான் கல்கத்தாவுக்குச் சில முறைகள் போயிருக்கிறேன். அன்பர்களோடு அளவளாவும்போது வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருப்பேன். சிலேடையாகப் பேசுவேன். புதிய கவிகளைப் பாடுவேன். ஒரு முறை அந்த நகரில் உள்ள பாரதி தமிழ்ச் சங்கத்துக்குப் போயிருந்தேன். வழக்கம்போல் ஒருநாள் பிற்பகலில் அன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். சிற்றுண்டியும் காபியும் வந்தன. எனக்குப் பால் தந்தார்கள். அப்போது அன்பர்களின் விருப்பப்படி சில சிலேடைப் பாடல்கள் சொன்னேன். நேஷனல் இன்ஸுலேடட் கேபிள்ஸ் கம்பெனியில் மானேஜராக இருந்த திரு டி. எஸ். சீதாபதி அவர்கள், "காபிக்கும் பழையதுக்கும் சிலேடை சொல்லுங்கள்" என்றார். நான் ஒரு சிலேடை வெண்பாவைச் சொன்னேன். அதில் என் இயல்பையும் இணைத்துச் சொன்னேன்.

**காலை உணவாகிக்**
**கைப்பிசைய நல்லதாய்ப்**
**பாலருந்தி வேண்டாத**
**பான்மையால்—சீலமிகு**
**சீதா பதிஎன்னும்**
**செம்மலே, காபியினை**
**ஓதாய் பழையதென் று.**

**காபிக்கு:** காலை உணவாகி - காலையில் அருந்தும் உணவாகி, கைப்பு இசைய நல்லதாய் - கசப்புப் பொருந்த அதனால் நல்ல காபி என்று சொல்வதாய், பால் அருந்தி - பாலை அருந்தும் நான், வேண்டாத பான்மையால்-விரும்பாத இயல்பினால், சீலமிகு - குணத்திலே மிக்க, சீதாபதி என்னும் செம்மலே - சீதாபதி என்னும் பெயரை உடைய கனவானே, காபியினை ஓதாய் பழையது என்று - காபியினைப் பழையது என்று சொல்க.

**பழையதுக்கு:** காலை உணவாகி - காலையில் உண்ணும் உணவாகி, கை பிசைய நல்லதாய் - கையினால் பிசையப் பிசைய நல்லதாகி, பாலர் உந்தி - இளம்பிள்ளைகள் வெறுத்துத் தள்ளி, வேண்டாத பான்மையால் - விரும்பாத இயல்பினால். (மற்றப் பகுதிகளுக்கு முன் சொன்னபடியே பொருள் கொள்க.)

"கைப்பு இசைய நல்லதாய் என்று சொன்னீர்களே; காபியை உண்டவர்களுக்குத்தான் அந்த அருமை தெரியும்; உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று ஓர் அன்பர் கேட்டார்.

"நான் ஒரு காலத்தில் சாப்பிட்டதுண்டு. காபிக் காதலர்கள் டிகாக்ஷன் குறைவாக இருந்தால் கசப்பு

அதிகமாவதற்காக மறுபடியும் சேர்த்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன்'' என்றேன்.

மற்றவர்கள் அருமையான காபியைக் குடித்து நொட்டை போடுவதைப் பார்க்கும்போதும், அருகில் உள்ளவர்கள் காபியை ஆற்றுகையில் உண்டாகும் நறுமணம் மூக்கைத் துளைக்கும் போதும் எனக்குச் சிறிதே சபலம் தட்டுவதுண்டு. ஆனால் காபியைக் குடிக்காத சிறிய செயலைப் பெரிய தியாகமாக எண்ணி அன்பர்கள் என்னை மதிக்கிறார்களே, அந்த மதிப்பை இழந்துவிட விருப்பம் இல்லை. அதனால்தான் அந்த விரதத்தை இன்னும் விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறேன்.

# பட்டிமண்டபம்

கடந்த சில ஆண்டுகளாகப் பட்டிமண்டபம் என்ற நிகழ்ச்சி பிரபலம் அடைந்து வந்திருக்கிறது. கவியரங்கம், கருத்தரங்கம் ஆகியவற்றுக்குக் கூடுகிற கூட்டத்தைவிடப் பட்டிமண்டபத்துக்கு ஏராளமாகக் கூட்டம் வருகிறது. கட்சி கட்டிக்கொண்டு பேச்சாளர்கள் வாதம் செய்யும் போது கோழிச் சண்டை, ஆட்டுக்கிடாய்ச் சண்டைகளைப் பார்க்கிறவர்களுக்கு உள்ள உற்சாகம் அவையினருக்கு உண்டாகிறது.

முதல் முதலாகக் காரைக்குடிக் கம்பன் விழாவில் தான் பட்டிமண்டபம் தொடங்கியது. முதலில் ஒரே தலைப்பில் கருத்துக்களை வெவ்வேறு பேச்சாளர்கள் பேசினார்கள். பிறகு விவாத அரங்காகப் பட்டிமண்டபம் மாறியது. அப்போதுதான் அதற்குச் சூடு பிடித்தது. முதலில் இரண்டு கட்சிகள் வாதம் செய்தன; பிறகு மூன்று கட்சிகள் வந்தன; அப்பால் நான்கு கட்சிகள் வந்தன. அப்பால் கோர்ட்டுக்கூடக் காரைக்குடிப் பட்டிமண்டபத்தில் வந்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சி இப்போது எங்கும் பரவியிருக்கிறது. எந்த இலக்கிய விழாவானாலும் பட்டிமண்டபம் இல்லாமல் இருப்பதில்லை. பருப்பில்லாமல், பாயசம் இல்லாமல், கல்யாண விருந்து இருக்கலாம்; பட்டிமண்டபம்

இல்லாமல் இலக்கிய விழா இல்லை; இருந்தால் சுவாரசியப் படுவதில்லை.

பழங்காலத்தில் - அதாவது சங்க காலத்திலேயே—பட்டிமண்டபம் இருந்தது. புலவர்கள் கூடி ஆராய்ச்சி செய்யும் மண்டபம் அது. தக்க புலவர்கள் கூடி நடத்தும் அவை அது. இந்திரவிழாவில் 'பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறினர்' புலவர் என்று மணிமேகலையால் அறிகிறோம். "பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை" என்று மாணிக்கவாசகர் பெருமிதம் அடைகிறார். "பன்னரும் கலைதெரி பட்டி மண்டபம்" என்று கம்பன் பாடுகிறான். அந்தக் காலத்தில் புலவர்கள் கூடி ஆராய்ச்சி செய்தது பட்டிமண்டபம் என்று இவற்றால் தெரிய வருகிறது. இப்போது விவாத அரங்காக, இலக்கியப் போர்க்களமாக, ஏசல் வீதியாகப் பட்டிமண்டபங்கள் நிகழ்கின்றன.

பட்டிமண்டபம் என்பதிலுள்ள மண்டபம் என்பது வடசொல். அது தனித்தமிழருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அதை மன்றமாக்கிப் பட்டிமன்றம் என்று போடுகிறார்கள். இரண்டு சொற்கள் இணைந்து வந்த தொடர் அது. அதில் ஒரு சொல்லை மாற்றிப் பட்டியை மட்டும் அப்படியே வைத்துக்கொண்டது வேடிக்கையாக இருக்கிறது. ஸ்ரீமான் என்பதைத் திருவாளர் என்று தமிழாக மாற்றியவர்கள் ஸ்ரீமதி என்பதில் உள்ள ஸ்ரீயை மட்டும் மாற்றி மதியை அப்படியே வைத்துத் திருமதி என்று வழங்குவதும் இது போன்ற வேடிக்கைதான். திருவாட்டி என்றால் தூய தமிழாக இருக்குமே! இப்போது திருமதி என்று சொல்லியும் எழுதியும் பழக்கத்துக்கு வந்துவிட்டது. நானும் அப்படித்தான் எழுத வேண்டியிருக்கிறது!

இந்தச் சொல்லாராய்ச்சியில் இன்னும் ஒன்று நினைவுக்கு வருகிறது. 'காந்தியடிகளின் சிலையைத் திறந்து

வைத்தார்கள்' என்ற செய்தி வருகிறது. அங்கே காந்தியடிகளின் வெண்கலத் திருவுருவத்தைத் திறந்து வைத்திருப்பார்கள். வெண்கலத்தாலோ, வெள்ளியாலோ, செம்பாலோ ஆன எந்தப் படிவத்தையும் இப்போது சிலை என்கிறார்கள். சிலை என்பது கல்லைக் குறிக்கும் சிலா என்ற வடசொல்லின் திரிபு. அது ஆகுபெயராகக் கல்லாலான வடிவத்தைக் குறிக்கும். ஆகவே, சிலை கல்லாலான வடிவத்துக்குத்தான் பெயர். இப்போது சிலை என்பதற்கு விக்கிரகம் அல்லது வடிவம் என்று பொருள் கொண்டு பொற்சிலை, வெண்கலச் சிலை என்று வழங்குகிறார்கள். கோர்ட்டுக் கச்சேரி என்பது போலக் கற்சிலை என்றும் சொல்கிறார்கள்.

அது கிடக்கட்டும்; பட்டி மண்டபத்துக்கு வருவோம். கம்பன் விழாவில் தொடங்கிய பட்டிமண்டபம் எல்லா விழாவுக்கும் வந்துவிட்டது. ஆனால் கம்பராமாயணப் பட்டிமண்டபம் மாதிரி மற்றப் பொருளைப் பற்றிய பட்டி மண்டபம் சுவைப்பதில்லை. காரணம், இராமாயணக் கதை எல்லாருக்கும் தெரியும். பேசுகிறவர்கள் கருத்தை எடுத்துச் சொல்லும்போது சபையில் உள்ளவர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். "இலக்குவன் அங்கே நின்றுகொண்டிருக்கிறான். குகன் அவனைத்தான் முதலில் பார்த்தான்" என்று ஒருவர் பேசும்போது, "யார் அந்த இலக்குவன்? யார் அந்தக் குகன்?" என்று சபையில் உள்ளவர்கள் கேட்க மாட்டார்கள்; யோசிக்க மாட்டார்கள். சிலப்பதிகாரப் பட்டி மண்டபம் நடக்கிறது. "மாடல மறையோன் கோவலனைப் பார்க்கிறான்" என்று ஒருவர் பேசும்போது, "அந்தப் பேர்வழி யார்? மாடல மறையோனும்! யார் அவர்?" என்று சபையோர்கள் யோசிப்பார்கள். அதற்குள் பேச்சாளர் நெடுந்தூரம் போய்விடுவார். அவர் மாடல மறையோன் இன்னார் என்று விளக்கிவிட்டுக் கருத்தைச்

சொல்லத் தொடங்கினால் அது ஒரு சொற்பொழிவைப் போல் ஆகிவிடும். பட்டிமண்டபத்தின் விறுவிறுப்புக் குறையும்; தொய்வு உண்டாகும்; பிறகு பாட்டிமண்டபம் ஆகிவிடும்!

இப்போதெல்லாம் பட்டிமண்டபத்துக்குப் பொருள் கண்டுபிடிப்பது அரிதாக இருக்கிறது. கம்பராமாயணத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துப் பார்த்து இரண்டு கட்சி, மூன்று கட்சி என்று வைத்து வாதப்பொருளைத் தேர்ந்தெடுத்துப் பேசியாகிவிட்டது. தம்பியரிற் சிறந்தவர் யார், தந்தையரிற் சிறந்தவர் யார், மனைவியரிற் சிறந்தவர் யார், கொடியவர் யார், வீரர் யார் என்றெல்லாம் கேட்டாகிவிட்டது. இராமன் சிறந்தவனா, சீதை சிறந்தவளா என்றும் வாதமிட்டாகிவிட்டது. மற்ற விழாக்களில் பட்டிமண்டப விவாதப் பொருள்கள் சில விசித்திரமாக இருக்கின்றன. இன்னும் சில காலத்தில், "சுரைக்காய் ருசியா, வெண்டைக்காய் ருசியா?" என்பது போன்ற வாதம் எழக்கூடும்.

பட்டி மண்டபத் தலைவரை நடுவர் என்று சொல்கிறார்கள். நடுவர் என்றால் நீதிபதிக்குப் பெயர். யமனுக்குக் கூட அந்தப் பேர் உண்டு. சில தலைவர்கள் தம் கருத்தை வற்புறுத்துவதற்காகவே பட்டிமண்டபத்துக்குப் பொருள் கொடுப்பார்கள். இராவணனைப் பாராட்ட வேண்டும் என்பது அவருடைய குறிக்கோளாக இருக்கும். 'இராவணன் வீரம் மாசற்றதா, இராமன் வீரம் மாசற்றதா?' என்று வாதமிடச் செய்வார். இராவணன் வீரமே சிறந்தது என்று முடிவு கூறுவார்.

"பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்" என்று மணிமேகலை கூறுகிறது. அந்தக் காலப் பட்டி மண்டபம் எப்படி நடந்ததோ தெரியாது. அதற்கு வேண்டிய

இலக்கணமாகிய பாங்கு இந்தக் காலத்துப் பட்டிமண்டபத்துக்கு மிகமிக அவசியம். பாங்கு என்பது பக்குவம்; இங்கிதம்; பிறர் உள்ளம் புண்படாமல் நயமாகப் பேசுவது. இப்போது பல பட்டி மண்டபங்களில் இந்தப் பாங்கு அமைவதில்லை. கோழிகள் கழுத்தைச் சிலிர்த்துக்கொண்டு போரிடுமே, அப்படிக் காட்சியளிக்கின்ற இடமும் உண்டு. ஒருவரை ஒருவர் இழித்தும், பகடி செய்தும், பேசும் பொருளுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லாமல் செய்கிறவர்கள் பலர். ஒன்று அது திட்டு மண்டபம் ஆகும்; அல்லது வெட்டி மண்டபம் ஆகிவிடும். சிலர், "அன்பருடைய மனைவி அவருக்கு இந்த அறிவுரையைச் சொல்லியிருப்பார்கள். அப்படிக் கேட்டு வருவது அவர் வழக்கம்" என்று வீட்டில் உள்ளவர்களையெல்லாம் இழுத்து வருவார்கள். அதைக் கேட்டுச் சபையிலுள்ளவர்கள் ஆரவாரிப்பார்கள்; கை தட்டுவார்கள். "என் நண்பர் இராமாயணத்தைப் படிக்காமலே வந்து பேசுகிறாரே! இவரிடம் படிக்கும் மாணுக்கர்களை நினைந்து இரங்குகிறேன்" என்று பேசுவார். முன் அமர்ந்திருக்கும் கூட்டத்தில் சிரிப்பும் கைதட்டலும் எழும். அப்போது எதிர்க்கட்சிக்காரர் சும்மா இருப்பாரா? "அவரவர்கள் தம்முடைய சொந்த அனுபவத்தைக் கொண்டே பிறரை அளப்பார்கள். எதிர்க் கட்சி நண்பர் தம்முடைய பழக்கத்தையே மற்றவர்களும் கொண்டிருப்பதாக எண்ணுகிறார். பாவம்! அவருடைய பரிதாப நிலைக்கு இரங்குகிறேன்" என்பார். மறுபடியும் கைதட்டல் ஆரவாரம்.

இலக்கியச் சுவையை வளர்ப்பதற்காகப் பட்டிமண்டபம் நடக்க வேண்டும். இப்படியெல்லாம் பேசினால் இலக்கியச் சுவையா தோன்றும்? திரு.வி.க. அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்; "முன்பெல்லாம் இயல்தமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என்று மூன்று தமிழ்கள் இருந்தன.

இப்போது நாலாவது தமிழ் ஒன்று வந்திருக்கிறது. அது தான் வசைத்தமிழ்'' என்பார். பல பட்டிமண்டபங்களில் அந்த நாலாவது தமிழ் நடமாடுகிறது.

எடுத்துக் கொண்ட பாத்திரத்தின் சிறப்பையும் எதிர்ப் பாத்திரத்தின் குறையையும் எடுத்துக் காட்டி வாதிடுதல் வாதமுறை. குறைகளை எடுத்துக் காட்டும் போது அந்தப் பாத்திரத்தை மிகவும் இழித்துப் பேசுவது பாங்கு ஆகாது. இராமனுக்கு எதிரே சீதையை வைத்து வாதிடும் பட்டிமண்டபத்தில், "இராமன் மனிதனா? கோழை!'' என்று சிலர் பேசுவதுண்டு. அப்போது அவையிலுள்ள சிலருடைய மனம் புண்படும். பக்தர்கள் உள்ளம் புண்படுவது இயல்பு. 'இனிமேல் பட்டிமண்டபத்துக்குப் போகக் கூடாது' என்று அவர்கள் எண்ணுவார்கள். சில ஊர்களில் பட்டி மண்டபம் நடந்து, இப்படிப் பிறர் மனம் புண்படப் பேசியதால் அந்த நிகழ்ச்சியையே நிறுத்திவிட்டார்கள். பட்டிமண்டபத்துக்கு ஏன் அந்தப் பெயர் வந்தது என்று தெரியாது. பட்டி என்ற சொல் உயர்ந்த பொருளில்தான் அமைந்திருக்க வேண்டும். அது இன்னதென்று தெரியவில்லை. ஆனால் அந்தச் சொல்லுக்கு நாய் என்று ஒரு பொருள் உண்டு. சில பட்டிமண்டபங்களில் வெறி கொண்டவர்களைப் போல வாதமிடுமவர்கள் பேசுவதைப் பார்த்தால் அந்தப் பொருளைக் கொள்ளலாமோ என்று தோன்றுகிறது.

ஒரு சமயம் கோயம்புத்தூரில் நன்னெறிக் கழகத்தில் சேக்கிழார் விழா நடந்தது. அதில் ஒரு பட்டி மண்டபம். மூன்று கட்சிகள். 'நம்மால் பின்பற்றுவதற்கு எளியவர் யார்? இளையான்குடி மாற நாயனாரா? மெய்ப்பொருள் நாயனாரா? இயற்பகை நாயனாரா?' என்பது வாதப் பொருள். நான் பட்டிமண்டப நடுவர்.

இளையான்குடி மாற நாயனார் விதைத்த நெல்லைச் சிவனடியாருக்காக அரித்து வந்து சமைக்கச் செய்து உணவு வழங்கியவர்; மெய்ப்பொருள் நாயனார் சிவவேடம் பூண்டு வந்த பகையரசனை வணங்கி அவனால் கொல்லப்பட்டவர்; இயற்பகையார் சிவனடியாருக்குத் தம் மனைவியைக் கொடுத்தவர். பெரிய புராணத்தைக் கண்டிக்கும் கொள்கையுடையோர் இயற்பகை நாயனாரை மிகக் கேவலமாகப் பேசுவார்கள். நன்னெறிக் கழகத்தினர் கடவுள் உணர்ச்சியும் அடியார் பக்தியும் உடையவர்கள். ஆனாலும் பேசுபவர்கள் இயற்பகை நாயனாரைச் சாடும்போது மிகவும் இழிவாகப் பேசிவிடலாம். இதை எண்ணி, அழைப்பிதழைப் பார்த்த சிலர், "இப்படி ஒரு பட்டிமண்டபம் அமைக்கலாமா? இதற்குக் கி.வா.ஜ. தலைமை தாங்கலாமா?" என்று குறை கூறினார்கள்.

நானோ தலைமை தாங்க ஒப்புக்கொண்டு விட்டேன், நடுவராக அமர்ந்துவிட்டேன்.

என்னுடைய முன்னுரையில், வாதத்துக்கு வரம்பு கட்ட எண்ணினேன். இது என் வழக்கம். "இன்று இங்கே நடைபெறுவது சேக்கிழார் விழா. சேக்கிழார் தெய்வம் போன்றவர். அவருடைய தெய்வங்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள்; தெய்வத்தினும் மேலானவர்கள்; அதனால் தான் அவர்கள் வரலாற்றைச் சொல்லும் புராணம் பெரிய புராணம் ஆயிற்று. அடியார்கள் புராணம் பெரிய புராணம் என்றால் ஆண்டவன் புராணம் சிறிய புராணம் என்று தானே கொள்ள வேண்டும்? இப்போது இங்கே சேக்கிழார் காட்டும் மூன்று தெய்வங்களைப் பற்றிய வாதம் நிகழப் போகிறது. தெய்வங்கள் என்ற உணர்வோடு பேசுவதுதான் இந்த மேடைக்கு ஏற்ற பாங்கு. தீர்ப்பில், யாரேனும் ஒருவரைத்தான் தெரிந்தெடுக்க வேண்டிவரும்; மற்ற

இருவர்களை ஒதுக்கவேண்டியிருக்கும். அப்படி ஒதுக்கப் பட்டவர்கள் தாழ்ந்தவர்கள் என்று எண்ணக்கூடாது. நம்மால் பின்பற்றுவதற்கு எளியவர் யார் என்பதுதான் வாதப் பொருள். நாம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக் கிறோம். நம்மால் பின்பற்றுவதற்கு உரியவர் நமக்கு எளிய வராக, இந்த மூவரினும் நம்மால் தொடுவதற்குரிய சமீபத் தில் இருப்பவராக இருப்பவர். மற்றவர்கள் மேல் நிலையில், நம்மால் அணுகுவதற்கரிய மேல் நிலையில் இருப்பவர்கள் ஆவார்கள். இவற்றையெல்லாம் மனத்திற் கொண்டு பாங் காகப் பேச வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்'' என்றேன். வாதம் மிகவும் பாங்காக, பெரிய புராணத்தில் உள்ள நுட்பங்களை விளக்குவதாக அமைந்தது.

மற்றொரு சமயம் குருவிக்கரம்பை என்ற இடத்தில் ஒரு பட்டி மண்டபத்துக்குத் தலைமை தாங்க நேர்ந்தது. "வள்ளுவர் வகுத்த நெறியில் சென்றவர் கண்ணகியா, சீதையா?'' என்பது வாதப்பொருள். சீதையை இழித்துப் பேச இந்தத் தலைப்புச் சிலருக்கு இடம் கொடுக்கலாம், அத்தகைய நோக்கத்தோடே இது போன்ற தலைப்பைக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள் என்று முன்பே சொன் னேன்.

ஆகவே என் முன்னுரையில் வரம்பு கோலினேன். "இன்று இரண்டு கற்புடைத் தெய்வங்களைப் பற்றிய ரசமான வாதம் நிகழப் போகிறது. கண்ணகி தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தெய்வமாக வழிபடப் பெறும் கற்பரசி. சீதை பாரத நாடு முழுவதும் கற்பின் கனலியாக வழிபடும் தெய்வம். இங்கே வள்ளுவர் வகுத்த நெறியின் படி வாழ்ந்தவர் யார் என்பது பற்றியே பேச வேண்டும். அதன்படி வாழாதவர் கற்பரசி அல்லர் என்று சொல்லக் கூடாது. கற்பைப் பற்றிய வாதம் அன்று இது'' என்று சொன்னேன்.

பேச்சாளர்கள் வாதம் புரிந்தார்கள். கண்ணகி பக்கத்தில் வாதிட்ட இளைஞர் ஒருவர், "அயலான் இடத்தில் பல மாதங்கள் இருந்தவளைக் கற்புடையவள் என்று எப்படிச் சொல்ல முடியும்?" என்றார். நான் உடனே எழுந்து, "இப்படிப் பேசக்கூடாது என்று முன்பே நான் சொன்னேன்" என்றேன். அந்த இளைஞர், "நடுவரவர்களுக்குச் சீதையின்மேற் காதல் போலும்!" என்றார். "ஆம்! எனக்குச் சீதையின் மேலும் தாய்க் காதல்; கண்ணகியின் மேலும் தாய்க் காதல்" என்றேன். இளைஞர் வாதிட்டு அமர்ந்தார். இராமாயணத்தை நன்றாகப் படித்தவர்களும் அங்கே வாதிட்டார்கள்.

நான் தீர்ப்பளிக்கத்தொடங்கினேன். அந்த இளைஞரும் அவரைச் சார்ந்தவர்களும் நான் சீதையின் சார்பில் தீர்ப்பளிப்பேன் என்று எண்ணியிருக்கலாம். நான் கண்ணகியின் சார்பில்தான் தீர்ப்பளித்தேன். தீர்ப்பளித்த முறையைச் சொல்கிறேன்.

"திருவள்ளுவர் 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை' என்று ஒரு நெறி வகுக்கிறார். கண்ணகியிடம் காமவேள் கோட்டம் கைதொழுதால் நலம் என்று சொல்ல அவள், 'பீடு அன்று' என்று சொல்லித் தொழ வில்லை. சீதையோ இராவணனால் எடுத்துச் செல்லப்பட்டபோது வனத்துறையும் தெய்வங்களுக்கு முறையிட்டாள். அதனால் வள்ளுவர் வகுத்த நெறியில் சென்றவள் கண்ணகி. தண்டவாளத்தில் செல்லும் ரெயில் போன்றவள் அவள். சீதை கார் போன்றவள்" என்று சொல்லி நிறுத்தினேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறந்த வாகனந்தானே?

## நாலாவது

சங்கீத வித்துவான்கள் எல்லோருமே, முக்கியமாக வாய்ப்பாட்டுக்காரர்கள், வெற்றிலை பாக்குப் புகையிலை போடுபவர்களாக இருக்கிறார்கள். வெறும் தாம்பூலம் அல்ல; புகையிலையோடு சேர்ந்த தாம்பூலம். புகையிலை வராததற்கு முன்பு வெற்றிலை, பாக்கு இரண்டையும் போடுவார்கள். சுண்ணாம்பு தடவிக் கொள்வார்கள். சுண்ணாம்பு என்று சொல்கிறதில்லை. 'மூணாவது' என்று சொல்வார்கள். தாம்பூலம் போடுகிறவர்கள் அதிகமாக இருந்தால் அவ்விடத்தில், வெளியில், அவர்கள் துப்பிய எச்சில் அவர்கள் திருவாய் குதப்பியதை அடையாளம் காட்டும். சற்றுத் தூரச் சென்று துப்புவார்கள். ஆனால் மற்றோர் அடையாளத்தை எங்கே பார்த்தாலும் காணலாம். சுண்ணாம்பை வெற்றிலையில் தடவி விட்டு மிச்சத்தை அப்படியே கைக்கு எட்டிய இடத்தில் தீற்றி விடுவார்கள். விளக்குக் கம்பமோ, சுவரோ, தட்டியோ எதுவானாலும் சுண்ணாம்பைத் தீற்றுவார்கள். சென்னைக்கு வந்து பாருங்கள். ஒவ்வொரு விளக்குக் கம்பத்திலும் கொஞ்சமாவது சுண்ணாம்பின் அறிகுறி இருக்கும். இப்படி அந்த 'மூணாவது' எங்கும் வியாபித்திருக்கிறது.

'மூணாவது' என்றவுடன் எனக்கு ஒரு நினைவு வருகிறது. திரிசிபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பல சமயம் பட்டீச்சுரத்தில் இருந்த

ஆறுமுகத்தாபிள்ளை என்ற செல்வர் வீட்டில் தங்குவது வழக்கம். ஆறுமுகத்தாபிள்ளைக்கு மகாவித்துவானிடத்தில் தெய்வ விசுவாசம்.

ஒரு சமயம் ஆறுமுகத்தாபிள்ளை, ஒருவரிடம் கடன் வாங்கினார். பத்திரம் எழுதிக் கொடுத்தார். சிலர் சாட்சிக் கையெழுத்துப் போட்டார்கள். அவர்களில் ஒருவர் கும்பகோணத்துக்காரர். அவர் இருந்த தெரு சுண்ணும்புக் காரத்தெரு. அதை நீற்றுக்காரத் தெரு என்றும் சொல்வார்கள். அவர் கையெழுத்திடும்போது, "நீற்றுக்காரத் தெரு என்று போட்டுமா? சுண்ணும்புக்காரத் தெரு என்று போட்டுமா?" என்று அருகில் இருந்த மகாவித்துவான் பிள்ளையவர்களைக் கேட்டாராம். அப்புலவர் பெருமான் உடனே, "இரண்டும் வேண்டாம்; மூணுவது தெரு என்று போடலாமே!" என்று சொன்னதைக் கேட்டு யாவரும் சிரித்தார்கள்.

'சுண்ணும்பில் இருக்கிறது சூட்சுமம்' என்று ஒரு பழமொழி வழங்குகிறது. அது எதனுல் வந்தது தெரியுமா? ஒரு செட்டியார் வீட்டுப் பெண்ணுக்குத் திருமணத்துக்கு ஏற்பாடு நடந்தது. பிள்ளைவீட்டுக்காரர்கள் பெண்ணைப் பார்க்க வந்திருந்தார்கள். உணவருந்தித் தாம்பூலம் போட்டுக் கொள்ள வேண்டிய நேரம்; பிள்ளை வீட்டுக் காரரில் முக்கியமானவர் ஒரு வெற்றிலையை எடுத்து, கல்யாணத்துக்கு இருக்கும் பெண்ணை அழைத்து, "இதில் சுண்ணும்பு எடுத்துக் கொண்டு வா, அம்மா!" என்றாராம். அந்தப் பெண் அப்படியே கொண்டு வந்து கொடுத்தாள். எல்லாரும் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்கள். பிறகு பெண்ணைப் பார்த்துச் சென்றவர், "உங்கள் பெண் எங்கள் குடும்பத்துக்கு ஏற்றவளாகத் தெரியவில்லை. அவளுக்குச் செட்டும் கட்டுமாக வாழத் தெரியாதென்று

தோன்றுகிறது'' என்று எழுதிவிட்டார். ஏன் அப்படி எழுதினுர்? அந்தப் பெண் சிறிது அதிகமாகச் சுண்ணும்பைக் கொண்டுவந்து தந்துவிட்டாள். 'இப்படி அளவறியாமல் கொடுப்பவள், வீட்டுச் செலவையும் கணக்காகப் பண்ண மாட்டாள்' என்று அவர் தீர்மானம் பண்ணிவிட்டார். அவருடைய தீர்மானத்துக்குக் காரணம் அந்தப் பெண் கொண்டு வந்து அளித்த சுண்ணும்பு. இதை எண்ணியே, 'சுண்ணும்பில் இருக்கிறது சூட்சுமம்' என்ற பழமொழி எழுந்தது.

புகையிலை வராததற்குமுன் மூன்ருவதாகிய சுண்ணும்போடு நின்றுவிட்டது. இப்போதோ நாலாவது வந்துவிட்டது. ஆம்: புகையிலைதான் அந்த நாலாவது.

'சங்கீத வித்துவான்கள் புகையிலை போடுகிருர்களே: புகையிலைக்கும் சங்கீதத்துக்கும் ஏதாவது தொடர்புண்டா?' என்ற சந்தேகம் எனக்கு எழுந்தது. என் நண்பராகிய சங்கீத வித்துவான் ஒருவரிடமே கேட்டேன். அவர், ''ஆம்! சாரீரத்தைச் சுத்தப்படுத்துவது புகையிலை. கபம் வந்து அடைக்காமல் அது பாதுகாக்கிறது'' என்ருர். ''அப்படியாணுல் புகையிலை போட்டால் நல்ல சாரீரம் வருமா? பாட்டுப் பாட முடியுமா?' என்று கேட்டேன். பாட்டுப் பாடச் சுலபமான வழி ஒன்று கிடைக்கும்போது அந்தப் பயிற்சியை மேற்கொள்ளலாமே என்பது என் யோசனை. ஆனுல் அந்த நண்பர் புகையிலை போட்டால் சங்கீதம் வரும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்ருர்.

அந்த நாலாவது சரக்கான புகையிலையை வெவ்வேறு வகையில் ரசிகர்கள் பயன்படுத்துகிருர்கள். மூக்கில் உறிஞ்சும் பொடியாக, புகை பிடிக்கும் சுருட்டாக, தாம்பூலத்தோடு போடும் பொருளாக உபயோகிக்கிருர்கள். மற்ற இரண்டிலும் புகையிலையின் வடிவத்தைச் சிதைத்து

விடுகிறார்கள். ஆனால் தாம்பூலத்தோடு போடுகிறவர்கள் அப்படிச் செய்யாமல் ஆவென்று ஆர்வத்தோடு அதை நுகர்கிறார்கள். வாசனைப் புகையிலை, தூள் புகையிலை என்று சிறிதே அந்தப் புகையிலைக்கு அலங்காரம் பண்ணினாலும் மற்றவர்களைப்போல அல்லாமல், அதை அப்படியே வாயிற் போட்டுக் குதப்பும் ரசிகத்தன்மை புகையிலை போடுபவர்களுக்குத்தான் இருக்கிறது. சில பேர் புகையிலையைக் கையில் வைத்து அமுக்கி நசுக்கிச் சூடேற்றி அந்த ஸ்பரிசத்திலேயே முதல் இன்பம் கண்டு, பிறகு வாயில் போட்டுக் கொள்வார்கள்; அப்போது அந்தப் புகையிலையினிடம் அவர்களுக்கு எவ்வளவு காதல் இருக்கிறது என்பது தெரியவரும். அதற்கு 'மஸாஜ்' அல்லவா செய்கிறார்கள்?

புகையிலை போடுபவர்களே அதிகமாக அதை ரசிப்பவர்கள் என்று சொன்னால் புகை பிடிப்பவர்களுக்குக் கோபம் வரலாம். ஏனென்றால் வரலாற்றைக் கொண்டு பார்த்தால் இந்த நாலாவது முதல் முதலாகச் சுருட்டிப் புகைக்கத்தான் பயன்பட்டது என்று தெரிகிறது. இதை நிரூபிப்பதற்குப் புத்தகங்களையும் வரலாற்றையும் தேட வேண்டாம். புகையிலை என்று உள்ள அதன் பெயரைப் பாருங்கள். அந்தப் பெயரே அது முதல் முதல் புகைக்கும் இலையாகத்தான் வந்திருக்கவேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கவில்லையா? இப்போது நான் கேட்ட ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது.

ஒரு செல்வர் வெளிநாட்டுக்குப் போனவர் புதிதாகப் புகையிலையையும் தேயிலையையும் வாங்கிக் கொண்டு வந்தார். புகையிலையைச் சுருட்டிச் சுருட்டாக்கி வைத்திருந்தார். தேநீர் உண்ணுவதும் புகை பிடிப்பதும் தெரியாத காலம் அது. செல்வர் தம் சமையற்காரனிடம் தேயிலையைக் கொடுத்து, "இதைக் கொண்டு போய்

"வேகவைத்து டீ கொண்டு வா" என்றார். அவன் அது ஏதோ கீரையென்று எண்ணி அதை நன்றாக வேகவைத்துத் தண்ணீரை இறுத்துவிட்டு வெறும் இலையைக் கொண்டு வந்தான். செல்வருக்குக் கோபம் வந்துவிட்டது. "அட முட்டாள்! இதன் தண்ணீர் அல்லவா வேண்டும்?" என்று சொல்லி மறுபடியும் சிறிது தேயிலையை எடுத்துக் கொடுத்தார். அவன் அதை வேகவைத்துத் தண்ணீரை இறுத்துக் கொண்டு வந்தான்,

அப்போது அந்தச் செல்வர் தாம் வைத்திருந்த சுருட்டைப் பற்றவைத்துப் புகை பிடித்துக் கொண்டிருந்தார். வேலைக்காரன் புகை பிடிப்பதையே பார்த்ததில்லை. தன் எசமானன் முகத்தில் தீயும் புகையும் எழுவதைக் கண்டவுடனே பயந்து போய்த் தான் கொண்டுவந்திருந்த தேநீரை அந்தத் தீயை அவிப்பதற்கு அவர் முகத்தில் கொட்டிவிட்டானாம்!

ஆகவே, முதல் முதலாகப் புகை பிடிக்கத்தான் அந்த இலை உபயோகப் பட்டிருக்கவேண்டும். அப்படிப் பிடிக்கிறவர் சுருட்டை வாயில் வைத்துக் குடிக்கும்போது அதன் சுவை தட்டுப்பட்டிருக்கவேண்டும். அதன் சாரம் உள் இறங்குகையில் உண்டான கிளுகிளுப்பை அவர் அநுபவித்திருப்பார். பிறகு புகையிலையின் சாரத்தை நுகரும் வழக்கத்தை மேற்கொண்டிருப்பார். அவரைப் பார்த்து மற்றவர்களும் புகையிலைப் பிரியர்கள் ஆகியிருக்க வேண்டும்.

புகையிலை போடுபவர்களே மற்ற இரண்டு வகையினரைவிட—அதாவது பொடி போடுபவர்கள், புகை பிடிக்கிறவர்கள் என்பவர்களை விட—ரசிகர்கள் என்று சொன்னேன். தக்க காரணம் இல்லாமல் அப்படிச் சொன்னதாக எண்ணாதீர்கள். ரசத்தை அறிபவர்கள்

ரசிகர்கள். இதை யாராவது மறுக்க முடியுமா? மூக்குப் பொடியில் ரசம் உண்டா? சுருட்டுப் புகையில் ரசம் உண்டா? புகையிலை போடுகிறவர்கள் தாமே உண்மையில் அதன் ரசத்தை, சுவையை உணர்ந்து ரசிக்கிறார்கள்? அப்படி யிருக்க அவர்கள் மட்டுமே ரசிகர்கள் என்று சொல்லு வதற்கு என்ன தடை?

புகையிலையை ரசிக்கும் இயல்பு எப்படி உண்டாகிற தென்று ஆராய்ந்து பார்த்தேன். பல்வலி சிறிது உண்டாகி அதனால் அவதிப்பட்டவர்கள் புகையிலையின் பரம ரசிகர் களாக மாறிவிடுகிறார்கள். வயிற்றுவலி வந்த பிறகு அப்பர் சுவாமிகள் பெரிய சிவ பக்தராக மாறிவிட்டார். பல்வலி வந்தால் புகையிலையை வலிக்கும் இடத்தில் வைத் தால் வலி நீங்கும். புகையிலையின் விறுவிறுப்பான காரம் எவ்வளவு சுகமாக, இதமாக இருக்கும் தெரியுமா? அதற்காகவே பல்வலி வந்தால் நல்லதுபோலத் தோன்றும். இப்படி வலிக்கு இதமாகப் புகையிலையை வைத்து அந்தச் சுகத்தை அநுபவித்தவர்கள் பிறகு, புகையிலைக் காதலர் களே ஆகிவிடுகிறார்கள். புகையிலை போடும் பல பேர் களிடம் நான் கேட்டுத் தெரிந்துகொண்ட உண்மை இது.

ஆனால் என்னிடம் மட்டும் இது பலிக்கவில்லை. இரண்டு முறை இந்த அற்புதமான மூலிகையின் அநுபவம் எனக்கு ஏற்பட்டது. மிகவும் இளைஞனாக இருந்தபோது ஒரு பெரியவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். அவர் நன்றாகப் பாடுவார்; புகையிலை போடுவார். புகையிலையின் சுவை எப்படி இருக்கும் என்று தெரிந்துகொள்ள எனக்கு ஆசை. சின்னப் பையனாகிய நான் அவ்வளவு பெரி யவரிடம் போய்ப் புகையிலைகேட்கலாமா? அவர் தம்முடைய செல்லப் பெட்டியிலிருந்து புகையிலையை எடுக்கும்போது, சிந்தினால் அதை எடுத்துப் போட்டுக்கொள்ளலாம் என்று பார்த்துக் கொண்டிருந்தேன். அவரே ஒரு சிறிய துண்டை

வெளியில் எறிந்து விட்டார். 'நல்ல வேளை! நமக்கு வாய்ப்பாகக் கிடைத்தது' என்று எண்ணி அதை யாருக்கும் தெரியாமல் எடுத்து வைத்துக்கொண்டேன். பெரியவர் போனபிறகு அந்தத் துண்டை வாயில் போட்டுக் கடித்து மென்றேன். அது புகையிலைக் காம்பு! என்ன ஆயிற்றுத் தெரியுமா? என் மார்பை அடைத்தது. தலை சுழன்றது. உடம்பெல்லாம் வேர்த்தது. வாந்தி எடுக்க வந்தது. ஆனால் எடுக்க வில்லை. இன்னதென்று சொல்லத் தெரியாத மயக்கமும் வேதனையும் உண்டாயின. என்னைப் பார்த்தவர்கள் பயந்துபோய் விட்டார்கள். நான் மெல்ல உண்மையை வெளியிட்டேன். பிறகு மோர் கொண்டு வந்து குடிக்கச் செய்தார்கள். கண்ணைச் சுற்றியது. மார்பு அடைப்புச் சிறிது வாங்கியது. அப்படியே படுத்து அயர்ந்து உறங்கி விட்டேன்.

மற்றோர் அநுபவம். எல்லாருக்கும் புகையிலையின் மேல் காதல் உண்டாவதற்குக் காரணமான நிகழ்ச்சிதான் அது. பல் இடுக்கில் ஏதோ புகுந்துகொண்டு வலித்தது. கலைமகள் காரியாலயத்தில் அமர்ந்து கொண்டிருந்தேன். அப்போது புதுமைப்பித்தன் வந்தார். அவர் எப்போதும் வாயில் புகையிலையைப் போட்டுக் கொண்டு குதப்புவார். பேசும்போது முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு, புகையிலைப் பாஷையில் பேசுவார்; அவர் பேசும்போது ழகரம் அதிகமாக வரும். வாயில் புகையிலை இருந்தால் அப்படித்தான் பேச முடியும்.

வாயில் புகையிலையை அடக்கியபடி தெளிவாகப் பேச முடியாது என்றுதான் நினைத்திருந்தேன். ஓர் அன்பரைக் கண்டபிறகு அந்த நினைப்பு மாறிவிட்டது. அவர் வாயில் தாம்பூலத்தை அடக்கிக் கொண்டு உரையாடுவது மட்டும் அன்று; மேடைப் பேச்சுக்கூட நிகழ்த்துவார். சுதேச

மித்திரன் ஆசிரியராக இருந்த அமரர் ஸி. ஆர். சீனிவாசன் இந்த அற்புதமான சாதனையைச் செய்தவர்.

புதுமைப்பித்தன் வந்தார் என்றல்லவா சொன்னேன்? "என்ன, கன்னத்தில் கையை வைத்து உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "பல்வலி" என்றேன். "இது தானா? இந்தாருங்கள் மருந்து" என்று தம் கையிலுள்ள டப்பாவிலிருந்து சிறிது புகையிலையை எடுத்துத் தந்து, "இதை வலிக்குமிடத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இதமாக இருக்கும். பல்வலி நின்றுவிடும்" என்றார். என் இளமையில் நான் பட்ட அநுபவம் நினைவுக்கு வந்ததனால் நான் அதை வாங்கிக் கொள்ளத் தயங்கினேன். "ஒன்றும் ஆகாது. தாராளமாக இதைப் பல்லில் வைத்துக்கொள்ளுங்கள். சாற்றை விழுங்க வேண்டாம். துப்பி விடுங்கள்" என்று பிரயோகத்தை உபதேசித்தார். அவர் சொன்ன உறுதிமொழியைக் குருநாதரிடம் ஞானோபதேசம் பெறும் சிஷ்யனைப்போலக் கேட்டுப் புகையிலையில் சிறிதளவு எடுத்து, திடீரென்று பல்லில் வைக்காமல், இரண்டு மூன்று முறை வாய்க்குப் பக்கம் கொண்டுபோவதும் திரும்புவதுமாக இருந்து, மறுபடியும் குருநாதர், "பயப்படாமல் வைத்துக் கொள்ளுங்கள்" என்று அடித்துச் சொன்னவுடன், மெல்ல வலிக்கும் இடத்தில் வைத்தேன்.

ஆ! அந்த இன்பத்தை என்னவென்று சொல்வது! வலி மாறியது. அது பெரிதன்று. புகையிலையின் சாறு அங்கே பட்டவுடன் நரம்பிலே ஒரு கிளுகிளுப்பு உண்டாயிற்று. பல்லின் வலி கண்ணையும் மூளையையும் தாக்கியது மாறி இப்போது இந்தப் புகையிலையின் ரசம் நரம்பினூடே விறுவிறுப்பை ஏற்றியது. வலித்த இடத்தில் இன்ப உணர்வு தலைப்பட்டது. இப்படியும் ஒரு சுகம் இருக்கிறதே என்ற இரகசியம் தெரிந்தது. வலியினால் தாடையை அழுத்திப்

பிடித்துக்கொண்டு மூதேவி பிடித்தவன் மாதிரி இருந்த நிலை ஒரு கணத்தில் மாறிவிட்டது. பல்வலி இன்ப உணர்ச்சியாக மாறியது. முகத்தில் புதிய ஒளி பிறந்தது. பல்லினிடையே அந்தச் சஞ்சீவியைச் சுவைத்துச் சுவைத்து இன்புற்றேன்.

"எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் குருநாதர்.

"மகானுபாவரே! இந்த அநுபவத்தை எப்படி வாயால் சொல்வது! அதிசயம்! அற்புதம்! பிரம்மானந்தம்!" என்றேன்.

"இனிமேல் புகையிலையைத் துப்பிவிடுங்கள். இந்தாருங்கள், இந்தப் புகையிலையைப் பத்திரமாக மூடி வைத்துக் கொள்ளுங்கள். மறுபடி வலி ஏற்பட்டால் வையுங்கள்" என்று சிறிதளவு புகையிலையைத் தந்தார்; வாங்கி வைத்துக்கொண்டேன்.

வெற்றிலை பாக்குப் புகையிலையை வைக்கும் பெட்டியைச் செல்லப்பெட்டி என்று சொல்கிறார்கள். பார்ப்பதற்குப் புத்தகத்தைப் போல இருக்கும். அதற்கு ஏன் அந்தப் பேர் வந்தது? செல்வப் பெட்டி என்பதுதான் செல்லப் பெட்டி என்று திரிந்திருக்க வேண்டும். அப்படியானால் அதில் இருக்கும் செல்வம் எது? இப்போது எனக்கு விளங்கிவிட்டது. இந்தப் புகையிலைதான் செல்வம்!

புகையிலையின் அநுபவத்தைப் பெற்ற எனக்கு அன்று மாலையில் சிறிது பல்வலி இருந்தது போலத் தோன்றியது. ஆனால் எனக்கு முன் போல வேதனை உண்டாகவில்லை. இருந்தால் என்ன? புகையிலையைப் போடுவதற்கு அந்தச் சிறிய வலியே போதுமே! புகையிலையை எடுத்துப் பல்லில் வைத்துக்கொண்டேன். விறுவிறுப்பு, கிளுகிளுப்பு எல்லாம் உண்டாயின. ஆனால் அந்த முதல் அநுபவத்தின் சுகம் இப்போது இல்லை. சிறிது குறைவாகவே இருந்தது.

ஆனாலும் இதமாக இருந்ததை உணர்ந்தேன். அந்த விறு விறுப்பை விரும்பினேன்.

மறுநாள் பல்வலி இல்லை. என்றாலும் புகையிலையின் விறுவிறுப்பில் ஆசை உண்டாகி விட்டது. புகையிலையை எடுத்துப் போட்டுக்கொண்டேன்; சிறிதளவுதான். விறு விறுப்பை அநுபவித்தேன். அதிகமான விறுவிறுப்பை அவாவியது என் வாய். இதுவோ குறைந்திருந்தது.மறுநாள் இருமுறை புகையிலையைப் போட்டேன். விறுவிறுப்புக் குறைந்து கொண்டு வந்தது. அப்போது எனக்கு ஓர் யோசனை வந்தது. 'இதை இந்த விறுவிறுப்புக்காகத்தானே போடுகிறோம்? இதுவோ நாளாக ஆக விறுவிறுப்புக் குறைந்து கொண்டு வருகிறது. இன்னும் நாள் போனால் நாம் விரும்பும் அளவுக்கு இதில் விறுவிறுப்பு இருக்காது. நாம் எதிர்பார்க்கும் விறுவிறுப்பு இல்லாமல் போனால் இதைப்போட்டுப் பயன் என்ன? ஆகவே இதை விட்டுவிடு வோம்' என்று எண்ணி அதோடு விட்டுவிட்டேன்.

புகையிலைக் காதலனாக மாறும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.

புகையிலையைப்பிரம்மபத்திரம் என்று சொல்கிறார்கள். நாலாவது என்று சொல்வதற்குக் காரணம் தெரிகிறது. பிரம்மபத்திரம் என்பதற்குக்காரணம் தெரியவில்லை. நானாக ஒரு கற்பனை பண்ணினேன். கதையாகவே விரித்து எழுதியிருக்கிறேன். அதன் சுருக்கம் இதுதான்.

கலைமகள், திருமகள், மலைமகள் மூவரும் ஆகாய கங்கையில் நீராடிவிட்டு அருகிலுள்ள நந்தவனம் சென்றார் கள். அங்கே உமாதேவி வில்வம் எடுக்க, திருமகள் துளசி யைக் கொய்ய, கலைமகள் சும்மா இருந்தாள். "நீ உன் கணவனுக்குரிய பத்திரம் எடுக்கவில்லையோ?" என்று கலை மகளை மற்றவர்கள் கேட்க, "அப்படி ஒன்று என் கண

வருக்கு இருப்பதாக அவா சொல்லவில்லையே!'' என்றாள். மற்றவர்களுக்கு இருக்கும் பெருமை தனக்கு இல்லை என்ற உணர்வோடு, தன் பத்திரம் இன்னதென்று பிரம்மதேவன் சொல்லவில்லையே என்ற கோபமும் சேர்ந்துகொண்டது. வீட்டுக்கு வந்து ஔபாசனத்துக்கு வேண்டியவற்றை யெல்லாம் எடுத்துவைத்துவிட்டு, ''உங்களுக்கு இன்ன பத்திரம் என்று சொல்லாமல் என்னை அவமானம் அடையும் படி செய்து விட்டீர்களே!'' என்று சொல்லி உள்ளே ஓடிக்கொண்டு படுத்திருந்தாள்.

நாரதர் பூலோகத்தில் கிடைத்த பெரிய எலுமிச்சம் பழங்களைப் பார்த்துத் திருமாலுக்குக் கையுறையாகக் கொடுக்கலாமென்று வாங்கிக்கொண்டு போனார். ஒரு தட்டில் அந்தப் பழங்களை வைத்துக் குட்டையும் புஷ்டியு முள்ள ஒரு தேவலோக வாசியிடம் அதைக்கொடுத்துத் தம் முடன் வரச் சொல்லிப் பாற்கடலை அணுகினார். பாற்கட லின் ஓரத்தை அடைந்தபோது அந்தத் தேவலோகவாசி கால் தடுக்கி, தட்டு முன்னே விழக் கீழே விழுந்த எலுமிச்சம் பழங்களின்மேல் விழுந்தான். அதனால்அவை நசுங்கி அவற் றின் சாறு பாற்கடலில் பீச்சி அடித்தது. அந்தப் பகுதி தயிராயிற்று. மெல்ல மெல்ல அதன் சார்பினால் பாற்கடல் முழுவதுமே தயிர்க் கடலாகியது. அதனால் குளிர்ந்த காற்று வீசியது. அது பட்டு ஆதிசேஷனுக்கு ஜலதோஷம் பிடித்து அவன் ஆயிரம் வாயினாலும் தும்மினான். பிறகு கருடன் தும்ம, பிராட்டி தும்ம, பெருமாளே தும்மினார். ஏன் இப்படி ஆயிற்று என்று கருடபகவான் பறந்து சென்று பார்த்து, உண்மையை உணர்ந்து, பூலோகத்துப் பொரு ளாகிய எலுமிச்சம் பழத்தினால் விளைந்த விளைவு இது என் பதைப் பெருமாளிடம் வந்து அறிவித்தான்.

'எப்போதும் குளிர்ந்த இமாசலத்தில் இருக்கும் சிவ பிரானிடம் இதற்கு மருந்திருக்கும்' என்று எண்ணித்

திருமால் பரிவாரங்களோடு சிவபெருமானை நோக்கிச் சென்றார். அதற்கு முன்பே தயிர்க் கடலிலிருந்து வீசிய காற்றுக் கைலாசத்தையும் அடைய, அதுபட்டு அங்கே உள்ளவர்களெல்லாம் தும்மத் தொடங்கினார்கள். தும்மிக்கொண்டே போன திருமால் முதலியவர்களின் தும்மல் ஒலிக்கு எதிரொலிபோல அங்கே ஒலி எழுந்தது. திருமாலும் சிவனும் சந்தித்துத் தும்மிய பிறகு, "இது பூலோக விவகாரம். பிரம்மாவுக்கு இதற்குப் பரிகாரம் தெரிந்திருக்கலாம். மரியாதையைப் பாராமல் அவசரத்தை முன்னிட்டு அங்கே போகலாம்" என்று இருவரும் பரிவாரங்களுடன் பிரம்மதேவனுடைய திருமாளிகையை அடைந்தார்கள்.

அவன் எல்லை இல்லா உவகையுடன் அவர்களை வரவேற்க, அவர்கள் தும்மலோடு ஆசி கூறி, ஏதாவது பரிகாரம் உண்டா என்று கேட்டார்கள். "இதோ புதிய பரிகாரத்தையே தருகிறேன்" என்று சொல்லிய பிரம்மதேவன் ஔபாசன அக்கினியை ஊதினான். புகை எழுந்தது. அதில் ஓர் இலையும் எழுந்தது. அதை எடுத்து அந்த அக்கினியிலே அதை வாட்டிச் சருகாக்கிக் கையில் வைத்துப் பொடிபண்ணி, அதில் ஒவ்வொரு சிட்டிகை எடுத்துத் திருமால் முதலியவர்களுக்குக் கொடுத்தான். அவர்கள் நாசியில் உறிஞ்சியவுடன் வெடி வெடித்தது போல் உரத்த தும்மல்கள் உண்டாயின. அவ்வளவுதான். ஜலதோஷம் போயிற்று; தும்மல் நின்றது!

அப்பால் பிரம்மதேவன், "சரஸ்வதி!" என்று அழைத்தான். அவள் வந்து நின்றாள். இரண்டாம் முறை ஔபாசன அக்கினியை ஊதினான். புகை எழுந்தது; இலையும் எழுந்தது; அதைக் கலைமகள் கையில் கொடுத்து, "இந்தா! இதுவே எனக்குரிய பத்திரம்" என்று கூறினான்.

"இது என்னால் உண்டானதால் பிரம்ம பத்திரம் என்றும் புகையில் உண்டானதால் தூமபத்திரம், புகையிலை

என்றும் பெயர் பெறும். கலியுகத்தில் விஞ்ஞானிகள் பதார்த்தங்களைத் திடபதார்த்தம், திரவ பதார்த்தம், வாயுபதார்த்தம் என்று பிரிப்பார்கள். திடபதார்த்தமாகப் பொடி செய்து மூக்கில் உறிஞ்சி அநுபவிக்கவும், திரவ பதார்த்தமாக வாயிலிட்டு ரசத்தை அநுபவிக்கவும், சுருட்டாக்கி வாயுபதார்த்தமாகப் புகையை இழுத்து அநுபவிக்கவும் இந்தப் பத்திரம் உபயோகப்படும்'' என்று அதன் மகிமையை உரைத்தான்.

பிரம்மபத்திரம் என்று புகையிலையை ஏன் சொல்ல வேண்டும் என்று ஆராயப் புகுந்து, இப்படிக் கோணலான கற்பனை ஒன்று என் மூளையில் உதயமாயிற்று என்பதற்காக இதை எழுதினேன்.

தமிழ் நாட்டில் வைதிகர்கள் புகையிலை போடுகிறார்கள்; பொடி போடுகிறார்கள்; ஆனால் சுருட்டுக் குடிப்பதில்லை. சுருட்டுக் குடிப்பதை ஆசார விரோதமாகக் கருதுகிறார்கள். புகையிலையே கூடாதென்றால் வேறு இரண்டு வகையில் மட்டும் அதை உபயோகிக்கலாமா? யோசித்த பிறகு உண்மை தெரிந்தது. அந்தக் காலத்தில் எச்சில் கூடாது என்று கவனமாக இருப்பார்கள் வைதிகர்கள். எதையும் தூக்கிக் குடிப்பார்கள். பொடியாகப் போடும்போதோ, புகையிலையாகப் போடும் போதோ எச்சில் தோஷம் உண்டாவதில்லை. சுருட்டுப் பிடிக்கும் போது அதை எச்சிலாக்கிக் கையில் எடுக்கிறோம்; மறுபடியும் பிடிக்கிறோம். ஆகையால்தான் அதைமட்டும் ஆசார விரோதம் என்று தள்ளிவிட்டார்கள்.

"புகையிலை விரித்தால் போச்சு; பொம்பளை சிரித்தால் போச்சு'' என்று ஒரு பழமொழி வழங்குகிறது. புகையிலையை மூடிவைத்துக் கொள்ளவேண்டும். அதை விரித்தால் அதன் காரம் போய்விடுமாம்.

விரித்த புகையிலைக்குத் தியாகராச சாஸ்திரிகள் என்பவர் ஓர் உவமை சொல்வாராம். என் ஆசிரியப்பிரான் அதைச் சொல்வதுண்டு. சாஸ்திரிகள், அந்தக் காலத்தில் புதுக்கோட்டையில் இருந்த தமிழ் வக்கீல். வடமொழி, சங்கீதம் நன்கு அறிந்தவர். "எண்ணெய் வாணியன் கௌபீனம் போலே" என்று விரித்த புகையிலைக்கு உபமானம் சொல்வாராம். விரித்த புகையிலை சாரமற்றது; ஆனால் அதற்குச் சொன்ன உபமானம் சாரமுள்ளதாக இருக்கிறது.

பழனியில் தண்டாயுதபாணிக்கு அர்த்த சாமத்துப் பூஜையில் புகையிலையையோ சுருட்டையோ நிவேதனம் செய்வதாகச் சொல்கிறார்கள். அதன் உண்மை எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று தெரியும். புகையிலையை ஒரு புலவர் பழனியாண்டவனிடம் தூது போகும்படி பாடியிருக்கிறார். அதற்குப் புகையிலை விடுதூது என்று பெயர். அதை மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள். புகையிலையின் பெருமைகளை அந்தச் சிறு நூல் அழகாகச் சொல்கிறது.

புகையிலை சமதர்ம உணர்ச்சியையே உண்டாக்கிவிடுகிறது. ஓர் அரசன் பல்லக்கில் போய்க் கொண்டிருந்தானாம். அவன் புகையிலை போடுகிறவன். சாலையில் பயணம் செய்து கொண்டிருந்தபோது புகையிலை போட எண்ணினான். கைவசத்தில் இல்லை. அருகே வயலில் உழுகிற உழவன் ஒருவன் வெற்றிலைப் பையை அவிழ்த்துப் புகையிலை போட்டுக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த மன்னன் பல்லக்கை நிறுத்தச் சொல்லி அவனிடம் போய்க் கையை நீட்டிப் புகையிலை கேட்டு வாங்கிப் போட்டுக் கொண்டானாம். நாட்டைக் காக்கும் மன்னனும் மாட்டை

ஓட்டும் உழவனும் புகையிலைக்கு முன்னே சமமாகி விட்டார்கள்!

மன்னன் என்ன? வாக்சாதுர்யம் உள்ள புலவர்களானாலும் அப்படித்தான் செய்வார்கள். சொற்களைச் சமத்காரமாகப் பேசித் தம் புலமையை மிடுக்குடன் காட்டுபவராக இருந்தாலும், புகையிலை தேவையாகும்போது இன்னார் இனியார் என்று பாராமல் யாரிடமும் கைநீட்டிப் பல்லைக் காட்டுவாராம். புகையிலை அப்படிச் செய்து விடுமாம். புகையிலை விடுதூது அந்தக் காட்சியைக் காட்டுகிறது.

> சொல் காட்டும் நல்ல
> துடிகாரர் ஆரையும் போய்ப்
> பல் காட்ட வைத்த
> பழிகாரா!

'பழிகாரா!' என்றது செல்லமாகத் தட்டிக் கொடுத்து உணர்ச்சியோடு சொல்லும் வார்த்தை. 'அட போக்கிரி' என்று நம்முடைய குழந்தையைத் தட்டிக் கொடுத்துச் சொல்கிறோம் அல்லவா?

# உண்பதும் ஒரு கலை

'செய்வன திருந்தச் செய்' என்று ஔவையார் பாடியிருக்கிறார். செய்வன என்றால் எவை? மனிதன் செய்கின்ற எல்லாவற்றையுமே திருத்தமாகச் செய்யவேண்டும் என்பது அந்தப் பாட்டியின் உபதேசம். மனிதன் எத்தனையோ காரியங்களைச் செய்கிறான். இடைவிடாமல் செய்துகொண்டிருப்பது மூச்சு விடுகிற காரியம். அதை அவன் திட்டமிட்டுச் செய்கிறான் என்று சொல்லக்கூடாது, அது தானே நடந்துக்கொண்டிருக்கிறது. அவன் திட்டமிட்டுச் செய்கிற காரியங்களில் மிகவும் முக்கியமானது சாப்பிடுவது. அதைத் திருத்தமாகச் செய்யவேண்டும். சமைப்பதும் திருத்தமாக இருக்கவேண்டும்; சாப்பிடுவதும் திருத்தமாக இருக்கவேண்டும். சமையல் ஒரு கலை; சாப்பிடுவதைக் கூடக் கலை என்று சொல்லலாம்.

விலங்குகள் கூட உணவை உண்கின்றன. அதில் கலை என்ன இருக்கிறது?- இப்படி நீங்கள் கேட்கலாம். விலங்குகள் உண்ணுவதற்கும் நாம் உண்ணுவதற்கும் வேறுபாடு இல்லையா? ஒரு வீட்டில் கீரைப் பாத்தி போட்டிருக்கிறார்கள். ஒரு மாடு எப்படியோ அங்கே நுழைந்துவிடுகிறது. தளதள என்று தழைத்து வளர்ந்திருக்கிற கீரையைக் கண்டு சும்மா இருக்குமா? அதைத் தின்னத் தொடங்குகிறது. எப்படி? நாவை நீட்டிக் கீரையை வேரோடு பறித்துச் சமூலமாகத் தின்றுவிடுகிறது.

வேரையும் வேரடி மண்ணையும் கூட விழுங்கி விடுகிறது. மனிதன் என்ன செய்கிறான்? கீரையைப் பறித்துவந்து வேரை நறுக்கி வெளியிலே போட்டுவிட்டு, தண்டை வேருக்கிக் கீரையை வேருக்கி, கீரையால் மசியல் செய்கிறான்; தண்டைக் குழம்பிலே தானுகப்போடுகிறான்; உண்ணுகிறான். கீரையைக் கொஞ்சம் மிச்சம் வைத்துப் பிற்பகலில் கீரை வடை பண்ணிச் சாப்பிடுகிறான். மாடு கீரையை உண்டதற்கும், மனிதன் அதை உண்டதற்கும் எத்தனை வேற்றுமை! ஏன்? மாடு பசிக்கு மட்டும் உண்ணுகிறது. மனிதனே ருசிக்கும் உண்ணுகிறான். அதனால் வெவ்வேறு வகையாகச் சமைத்துச் சுவைகூட்டி உண்ணுகிறான்.

மரகதத் தகடுபோல இலையை விரித்து ஓரத்தில் கறி, கூட்டு, பச்சடி, துவையல், கோசும்பரி, ஊறுகாய் எல்லாம் வைத்து, கீழே வலக்கைப் பக்கத்தில் பாயசமும் பருப்பும் பரிமாறி, பழம், பட்சண வகைகளை இடப்புறம் இட்டு, பிறகு வெள்ளை வெளேரென்று அன்னத்தைப் பரிமாறி, அதன்மேல் நெய்யையும்விட்டால், சாப்பிட உட்கார்ந்தவன் கலை உணர்ச்சி உடையவனுக இருந்தால் அந்தத் தோற்றத்தைக் கண்டே ஐந்து நிமிஷம் அநுபவிக்கலாம். என்ன என்ன நிறம்! என்ன என்ன வடிவம்! எத்தனை வகையான சுவைகள்! ஆறு சுவையில் நூறுவகை! தமிழ் நாட்டு உணவிலேதான் எத்தனை சம்பிரமம்! நளச் சக்கரவர்த்தியும் வீமசேனனும் சமையல் கலையில் வல்லவர்கள் என்று சொல்கிருர்கள். பத்துப் பாட்டில் வீமன் சமையல் கலையில் வல்லவன் என்ற செய்தி வருகிறது.

மனிதன் நாகரிகம் வளர வளர அவன் அநுபவிக்கும் பண்டங்களில் பல வகைகள் உண்டாகின்றன. உள்நாடு, வெளிநாடு என்ற வேறுபாடு இல்லாமல் எல்லா நாட்டுப் பண்டங்களையும் பயன்படுத்திக்கொண்டு வாழ்கிறான். நாம் உடுக்கும் உடைகளில் எத்தனை வகை! மேல் நாட்டுப்

பாணி எவ்வளவு தூரம் உடையில் நம்மிடம் கலந்து விட்டது! தாய்மார்கள் உடுக்கும் புடைவைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கின்றன. கட்டடங்களில்தான் எத்தனை வடிவங்கள்! அவ்வாறே உணவுக் கலையும் விரிந்துகொண்டே வருகிறது. நாம் இப்போதெல்லாம் மிளகாய் இல்லாமல் சமையல் பண்ணவே முடியாது. ஆனால் அந்த மிளகாய் நம் நாட்டுச் சரக்கு அல்ல. அமெரிக்காவிலுள்ள சிலி என்ற பிரதேசத்திலிருந்து வந்தது அது. அதனால்தான் அதற்குச் சிலீஸ் (Chillies) என்று ஆங்கிலத்தில் பெயர் வழங்குகிறது. மிளகுதான் பழைய காலத்தில் இந்த நாட்டில் இருந்தது. கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களில் இறைவனுக்கு நிவேதனம் செய்யும் பிரசாதங்களுக்குச் சேர்க்க இன்ன இன்ன பண்டங்கள் இன்ன இன்ன அளவு என்ற செய்தியைக் காணலாம். அவற்றில் மிளகு பலம் இவ்வளவு என்று இருக்குமே ஒழிய மிளகாயைப் பற்றிய பேச்சே இல்லை. மிளகாயைப் போல் எத்தனையோ உணவுப் பொருள்கள் வேறு நாடுகளிலிருந்து வந்து இங்கே நிலைத்துவிட்டன; நாமே பயிரிடுகிறோம்.

அப்படியே உணவு வகைகளும் வெளியிலிருந்து எத்தனையோ வந்திருக்கின்றன. பஜ்ஜியும் சொஜ்ஜியும் நம்முடையவை அல்ல; பாதாம் கீர் என்ற பெயரைக் கேட்டாலே ஹிந்தி வழங்கும் நாட்டிலிருந்து வந்தது என்று தெரியவரும். மேல் நாட்டிலிருந்து பிஸ்கோத்தையும் கேக்கையும் ஜாமையும் ஐஸ் கிரீமையும் நாம் தெரிந்து சுவைக்கிறோம். இப்படி நம் சாப்பாடு அகில உலக இணைப்பைக் காட்டுகிறதாக இருக்கிறது. ஆனாலும் நம்முடைய அரிசிச் சாதமும் குழம்பும் ரசமும் நமக்கே சொந்தம் நம்முடைய ரசத்துக்கு ஈடு இணையே கிடையாது. நம்முடைய இட்டிலியும் தோசையும் உலகத்திலே திக்விஜயம் செய்யத்

தொடங்கிவிட்டன. மேல்நாட்டுக்காரர்கள் எவ்வளவு ஆசையோடு தோசை உண்ணுகிறார்கள் தெரியுமா!

தமிழன் வாழ்வில் எளிமை இருக்கும்; அதே சமயத்தில் சிறப்பும் இருக்கும். இதற்கு இட்டிலி ஒரு பெரிய எடுத்துக் காட்டு. அரிசி, உளுந்து, உப்பு, ஜலம் இவற்றைக் கொண்டே இட்டிலி தயாராகிறது. மற்ற உணவுகளைப் போல ஊர்ப்பட்ட சாமான்கள் வேண்டும் என்பது இல்லை. ஆனால் நல்ல உழைப்பு வேண்டும். உளுந்தை நன்றாக அரைத்து, அளவாகக் கலக்க வேண்டும். அது தான் கலை. சரியானபடி கலந்து இட்டிலி பண்ணினால் பஞ்சுபோல மெதுவாக இருக்கும். என் நண்பர்கள் வீட்டுக்கு நான் போனால் சில சமயம் இட்டிலி வழங்குவார்கள். அதன் மென்மையையும் வெண்மையையும் பார்த்து, "இதை இலையிலா வைப்பது?" என்று கேட்பேன். "என்ன சொல்கிறீர்கள்?" என்று நண்பர்கள் கேட்பார்கள். "இது மல்லிகைப் பூ மாதிரியல்லவா இருக்கிறது? இதைத் தலையில் அல்லவா வைத்துக்கொள்ள வேண்டும்?" என்பேன்.

சமையல் பண்ணுவதற்குரிய பண்டங்கள் எல்லாம் குறைவற இருந்தால் போதுமா? அவற்றைச் சமைக்கிறவருக்குக் கலையுணர்வு இருக்கவேண்டும். ஒவ்வொரு கலையிலும் கலைஞர்களுக்குள்ளே சிறந்தவர்களாகச் சிலரே இருப்பார்கள். சமையல் கலையிலும் அப்படித்தான். இல்லாவிட்டால் நளனுக்கும் வீமனுக்கும் மட்டும் பெயர் வரக் காரணம் என்ன? கலை என்பது புத்தகங்களைப் படிப்பதனால் மட்டும் வராது. குருவினிடம் பயின்று வர வேண்டும். அதற்கு மேல், கற்றுக்கொள்ளும் மாணாக்கனுக்கு இயல்பாகவே ஓர் உள்ளுணர்வு (intution) இருக்க வேண்டும். சமையற் கலையிலும்கூடத்தான்.

'என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?' என்று நீங்கள் கேட்கலாம். ஒரு சின்ன உதாரணம் சொன்னால் விளங்கும். நம்முடைய வீட்டில் பெண்மணிகள் சமைக்கிறார்கள் தராசு, சமையல் புத்தகம் இவற்றை வைத்துக்கொண்டு அவர்கள் சமைப்பதில்லை. வீட்டில் ஆறு பேர் இருப்பார்கள். அவர்களுக்கு வேண்டிய சமையல் நடைபெறும். அவர்களுடைய கைதான் தராசு. புளியானாலும் உப்பானாலும் அளவாகப் போட அவர்களுக்குத் தெரியும். உப்புப் போட்டுவிட்டுச் சரியாக இருக்கிறதா இல்லையா என்று வாயில் விட்டுப் பார்த்துக் கொள்ளமாட்டார்கள். இப்போது, சில படித்த பெண்கள் அப்படிப் பண்ணுகிறதாகக் கேள்வி!

ஆறு பேருக்குச் சமைக்கும் பெண்மணி, வீட்டில் ஏதாவது விசேஷமென்றால் பல வகையான உணவு வகைகளைச் சமைக்கிறாள். அறுபது பேருக்குச் சமைக்க வேண்டியிருக்கிறது. அப்பொழுதும் அவளுடைய கையே உப்பை நிதானம் அறிந்து போடுகிறது. அவளிடம் உள்ள உள்ளுணர்வே எல்லாவற்றையும் அளவாகப் போடும் காரியத்தைச் சாதிக்கிறது.

இதைவிடப் பெரிய ஆச்சரியம் சமையற் கலையில் இருக்கிறது. பதினாயிரம், இருபதினாயிரம் பேருக்குச் சாப்பாடு போடவேண்டும். நூறு சமையற்காரர்களுக்கு மேல் வேலை செய்வார்கள். அவர்களுக்குள் தலைமைச் சமையற்காரர் ஒருவர் இருப்பார். அவர் அடுப்படிக்கே வரமாட்டார். அடுப்புக்கு முப்பது கஜ தூரத்துக்குமேல் அரிசி மூட்டையாகிய சிங்காதனத்தின்மேல் அமர்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருப்பார்.

அடுப்படியில் அவருடைய தொண்டர்கள் வேலைசெய்து கொண்டிருப்பார்கள். அடுப்பில் ரசம் கொதிக்கும். அதற்கு

உப்புப் போடவேண்டும். குட்டிச் சமையற்காரர் முறத்தில் உப்பை வாரிப் போட்டுக் கொண்டிருப்பார். அரிசி மூட்டைச் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கும் சமையற்கலை மன்னர் அங்கிருந்தபடியே கவனித்துக் கொண்டிருப்பார். "ஐந்து முறம் போடு" என்பார். குட்டித் தொண்டர் போடுவார். "ஆறுவது முறம் எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தட்டு" என்பார். அப்படியே அவர் தட்டுவார். "ஹூம். இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்!" என்று மன்னர் சொல்லிக்கொண்டே வருவார். ஒரு நிலையில், "போதும்; நிறுத்து" என்பார். அந்த ரசக் குட்டையில் உப்புக் கணக்காகச் சேர்ந்து அதை மிகவும் ரசமுள்ளதாகச் செய்துவிடும். அந்த மன்னர் கண்ணினாலே பார்த்து அளவைக் கணிப்பவர். அவருக்கு அப்படி ஓர் உணர்வு!

இங்கே, என்னுடைய ஆசிரியப் பெருமான் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் சொன்ன நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது.

புதுக்கோட்டைச் சம்ஸ்தானத்தில் அந்தக் காலத்தில் சேஷையா சாஸ்திரிகள் என்பவர் திவானாக இருந்தார். அவர் மிகச் சிறந்த அறிவாளி. அவர் செய்த காரியங்களையெல்லாம் கதை கதையாகச் சொல்வார்கள். ஒரு சமயம் ஒரு பெரிய சமையற்காரர் அவரிடம் வந்தார். "எத்தனை ஆயிரம் பேரானாலும் என்ன என்ன வேண்டுமோ அவற்றையெல்லாம் நன்றாகப் பண்ணிப் போடுவேன்" என்றார். "உமக்கு நன்றாக ரசம் வைக்கத் தெரியுமா?" என்று திவான் கேட்டார். "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? ரசத்தில்தானே எங்களுடைய திறமையைக் காட்ட முடியும்?" என்றார்.

அந்தக் காலத்தில் ரசத்தில் தெளிவு இருக்கும். அடுப்பில் காயும்பொழுதே கம்மென்று மணக்கும். குழம்பு

குழம்பாயிருக்கும்; ரசம் தெளிவாக இருக்கும். குழம்பில் தான் இருக்கும். ரசத்தில் அது இல்லை. வாழ்க்கை கூடக் குழம்புபோலக் குழம்பாமல் ரசம்போலத் தெளிவாக, ஞானத்தோடு இருக்கவேண்டுமானால் தான் என்ற அகந்தை இருக்கக் கூடாது. ஆனால் இப்போதெல்லாம் ரசம் வைக்கத் தெரியாதவர்களெல்லாம் அதில் தக்காளியைப் போட்டு அதிலும் தானைக் கலந்து விடுகிறார்கள்.

அந்தச் சமையல்காரர் தெளிவான ரசம் பண்ணுகிறவர். "நன்றாக ரசம் செய்வேன்" என்றார். புதுக்கோட்டையில் குடி தண்ணீருக்காகப் புதுக்குளம் என்ற பெரிய குளம் இருக்கிறது. அதற்குக் காவல் போட்டு வைத்திருப்பார்கள். சேஷையா சாஸ்திரியார் அந்தச் சமையற்காரரைப் பார்த்து, "புதுக்குளத்தில் ரசம் வைப்பீரா?" என்று கேட்டார். ஆள் அசந்து போவார் என்று அவர் நினைத்தார். அந்தக் கலைஞர் என்ன சொன்னார் தெரியுமோ?

"நான் சொல்கிறபடி செய்து, வேண்டிய சாமான்களையும் கொடுத்தால் புதுக்குளத்தில் ரசம் வைத்துக் காட்டுவேன்" என்று துணிச்சலாகச் சொன்னார். "என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் திவான்.

"அந்தக் குளத்தைச் சுத்தமாக இறைத்துவிட வேண்டும். பதினைந்து நாள் யாரையும் உள்ளே விடக்கூடாது. நான் கொடுக்கிற லிஸ்டின்படி சாமான்களை வாங்கித் தர வேண்டும். அப்படிச் செய்தால் புதுக்குளத்தில் ரசம் உண்டாக்கித் தருகிறேன்."

சேஷையா சாஸ்திரியார் விளையாட்டுக்காகக் கேட்கவில்லை. கலைஞரின் திறமையை அறிவதற்காகவே கேட்டார். அந்தக் கலைஞரும் திவான் சொன்னதை நடத்திக் காட்டுவதாக உறுதிமொழி கூறினார். அது கோடைக் காலம்.

குளத்தை இறைக்கச் செய்தார் திவான். கட்டுக் காவல் போட்டார். பருப்பு, உப்பு, புளி, மிளகாய், பெருங் காயம் முதலிய சாமான்களைச் சமையற்காரர் சொன்ன அளவில் வாங்கித் தந்தார். அவர் அந்தக் குளத்தில் எப்படி அவற்றைச் சேர்க்க வேண்டுமோ அப்படிச் சேர்த்தார். ஒரு வாரம் வெயிலில் ரசம் காய்ந்தது. பிறகு அதிலிருந்து ரசத்தைக் கொண்டு வந்து திவானிடம் கொடுத்தார். அற்புதமான ரசம்! திவான் அந்தக் கைக்குத் தோடாப் பண்ணிப் போட்டாராம். கலைஞர்களை வேலை வாங்கத் தெரிந்தவர்கள் இருந்தால்தான் கலை பரிமளிக்கும்; வளரும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடும் விழாக் காலங் களில் அன்னம் பாலிக்கும் பெரிய தொண்டை முன் காலத் தில் ஒரு மகான் செய்து வந்தார். அவர் சமையற்காரராக இருந்தார். பிறகு அன்னதான சக்கரவர்த்தியானர். அன்ன தான சிவம் என்றால் அக்காலத்தில் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அவருடைய சமையல் ஏற்பாட்டை நான் கண்டு களித்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான பேர் களுக்கு மோர் வேண்டுமே! ஒரு நாள் இரண்டு நாள் பால் வாங்கித் தயிராக்கி மோர் கடைந்துவிட முடியுமா? அவர் ஆறு மாதங்களுக்கு முன்பே அங்கங்கே தயிர் வாங்கிப் பீப்பாய்களில் அடைத்துக் குளத்தில் போட்டு விடுவார். பிறகு வேண்டியபோது எடுத்துப் பயன்படுத்துவார். கொஞ்சங்கூடப் புளிக்காது.

சமையல் பண்ணும்போது மூங்கிற் பாயைப் பரப்பி ஒரு முறை உலை வைத்துச் சோற்றைச் சமைத்து அதன் மேல் பரப்புவார்கள். களைந்து வைத்திருந்த அரிசியை அந்தச் சோற்றுப் படலத்தின் மேலே பரப்பிவிடுவார்கள். மறுபடியும் அதன் மேலே மற்றொரு படலம் சூடான

சமைத்த சாதத்தைப் பரப்புவார்கள். கீழ்ச்சூடு, மேல் சூடு இந்த இரண்டினாலும் நடுவிலே உள்ள களைந்த அரிசி புக்குவமாய்ச் சாதமாகிவிடும். இப்படியெல்லாம் எத்தனையோ கலை நுணுக்கங்கள்.

சமைக்கிறது ஒரு கலையானால் சாப்பிடுவதும் ஒரு கலைதான். நல்ல பாட்டை ரசிக்கிறவர்கள் ரசித்தால்தான் பாடுகிறவனுக்கு உற்சாகம். அதுபோல நல்ல சாப்பாட்டைச் சுவைத்து உண்டால்தான் சமைத்தவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும். என்னுடைய ஆசிரியப்பிரான் தமிழ்ப் பாட்டை நன்றாகச் சுவைத்து இன்புறுவதுபோல உணவையும் சுவைத்து உண்பார்கள். சுவை காணுகிறவர்கள் எதிலும் சுவை காணலாம். பெரிய பெரிய சிற்பங்களில் மட்டுந்தான் கலைத் திறமை என்று சொல்லலாமா? ஒரு சதுர அங்குலத்தில் அமைத்திருக்கும் சிறிய வடிவத்திலே கூடச் சிற்பத் திறனைக் கண்டு மகிழலாம். ஐயரவர்கள் அத்தகைய ரசிகர்கள். பலபல வகையான உணவு வகைகளையும் நன்கு சுவைத்து நுகர்வார்கள். வெறும் துவையல் அல்லது வேப்பிலைக் கட்டியைக் கூடச் சுவைத்துப் பாராட்டுவார்கள். திருப்பனந்தாளில் முன்பு தலைவராக ஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் என்பவர் இருந்தார். ஐயரவர்களிடம் தேவதா விசுவாசம் உடையவர். ஐயரவர்கள் வந்தால் மடத்தின் பின்புறம் உள்ள தோட்டத்திலிருந்து காய் கறிகளையும் கீரை வகைகளையும் பறித்துக்கொண்டு வரச் சொல்வார். அவற்றை ஐயரவர்களிடம் காட்டி, 'என்ன என்னபடி சமைக்கவேண்டும்?' என்று கேட்டு அப்படியே செய்யும்படி சமையற்காரருக்குச் சொல்வார். பச்சைப் பசேல் என்றிருக்கின்ற அவற்றைச் சிறிது நேரம் பார்த்து மகிழ்ந்துவிட்டு, 'இன்னது இன்னது செய்ய வேண்டும்' என்று ஐயரவர்கள் சொல்வார்கள். அப்படியே சமையல் செய்து போடுவார்கள். சமையல்காரர் மனம்

மகிழும்படி, நன்றாக இருக்கிறது என்று பாராட்டுவார்கள். மடாலயத்தின் தலைவரிடமும் சொல்லி நன்றியறிவு கூர்வார்கள்.

சிவஞான முனிவரிடம் ஒரு தவசிப்பிள்ளை இருந்தான். அவர் அவனிடம் இன்ன இன்னபடி சமையல் செய்ய வேண்டுமென்று சொல்வாராம். அப்படிச் சொன்னதாக ஒரு பாட்டுக்கூட இருக்கிறது.

**சற்றே துவையல்அறை; தம்பிஒரு பச்சடிவை;**
**வற்றல்ஏ தேனும் வறுத்துவை;-குற்றம்இலை;**
**காயம்இட்டுக் கீரைகடை; கம்மென வேமிளகுக்**
**காயரைத்து வைப்பாய் கறி.**

சமையல் பண்ணியதை நன்றாக அநுபவித்தால்தான் செய்தவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும் என்று சொன்னேன். முன்னே சொன்ன சேஷையாசாஸ்திரியார் ஒரு முறை திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வந்திருந்தார். அப்போது அம்பலவாண தேசிகர் என்பவர் ஆதீனகர்த்தராக இருந்தார். அவர் கலைகளை நன்கு சுவைக்கும் ரசிகர். சாஸ்திரியார் வந்தபோது அவருக்குப் பெரிய விருந்து போட வேண்டுமென்று நினைத்தார். எங்கும் பார்த்திராதவகையில் காய், கறி, குழம்பு, ரசம், பட்சியங்கள் பலபல செய்ய ஏற்பாடு செய்தார். கறி கூட்டு வகைகளே நூறு இருக்கும். துவையல்களில் இருபது. மற்றவற்றிலும் இப்படியே.

சாஸ்திரியார் பருத்த சரீரமுடையவர். முன்னே இலை போட்டுக் குனிந்து சாப்பிட அவரால முடியாது. நீளமான திண்ணையில் மிகவும் நீளமான இலையைப் போட்டு அதில் எல்லாவற்றையும் பரிமாறினார்கள். சாஸ்திரியாருக்குப் பக்கவாட்டில் திண்ணையிருக்கும்படி அருகில் ஒரு நாற்காலி போட்டு உண்ணச் செய்தார்கள். இரண்டு பேர் கையில் ஸ்பூன்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு பதார்த்தத்திலும்

சிறிது சிறிது எடுத்து, அதன் விவரத்தையும் சொல்லி அவர் கையில் வைத்தார்கள். ஒவ்வொன்றின் பெயரையும் செய்முறையையும் விசாரித்து உண்டு அவர் ரசித்துப் பாராட்டினாராம்.

ஔவைப் பாட்டி பாரிமகளிராகிய அங்கவை, சங்கவை என்பவர்கள் வாழ்ந்த குடிசைக்குப் போனாள். தந்தையை இழந்த அவர்கள் வறிய நிலையில் இருந்தார்கள். ஔவைப் பாட்டி போனபோது அவருக்கு உணவளித்தார்கள். மிகவும் எளிய முறையில் உணவு வழங்கினார்கள். கீரையை வதக்கிப் போட்டார்கள். "எங்களாலே வேறு ஒன்றும் செய்ய முடிய வில்லையே!" என்று வருந்தினார்கள். அப்போது ஔவை யார், "கீரையையா போட்டீர்கள்? அமுதத்தையல்லவா வழங்கினீர்கள்?" என்று சொல்லி அந்த எளிய உணவைச் சுவைத்து மகிழ்ந்தார். அந்தக் கீரையைப் பாராட்டி ஒரு பாட்டே பாடிவிட்டார்.

**"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்**
**நெய்தான் அளாவி நிறையிட்டுப்-பொய்யே**
**அடகுஎன்று சொல்லி அமுதத்தை இட்டார்**
**கடகம் செறியாதோ கைக்கு?"**

[வெய்தாய்—சூடுள்ளதாய். நிறைய இட்டு என்பது நிறையிட்டு என வந்தது. அடகு—கீரை. இந்தக் கைக்கு இரத்தினக் கடகம் அல்லவா போடவேண்டும் என்பது கருத்து.]

இராமபிரானுக்கு எத்தனையோ வகையான திறமைகள் உண்டு. சுவை அறிந்து சாப்பிடுவதிலும் அவன் வல்லவன். அதனால்தான் சாப்பாட்டு ராமன் என்ற திருநாமம் அவனுக்கு உண்டாயிற்று. எப்போது தெரியுமா?

பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்து காய், கனி, கிழங்குகளையே உண்டுவந்தான். சீதையைப் பிரிந்த பிறகு

சுவையே பாராமல் எப்படியோ கால் வயிற்றை நிரப்பி வந்தான். இராவண சங்காரம் ஆன பிறகு தன் படைகளுடன் வான விமானத்தில் திரும்பினுன். இடையிலே பாரத்துவாஜ முனிவர் ஆசிரமத்தில் தங்கினுன். முனிவர் அவனுக்கு மிகவும் சுவையான விருந்து வழங்கினுர். அதைச் சுவைத்து உண்டான். அந்த நுகர்ச்சியிலே ஈடுபட்டபோது அயோத்திக்குப் போவதில் தாமதம் உண்டாகலாம் என்று கருதி அநுமனை அனுப்பித் தானும் பிறரும் வந்துகொண்டிருப்பதைப் பரதனுக்குச் சொல்லச் சொன்னுன்.

பாரத்துவாஜர் ஆசிரமத்தில் பெருமாள் சாப்பாட்டு ராமனுக இருந்தமையால் இப்படிச் செய்யவேண்டி நேர்ந்தது.

இராமனே உண்ணும் கலையில் வல்லவனென்றுல், நமக்கு வேறு கலை எதுவும் தெரியாவிட்டாலும் அந்தக் கலையிலாவது சிறந்து நிற்கலாம் அல்லவா?

# எழுதுகோலின் அவதாரம்

"எழுதுகோல் தெய்வம், இந்த. எழுத்தும் தெய்வம்" என்று பாரதியார் பாடுகிறார். எழுதுகோல் தெய்வம் என்பது முக்காலும் உண்மை. பேனா பென்ஸில்களைச் சரஸ்வதி பூஜையில் வைத்து வழிபடுகிறார்களே, அதை நினைத்து நான் இப்படிச் சொல்லவில்லை. தெய்வம் எப்படி வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வடிவத்தை எடுத்துக் கொள்கிறதோ, அப்படி எழுதுகோலும் எத்தனையோ அவதாரங்களை எடுத்திருக்கிறது. அவதாரம் எப்படிப் புதிதாக இருக்கிறதோ அதுபோல எழுதுகோல் எடுக்கும் அவதாரமும் புதிது புதிதாக இருக்கிறது. ஒரே ஒரு வித்தியாசம் ராமாவாதாரம் ஆன பிறகுதான் கிருஷ்ணாவதாரம் கிருஷ்ணாவதாரத்தின்போது ராமர் இருக்கிறதில்லை. எழுதுகோல் அப்படி இல்லை. பழையதும் புதியதும் கலந்து நடமாடி வருகின்றன.

அந்தக் காலத்திலெல்லாம் காகிதம் கிடையாது. பனை யோலையில்தான் எழுதிவந்தார்கள். எழுத்தாணியால் எழுதி வந்தார்கள். நாம் இப்போது பேனாவினால் எவ்வளவு வேகமாக எழுதுகிறோமோ, அவ்வளவு வேகமாக எழுத் தாணியால் எழுதி வந்தார்கள். வேகமாக எழுதினார்கள். என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்.

மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கத்தில் வேகமாக ஓலை யில் எழுதுபவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு எழுத்

தாளர்கள் என்று பெயர். எழுத்தாளன் சேந்தன் என்று ஒரு புலவரே இருந்திருக்கிறார். கூலிக்கு எழுதிக் கொடுக்கிறவர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு புலவரிடமும் யாரேனும் ஒருவராவது இருந்து அவர் சொல்வனவற்றை எழுதி வருவார். அவருக்குக் கற்றுச் சொல்லி என்று பெயர். ஓலையில் கூலிக்கு எழுதுகிறவர்கள் பெரிய புலவர்களாக இருக்கவேண்டும் என்பதில்லை. ஏதோ ஓரளவு தமிழில் பயிற்சியிருந்தால் போதும். நிரம்பிய புலமை இல்லாததனால் அவர்கள் தவறு செய்வதும் உண்டு." எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்'' என்று ஒரு பழமொழி வழங்குகிறது. 'தவலை போயிற்று' என்று எழுத வேண்டியதை, 'தலை போயிற்று' என்று எழுதுகிறவர்களும் இருந்தார்கள்.

மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டு. "மூண்ணும் முறை பகர்த்தும் போழ் ஸமுத்ரம் மூத்ர மாகுன்னு'' என்பது அது. ஏட்டில் ஸமுத்திரம் என்று இருந்தது.பிரதி பண்ணினவன் ஸவை விட்டு விட்டு முத்ரம் என்று எழுதி விட்டான். அதைப் பார்த்து மற்றொருவன் எழுதினன்; முத்ரமாக இருக்காது, மூத்ரமாகத்தான் இருக்க வேண்டுமென்று அவன் மூத்ரம் என்று எழுதிவிட்டான், ஸமுத்ரம் முத்ரமாகிப் பிறகு மூத்ரமாகி விட்டது. 'மூன்றுவது முறை பிரதி செய்யும்போது ஸமுத்ரம் மூத்ரமாகும்' என்பது மலையாளப் பழமொழியின் பொருள்.

தமிழ்ச் சங்கத்தில் நன்றாகப் படித்தவர்களே எழுத்தாளர்களாக இருந்தார்கள். அவர்கள் ஓர் அறையில் உட்கார்ந்திருப்பார்கள். அறைக்கு வெளியே புலவர்கள் அமர்ந்திருப்பார்கள். யாராவது புதிய புலவர் ஒருவர் அங்கே வந்து தாம் இயற்றியிருக்கும் கவிதையைப் பாடிக் காட்டுவார். அவர் பாடப் பாட உள்ளே உள்ளவர்கள் அதை எழுதிக் கொள்வார்கள். புலவர் பாடி முடித்தவுடன் சங்கப்

புலவர்கள், "இந்த நூல் பழைய நூல்போல இருக்கிறதே!" என்று சொல்வார்களாம். வந்த புலவர், "இல்லையே! நான் புதிதாகப் பாடியது அல்லவா?" என்பார். "இந்த நூலின் பிரதி எங்கள் நூல் நிலையத்தில் இருக்கிறதே!" என்று சங்கப் புலவர்கள் சொல்லுவார்களாம். உள்ளே இருந்தவர்கள், சொல்லச்சொல்ல எழுதிய நூலைக் கொண்டு வந்து காட்டுவார்களாம். வந்த புலவர் வயிறு எரிந்து போவாராம். இப்படிப் பல காலம் நடந்து வந்ததாம்.

இப்படி அக்கிரமம் நடந்து வருவதை இடைக்காடர் என்னும் புலவர் கேள்வியுற்றார். எப்படியாவது இந்த அநியாயத்தை வெளிப்படுத்தி மறுபடி நடக்காமல் செய்து விடவேண்டுமென்று அவர் தீர்மானித்தார்.

அவர் சங்கத்துக்குப்போய்த் தாம் ஒரு நூல் பாடியிருப்பதாகச் சொன்னார். "வெண்பாவால் ஆனது அந்த நூல்" என்றும் சொன்னார். சங்கப் புலவர்கள் அதைச்சொல்லும்படி சொன்னார்கள். இடைக்காடர் சொல்லப் போவதை எழுதிக் கொள்ள உள்ளே சிலர் தயாராக இருந்தார்கள். இடைக்காடர் பாடத் தொடங்கினார். பாட்டின் நடுவில் காக்கை முதலியவற்றின் ஒலியைக்கவிதையோடு இணைத்துப் பாடினார். அந்த ஒலிகளை எப்படி எழுத்தால் எழுதுவது என்று தெரியாமல் உள்ளே இருப்பவர்கள் யோசித்தார்கள். அதற்குள் இடைக்காடர் மேலே சில பாடல்களைச் சொல்லி விட்டார். அவர் பாடி முடித்தவுடன் சங்கப் புலவர்கள், "இந்த நூல் எங்களிடம் இருக்கிறதே!" என்று சொன்னார்கள். இடைக்காடர், "எங்கே எடுத்துவரச் சொல்லுங்கள்" என்று கேட்டார். உள்ளே இருந்த எழுத்தாளர்களை வருவித்து ஏட்டைப் பார்த்தபோது அரையும் குறையுமாக எழுதியிருந்தார்கள். திருட்டு வெளிப்பட்டுவிட்டது. "இனி இப்படிச் செய்யாதீர்கள்" என்று சொல்லிவிட்டுப் போனாராம் இடைக்காடர்.

எழுத்தாணிக்கு ஊசி என்றும் ஒரு பெயர் உண்டு. இடைக்காடர் பாடிய நூல் எழுத்தாணியினால் எழுத முடியாமல் அதன் தொழிலை முறியச் செய்தமையால் அதற்கு ஊசி முறி என்று பெயர்.

"காக்கை யிருந்து கஃறென்ன" என்று அந்த நூலில் வரும். காக்கையின் ஒலியை எப்படி எழுதுவது? ஏதோ ஒருவகையில் கஃறென்ன என்று எழுதிவைத்திருக்கிறார்கள். ஆட்டை ஓட்டும்போது கோனான் நாக்கை ஒருவகையாக மடித்து ஓர் ஒலியை எழுப்புவான். அதை எப்படி எழுதுவது? 'இச், இச்' என்றுதான் எழுத வேண்டும். அவன் எழுப்பும் ஒலி தெரியாவிட்டால் அந்த எழுத்துக்களிலிருந்து அதைத் தெரிந்து கொள்ள முடியாது.

எழுத்தாணியில் குண்டெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என்றெல்லாம் பலவகை உண்டு. ஓலையைச் சீவுவதற்குக் கத்தி ஒரு பக்கத்திலும் எழுத்தாணி ஒரு பக்கத்திலும் இருக்க மடக்கிக் கொள்ளும்படி இருக்கும் ஒருவகை எழுத்தாணி உண்டு. நீளமாக ஒருபக்கம் கத்தியும்மற்றொரு பக்கம் எழுத்தாணியுமாக மடக்காமலே அமைந்த எழுத்தாணியும்உண்டு.மரத்தினாலும் தந்தத்தினாலும் பிடிபண்ணி எழுத்தாணியைப் பதித்திருப்பார்கள்.

எழுத்தாணி போன பிறகு இறகு பேனா வந்தது. பறவைகளின் இறகின் அடிப்பாகத்தைக் கூர்மையாகச் சீவி அதை மையில் தோய்த்து எழுதினார்கள். அந்தப் பேனாவாகிய இறகின் அடியைக் கூர்மையாகச் சீவுவதற்காகச் சிறிய கத்தி இருக்கும். பேனாவைச் சீவ உபயோகப் பட்டதால் அதற்குப் பேனாக் கத்தி என்ற பெயர் வந்தது. பூர்ஜ பத்திரத்தில் ஒருவகைத் தூரிகையால்பழங்காலத்தில் எழுதினார்கள்; வடநாட்டில் அதிகமாக எழுதினார்கள். பிறகு இரும்பு முள் வந்தது. அந்த முள்ளுக்கு நிப் (Nib) என்று

ஆங்கிலத்தில் பெயர். அதைச் செருக ஒரு குவளை; அதைச் செருக ஒரு கட்டை. இப்படி மூன்று அங்கங்களோடு உருவான எஃகுப் பேனாவை மைக்கூட்டில் தோய்த்து எழுதினார்கள். எழுதுகோல் எழுத்தாணியாக இருந்தது மாறிப் பேனாவாயிற்று. பென் என்று ஆங்கிலத்தில் வழங்குவதையே நாம் பேனா என்று அழகிய தமிழ் வடிவம் கொடுத்து வழங்கிவருகிறோம்.

பேச்சு, எழுத்து ஆகிய இரண்டும் இனமானவை. அழகாகப் பேசுவது, அழகாக எழுதுவது இரண்டும் கல்வித் திறமையுடையவர்கள் செய்கிற காரியம். பேசுவதற்கு உதவுவது நா; எழுதுவதற்கு உதவுவது பேனா. பேசும் திறமையுள்ளவர்களை நாவலர் என்று சொல்கிறோம்; எழுதும் ஆற்றல் உள்ளவர்களைப் பேனாவலர் என்று சொல்லலாம் அல்லவா? பென்னைப் பேனாவாகத் தமிழில் ஆக்கிக் கொண்டதனால் இப்படி நயம்படச் சொல்ல முடிகிறது. யாழ்ப்பாணத்துக்காரர்கள் பேனா என்று சொல்கிறதில்லை; பேனை என்றுதான் சொல்வார்கள். பென்னிலிருந்து பேனா வந்து, பேனாவிலிருந்து பேனை வந்திருக்க வேண்டும்.

எஃகுப் பேனாவுக்கு ஜோடி மைக்கூடு. அந்தக் காலத்தில் கடுக்காய் மையை அவரவர்களே தயாரித்துக் கொள்வார்கள். அது நல்ல கறுப்பாக இருக்கும். நன்றாக எழுதுகிறவர்கள் அந்த மையில் எழுதினால் அச்சுப் போலவே இருக்கும். மைப் பவுடர் வாங்கி மை கரைத்துக் கொள்வார்கள். மைவில்லையும் இருந்தது. அந்த மையினால் எழுதினால் எவ்வளவு பளிச்சென்று இருக்கும்! இப்போது மைகள் வருகின்றனவே; எல்லாம் அழுது வடிகின்றன!

கணக்குப் பிள்ளைகள் எல்லாம் வருஷத்துக்கு ஒரு முறை கூடிக் கணக்குகளைச் சரிபார்த்து எழுதுவார்கள். அதற்கு ஜமாபந்தி என்று பெயர். அப்போது ஒரே மைக் கூட்டை நடுவில் வைத்துக்கொண்டு பல பேர் தம் பேனாவை

அதில் தோய்த்துத் தோய்த்து எழுதுவார்கள். அந்த மைக்கூடு சமதர்ம மைக்கூடாக இருக்கும். யார் பொருளாவது பலருக்குப் பயன்பட்டால் அதை 'ஜமாபந்தி மைக்கூடு' என்று சொல்வார்கள்.

எழுதுகோல் பேனா வடிவம் மாத்திரமா எடுத்தது? பென்சில் வடிவமும் எடுத்தது. காகிதத்தில் எழுதுவது காகிதப் பென்சில். சிலேட்டில் எழுதுவது சிலேட்டுப் பென்சில். அதற்குச் சிலேட்டுக் குச்சி, பலப்பம் என்றும் திருநாமங்கள் உண்டு. பள்ளிக்கூடத்துப் பையன் நீளமான சிலேட்டுக்குச்சி வாங்கி அதைச் சின்னச் சின்னதாக ஒடிந்து வைத்துக் கொள்வான்; தன்னிடம் நிறையப் பென்சில்கள் இருப்பதாய்ப் பெருமையடித்துக் கொள்வான். காகிதப் பென்சிலில், கறுப்புப் பென்சில், காப்பியிங் பென்சில் என்று இரண்டு வகை உண்டு. பெருமாள் செட்டி காப்பியிங் பென்சில் என்றால் அந்தக் காலத்தில் மகிமை அதிகம். லேசில் தேயாது. பல வருஷங்களுக்கு வைத்துக்கொள்வார்கள். சிவப்புப் பென்சில், நீலப் பென்சில்களை வாத்தியார்கள் மார்க்குப் போட வைத்துக்கொள்வார்கள். ஒரு பக்கம் சிவப்பும் மற்றொரு பக்கம் நீலமும் இணைந்த பென்சில்களும் உண்டு.

பிறகு வந்தது ஊற்றுப் பேனா (Fountain Pen). ஊற்றுப் பேனாவில் எழுதுவது ஒரு காலத்தில் கௌரவம். இப்போதெல்லாம் ஊற்றுப் பேனா என்று யார் சொல்கிறார்கள்? பேனா என்றாலே ஊற்றுப் பேனாத்தான். முதல் வகுப்புப் படிக்கிற பையன் முதல்கொண்டு பேனாவில்தான் எழுதுகிறான். தனியே மைப்புட்டியை நாடாமல் தன் வயிற்றுக்குள்ளே மையை அடக்கிக் கொண்ட பேனா, எழுதுவதற்கு எவ்வளவோ எளிதாக இருக்கிறது.

பேனாக்களில்தான் எத்தனை வகைகள் வந்துவிட்டன! கழுத்தைத் திருகி மையைப் போட்டுக்கொள்ளும் பேனாக்கள்

மறைந்து வருகின்றன. பின்னாலே பம்பை வைத்து மைப் புட்டியில் வைத்துப் பம்பை இயக்கி உறிஞ்சும்படி உள்ள பேனாக்களே இப்போது அதிகம். பின்புறத்தைத் திருகி மையை உறிஞ்சச் செய்யும் பேனாவும் இருக்கிறது. பால் பாயிண்ட் பேனா வேறு வந்திருக்கிறது.

நான் முதல் முதல் ஊற்றுப் பேனா வாங்கினபோது எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. என்னுடைய நண்பருக்குப் பக்கம் பக்கமாக அதைக் கொண்டு கடிதம் எழுதினேன். கவிதைகள், கட்டுரைகள் எல்லாம் ஆவேசத்தோடு எழுதினேன். வெள்ளைத்தாளில் பேனா இயங்குவதைப் பார்த்தால் வெண் பளிங்கு மேடையில் குதிரை ஓடி வருவது போல அல்லவா இருக்கிறது?

ஆனால் பம்ப் பண்ணுகிற பேனாவில் ஓரளவுதான் மை பிடிக்கிறது. ஏதாவது சுவாரசியமாக எழுதிக்கொண்டிருக்கும்போது பேனாவில் மை ஆகிவிட்டால் எவ்வளவு கோபம் வருகிறது தெரியுமா? அதை ஒடித்துப் போட்டு விடலாமா என்று எரிச்சல் உண்டாகிறது. மைக் கூட்டைத் தேடிப் பேனாவை நிரப்பிக் கொள்வதற்குள் நமக்கு இருந்த கற்பனை வேகம் போய்விடுகிறது. சேர்ந்தாற்போலச் சில மணிகள் எழுதுவதற்கு இந்தப் பேனாக்கள் பயன்படுவதில்லை. அதற்காக மைப்புட்டியையே பேனாவில் கட்டிக் கொள்ள முடியுமா?

என்னுடைய எழுத்து அவ்வளவு மோசமானது அல்ல. நன்றாக இருக்கிறது என்று சிலர் சொல்வார்கள். அழகாக இருக்கிறது என்று சிலர் பாராட்டுவார்கள். மற்றவர்கள் பாராட்டுகிறார்களோ இல்லையோ, என் மனைவி, "ரொம்ப அழகாக இருக்கிறது" என்று பாராட்டுவாள். அவளுக்கு எத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறேன்! அவளும் எனக்கு எழுதுவதுண்டு. அவள் எழுத்து எனக்கு

மாத்திரம் அழகாக இருக்கும். மற்றவர்கள், "என்ன இது? ஈ மையில் விழுந்து உட்கார்ந்தாற்போல் எழுதுகிறாயே!" என்று சொல்வார்கள். இதைக் கேட்டுக் கேட்டு அவளுக்கு ரோசம் வந்துவிட்டது. கையெழுத்தைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்தாள். என் பேனாவை எடுத்து எழுத ஆரம்பித்தாள். அவளுக்கென்று தனியே பேனா இருக்கிறது. ஆனாலும் என் பேனாவில் எழுதினால் எழுத்து நன்றாக வரும் என்பது அவள் நினைப்பு. அதை எடுத்து எழுதினாள். எப்போதாவது யாருக்காவது ஒரு கடிதம் அரைக் கடிதம் எழுதுகிறவள், சில காலமாக விழுந்து விழுந்து பலருக்குக் கடிதம் எழுதினாள். நான் ஆச்சரியப் பட்டேன். அவள் எந்தப் பேனாவினால் எழுதுகிறாள் என்பதை நான் கவனிக்கவில்லை.

நன்றாக எழுதிக் கொண்டிருந்த பேனா அது. சில காலமாக அது என் போக்கில் எழுதாமல் தன் போக்கிலே எழுதலாயிற்று. முள்ளைத் தடவிக் கொடுத்தேன். உதறிப் பார்த்தேன். முள்ளின் பிளப்பைச் சரிபண்ணுவதற்காக இப்படியும் அப்படியும் திருப்பினேன். கொஞ்சமாகப் பலகையில் வைத்து அழுத்திப் பிறகு எழுதினேன். என்னுடைய பழைய எழுத்து வரவே இல்லை. அப்போதுதான் எனக்கு ஓர் எண்ணம் வந்தது. வேறு யாரோ என் பேனாவை எடுத்து எழுதுவதனால் அது புதிய பாதையில் போகிறது என்று ஊகித்தேன். "என் பேனாவை யார் எடுத்து எழுதினார்கள்?" என்று கேட்டேன். "யார் எழுதுவார்கள்? நான்தான் எழுதினேன்" என்று என் மனைவி தனக்கு உரிமை உண்டு என்று தொனிக்கும்படி பதில் சொன்னாள். "உன்னை யார் எடுக்கச் சொன்னது?" என்று கோபத்துடன் கேட்டேன். "பேனாவை எடுக்க யாரிடம் கேட்க வேண்டும்? நான் அதை ஒடித்து விட்டேனா?" என்று அவள் எதிர்க் கேள்வி விடுத்தாள். "இதோ பார்; இது குட்டிச்

சுவராகிவிட்டது. எழுதவே வரவில்லை'' என்று அதை மேஜை மேலே விட்டெறிந்தேன். "ஆமாம்! நான் தொட்டால் குட்டிச் சுவராகத்தான் ஆகும்!'' என்று சொல்லி விட்டு அவள் உள்ளே போய்விட்டாள். இரண்டு நாட்களாயின, அந்தக் கோபம் ஆற.

"பைத்தியமே, என் பேனாவை நீ எடுக்கக் கூடாது என்று சொன்னதன் அர்த்தம் உனக்குத் தெரியவில்லையே! ஒவ்வொருவருடைய எழுத்தும் ஒரு மாதிரி. பேனா முள்ளில் பிளவு இருக்கிறது. இரண்டு பிளவாக இருப்பது உனக்குத் தெரியுமே! சில பேர் இடது பக்கமாகச் சிறிது சாய்த்து எழுதுவார்கள். அந்தப் பேனா முள்ளில் இடது பக்கம் அழுந்திச் சற்றுத் தேயும். அப்படியே வலப்பக்கமாக எழுதுகிறவர்கள் பேனா முள் வலப்பக்கமாகச் சற்றுத் தேயும். ஒருவர் பேனா மற்றவருக்குச் சரியாக எழுதாது. அப்படி எழுதினால் பழைய நிலை மாறி இரண்டு பேருக்கும் சரியாக எழுதாமல் போய்விடும்'' என்று அவள் சாந்தமாக இருக்கும்போது பேனாத் தத்துவத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவே ஆற்றினேன்.

"அதனால்தான் உங்கள் பேனாவினால் நான் எழுதும்போது என் எழுத்து மோசமாக இருக்கிறதோ?'' என்று அவள் கேட்டாள். நான் சொன்ன விளக்கத்தைப் புரிந்து கொண்டாள். ஆனால் தன்னுடைய நல்ல எழுத்து என் பேனாவினால் மோசமாகி விட்டதாம்!

என்றாலும் நான் இல்லாதபோது என் பேனாவை எடுத்து எழுதும் சபலம் அவளுக்கு இருந்துகொண்டுதான் இருக்கிறது; எடுத்து எழுதுகிறாள். நான் என்ன செய்வது?

இதைவிட வேடிக்கையான நிகழ்ச்சி ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

நான் பல ஆண்டுகளுக்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பரீட்சை எழுதினேன்; 1933-ஆம் ஆண்டு. அந்தப் பரீட்சையில் நான் மாகாணத்தில் முதல் வகுப்புத் தேர்ச்சி பெற்றுத் திருப்பனந்தாள் காசிமடத்துப் பரிசாகிய ஆயிர ரூபாயைப் பெற்றேன். அப்போது பார்க்கர் ஜூனியர் பேனா ஒன்று வைத்திருந்தேன். அதைக் கொண்டு பரீட்சை எழுதினேன்.

பரிசு பெற்ற பிறகு அந்தப் பேனாவிடம் எனக்கு மதிப்பு அதிகமாயிற்று. "இது ஆகிவந்த பேனா; எனக்குப் பரிசு வாங்கிக் கொடுத்தது!" என்று என் நண்பர்களிடம் சொல்வேன். பிறகு என் மனைவியிடமும் அதைச் சொன்னேன். அந்தப் பேனாவை ஜாக்கிரதையாகப் பெட்டியில் வைத்திருந்தேன். பல ஆண்டுகள் ஆயின. எனக்குப் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களிடமும், "அந்தப் பேனா ஆகிவந்த பேனா" என்று சொல்லி அதன் மகிமையை விவரித்தேன்.

என் மூத்த மகனுடைய நண்பன் ஒருவனுக்கு இந்தச் செய்தி தெரிந்தது. நான் பரீட்சையில் வெற்றி பெற்றதோடு பரிசையும் பெறும்படி செய்தது அந்தப் பேனா என்பதை என் மகனே அவனுக்குச் சொல்லியிருப்பான். தந்தையின் புகழைச் சொல்லும்போது மகன் பெருமிதத்தோடு சொல்வது இயல்புதானே? அந்தப் பையன் எஸ். எஸ். எல். ஸி படித்துக் கொண்டிருந்தான். முதல் வருஷம் பரீட்சையில் தோல்வியடைந்தான். அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. என் மகனிடம், "இரண்டாம் முறை பரீட்சை எழுதப் போகிறேன். உன்னால் ஓர் உபகாரம் ஆகவேண்டும்" என்றான். "என்ன வேண்டும்?" என்று என் மகன் கேட்டான்.

"உங்கள் அப்பா அந்த 'ஆகிவந்த பேனாவை' உள்ளே தானே வைத்திருக்கிறார்? அதை அவருக்குத் தெரியாமல்

எடுத்து வந்து கொடு. ஒரு வாரம் வைத்திருந்து பரீட்சை எழுதிவிட்டுப் பிறகு பத்திரமாகக் கொடுத்து விடுகிறேன். அது ஆகிவந்த பேனு அல்லவா? எனக்குப் பரீட்சை நிச்சயமாகப் பாஸ் ஆகும்'' என்ருன். என் மகன் அவன் வேண்டுகோளை நிறைவேற்றினுன்.

பையன் ஆகிவந்த பேனுவைக் கொண்டு பரீட்சை எழுதினுன். பேனு மறுபடியும் இருந்த இடத்துக்குப் பத்திரமாக வந்து சேர்ந்தது. பரீட்சை எழுதிய பையன் நிச்சயமாகத் தனக்கு வெற்றி கிடைக்கும் என்று நம்பியிருந்தான். ஆனுல்—? பரீட்சை முடிவு வந்தது; பழையபடி தோல்வி தான்!

# கண்ணுக்கு அணிகலன்

சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய நன்னெறியில் ஒரு பாட்டு வருகிறது. வேந்தர்களைவிடப் புலவர்கள் சிறந்தவர்கள் என்பதைச் சொல்ல வருகிறார். 'வேந்தர்கள் பொன்னால் அணிகளைப் புனைந்து கொள்வார்கள். ஆனால் அவர்களைப் போல் அணிகளைப் புனையா விட்டாலும் பெரிய கல்வியையுடைய புலவர்களுக்கு அரசர்கள் சமானம் ஆக மாட்டார்கள்' என்று சொல்லிவிட்டு அதற்கு ஓர் உவமை சொல்கிறார். 'உடம்பில் உள்ள காது, மூக்கு, கழுத்து, கை, இடை, கால் முதலிய அங்கங்கள் எல்லாம் பலவகையான அணிகலன்களைப் பூணுகின்றன. ஆனால் கண்ணோ எந்த அணியையும் பூணுவதில்லை. என்றாலும் அந்த உறுப்புக்கள் கண்ணுக்குச் சமானம் ஆகுமோ?' என்று கேட்கிறார்.

"பொன்அணியும் வேந்தர்
புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம்
மற்றுஒவ்வார்; மின்னும்அணி
பூணும் பிறஉறுப்புப்
பொன்னே, அது புனையாக்
காணும்கண் ஒக்குமோ காண்."

[பொன்-பொன்னுலான நகைகள். புனையா-அணி கலன்களை அணியாத. மற்று: அசை. மின்னும் அணி-ஒளி வீசுகின்ற நகையை. பிற உறுப்பு-கண் அல்லாத வேறு அங்கங்கள். பொன்னே-திருமகளைப் போன்ற பெண்ணே! ஒரு பெண்ணைப் பார்த்துச் சொல்வது போல அமைந்தது பாட்டு; இதை மகடூஉ முன்னிலை என்பார்கள். அது புனையா-அந்த நகையை அணியாத.]

சிவப்பிரகாசர் இந்தக் காலத்தில் வாழ்ந்தால் இதைப் பாடியிருக்கமாட்டார். ஏன் தெரியுமா? அவர் காலத்தில் கண்ணுக்கு ஆபரணம் கிடையாது. இப்போது மூக்குக் கண்ணாடி வந்து விட்டதே! மூக்குக் கண்ணாடி கண்ணுக்கு அணிகலமாகி விட்டதை நானே ஒரு குறளில் பாடியிருக்கிறேன்

**பண்ணார் கிராப்பில்லாத்**
**தலையிற் பயன்இலவே,**
**கண்ணாடி போடாத கண்.**

கண்ணுக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டால் அழகென்று இப்போதெல்லாம் எண்ணுகிறவர்கள் இருக்கிறார்கள். கண்ணாடி போட்டுப் பழக்கப்பட்டவர்களை அது இல்லாமல் இருக்கும்போது சில சமயங்களில் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுகிறது.

நான் ஒரு நண்பர் வீட்டுக்குப் போனபோது கண்ணாடியைக் கழற்றிப் பையில் வைத்துக் கொண்டேன். அவர் என்னைக் கண்டவுடன், "உங்களுக்கு என்ன உடம்பு?" என்று கேட்டார்.

"ஒன்றும் இல்லையே!" என்றேன்.

"இல்லை, இல்லை. நீங்கள் மறைக்கிறீர்கள். உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. உங்கள் உடம்புக்கு ஏதோ கோளாறு" என்று மறுபடியும் சொன்னார்.

"எனக்குப் போன மாதம் சிறிது ஜலதோஷம் வந்தது. அதற்கப்புறம் ஒன்றுமே வரவில்லையே!"

நண்பர் ஒப்புக்கொள்ளவில்லை. திடீரென்று எனக்கு ஒரு நினைவு வந்தது பையில் இருந்த கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டேன். பிறகு அவரைப் பார்த்து, "இப்போது என்னைப் பாருங்கள்" என்றேன்.

அவர் சிரித்துக் கொண்டே, "அடடா! ஏமாந்து போய் விட்டேனே! இந்தக் கண்ணாடி இல்லாமல் உங்கள் முகம் நன்றாக இல்லை. அது எனக்குத் தெரியவில்லை. ஏதோ அசௌக்கியம் என்று நினைத்தேன். இப்போதுதான் உங்கள் முகம் உங்கள் முகமாக இருக்கிறது" என்றார்.

'அப்படியானால் கண்ணாடி போடாத முகம் என் முகம் அல்லவா? அது என்ன பேய் முகமா? அல்லது மூதேவி முகமா?' என்று கேட்கலாமா அவரை?

மூக்குக் கண்ணாடி என்று நாம் சொல்வது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! ஆங்கிலத்தில் ஒரு கவிதை உண்டு. மூக்குக் கண்ணாடி மூக்குக்குச் சொந்தமா, கண்ணுக்குச் சொந்தமா என்று ஒரு விவாதம் எழுந்ததாம். கடைசியில் இரண்டுக்கும் சொந்தம் என்று தீர்மானம் ஆயிற்றாம். தமிழில் இந்த விவாதத்துக்கே இடமில்லை. மூக்குக் கண்ணாடி என்ற பெயரில் மூக்கும் இருக்கிறது; கண்ணும் இருக்கிறது,

நான் பலகாலம் மூக்குக் கண்ணாடி போட்டுக்கொள்ளவில்லை. என் ஆசிரியப் பெருமானிடம் தமிழ் கற்றுக் கொண்டபோது இரவெல்லாம் ஓலைச் சுவடிகளைப் படிப்ப

துண்டு; புரூப்புகள் பார்ப்பதுண்டு. ஒவ்வொரு நாளும் இந்த வேலைகள் இருக்கும். ஆனாலும் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளவில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு தூரப் பார்வை தெரியவில்லை. நெடுந்தூரத்தில் உள்ள தென்ன மரத்தின் ஓலைகள் தனித்தனியே தெரியவில்லை. யாராவது நெடுந்தூரத்தில் வரும்போது பார்த்தால் இனங் கண்டுகொள்ள முடியவில்லை. 'கண் கெட்டுவிட்டது' என்பதை நினைக்கும்போதே எனக்குப் பகீரென்றது. குருடனாகி விட்டேன் என்று எண்ணி வருந்தினேன்.

கண் டாக்டரிடம் சென்று கண்ணைக் காட்டினேன். ஏதாவது மருந்து போட்டுச் சரிப்படுத்திவிடுவார் என்ற நைப்பாசை இருந்தது. அந்த மனிதர் கறுப்புக் கறுப்பாகப் பெரியதும் சின்னதுமாக எழுத்து உள்ள அட்டையைக் காட்டிப் படிக்கச் சொன்னார். பள்ளிக்கூடத்தில் அரிவரி வகுப்பில் கூட இப்படி நான் எழுத்துக் கூட்டிப் படித்ததில்லை. இப்போது படித்தேன். அவர் பக்கத்தில் வாத்தியார் மாதிரி நின்றுகொண்டு, "ஹூம்; படியுங்கள்; அடுத்தவரி; இன்னும் கீழே" என்று உத்தரவிட்டார். நான் படித்த காலத்தில் வாத்தியார்கள் கையில் பிரம்பை வைத்துக் கொண்டு மிரட்டுவார்கள். இந்த 'வாத்தியா'ரிடம் அது இல்லை. நான் படித்துக்கொண்டே வந்தேன். கீழே போகப் போக எழுத்துச் சிறியதாக இருந்தது. அது தெரியாவிட்டால் டாக்டர் கண்ணில் இருந்த பிரேமில் உள்ள சில்லை மாற்றி வேறொரு கண்ணாடிச் சில்லைச் செருகுவார்; "இப்போது படித்துச் சொல்லுங்கள்" என்பார். இப்படி என்னுடைய படிக்கும் ஆற்றலைப் பரீட்சித்து மார்க்குப் போட்டார். இரண்டு கண்களும் —2 என்று எழுதிக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தேன். 'நீ குருடு' என்று தீர்ப்பெழுதின சாசனம் போல இருந்தது அது. கண்ணீர் விட்டு அழுதேன். 'முருகா! என்னை இப்படிக்

குருடாக்கி விட்டாயே!' என்று முறையிட்டேன். சில பாடல்களைப் பாடினேன். என்ன பாடினால் என்ன? நான் என்ன ஞானசம்பந்தரா? சுந்தரமூர்த்தி நாயனரா? என் பாட்டினால் அற்புதம் நிகழுமா? 'சரி, நம் தலைவிதி' என்று எண்ணிச் சமாதானப்படுத்திக்கொண்டேன்.

கண்ணாடிக் கடைக்குப் போய் டாக்டர் கொடுத்த குறிப்பைக் கொடுத்தேன். "மிகவும் மோசமான பார்வையோ?" என்று கடைக்காரரைக் கேட்டேன். "மோசமா? என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? இது மிகவும் சாதாரணம் ஆனது. சோடா பாட்டில் கண்ணாடிகள் போடுகிறவர்களெல்லாம் இருக்கிறார்களே!" என்று சொன்னபோது எனக்குச்சிறிது ஆறுதல் உண்டாயிற்று. நம்முடைய குறையைப்போல மற்றவர்களுக்கும் இருக்கிறதென்று அறியும் போது இந்த மனித மனத்துக்குத்தான் எத்தனை திருப்தி உண்டாகிறது! நம்மைவிட மற்றவர்கள் குறை பெரிதென்றால், நமக்குக் குறையே இல்லை என்பது போன்ற திருப்தி பிறக்கிறது. குறை குறைதானே? அப்படி இருக்க, இந்தப் பைத்தியக்கார ஆறுதலால் என்ன பயன்? ஆனாலும் மனித சுபாவம் அப்படித்தான் இருக்கிறது. நூற்றுக்கு இருபது மார்க்கு வாங்குகிற பையன் தன்னைவிட அதிகமாக ஐம்பது அறுபது என்று வாங்குகிறவர்களைப் பார்த்து வருந்துவதில்லை. பத்து மார்க்கு வாங்கியிருக்கிறானே, அவனைப் பார்த்து, "நாம் எவ்வளவோ மேல்" என்று தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான்.

இரண்டு நாள் கழித்துக் கண்ணாடிக் கடைக்காரர் கண்ணாடியைத் தந்தார். அதை அணிந்து கொண்டேன்; அணிவதாவது, மண்ணாங்கட்டியாவது! தலைவிதியே என்று போட்டுக் கொண்டேன். கண் பார்வை நன்றாகத் தெரியும் என்பதற்காகத்தானே கண்ணாடி போட்டுக்கொண்டேன்? இப்போது என்னாயிற்றுத் தெரியுமோ? தலைவலி போய்த்

திருகுவலி வந்த கதையாய் என்றாலே சரியாக நடக்கவே முடியவில்லை. பள்ளம் மேடாகத் தோன்றுகிறது; மேடு பள்ளமாகத் தோன்றுகிறது. காலைத் தூக்கித் தூக்கி வைக்கிறேன்.

துரியோதனன் அப்படித்தான் நடந்தானாம். அதைக் கண்டு திரௌபதி சிரித்தாளாம். பாரதப் போர் மூள்வதற்கு அதுதான் வித்தாயிற்று. இங்கே நான் நடந்ததைப் பார்த்து எந்தத் திரௌபதியும் சிரிக்கவில்லை; என் தர்ம பத்தினிதான் சிரித்தாள். "என்ன இப்படி, முள்மேல் நடக்கிறமாதிரி தத்தித் தத்தி நடக்கிறீர்கள்?'' என்று கேட்டாள். கண்ணாடியைக் கழற்றி எறிந்து விடலாமா என்று தோன்றியது. டாக்டரிடம் போய், "ஏன் ஐயா, சாமிதான் கண்ணைக் கெடுத்து விட்டதென்றால் நீர் என் நடையைக் கெடுத்து விட்டீரே!'' என்று கேட்கலாம் என்று எண்ணினேன். ஒரு கால் கண்ணாடிக் கடைக்காரன் தவறு செய்துவிட்டானோ என்று யோசனை வந்தது. டாக்டரிடம் போய்க் கேட்பதற்கு எனக்குத் தைரியம் இல்லை. கடைக்காரரிடம் போய்க் கேட்கத் துணிந்தேன்.

"ஏன் ஐயா, இப்படித் தப்பான கண்ணாடியைக் கொடுத்துவிட்டீரே?'' என்று கேட்டேன்.

"இல்லையே! டாக்டர் குறித்துக் கொடுத்தபடிதானே செய்து கொடுத்தேன்?'' என்றார் அவர்.

"அப்படியானால் என்னால் சரியாக நடக்க முடியவில்லையே! எங்கோ பள்ளத்தில் காலை வைக்கிறதுபோல இருக்கிறதே!''

அவர் இடி இடி என்று சிரித்தார். "நீங்கள் புதிதாகக் கண்ணாடி போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதனால் முதலில் அப்படித்தான் இருக்கும். இரண்டு நாள் ஆனால் சரியாகி விடும்'' என்றார்.

அவர் சொன்னது சரிதான் என்று பிறகு தெரிய வந்தது.

யாராவது கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தால், "உங்கள் கண்ணாடி மைனஸ் எத்தனை ஸார்?" என்று கேட்பேன். "மைனஸ் மூன்று" என்பார்; எனக்குச் சிறிது ஆறுதல் பிறக்கும். "மைனஸ் எட்டு" என்று ஒருவர் சொன்னார். அப்போது எனக்கு ஒரே ஆனந்தம்; எனக்கு மிகவும் வேண்டியவர், "எனக்கு மைனஸ் பன்னிரண்டு" என்றார். அதைக் கேட்டபோது எனக்குப் பழைய பார்வையே வந்துவிட்டது போன்ற திருப்தி, குதூகலம் உண்டாயிற்று.

ஐம்பது வயசுள்ள நண்பர் ஒருவரைக் கண்டேன். அவர் கண்ணாடி அணிந்திருந்தார். "உங்கள் கண்ணாடி மைனஸ் எவ்வளவு?" என்று வழக்கப்படி கேட்டேன். அவர் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. "மைனஸா? எனக்கு ப்ளஸ் இரண்டு" என்றார்.

அவர் எனக்கு விஷயத்தை விளக்கினார். எனக்குத் தூரத்துப் பொருள் தெரியாமல் இருந்தது. அவருக்குத் தூரத்துப் பொருள் நன்றாகத் தெரிகிறதாம்; புத்தகம் படிக்க முடியவில்லையாம்; அவருக்கு லாங் ஸைட் (Long Sight); எனக்கு ஷார்ட் ஸைட் (Short Sight). நான் குறுகிய பார்வை உடையவனும்!

அவர் தமக்குச் சாளேச்வரம் வந்திருப்பதாகச் சொன்னார். பல கிழவர்கள் சாளேச்வரம் வந்துவிட்டதென்று கண்ணாடி அணிந்து கொள்வதைப் பார்த்திருக்கிறேன். அது என்ன சாளேச்வரம்? ராமேசுவரத்துக்கு இனமா? பிறகு அகராதியை எடுத்துப் பார்த்தேன். நாற்பது வயசுக்குமேல் வரும் வெள்ளெழுத்துக்குச் சாலேசரம் என்று பெயராம்.

உர்துவில் சாலேசரம் என்று வழங்குமாம். எனக்கு அப்படி ஒரு ஈசுவரமும் இல்லை. எனக்குக் குறுக்குப் பார்வை. நான் விசாலமான பார்வையோ தீர்க்கதரிசனமோ இல்லாதவனு? — இப்படி எண்ணும்போது எனக்கு ஒரு புதிய வருத்தம் உண்டாயிற்று.

எந்த வருத்தமும் நாளடைவில் குறைந்து விடுகிறது. இப்போதெல்லாம் பழைய வருத்தம் எதுவும் இல்லை. 'கண்ணுடி போட்டுக் கொண்டால் இடைவிடாமல் போட்டுக் கொண்டே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் கண் கெட்டுவிடும்' என்று சொல்கிருர்கள். நான் வீட்டில் இருக்கும்போது கண்ணுடியைக் கழற்றி வைத்து விடுகிறேன். கண்ணுடி இல்லாமலேயே படித்து வருகிறேன். வெளியில் போனுல் கண்ணுடி போட்டுக் கொள்கிறேன்.

இப்படிச் செய்வதனுல் என் கண் கெட்டு விட்டதா என்று பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் நேரிட்டது. என் கண்ணுடி கீழே விழுந்து உடைந்துபோயிற்று. மறுபடியும் டாக்டரிடம் காட்டினேன். பழைய குறிப்பைக் காட்டினேன். அவர் சோதனை செய்தார். "பழைய கண்ணுடி போட்டு எத்தனை வருஷங்கள் ஆயின?" என்று கேட்டார். "உங்கள் குறிப்பையே பாருங்கள். தேதி இருக்கிறதே! எட்டு வருஷங்கள் ஆயின" என்றேன். "அப்படியா! எட்டு வருஷமாகியும் உங்கள் கண் பழையபடியே இருக்கிறது" என்று ஆச்சரியப்பட்டார். "முன்புக்கு இப்போது பார்வை நன்றுகவே இருக்கிறது" என்று அவர் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அப்படி அவர் சொல்லவில்லை. என்றுலும் கண் மேலும் கெடவில்லை என்பதை அறிந்ததில் எனக்கு மகிழ்ச்சியே உண்டாயிற்று.

"எனக்குச் சாலேசரம் வராதா?" என்று கேட்டேன்.

"வராது" என்று டாக்டர் சொல்லிவிட்டார். ஒரு கால் அது வந்தால் வேறு கண்ணாடி போடவேண்டுமோ என்ற பயத்தினால் அப்படிக் கேட்டேன்.

சாலேசரத்தைப் பற்றி எண்ணும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு வீட்டுக்குப் புதியதாக ஒரு குடும்பம் குடி வந்தது. அந்தக் குடும்பத்தில் ஒரு கிழவர். அவர் நாள்தோறும் இராமாயணம் பாராயணம் பண்ணுகிறவர். அவருடைய சாலேசரக் கண்ணாடி கெட்டுப் போயிற்று. தம் பிள்ளையிடம், "அடே, கண்ணாடி வாங்கிக் கொண்டு வாடா! புத்தகம் தெரியவில்லை. படிக்கவேண்டும்" என்றார், அடிக்கடி அவர் சொல்லியும் அவர் மகன் வாங்கி வரவில்லை. பிறகு ஒருநாள் வாங்கி வந்தான். அதைப் போட்டுக்கொண்டு அவர் வாய்விட்டு இராமாயணத்தைப் படித்தார். "அப்பாடி! கண்ணாடி போட்ட பிறகுதானே எழுத்துப் புரிகிறது?" என்று சொல்லிப் படித்தார்.

பக்கத்து வீட்டில் இருந்த ஒருவனுக்கு இந்தக் கிழவர் கண்ணாடி இல்லாமல் பரிதவித்ததும், கண்ணாடி வந்த பிறகு படித்து மகிழ்வதும் தெரிந்தன. அவன் ஒரு கண்ணாடிக கடைக்குப் போனான். "ஒரு கண்ணாடி எடுங்கள், படித்துப் பார்க்கிறேன்" என்றான். கடைக்காரர் அவனுக்குச் சாலேசரம் என்று எண்ணி ஒரு கண்ணாடியைக் கொடுத்து ஒரு புத்தகத்தையும் கொடுத்தார். அந்த ஆள் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு புததகத்தை எடுத்துப் பார்த்தான்.

"தெரியவில்லையே!" என்றான்.

கடைக்காரர் வேறு கண்ணாடி கொடுத்தார். அதைப் போட்டுக்கொண்டு பார்த்தான். அப்போதும், "தெரியவில்லையே!" என்றான். கடைக்காரர் பெரிய எழுத்துப்

புத்தகம் ஒன்றை எடுத்துக் கொடுத்துப் பார்க்கச் சொன்னார். "இப்போதும் தெரியவில்லையே!" என்றான்.

இப்படியே சில கண்ணாடிகளையும் சில புத்தகங்களையும் மாற்றி மாற்றிக் கொடுத்தார் கடைக்காரர். "தெரியவில்லை" என்றே சொன்னான் வந்தவன்.

பேச்சுவாக்கில் கடைக்காரர், "நீங்கள் எது வரைக்கும் படித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நானா? நான் படிக்கவே இல்லை. பக்கத்து வீட்டுக் கிழவர் கண்ணாடி இல்லாமல் எழுத்தைப் படிக்க முடியவில்லை. கண்ணாடி போட்டுக் கொண்ட பிறகு எழுத்து அவருக்குத் தெரிகிறது. எனக்கும் கண்ணாடி போட்டால் படிக்க வரும் என்றல்லவா நினைத்தேன்?" என்று அந்த ஆசாமி சொன்னான்!

# என் புத்தகங்கள்

யாராவது ஓர் அறிஞரைப் பார்த்துச் சிறிது நேரம் பேசி அவருடைய அறிவுரையைக் கேட்டு வரலாம் என்று நினைக்கிறோம். அவர் வீட்டுக்குப் போகிறோம். அவர் இருக்கிறதில்லை. இருந்தாலும் வேலை அதிகமாக இருப்பதால், "அப்புறம் வாருங்கள்" என்று சொல்லிவிடுகிறார். இன்னும் சில நண்பர்களை நாம் நினைத்த நேரத்துக்குப் பார்க்க முடிகிறதில்லை,

ஆனால் வேறு சில பெரியவர்கள் இருக்கிறார்கள்: அவர்கள் இப்போது இல்லை என்றாலும், இருந்துகொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களை எந்த நேரத்தில் கூப்பிட்டாலும் வருவார்கள். நம்மோடு பேசுவார்கள். நமக்கு அறிவுரை தருவார்கள். அவர்கள் யார் தெரியுமா? திருவள்ளுவர், கம்பர், ஷேக்ஸ்பியர், மில்ட்டன், காளிதாசர் முதலியவர்கள். அவர்களை உடம்புடன் பார்க்க முடியாது என்பது உண்மைதான். நாம் என்ன, அவர்களோடு கை குலுக்கப் போகிறோமா? சாப்பாடு போடப் போகிறோமா? அல்லது உட்கார்த்தி வைத்து விசிறி வீசப் போகிறோமா? அவர்கள் யாவரும் தம்முடைய நூல்களில் வாழ்கிறார்கள். அவர்களே அந்த நூல்களின் வடிவத்தில் இருக்கிறார்கள். அவர்களை எப்போது வேண்டுமானாலும் அணுகலாம். அலுப்புத் தட்டினால் 'கொஞ்சம் இருங்கள்' என்று கூறி

வந்து விடலாம். 'போர்' அடிக்கிற பெரிய மனிதர்களைப் போல நம்மைத் தொந்தரவு பண்ணமாட்டார்கள்.

புத்தகங்களை மனிதன் பெற்ற பெருஞ்செல்வம் என்று தான் சொல்ல வேண்டும். அதுவும் அச்சு யந்திரம் வந்த பிறகு எத்தனை வகையான புத்தகங்கள், எத்தனை அழகான வடிவத்தில் வந்திருக்கின்றன!

நான் புத்தகப்பித்தன்; புத்தகப்புழு என்று சொல்லுங்கள்; ஏற்றுக் கொள்கிறேன். வேறு எதிலாவது இருக்கும் புழுவைவிடப் புத்தகப் புழு உயர்வுதானே? சின்னப் பிராயத்திலிருந்தே புத்தகம் சேர்ப்பதென்றால் எனக்கு ஆசை. நாவல்கள் பலவற்றைச் சேர்த்து வைத்தேன். இலக்கியப் புத்தகங்களையும் வாங்கிச் சேர்த்தேன். 1916-17 ஆம் வருஷம் என்று ஞாபகம். என் மாமா வீட்டில் இருந்து படித்துக் கொண்டிருந்தேன். என் தகப்பனார் வேறு ஊரில் இருந்தார். மத்தியான்ன நேரங்களில் சிற்றுண்டி வாங்கிச் சாப்பிடப் பணம் கொடுத்து வைப்பார். நான் அந்தப் பணத்துக்குப் புத்தகம் வாங்கிவிடுவேன். ஒரு முறை கந்தர் அநுபூதி, கந்தர் சஷ்டி கவசம் போன்ற நூறு சில்லறை நூல்கள் அடங்கிய விநாயகர் கொத்து என்ற புத்தகத்தையும் அருணாசல புராணத்தையும் வாங்கி வந்தேன். அந்தக் காலத்தில் நான் மூன்றாவது பாரம் படித்துக் கொண்டிருந்தேன். விநாயகர் கொத்து, குட்டையான புத்தகம்; தடிமனாக இருக்கும். "இதை ஏன் வாங்கினாய்?" என்று என் மாமா கேட்டார். "எனக்குப் பாடம்!" என்றேன். அது பாடம் அன்று என்று அவருக்கு நிச்சயமாகத் தெரியும். அதை வாங்கியதற்காகவும் பொய் சொன்னதற்காகவும். அவர் என்னைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

கொஞ்சம் கொஞ்சமாகப் புத்தகங்களைச் சேர்த்து எங்கள் ஊரில் உள்ள எங்கள் வீட்டில் வைத்தேன்

ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி, இரத்தினபுரி ரகசியம், மின்சார மாயவன், தாசி தையல் நாயகியின் சமர்த்து—இப்படியெல்லாம் பல நாவல்கள் இருந்தன.

விவேக சாகரம் என்று ஒரு புத்தகம். அந்தப் புத்தகத்தை இப்போது அச்சிட முடியாது. பச்சைச் சிங்காரம் அது. எட்டையாபுரத்தில் இருந்த முஸ்லீம் ஒருவர் எழுதினது அது. நடை கடுமையான பண்டிதர் நடை.

ஒரு பிராம்மணன் நான்கு வேதங்களும் கற்றுக் கொள்கிறான். இடையிலே அவனுக்குக் கல்யாணமாகிறது. வேதங்களை அத்தியயனம் செய்து விட்டு வீட்டுக்கு வருகிறான். மனைவியோடு வாழலாம் என்று வருகிறான். அவன் மனைவி ஒரு கள்ளப் புருஷனை வைத்துக்கொண்டிருக்கிறாள். தன் கணவனிடம், "நான்கு வேதந்தானே கற்றிருக்கிறீர்கள்? ஐந்தாம் வேதமும் கற்றுக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லி அனுப்பி விடுகிறாள். அந்த அப்பாவிப் பிராம்மணனும் அதை உண்மையென்று நம்பிப் புறப்பட்டு விடுகிறான். சில பெண்களைச் சந்தித்துத் தான் ஐந்தாம் வேதம் கற்றுக் கொள்வதற்கு வந்திருப்பதாகவும் அதற்குரிய குருவைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் சொல்கிறான். அந்தப் பெண்கள் தாங்களே ஐந்தாம் வேதத்தைக் கற்றுத் தருவதாகச் சொல்கிறார்கள்.

ஒவ்வொருத்தியும் வெவ்வேறு வகையான தந்திரம் செய்து தன் கணவன் இருக்கும்போதே அந்தப் பிராம்மணனோடு இன்புறுகிறார்கள். "இதுதான் ஐந்தாம் வேதம்" என்கிறார்கள். இப்படி ஐந்து பேர் ஐந்து வகையில் அவனுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். இடையில் பல உபகதைகள். எல்லாம் பச்சை பச்சையான செய்திகள்.

இந்தக் கதையைச் சொல்வதுதான் விவேகசாகரம். அந்தப் பிராம்மணன் பெற்றுக்கொண்ட விவேகம், முறை

யற்ற காமலீலே. இப்போது மட்டும் அந்தப் புத்தகத்தை வெளியிட அரசு அனுமதிக்குமானல் ஒரே நாளில் லட்சம் பிரதிகள் செலவாகிவிடும்!

விவேகசாகரமும் வைத்திருந்தேன்; கைவல்ய நவ நீதமும் வைத்திருந்தேன். இராஜாம்பாள் சரித்திரம், ஹனுமான் சிங் முதலிய துப்பறியும் நாவல்களும் இருந்தன. அப்போது வடுவூர் துரைசாமி ஐயங்கார் நாவல்கள் வராத காலம். ஆரணி குப்புசாமி முதலியார் தழுவல் நாவல்கள் எங்கும் பரவியிருந்த காலம்.

கிட்டத்தட்ட முந்நூறு புத்தகங்கள் என்னிடம் இருந்தன. அவற்றையெல்லாம் சேர்த்துப் பூர்ணமதி புத்தக சாலே என்று பெயரிட்டேன். பூ. ம. பு. என்று சுருக்கி மாக்கல்லில் நானே அச்சு அமைத்து மையில் தோய்த்துப் புத்தகங்களில் குத்தினேன். நாவல்களை அன்பர்களுக்குக் கொடுத்து வாசித்த பிறகு வாங்கி வைப்பேன். இலவச வாசகசாலே என்னுடைய புத்தகசாலே.

பத்திரிகைகளை எல்லாம் சேர்ப்பேன். அப்போதெல் லாம் எந்தப் பத்திரிகைக்காரரும் மாதிரிப் பிரதி வேண்டு மென்ருல் உடனே அனுப்பி விடுவார்கள். அநேகமாக அந்தக் காலத்தில் நடைபெற்ற பத்திரிகைகளில் ஒவ்வொன் றிலும் ஒரு பிரதியாவது என்னிடம் இருக்கும். ஆனந்த போதினிக்கு நான் சந்தாதார். புத்தகக் கம்பெனிகளுக் கெல்லாம் கேட்லாக்குக்கு எழுதி வாங்கி வைத்துக் கொள் வேன். அந்தக் காலத்தில் கார்டு காலணுதான். நாள் தோறும் கடிதங்கள் எழுதுவேன். ஒவ்வொரு நாளும் எனக்கு ஏதாவது தபால் வந்துகொண்டே இருக்கவேண் டும். பத்திரிகையின் மாதிரிப் பிரதியோ காட்லாக்கோ எதுவானுலும் சரி, வரவேண்டும்.. தபால் நிலேயத்துக்குப் போய்த் தபால் கட்டுகளை உடைக்கும்போதே உடனிருந்து

நூல்களை வாங்கிக் கொள்வேன். அந்தக் காலத்தில் வி. பி. பி.யில் புத்தகம் தருவிப்பது எளிது. அதற்கென்று விசேஷச் செலவு கிடையாது. இப்போது வி. பி. பி.யில் தருவிப்பதென்றால் எத்தனை செலவு! 'சுண்டைக்காய் கால் பணம், சுமைகூலி முக்கால் பணம்' என்பது இந்தக் கால வி. பி. பி.ச் செலவுக்கு நூற்றுக்கு நூறு பொருத்தமான பழமொழி.

அப்படிப் பல பத்திரிகைகளைப் படித்துப் படித்து நாமும் பத்திரிகைகளுக்கு எழுத வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. தினப் பத்திரிகைகளுக்கு ஊர்ச் செய்திகளை எழுதினேன். ஒவ்வோர் ஊரின் பெயரையும் தலைப்பாக இட்டுக் கீழே செய்திகளை வெளியிட்டு வந்த காலம் அது. எங்கள் ஊராகிய மோகனூரைப் பற்றி எத்தனையோ செய்திகளை எழுதினேன். பிறகு கவிதை. தேசிய கீதங்கள் முதலியவற்றை மாதப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பினேன்.

சென்னைக்கு வந்த பிறகு இலக்கியப் புத்தகங்களைச் சேகரிப்பதில் ஆசை பிறந்தது. வாங்கி வாங்கிச் சேர்த்தேன். ஒரே நூலில் நான்கைந்து பதிப்பு இருக்கும். எல்லாவற்றையும் வாங்கி வைப்பேன். திவ்யப் பிரபந்தத்தைப் பலபேர் பதிப்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் கூட 15 ரூபாய் கொடுத்து ஒரு புதுப் பதிப்பை வாங்கியிருக்கிறேன். எல்லாம் எப்போதும் பயன்படுமா என்று கேட்கலாம். பெண்பிள்ளைகள் எத்தனை பாத்திரங்கள் வாங்கிச் சேர்க்கிறார்கள்! எல்லாம் நாள்தோறுமா பயன்படுகின்றன?

**எ**ன்னுடைய ஆசிரியப் பெருமான் ஐயரவர்கள் பெரிய புத்தகப் பித்தர். பல நூல்களைத் தொகுத்தார்கள். படித்தார்கள். ஏட்டுச் சுவடியிலேயே படித்தவர்கள் அவர்கள்.

8

எந்த நூலைப் படித்தாலும் அதில் அடையாளம் செய்து படிப்பவர்கள். அவர்களுக்கென்று சில சங்கேதங்கள் உண்டு. நல்ல பாடல்களாக இருந்தால் அதன் பக்கத்தில் ஒரு சுழி போட்டிருப்பார்கள். அது பாடம் பண்ணத் தக்க பாட்டு என்று பொருள். சில இடங்களில் ஒரு புள்ளி, இரண்டு புள்ளி, மூன்று புள்ளிகள் இருக்கும். ஒரு புள்ளி இருந்தால் அந்த வரியில் சிந்திப்பதற்குரிய கருத்து ஒன்று இருக்கிறது என்று பொருள். மூன்று புள்ளிகள் இருந்தால் அங்கே மூன்று கருத்துக்கள் கவனிப்பதற்குரியவையாக இருக்கும். சந்தேகமுள்ள இடங்களில் —என்று சிறு கோடு இட்டிருப்பார்கள். பல இடங்களில் பாட்டின் ஒரு பாதியையோ, முழுப்பாட்டையோ பக்கத்தில் நெட்டையாகக் கோடிட்டிருப்பார்கள். அவை முக்கியமான பகுதிகள். சில இடங்களில் அடிக்கோடிட்டிருப்பார்கள். படிக்கிறவர்கள் படித்து அடையாளம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். அவர்கள் ஏதாவது நமக்கு அறிவிக்க வேண்டுமானால், "அதோ அந்தப் புத்தகத்தை எடு; வலப் பக்கத்தில் மேலே அடையாளம் செய்திருக்கிறேன், அதைப் படி" என்பார்கள். அங்கே நமக்கு வேண்டிய கருத்தோ, மேற்கோளோ கிடைக்கும். அவர்கள் ஒன்று சொல்வதுண்டு; "நான் இறந்தால் மறுபடியும் தமிழ் நாட்டில்தான் பிறப்பேன். தமிழ் நூல்களைக் கற்பேன். ஆனால் நான் அடையாளம் இட்டு வைத்த இந்தப் புத்தகங்கள் எனக்குக் கிடைக்குமா?" என்று வருந்துவார்கள். தாம் படித்துக் குறிகளிட்ட புத்தகமென்றால் அதற்குத் தனி மதிப்பு, புழங்கின பாத்திரம் மாதிரி.

அந்தப் பழக்கத்தை அவர்களிடம் நானும் கற்றுக் கொண்டிருக்கிறேன். எதைப் படித்தாலும் அடையாளம் செய்து படிப்பேன். பிழை இருந்தால் திருத்திக் கொண்டு படிப்பேன். சில புத்தகங்களைப் பார்த்தால் 'புரூப்' திருத்து

வதற்காக என்னிடம் யாரோ கொடுத்திருக்கிறார்கள் என்று தோன்றும். நான் என்ன செய்வது? அப்படி ஒரு 'கெட்ட பழக்கம்' எனக்கு உண்டாகிவிட்டது.

பாரதியார், சில செய்யுள் நூல்களைப் படித்தால் சுவையில்லாத பாடல்களை அடித்து விடுவாராம். அவருக்கு அத்தனை ராஜச குணம்.

புத்தகங்களைப் படிக்கும்போது சில பேர் அடையாளம் வைப்பதற்காகத் தாளின் மூலையை மடித்து விடுவதுண்டு. அது நல்லதல்ல. பாராயண நூல்களில் ஒரு பட்டுக் கயிற்றை அடையாளம் வைப்பதற்காகவே சேர்த்துப் பைண்டு செய்திருப்பார்கள். வேறு நூல்களிலும் அந்த அமைப்பைப் பார்க்கலாம். இதுவரையில் படித்திருக்கிறோம் என்பதற்காக எல்லாருமே ஏதாவது காகிதத்தை வைப்பதுண்டு,

புத்தக அடையாளம் என்கிறபோது எனக்கு இரண்டு நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. நான் பல உரைகளும் அடங்கிய திருக்குறட் பதிப்பு ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். நள்ளிரவு, உறக்கம் வந்தது, புத்தகத்தை மூடிவிட்டுப் படுத்துக் கொண்டேன். விடியற்காலை எழுந்து மீண்டும் தொடர்ந்து படிக்கலாம் என்று எண்ணினேன். எங்கே விட்டேன் என்பதற்கு அடையாளம் வைக்கவில்லை. புத்தகத்தை எடுத்துப் பிரித்தேன். அடையாளம் இருந்தது. தூக்க மயக்கத்தில் புத்தகத்தை மூடியபோது இடையே ஒரு பூச்சி அகப்பட்டு இறந்து போயிருந்தது. அதுதான் அடையாளம்! நான் படித்துக் கொண்டிருந்த இடம் எது தெரியுமோ? 'கொல்லாமை' என்னும் அதிகாரம்! அங்கேதான் இந்தக் கொலை நிகழ்ந்திருந்தது!

ஒரு பையன் அடிக்கடி என்னிடம் கதைப் புத்தகங்களை வாங்கிச் சென்று படித்துவிட்டுக் குறித்த காலத்தில் திருப்பிக் கொண்டு வந்து கொடுப்பான். ஒரு முறை ஒரு வாரம் தாமதமாகக் கொண்டு வந்து கொடுத்தான். நான் அவனிடம், "ஏன் அப்பா, இவ்வளவு தாமதம்?" என்று கேட்டேன். "ஊரிலிருந்து என் தமக்கை வந்திருந்தாள். அவளும் படித்தாள். அதனால் தாமதம்" என்றான். நான் புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டேன். அதைப் பிரித்துப் பார்த்தேன். அதில் தாழம் பூ அடையாளம் இருந்தது பூச்சி அடையாளம் இருந்ததைச் சொல்லவே வெட்கமாக இருக்கிறது. பூ அடையாளமோ, அடையாளத்துக்கு அடையாளம்; அதன் மணம் புத்தகத்தின் தாளில் ஏறியிருந்தது.

இதை நான் உவமையாக எடுத்துச் சொல்வதுண்டு. "நம்முடைய குழந்தைகளுக்குப் பெயரை அடையாளமாக வைக்கிறோம். எதையும் அடையாளமாக வைக்கலாம். ஆனால் நம் நாட்டில் இறைவன் பெயரை வைப்பது வழக்கம். அது பூ அடையாளம் போன்றது. குழந்தையை இனம் கண்டு கொள்ள அந்தப் பெயர் உதவுவதோடு இறைவனை நினைப்பூட்டிப் பக்தி மணமும் உண்டாகச் செய்கிறது" என்பேன்.

நாம் படித்து அடையாளம் செய்த புத்தகம் என்றால் அதன் மேல் ஒரு தனி அபிமானம் ஏற்படுவது இயல்பு. பழகின புத்தகம் என்பதற்காக மட்டும் அல்ல; திடீர் என்று ஓரிடத்தை எடுக்க வேண்டுமென்றால் நாம் செய்திருக்கும் அடையாளத்தைக் கொண்டு சட்டென்று கண்டு பிடித்து விடலாம்.

சில மகானுபாவர்கள் புத்தகம் வைத்திருக்கிறார்கள். வாங்கின மேனிக்கு அப்பழுக்கு இல்லாமல் அப்படியே இருக்கும். உள்ளே பிரித்துப் படித்துப் பார்த்தால்தானே?

பழைய காலத்திலேயே—அதாவது அழகழகாகப் பைண்டு செய்த புத்தகங்கள் இல்லாமல் ஓலைச்சுவடிகள் இருந்த காலத்திலேயே—இப்படிப்பட்ட புத்தகம் காத்த பூதங்கள் இருந்தன என்று தெரிகிறது.

**"புத்தகமே சாலத்**
**தொகுத்தும் பொருள்தெரியார்,**
**உய்த்துஅகம் எல்லாம்**
**நிறைப்பினும் மற்றுஅவற்றைப்**
**போற்றும் புலவரும்**
**வேறே; பொருள்தெரிந்து**
**தேற்றும் புலவரும் வேறு"**

என்று நாலடியாரில் ஒரு பாட்டு வருகிறது. வீடு முழுவதும் புத்தகங்களை நிறைத்து வைத்துப் பூட்டி வைக்கிற புலவர்களும் இருந்தார்களாம்! அந்தக் காலத்திலேயே அப்படியானால் இந்தக் காலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.

சில பேர் கௌரவத்துக்காகப் புத்தகங்களை வாங்கி வைத்திருப்பார்கள். இன்ன புத்தகம் தம்மிடத்தில் இருக்கிறதென்பது கூடத் தெரியாது. நூலுக்குள்ளே என்ன இருக்கிறது என்றும் தெரியாது. யாராவது ஏதாவது கேட்டால் தம்மிடம் இல்லை என்று சொல்லி விடுவார்கள். ஏதாவது சுவையான கருத்து இந்த நூலில் இருக்கிறது என்று யாராவது சொல்லும்போது அதை முழுவதும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை சிலருக்கு உண்டாகும். முன்னே பின்னே புத்தகத்தைப் புரட்டிப் பார்த்திருந்தால்தானே தெரியும்? அப்போதைக்குப் போய்ப் புத்தகத்தைத் துருவினால் இருக்குமிடம் தெரியுமா?

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முன்பு சேது ஸம்ஸ்தான மகாவித்துவான் இரா. இராகவையங்கார்

ஆராய்ச்சித் துறையில் பணிபுரிந்து வந்தார். அவருக்கு உதவியாகச் சிலர் இருந்தனர். அவருள் எம். ஏ. பட்டம் பெற்றவர் ஒருவர். ஒரு நாள் மகாவித்துவான் எதையோ ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது, அந்த எம். ஏ. யைப் பார்த்து, "அழற்படுகாதை எடுத்துக் கொண்டு வா" என்றார். எம், ஏ. நூல் நிலையம் சென்றார். சென்றவர் நெடு நேரமாகியும் வரவில்லை. பிறகு வந்தார். "எங்கே புத்தகம்?" என்று கேட்டார் மகா வித்துவான். "அழற்படு காதை என்ற புத்தகம் நூல் நிலயத்தில் இல்லை. நெடுகத் தேடிவிட்டேன்" என்றார். கேட்ட புலவர் பெருமானுக்குக் கோபம் வந்துவிட்டது. "அட முட்டாள்! சிலப்பதிகாரம் இங்கே இல்லையா?" என்று கத்தினார்.

பாவம்! அந்த எம். ஏ. க்கு அழற்படுகாதை என்பது சிலப்பதிகாரத்தில் உள்ள ஒரு காதை என்று தெரியவில்லை, அவருக்கே தெரிய வில்லையென்றால், புத்தகத்தை வாங்கி வைத்து வருகிறவர்களுக்குக் காட்டுவதோடு நிற்கும் பெரு மக்களுக்கு என்ன தெரியப் போகிறது?

நான் படித்துக் குறிப்பு எடுத்த புத்தகத்தை யாராவது கேட்டால் கொடுக்க மனம் வருகிறதில்லை. கேட்கிறவர்களுக்குக் கொடுக்காவிட்டால் அவர்கள் என்னைப் பற்றித் தவறாக நினைக்கக்கூடும். சிலருக்குப் புத்தகங்களைக் கொடுத்துத் திரும்பி வராமல் இழந்திருக்கிறேன். அந்தப் புத்தகங்களைப்போல ஆயிரம் புத்தகங்கள் கடையில் வாங்கிக் கொள்ளலாம்; புத்தம் புதிய பதிப்பே கிடைக்கும். ஆனாலும் என் கைப்பட்ட என் சொந்தப் புத்தகத்தில் குறித்திருக்கும் அடையாளங்களை, செய்திருக்கும் திருத்தங்களை, குறித்திருக்கும் சிறு குறிப்புக்களை, நான் விலை கொடுத்து எங்கே வாங்க் முடியும்?

# தலையசைத்தால் போதும்!

கலைகள் யாரால் வளருகின்றன? இந்தக் கேள்விக்கு இரண்டு வகையான விடைகள் உண்டு. கலைஞரால் கலைகள் வளருகின்றன என்பது ஒரு விடை; ரசிகர்களால் கலைகள் வளருகின்றன என்பது மற்றொரு விடை. இரண்டும் சரி தான். ஆனால் யாருடைய பங்கு அதிகம்? இந்தக் கேள்விக்கு யோசிக்காமல் உடனே பதில் சொல்ல முடியாது. தாயும் தந்தையும் வளர்ப்பதனால் குழந்தை வளர்கிறது. 'தாயின் பங்கு அதிகமா, தந்தையின் பங்கு அதிகமா?' என்று கேட்டால் என்ன சொல்வது? அது போன்றதுதான் அந்தக் கேள்வியும்.

அந்த உவமையைவிட வேறு ஓர் உவமையைச் சொல் கிறேன். ஒரு பெண்ணைப் பெற்றோர் வளர்க்கிறார்கள்; அருமையாக வளர்க்கிறார்கள். பிறகு ஒரு நல்ல மாப்பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறார்கள். பெண்ணின் வாழ்க்கையின் ஆரம்பப் பகுதி பெற்றோர் களால் வளம் பெறுகிறது; ஆனால் அதனோடு நின்றுவிட் டால் போதாது. அந்தப் பெண்ணின் வாழ்வு முழுமை பெறுவது அவளுடைய கணவனால்தான். கலைஞனைக் கலை யின் தகப்பனாகக் கொண்டால் ரசிகனைக் கலையின் மண வாளனாகக் கொள்ளலாம். கலை என்ற பெண் முழுமை பெறவேண்டுமானால் ரசிகன் வேண்டும். கலையை அநு பவிக்க ஆள் இல்லாவிட்டால் கலைஞன் கலையை உற்பத்தி

செய்ய முந்துவானா? அப்படியானால் கலை முழுமைபெற ரசிகர்களின் ஆதரவு மிகுதியாக வளர்ந்து வரவேண்டும் என்று தெரிகிறது.

இதை நான் ஏதோ புதியதாகச் சொல்லி விடவில்லை. கலைஞர்களே தங்கள் கலை வளர்ச்சிக்குக் காரணம் ரசிகர்கள் என்பதை உணர்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

பேச்சுக் கலையில் வல்லவர் ஒருவர் இருக்கிறார். அவர் பேச்சைக் கேட்க ஆள் இல்லாவிட்டால் அவருக்கு உற்சாகம் உண்டாகுமா? கேட்கிற ஆள் வெறும் ஆளாக இருந்தால் பயன் இல்லை; கேட்டுச் சுவைக்கும் ரசிகனாக இருக்கவேண்டும். அப்போது பேசுகிறவனுடைய கலை வளரும். இதைத் திருவள்ளுவர் சொல்கிறார்.

'ஒரு பாத்தியில் செடி வளர்கிறது; மழை பெய்வதனால் தானே வளருகிறது. அந்தச் செடிக்குத் தண்ணீரும் விட்டால் அது எப்படிச் செழித்து வளரும்? அதுபோலத் தான், சொல்வதை உணர்ந்து சுவைப்பவர்களின் முன்னாலே ஒன்றைச் சொன்னால் அது வளரும்' என்கிறார் அவர்.

**" உணர்வது உடையார்முற்**
**சொல்லல், வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.''**

கேட்கிறவர்கள் எல்லாரும் ரசிகர்களாக இருப்பதில்லை. தரம் அறிந்து ரசிப்பவர்கள், கூட்டத்தில் சிலரே இருப்பார்கள். அவர்களுக்காகவே கலைஞன் தன் கலை நுட்பத்தைக் காட்டுவான். வெறும் ஜடமாக இருப்பவர்கள்முன் பாடவோ, பேசவோ நேர்ந்துவிட்டால் அதைவிட நரகம் கலைஞருக்கு வேறு இல்லை. அதனால்தான் ஒரு வடமொழிக் கவிஞர் பாடினார்: 'ஏ பிரம்மாவே, என் தலையில் எதை

வேண்டுமானாலும் எழுது. ஆனால் ரசிகன் அல்லாதவனிடத்தில் என் கவியைப் பாடும்படியான துர்ப்பாக்கியம் எனக்கு உண்டாகும்படி எழுதாதே, எழுதாதே, எழுதாதே!' என்கிறார். 'அரஸிகேஷு கவித்வநிவேதனம் சிரஸி மாலிக! மாலிக! மாலிக!' என்பது அந்தச் சுலோகப் பகுதி. 'எழுதாதே, எழுதாதே, எழுதாதே,என்று மூன்றுதடவை சொல்லும்போது அந்தக் கவிஞருடைய உள்ளக் குமுறல் எவ்வளவு இருக்கும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

சுவையுள்ளது, சுவையில்லாதது என்று தரம் பார்ப்பதைச் சங்க காலத்து நூல்களில் 'வரிசை அறிதல்' என்று சொல்லியிருக்கிறார்கள். 'வரிசை அறிந்து பாராட்டுவார் யாராவது இருக்கிறார்களா?' என்று புலவர்கள் ஏங்கியிருப்பார்களாம். "வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை" என்று ஒரு புலவர் சொல்கிறார்.

ஒரு கற்பனைக் கதை இங்கே நினைவுக்கு வருகிறது. தங்கம் தன்னைப் படைத்த பிரமதேவனிடம் சென்று குலுங்கிக் குலுங்கி அழுததாம். உலகத்தைப் படைத்தவன் அதைப் பார்த்து, "தங்கம்மா, பொன்னம்மா, ஏன் அம்மா இப்படி அழுகிறாய்?" என்று கேட்டான்.

தங்கம், "என்னையும் படைத்து அந்தத் தட்டானையும் படைத்தாயே! அதனால் அழுகிறேன்" என்று சொல்லியது.

"ஏன் உனக்கு அவன்மேல் கோபம்? உன்னை அவன் நெருப்பில் இட்டு உருக்குகிறானே; அதனால் வருத்தமா?"

"இல்லை. அப்படிச் செய்வதனால் நான் மாசு நீங்கி ஒளிர்கிறேன்."

"அப்படியானால் அவன் பட்டறையில் வைத்துத் தகடாகத் தட்டுகிறானே; அதனால் உனக்கு வேதனை உண்டாகிறதா?"

"இல்லை, இல்லை. தகடாக மாறி இறைவனுக்கே கவச மாகிவிடுகிறேன்."

"பின்னே அவன் பெரிய துளையிலிருந்து சிறிய துளையிலிட்டுக் கம்பியாக இழுக்கிறானே; அப்போது உன் உடல் நலிந்து நைந்து துன்புறுகிறாயோ?"

"இல்லை, இல்லை; நல்லவர்களையெல்லாம் தங்கக் கம்பி என்று என்னை உபமானமாகச் சொல்லும்படி ஆகிறேன். ஆகையால் அதனாலும் வருத்தம் இல்லை."

"இவ்வளவினாலும் உனக்கு வருத்தம் இல்லையென்றால், நீ புலம்புவதற்குக் காரணம் இல்லையே! எதை நினைந்து அழுகிறாய்?" என்று ஏறெடுத்துப் பார்த்து நான்முகன் கேட்டான்.

"அந்தப் படுபாவி என்னை நிறுக்கும்போது தராசில் என்னை ஒரு தட்டில் வைத்து, எனக்குச் சமானமாக மற்றொரு தட்டில் குன்றி மணியை வைத்து நிறுக்கிறானே; அந்த அவமானத்தை என்னால் தாங்க முடிய வில்லையே!" என்று மறுபடியும் அந்தத் தங்கம் புலம்பி யதாம்.

வரிசை அறியாப் பேதைமையை அழகாகக் கற்பனை செய்து வடமொழிக் கவிஞர் ஒருவர் இப்படிப் பாடியிருக் கிறார்.

சொற்பொழிவு செய்கிறவர்களுக்கு ஓர் அநுபவம் உண்டாவது இயல்பு. நன்றாகக் கேட்டு ரசிப்பவர்கள் கூட்டமாக இருந்தால், நம்மை அறியாமலே புதிய புதிய கருத்துக்களும் சுவையான உவமைகளும் புங்கானுபுங்க

மாக வரும். பேச்சு முடிந்த பிறகு, நாமா இப்படிப் பேசினோம் என்ற வியப்புணர்ச்சி நமக்கே எழும். ரசிகர்கள் அல்லாத கூட்டத்தில் இந்த உணர்ச்சி உண்டாவதில்லை. ஏதோ பேசி முடித்தோம் என்ற அளவிலே திருப்திப்பட வேண்டியிருக்கும்.

என்னுடைய ஆசிரியப் பிரானாகிய ஐயரவர்கள் சொல்வார்கள்: "பேசும்போது கூட்டத்தில் முன் வரிசையில் ரசிப்பவர்கள் இருந்து அவ்வப்போது தம்முடைய முகக் குறிப்பால் மகிழ்ச்சியைக் காட்டினால், சுவாரசியமாகப் பேச வரும். சில பேர்வழிகள் இருக்கிறார்கள்; அவர்கள் முன் வரிசையில் உட்கார்ந்திருப்பார்கள். நாம் ஏதாவது பேசினால் அதை ரசிக்கமாட்டார்கள். 'நம்மைப் பேசவிட்டால் இதைவிட அழகாகப் பேசலாமே!' என்று எண்ணிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் முகத்தைப் பார்த்தாலே அவர் உள்ளத்திலே ஓடும் எண்ண ஓட்டம் தெரியும். அந்த விளக்கெண்ணெய் தடவிய முகத்தைப் பார்த்துவிட்டால் நமக்கு இருக்கும் உற்சாகமே குறைந்து போகும். அடிக்கொருதரம் எடுத்துச் சொல்லும் மேற்கோள் பாட்டுக்கூடச் சொல்ல வராது. அந்த மகானுபாவர்களுடைய சந்நிதான விசேஷம் அது" என்பார்கள். இது எத்தனை தூரம் அநுபவத்தோடு ஒத்தது என்பதைப் பேச்சாளர்கள் உணர்வார்கள்.

அரியலூர் ஜமீன்தாராகக் கச்சிரங்கன் என்பவர் இருந்தார். அவர் பரம ரசிகர். இசையையும் தமிழையும் தரமறிந்து ரசித்துப் பாராட்டுகிறவர். அந்தக் காலத்தில் அரியலூரைச் சுற்றிக் காடாக இருக்கும். எளிதில் அந்த ஊருக்குப் போக முடியாது. என்றாலும் புலவர்கள் கச்சிரங்கனிடம் சென்று தம் புலமையைக் காட்டிப் பரிசு பெற்று வருவார்கள். அந்த ஜமீனில் அவைக்களப் புலவர்

ஒருவர் இருந்தார். அவரிடம் வேற்றூர்ப் புலவர்கள், "இங்கே ஏன் இருக்கிறீர்கள்? வேறு இடங்களுக்குப் போனால் உங்களுக்கு நிறையப் பரிசு கிடைக்குமே!" என்று சொன்னார்களாம். அதைக் கேட்டு அந்த அவைக்களப் புலவர், "நயம் அறிந்து தரம் அறிந்து எங்கள் ஜமீன்தார் தலையை அசைக்கிறாரே, அதைவிடவா பெரிய பரிசு வேண்டும்?" என்றாராம். அந்தக் கருத்தைப் பாட்டாகவே பாடி விட்டார். பாட்டு முழுவதும் கிடைக்கவில்லை "கச்சிரங் கேத்ரன் சிரக்கம்பம் போதும் இக் காசினிக்கே!" என்பது கடைசி அடி. அதில்தானே பாட்டின் உயிரே இருக்கிறது?

உடையார்பாளையமும் காட்டுக்கு நடுவே இருந்த ஊர். அங்கே இருந்த ஜமீன்தார்களில் யுவரங்கர் என்பவர் ஒருவர். அவரே கவிஞர். வடமொழி, தென்மொழி வல்லவர்களையும் சங்கீத வித்துவான்களையும் ஆதரித்து வந்தார். நயமறிந்து பாராட்டிப் பரிசளிப்பார். அவருடைய அவைக்களப் புலவராக அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் என்ற வடமொழிக் கவிஞர் ஒருவர் இருந்தார். யுவரங்கர் அவரை மிகவும் மதிப்புடன் ஆதரித்து வந்தார்.

அவ்வப்போது பல இடங்களிலிருந்து இசைப் புலவர் களும் வடமொழிப் புலவர்களும் தமிழ்க் கவிஞர்களும் வந்து யுவரங்கருடன் பழகி அவருடைய உபசாரத்தையும் பரிசையும் பெற்றுச் செல்வார்கள். கொடுக்கும் பரிசு சிறிதானாலும் யுவரங்கர் ரசிக சிகாமணியாக இருந்தமையால் புலவர்களுக்கு அவரைக் கண்டு பழகுவதில் அதிக இன்பம் உண்டாயிற்று.

ஒரு முறை மைசூரிலிருந்து ஒரு வடமொழிக் கவிஞர் உடையார் பாளையம் வந்தார்; யுவரங்கரைப் பார்த்தார். அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளோடு பழகினார். சாஸ்திரிகளு டைய விரிந்த புலமையையும் கவித்துவத்தையும் அறிந்து

வியந்தார். அவர் இந்தச் சிறிய ஜமீனில் இருக்கிறாரே என்ற அங்கலாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அதைச் சாஸ்திரிகளிடமே சொல்லிவிட்டார். "இந்தக் காட்டுக்கு நடுவில் இருக்கிறீர்களே! குடத்தில் வைத்த விளக்குப் போல் ஆகி விட்டீர்களே! நீங்கள் எங்கள் சம்ஸ்தானத்துக்கு வந்தால் எத்தகைய சம்மானங்களெல்லாம் கிடைக்கும், தெரியுமா?" என்றார். அதைக் கேட்ட அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் புன்னகை பூத்தார்; "இந்தக் காட்டில்தான் யுவரங்கன் என்னும் ரசிகசிகாமணியாகிய சிங்கம் இருக்கிறது" என்று சொல்லி ஒரு சுலோகத்தைச் சொன்னார். 'ஆண்டு முதிர்ந்த கிழவி ஒருத்தி கட்டியணைத்து என்ன பயன்? இளம் மங்கை ஒருத்தி காலால் உதைத்தாலும் அந்த இன்பத்துக்கு ஒப்பாகுமா? யுவரங்கன் ரசிகத்தன்மைக்கு ஈடும் எடுப்பும் இல்லை' என்ற கருத்தை உடையது அது.

கவிதை, சங்கீதம், நாடகம் முதலிய கலைகளில் எதுவானாலும் ரசிகர்கள் இருந்தால்தான் கலைஞர்கள் மகிழ்வார்கள்; மேலும் மேலும் தம் திறமையைக் காட்டுவார்கள். கலைஞர் உள்ளம் வெறும் பணத்துக்கோ பேய்க் கொடைக்கோ மகிழாது.

ஒரு வித்தையாடி பல வகை விலங்குகளைப் போல நடிப்பான்; குரல் எழுப்புவான். கோகர்ண வித்தை, கஜகர்ண வித்தை எல்லாம் செய்வான். மாடு தனியே தன் காதை ஆட்டும்; அதைப்போல ஆட்டுவது கோகர்ண வித்தை. யானை தன் காது நுனியை மட்டும் ஆட்டும்; அப்படி ஆட்டிக் காட்டுவது கஜகர்ண வித்தை. அந்த வித்தையாடி காதை ஆட்டுவதோடு மட்டும் அல்லாமல் பசுமாடு மாதிரி முக்காரம் செய்வான்; யானை மாதிரி பிளிறுவான்.

ஒரு நாள் அவன் ஓர் அரச சபையில் தன் வித்தைகளைக் காட்டத் தொடங்கினான். அரசனும் வேறு பலரும் பார்த்துக் களித்தார்கள். ஒவ்வொரு வித்தை முடிந்தவுடனும் அரசன் ஒவ்வொரு பரிசை அளித்து வந்தான். அங்கே பார்க்க வந்த கூட்டத்தில் பசு மேய்க்கும் இடையன் ஒருவன் இருந்தான். ஒரு கோலை ஊன்றிக்கொண்டு ஓர் ஓட்டைக் கம்பளியைத் தலையின் மேல் போட்டுக்கொண்டு நின்றபடியே வித்தைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

கலைஞன் பசுமாடு மாதிரி நடிக்கத்தொடங்கினான். வால் போன்ற ஒன்றைப் பின்னாலே செருகிக்கொண்டு அதை ஆட்டிக் காட்டினான். காதைத் தனியே ஆட்டினான். அப்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இடையன் வித்தைக்காரன் அருகில் வந்து என்னவோ செய்தான். அடுத்த நிமிஷம் தன் மேலிருந்த ஓட்டைக் கம்பளியை அவன் மேல் போட்டுவிட்டுப் போய்விட்டான்.

வித்தைகளெல்லாம் முடிந்தன. வித்தைக்காரன் முதலில் அந்தக் கறுப்புக் கம்பளியை எடுத்து மடித்துத் தலையில் வைத்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு பெட்டிக்குள் வைத்தான். பிறகு அரசன் தந்த பரிசுப் பொருள்களை வைத்தான். அரசன் அவன் செயலைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "அவனை இங்கே அழைத்து வாருங்கள்" என்றான். வித்தையாடும் கலைஞன் அரசனிடம் சென்றான்.

"என்ன, நீ என்னை அவமதிக்கிறாய்?" என்று கோபத்தோடு கேட்டான் அரசன்.

"அரசே, நான் ஒன்றும் அவமதிக்கவில்லையே!" என்று அஞ்சியபடியே சொன்னான் கலைஞன்.

"அந்த இடையன் போட்ட கம்பளிக்குக் கொடுத்த மரியாதையை நான் வழங்கிய பரிசுகளுக்குக் கொடுக்க

வில்லையே! அந்த ஓட்டைக் கம்பளி உனக்குப் பெரிதாகி விட்டதா?''

“மகாராஜா, மன்னிக்கவேண்டும். தாங்கள் என் வித்தைகளில் எதைச் சிறப்பாகச் சுவைத்தீர்கள்?''

“எல்லாமே நன்றாக இருந்தன. இந்த ஒரு காரியந் தான் போக்கிரித்தனமாகப் படுகிறது.''

“மகாராஜா அவர்களை நான் கேள்வி கேட்பதற்காகக் கோபித்துக் கொள்ளக்கூடாது.''

“என்ன கேட்கப் போகிறாய்? கேள்.''

“அந்தக் கம்பளியைக் கொடுத்தவர் எதைப் பார்த்து ரசித்தார், தெரியுமா?''

“அவன், நீ பசுமாடுமாதிரி நடந்ததை, காதை ஆட்டி னதை, முக்காரம் போட்டதைப் பார்த்திருப்பான். அவ னுக்குப் பசுமாடுதானே தெரியும்?''

வித்தையாடி நிதானமாகச் சொல்லலானான். “அரசே, அவர் ஒரு நுட்பத்தைக் கண்டு மகிழ்ந்தார். நான் மாடாக நடித்தபோது ஒரு சிறு பருக்கைக் கல்லை எடுத்து என்மேல் போட்டார். அந்த இடத்தை மட்டும் நான் சுழித்துக் காட்டினேன். மாட்டின்மேல் ஈ உட்கார்ந்தால் மாடு அந்த இடத்தைச் சுழிக்கும். ஈ ஓடிவிடும். அந்த நுட்பமான காரியத்தை நான் செய்து காட்டினேன். அதன் அருமையை உணர்ந்து அந்தக் கம்பளியை அளித்தார். நுட்பம் அறிந்து வழங்கியதாதலால் அதைப் பெரிதாகக் கருதுகிறேன். அவர் மன்னராக இருந்திருந்தால் நாட்டிலே பாதியையே வழங்கி யிருப்பார்'' என்று விளக்கினான்.

கலைஞனுடைய உள்ளம், ரசிகர்கள் நுட்பமுணர்ந்து, தரமுணர்ந்து, வரிசையறிந்து பாராட்டும்போது களிக்கிற அளவுக்கு வேறு எந்தச் சமயத்திலும் களிக்காது. பழங் காலப் புலவர் அதனால்தான் ஒரு வள்ளலைப் பார்த்துச்

சொன்னார். 'ஓர் ஊரில் ஒருவன் பணக்காரனாக, பிறருக்கு வழங்குபவனாக இருந்தால், அவனைத் தேடிக் கொண்டு நாலு திசைகளிலிருந்தும் பரிசைப் பெறுவதற்குரிய புலவர் முதலிய பலரும் வருவார்கள். தரமறிந்து பரிசளிப்பது இருக்கிறதே, அதுதான் அருமையான காரியம். பணத்தைக் கொடுப்பது மிகவும் எளிய செயல். ஆகையால் பெரிய வண்மையையுடைய செல்வனே, அந்த உண்மையை நீ அறிந்தாயானால், புலவர்களிடத்தில் எல்லாரையும் ஒரே மாதிரி பார்க்கும் செயலை வைத்துக் கொள்ளாதே' என்றார்.

"ஒருதிசை ஒருவனை உள்ளி, நால்திசைப்
பலரும் வருவர், பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்!
அதுநற்கு அறிந்தனை ஆயின்,
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே."

[உள்ளி-எண்ணி, பரிசில் மாக்கள்-பரிசிலைப் பெறும் புலவர், பாணர் முதலியோர். நற்கு-நன்றாக, பொது நோக்கு-எல்லாரையும் ஒரே மாதிரிப் பொதுவாக மதித்தல். ஒழிமதி-நீங்குவாயாக.]

கபிலர் என்ற புலவர் மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளலைப் பார்த்துச் சொன்ன பாட்டு இது. வரிசையறியும் ரசிகனைத் தேடும் கலைஞர்களே உண்மைக் கலைஞர்கள். ரசிகன் தரம் அறிந்து, நயம் அறிந்து, நுட்பம் அறிந்து தலையை அசைத்தால் போதும்; ஆயிரம் பொன்னுக்குச் சமானம் அல்லவா அது?

# நடந்த கதை

அமரர் திரு. வி. க. அடிக்கடி சொல்வார்; "ஏதாவது உடற்பயிற்சி செய்யவேண்டும். செய்யாமல் இருந்தால் இளமையில் ஒன்றும் தெரியாது. முதுமையில் மிகவும் இன்னல் உண்டாகும். வேறு பெரிய பயிற்சி செய்ய வேண்டாம். நாள்தோறும் ஒரு மைல், இரண்டு மைல் நடந்து பழக வேண்டும். நான் அப்படிச் செய்யாமையால் இப்போது துன்புறுகிறேன்!" என்பார்.

என்னுடைய ஆசிரியப் பெருமான் டாக்டர் மகா மகோபாத்தியாய ஐயரவர்கள் சிலநாள் நடப்பதுண்டு. அவர்கள் திருவேட்டீசுவரன் பேட்டையில் வாழ்ந்தார்கள். அங்கே திருவேட்டீசுவரன் கோயில் என்ற ஆலயம் இருக்கிறது. அதைச் சுற்றி நான்கு மாட வீதிகள் உண்டு. ஐயரவர்கள் வீடு தெற்கு மாடவீதியில் உள்ளது. அந்தத் தெருவுக்குப் பிள்ளையார் கோயில் தெரு என்று பெயர்.

சில நாள் ஐயரவர்கள், மேலே அங்கவஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு இந்த நாலு வீதிகளையும் சுற்றி வருவார்கள். அப்போது கையில் ஜபமாலையையும் கொண்டு செல்வார்கள்; அவர்கள் இருந்த வீதியின் மேல் கோடியில், அதாவது மேல் வீதிக்குத் திரும்பும் மூலையில், ஒரு கிழவி இட்டிலி விற்றுக் கொண்டிருப்பாள். அந்த மூலையில்தான் ரிக்ஷாக்காரர்கள் ரிக்ஷாக்களுடன் இருப்பார்கள்.

ஐயரவர்கள் கையில் நாலணு எட்டணு எடுத்துக் கொண்டு செல்வார்கள். அந்த இட்டிலிக் கூடைக்காரிக்கு முன்போய் நிற்பார்கள். அப்போது ரிக்ஷாக்காரர்களெல்லாம் அவர்களைச் சுற்றி மொலுமொலுவென்று மொய்த்துக் கொள்வார்கள். அந்தக் கூடைக்காரியிடம் ஆளுக்கு இரண்டு இட்டிலி கொடுக்கச் சொல்வார்கள். அப்போதெல்லாம் இட்டிலி காலணு விலை. எல்லாரும் வாங்கிக்கொண்ட பிறகு கணக்குப் பண்ணிப் பணத்தை இட்டிலிக்காரியிடம் கொடுத்து விடுவார்கள். இதனுல் அந்தக் கிழவிக்கு வியாபாரம்; ரிக்ஷாக்காரர்களுக்கு ஓரளவு காலை உணவு. ஐயரவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு ஜபமாலையுடன் மேற்கு வீதியில் திரும்பும்பொழுது அந்தக் கிழவி, "மகராஜன் நல்லா இருக்க வேணும்!" என்று வாழ்த்துவாள். ஆண்டவனைப் பிரதட்சிணம் பண்ணின பலன், உலாத்தின பயிற்சி என்று இரட்டை லாபம் உண்டு. அந்த இட்டிலிக்காரிக்கு வியாபாரம், ரிக்ஷாக்காரர்களுக்குச் சிற்றுண்டி என்று வேறு வகையிலும் இரட்டை லாபம் கிடைக்கும்.

வெளியூர்களுக்குப் போனுல் அவர்கள் நெடுந்தூரம் நடப்பார்கள். அவர்களோடு அப்போது போனுல் எத்தனையோ அருமையான இலக்கிய நுட்பங்களும் வாழ்க்கை அநுபவங்களும் கேட்கலாம்.

அந்தக் காலத்திலெல்லாம் எனக்கு நடந்து பயில வேண்டும் என்ற எண்ணம் எழவே இல்லை. சில முக்கியமான காரியங்களுக்காகச் சில சமயங்களில் ஓரேயடியாகப் பல மைல்கள் என் இளம் பிராயத்தில் நடந்திருக்கிறேன். இப்போது நினைத்துக் கொண்டாலும், 'நாமா அப்படி நடந்தோம்?' என்று ஆச்சரியமாக இருக்கிறது.

ஒரு காலத்தில் என்னுடைய உள்ளத்தில் துறவி ஆக வேண்டும் என்ற ஆசை உண்டாகி வளர்ந்து வந்தது. அப்

போது எனக்குப் பதினாறு பிராயம்; சேந்தமங்கலத்தில் அவதூத சுவாமிகள் ஒருவர் இருந்தார். ஸ்ரீ சுயம்பிரகாசப் பிரம்மேந்திர சரஸ்வதி என்பது அவர்கள் திருநாமம். அவர்களிடம் போய்ச் சரணம் அடைந்து சந்நியாசி ஆகிவிட வேண்டும் என்று ஆசை. "நான் சுவாமிகளிடம் போய்ச் சிலகாலம் கைங்கரியம் பண்ணி நல்ல நூல்களை வாசித்து விட்டு வருகிறேன்" என்று என் தாய்தந்தையரிடம் விடை கேட்டேன். அப்போது எனக்குத் தம்பி பிறக்க வில்லை. இப்போது ஆண்டவன் திருவருளால் ஒரு தம்பி இருக்கிறான்.

என் தாய்தந்தையருக்கு உள்ளே திகில். நான் இருக்கும் நிலையைக் கண்டு, 'எங்கே இவன் சந்நியாசியாகி விடுவானோ!' என்று பயந்தார்கள். ஆகவே அவர்கள் போகக் கூடாது என்று தடுத்தார்கள். எனக்கோ சேந்தமங்கலம் போக வேண்டும் என்ற ஆசை அதிதீவிரமாக எழுந்தது. திருவாசகத்தில் கயிறு சார்த்திப் பார்த்தேன்; "போதோம் காலம் வந்தது காண், புயங்கப் பெருமான் பொன்னடிக்கே!" என்ற பகுதி வந்தது. இறைவனே உத்தரவு கொடுத்து விட்டதுபோல் எண்ணினேன். முதல்நாள் இரவு ஒரு கதர் வேஷ்டியையும் துண்டையும் யாரும் அறியாமல் எடுத்து வைத்து வெளித் திண்ணையில் படுத்துக் கொண்டேன். விடியற்காலையில் எழுந்து புறப்பட்டு விட்டேன். எங்கள் ஊராகிய மோகனூரிலிருந்து நாமக்கல் பன்னிரண்டு மைல்; அங்கிருந்து சேந்தமங்கலம் ஏழுமைல். அங்கே ஒரு சின்னஞ் சிறிய குன்றின் குகையில் சுவாமிகள் இருந்தார். அங்கே பிற்பகல் ஒரு மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். சுவாமிகள் காலில் விழுந்தேன். அவர், "ஏகபுத்ர விஷயம் மாதாபிதா சம்மதம் இல்லாமல் சந்நியாசம் கொடுக்கக் கூடாது!" என்று சொல்லிவிட்டார்; நான் எவ்வளவோ மன்றாடினேன்; மாட்டேன் என்று சொல்லி விட்டார்.

மறுபடியும் அங்கிருந்து நாமக்கல் வந்து அங்கிருந்து மூன்றுமைல் தூரத்தில் வல்லிபுரம் என்ற ஊரில் உள்ள என் நண்பர் வீட்டுக்குப் போனேன். அப்போதுதான் கால்வலி தெரிந்தது. அந்த வீட்டு அம்மாள் விளக்கெண்ணெய் தடவிக் காலுக்கு வெந்நீர் விட்டு நீவினாள். அது வரைக்கும் கால்வலி தெரியாமல், அப்போது எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட்டேன். வேறு நினைவே இல்லாமல் சுவாமிகளையே நினைத்துச் சென்றதுதான் காரணம். மனவலிமை உடம்பில் உள்ள துன்பத்தை மறக்கச் செய்துவிட்டது.

மற்றோர் அநுபவமும் உண்டு. அப்போதும் ஒரு சுவாமிகளைப் பார்க்கத்தான் நடந்து போனேன். சிருங்கேரி சங்கராசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீமத் சந்திரசேகர பாரதி சுவாமிகள், அப்போது கொடுமுடிக்கு விஜயம் செய்திருந்தார்கள். அவர்களைப் போய்த் தரிசித்துவிட்டு வரவேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. அப்போது என் நண்பர் மோ. ஸ்ரீ. செல்லம் ஐயரும் எங்கள் ஊரில் இருந்தார். அவரும் நானும் இளமையிலிருந்து நெருங்கிப் பழகியவர்கள். இருவரும் புறப்படலாம் என்று திட்டமிட்டோம். மோகனூரிலிருந்து காவிரியைப் பரிசலில் தாண்டி அக்கரையாகிய வாங்கலை அடைந்து, அங்கிருந்து ஜட்காவில் ஆறு மைல் தூரத்தில் உள்ள கரூருக்குப் போய், அங்கே ரெயிலேறி, மேற்கே உள்ள கொடுமுடிக்குப் போக வேண்டும். இந்தப் பயணத்துக்குச் சிறிது பணம் வேண்டும். என் தகப்பனாரைக் கேட்டேன்; தரமாட்டேன் என்று சொல்லி விட்டார். அவருக்கு அந்தச் சுவாமிகளோடு நானும் யாத்திரையாகப் புறப்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று பயம்.

ஏதோ கையிலிருந்த சில்லறையை எடுத்துக்கொண்டு கால் நடையாகப் புறப்பட முடிவு பண்ணினோம்.

மோகனூரிலிருந்து காவிரியின் வடகரை வழியாக வேலூர் சென்று அங்கிருந்து புலிக்கல்பாளையம் என்ற ஊர்போய், அங்கிருந்து காவிரியைக் கடந்து அக்கரையில் உள்ள கொடுமுடிக்குப் போவதாகத் திட்டம்.

நாங்கள் புறப்பட்டுவிட்டோம். காலையில் ஏதோ சிறிது உணவுண்டது. பத்து மைல் தூரத்தில் உள்ள வேலூரை அடைந்தோம். பசியாக இருந்தது. அங்கே ஹோட்டலுக்குச் சென்று இட்டிலி உண்டோம். நாங்கள் இருவரும் பிரம்மசாரிகள். எங்களைப் பார்த்த ஹோட்டல் காரர் என்ன கேட்டார் தெரியுமோ?

"நீங்கள் எங்கேயாவது பிராம்மணார்த்தம் சாப்பிடப் போகிறீர்களா?" என்று கேட்டாரே, பார்க்கலாம். பிரம்ம சாரிகள் அனேகமாகப் பிராம்மணார்த்ததுக்குப் போகிற வழக்கம் இல்லை. அதைக் கவனிக்காமல் அவர் சொன்னது கிடக்கட்டும். அவர் கேட்டதிலிருந்து ஓர் உண்மை புலப் பட்டது. அந்தக் காலத்திலேயே, பிராம்மணார்த்தம் சாப்பிடப் போகிறவர்களில் சிலர் அந்தக் கடையில் இட்டிலி சாப்பிட்டிருக்க வேண்டும். மேலே வழி நடக்கையில் அதைச் சொல்லிச் சொல்லிச் சிரித்துக்கொண்டே போனோம்.

சாயங்காலம் ஆறு மணிக்குப் புலிக்கல்பாளையம் போனோம். அங்கிருந்து பரிசலில் கொடுமுடி சென்றோம். அங்கே ஆசார்ய சுவாமிகளை உடனே தரிசிக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் எத்தனையோ பணக்காரர்களும் பெரிய மனிதர்களும் சூழ்ந்து கொண்டு உள்ளே விடாமல் தடுத்தார்கள். அப்போது என் இளைய உள்ளம், 'பணத்தைச் சட்டை செய்யாமல் இவ்வளவு தூரம் எவ்வளவு ஆர்வத்தோடும் சிரமத்தோடும் நடந்து வந்திருக் கிறோம்! இங்கேயும் பணம் அல்லவா வேலியாக நின்று

குறுக்கே தடுக்கிறது!' என்று மறுகியது. ஆனால் சிறிது நேரம் கழித்து ஆசார்ய சுவாமிகள் வெளியிலே திண்ணைக்கு எழுந்தருளிப் பூஜை செய்தார்கள். எங்கள் கண்குளிர அதைத் தரிசித்தோம். அன்று இரவு அங்கே தங்கி உறங்கியதில் கால்வலி போய்விட்டது. எங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் பணம் வாங்கிக் கொண்டு ரெயிலேறித் திரும்பினோம். இது நான் நெடுந்தூரம் நடந்த இரண்டாவது கதை.

சென்னைக்கு வந்த பிறகு கடற்கரைக்குப் போக வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் தமிழ்த் தெய்வத்தின் திருப்பணியில் ஈடுபட்ட எனக்கு மாலை வேளையில் நேரம் இருப்பதில்லை. வெளியூரில் இருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? 'சென்னையில் உள்ளவர்கள் எல்லாரும் ஒவ்வொரு நாளும் பீச்சுக்குப் போய்க் கடற்காற்று வாங்குவார்கள்!' என்று நினைக்கிறார்கள். இங்கேதான் ஒவ்வொருத்தருக்கும் தம் குடும்பச் சுமையைத் தாங்கும் பணியில் ஈடுபட்டு உழைப்பதற்கு இருபத்து நாலு மணிநேரம் போதுவதில்லையே!

திருவல்லிக்கேணியில் இருந்தபோது எப்போதாவது பீச்சுக்குப் போவதுண்டு. மந்தை வெளிக்குக் குடிவந்த பிறகு பீச்சாவது,காற்றாவது!

ஒரு சமயம் இரவு படுத்தால் தூக்கம் வராமல் இருந்தது. ஒருநாள் பார்த்தேன்; இரண்டு நாள் பார்த்தேன், தூக்கம் இல்லை. ஒருவாரம் ஆயிற்று; தூக்கம் வரவில்லை. இதை அறிந்த ஒருவர். "விடியற்காலையில் எழுந்து நடவுங்கள்; தூக்கம் சுகமாக வரும்!" என்றார். "ஆகட்டும்" என்றேன். ஆனால் நான் எழவும் இல்லை; நடக்கவும் இல்லை. அவர் தாமும் என்னுடன் வருவதாகச் சொன்னார். மிகவும் அக்கறையுடன் ஐந்து மணிக்கு வந்து என்னை எழுப்புவார்.

என்னிடம் ஒரு கெட்ட குணம். இராத்திரி எத்தனை நேரமானாலும் ஒரேயடியாக விழித்துக்கொண்டு எழுது வேன்; படிப்பேன். ஆனால் விடியற்காலம் எழுந்திருப்பது என்பது என்னால் முடியவே முடியாது.

அந்தப் பெரியவர்-அவர் என்னைவிட இருபது வயது பெரியவர்—என்னை எழுப்பித் தரதரவென்று இழுத்துச் செல்லாத குறையாக நடக்கச் செய்தார். அவருடன் நடந் தேன். நடையா அது? அவர் வேகமாக நடப்பார்; நான் அவ ருடன் ஓடுவேன். "கொஞ்சம் மெதுவாகப் போகலாமே!" என்றால் அவர் கேட்கமாட்டார். "வேகமாகக் கால் வலிக்க வலிக்க நடக்கவேண்டும். அப்போதுதான் உடம்புக்கு நல்லது; தூக்கம் வரும்!" என்பார். அவர் உபதேசத்தின் படியே வேகமாகக் காலை எட்டி வைத்து நடந்தேன். முதலில் கஷ்டமாகத்தான் இருந்தது. பிறகு பழக்கமாகி விட்டது. ஆனாலும் கால் வலித்தது, சிறிது தூரம் போக வேண்டுமானாலும் ரிக்ஷாக்காரனைக் கூப்பிடுகிற எனக்கு வேகமாக இரண்டு மைல் நடப்பதென்றால்? ஆனாலும் வலியைப் பொறுத்துக்கொண்டு நடந்தேன். ஏன் தெரியுமா? அந்தப் பெரியவர் சொன்னது உண்மை ஆயிற்று. இரவில் சுகமாகத் தூக்கம் வந்தது. அதனால் அவருடன் நடப்பதை நான் நிறுத்தவில்லை.

ஒரு மாதம் நடந்திருப்பேன். பழையபடி என்னுடைய சோம்பல் என்னிடம் வந்து சேர்ந்தது. 'விடியற்காலைத் தூக்கம் வெல்லம் போலே' என்று சும்மாவா சொன்னார்கள்? அதை விட மனம் வரவில்லை. வியாதி பேரனபிறகும் மருந்து சாப்பிடுவார் உண்டா? நானும் தூக்கம் வர ஆரம் பித்த பிறகு நடையை நிறுத்திக் கொண்டேன்.

நாலைந்து வருஷங்களுக்கு முன் இருக்கும். மறுபடியும் நடக்கும் பழக்கத்தைத் தொடங்கினேன். என் மகனுடைய

நண்பர் ஒருவர் நாள்தோறும் தம் காரில் பீச்சுக்குப் போய் ஓரிடத்தில் காரை நிறுத்திவிட்டு அங்கிருந்து ஒரு மைல், இரண்டுமைல் போய்விட்டு வந்து காரில் வீடு திரும்புவார். அவருடன் என் மகனும் போனான். ஒருநாள் என்னையும் அவர் அழைத்தார்; போனேன். சில நாள் தொடர்ந்து சென்றேன்.

அந்த இரண்டு பேரும் இளைஞர்கள். காரை நிறுத்தி விட்டு வேகமாக நெடுந்தூரம் போய்விடுவார்கள். நான் சுமாரான வேகத்துடன் போவேன். பல பேர் இப்படிக் காரில் வந்து நிறுத்திவிட்டு உலாத்துவதைக் கண்டேன்.

இதில் ஒரு விசேஷம். பீச்சில் காலையில் நடக்கும்போது சில பெரிய மனிதர்களைச் சந்தித்தேன். ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகள் வந்தார்கள். அரசியல் தலைவர்கள் வந்தார்கள். அவர்களைச் சந்தித்தபோது, "நீங்களும் வாக்கிங் வருகிறீர்களா?" என்று விசாரிப்பார்கள். அந்தத் தோழமை விசாரிப்பில் எனக்கு ஏதோ புதிய பெருமை வந்துவிட்டது போல் தோன்றும். ஒரு நாள் போகாவிட்டால், "ஏன் நேற்று வரவில்லை?" என்று விசாரிப்பார்கள். ஹைக் கோர்ட்டு ஜட்ஜு ஒருவர் இப்படி அக்கறையோடு நம்மை விசாரிக்கும்போது அவருடைய அன்பான சந்திப்பைப் பெறுவதற்காவது நடக்க வேண்டாமா என்று தோன்றும்.

ஆம்! காலையில் பெரிய மனிதர்களின் முகத்தில் விழிப்பதே மனத்துக்கு ஊக்கம் தரும் செயல் அல்லவா? பெரிய பணக்காரர்கள், உடம்பின் கனத்தைச் சுமக்க மாட்டாத சேட்டுகள், இளம் பிள்ளைகள், இப்படி யார் யாரோ வந்தார்கள். எழுபது வயசானவர்கள் வந்தார்கள். "இந்த நடையினால்தான் இந்த வயசிலும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்!" என்று எண்ணிக் கொள்வேன். அப்போது திரு. வி. க. சொன்னது நினைவுக்கு வரும்.

இப்படிச் சில வாரங்கள் நடந்தேன். காலையில் பல பெரிய மனிதர்கள் முகத்தில் விழித்து, அவர்களுடைய புன்னகையையும் க்ஷேம விசாரணையையும் பெற்றேன். மழைக்காலம் வந்தது. அப்போது பீச்சுக்குப் போக முடிய வில்லை. அந்தக் குளிரில் படுக்கையிலிருந்து எழுவது என்பது சாமான்யமான காரியமா? இந்தச் சுகத்தை விடப் பீச்சில் என்ன சுகம் இருக்கிறது?

மழைக்காலம் எவ்வளவு நாள் இருக்கும்? மழை நின்றது. என் மகனுடைய நண்பர் உலாவப் புறப் பட்டார். நான் மட்டும் வேலை இருக்கிறதென்று சொல்லிப் போவதை நிறுத்தி விட்டேன்.

காரணம் என்ன என்று கேட்கிறீர்கள்? அதைச் சொல்லத் தெரியவில்லை. நமக்குள்ளே ஏதோ ஒன்று இருந்து நம்மைப் பிடித்து இழுத்து இதைச் செய்யாதே என் கிறது. அப்போது அறிவு எத்தனை சொன்னாலும், அநுபவம் எத்தனை இருந்தாலும், அதன் ஆணைக்குக் கட்டுப்பட்டுத் தான் இருக்க வேண்டியிருக்கிறது. அதுதான் மனிதனுக்கு என்று அமைந்திருக்கும் சிறப்பான இயல்பு போலும்!

# கழுத்தில் விழுந்த மாலை

கல்கத்தாவில் பல ஆண்டுகளாகப் பாரதி தமிழ்ச் சங்கம் என்ற சங்கம் சிறப்பாக நடந்து வருகிறது. அங்கே நான் பல முறைகள் சென்று பேசியிருக்கிறேன். ஒரு முறை அங்கே நடந்த விழா ஒன்றில் முக்கிய விருந்தினராகப் போயிருந்தேன். வரவேற்பு ஆனவுடன் ஒரு பெரிய ரோஜா மாலையை எனக்கும் என்னுடன் இருந்த வேறு ஓர் அன்பருக்கும் போட்டார்கள். நான் வழக்கம் போல எனக்குப் போட்ட மாலையைக் கழற்றி வைக்கப் போனேன். அப்போது சங்கத் தலைவர், "ஐயா, அந்த மாலையை அப்படியே சிறிது நேரமாவது போட்டுக் கொண்டிருங்கள்" என்றார். "ஏன்?" என்று கேட்டேன். "இங்கெல்லாம் இதுபோன்ற மாலைகள் கிடைப்பதில்லை. இந்த மாலைகளைத் தனியே சென்னையிலிருந்து வருவித்தோம். விமானத்தில் வந்தன. இவ்வளவு கஷ்டப்பட்டு வருவித்த மாலைகளைக் கொஞ்ச நேரமாவது நீங்கள் அணிந்து பார்க்க வேண்டும் என்பது எங்கள் ஆசை. தயை செய்ய வேண்டும்" என்றார். அவருடைய ஆசையைக் கெடுப்பானேன் என்று ~~அரைமணி நேரம் அந்த மாலையைக் கழற்றாமல் இருந்~~தேன்.

கோவலன் நாடகத்தில் ஒரு காட்சி. கோவலன் கழுத்தில் மாதவி வீசி எறிந்த மாலையை அவனால் கழற்ற முடியவில்லை. அப்போது, "கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியவில்லை, காரிகையே இது யார் சூதோ?"

என்று அவன் பாடுவான். அவனைப்போலவே என் கழுத்தில் விழுந்த மாலையை என்னாலும் கழற்ற முடிய வில்லை. ஆனால் இங்கே சூது வாது ஏதும் இல்லை. அன்புக்குக் கட்டுப்பட்டுக் கழற்றாமல் இருந்தேன்.

தமிழ்நாட்டில் கட்டும் மாலைகளின் அழகே தனிதான். எத்தனை வகையான மாலைகள்! கோவில் விழாக்களில் சுவாமிக்கு அலங்காரம் செய்கிறார்களே; அந்தக் கைவன்மை வேறு எந்த நாட்டுக் கலைஞர்களிடம் இருக்கிறது? வடக்கே போனால் நூலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ மணமில்லாத பூவைச் செருகி மாலையென்று போடுகிறார்கள். தமிழ்நாட்டு மாலை எங்கே, அந்த மாலை எங்கே? இந்த அருமைப்பாட்டை நன்குணர்ந்த பாரதி சங்கத் தலைவர் ஆசைப்பட்டது நியாயமானது தான்.

ஆனால் தமிழ்நாட்டில் சபைகளில் பேசும்போது மாலை போட்டால் உடனே கழற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு கீழே வைத்து விடுவது என் வழக்கம். பல பேர் அப்படித் தான் செய்கிறார்கள். ரெயில்வே ஸ்டேஷனில் மாலைகளைக் கழற்றாமல் போட்டுக்கொள்ளும் சில அன்பர்களைப் பார்க்கலாம். வடநாட்டுக்காரர்கள் இங்கே வந்து திரும்புகையில் ஸ்டேஷனில் அவர்களுக்கு மாலை போட்டு அனுப்புவார்கள். அந்த மாலையை அவர்கள் கழற்றாமல் போட்டுக்கொண்டே இருப்பார்கள்.

பழங்காலத்தில் ஆடவரும் மகளிரும் எப்போதுமே மாலைகளை அணிந்து கொண்டிருப்பார்கள் என்று தோன்றுகிறது. இலக்கியங்களில் வருகிற வருணனைகளைப் பார்த்தால் இப்படி எண்ணத் தோன்றுகிறது. அப்போதெல்லாம் ஆடவர்கள் சட்டை அணிவதில்லை. மார்பிலே மாலை அலங்காரமாக இருக்கும். இப்போது நாம் சட்டைகளை

அணிகிறோம். அவற்றிற்கு மேல் மாலையைக் கழற்றாமல் போட்டுக் கொண்டே இருந்தால் நன்றாக இருப்பதில்லை.

மற்றொரு சங்கடம், ரோஜாப்பூ மாலைகளில் சிவப்பு நூலைச் சுற்றியிருப்பார்கள். ஈரமான பூ ஆதலால் அந்த நூல் நனைந்திருக்கும். அந்த மாலையை அணிந்துகொண்டு ஐந்து நிமிஷம் அப்படியே இருந்தால் போதும்; சிவப்பு நூலின் சாயம் வரிவரியாய்ச் சட்டையில் படிந்துவிடும். இப்படி என் கதர்ச் சட்டையில் மாலை அணிந்த சுவடுகளை ஏற்றுப் பரிதவித்த சமயங்கள் பல.

மாலையைப் போட்டவுடன் கழற்றுவதைப் பற்றி ஒரு கூட்டத்தில் ஒரு வாக்குவாதமே நடந்தது. அமரர் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் ஒரு கூட்டத்தில் தலைமை தாங்கினார். நானும் வேறு இரண்டு புலவர்களும் அந்தக் கூட்டத்தில் பேசினோம். தலைவருக்கு மாலை போட்டவுடன் அதை அவர் கழற்றிவைத்து விட்டார். முதலில் பேசிய புலவரோ போட்ட மாலையைக் கழற்றவில்லை; போட்டுக்கொண்டே பேசினார். அதோடு நிற்கவில்லை; "நம்மிடம் மதிப்பு வைத்துத் தம்முடைய அன்புக்கு அறிகுறியாகச் சபையை நடத்துவோர் மாலையைப் போடுகிறார்கள். அதைக் கழுத்தில் போட்டுக்கொண்டிருப்பதுதான் மரியாதை, முகத்தில் அடிப்பதுபோல உடனே கழற்றி வைத்துவிட்டால் அந்த அன்பை உணர்ந்ததாகாது" என்று நாம் மாலையைக் கழற்றாமல் போட்டுக் கொண்டிருப்பதற்குரிய காரணம் ஒன்றைச் சொன்னார்.

அவருக்கு அடுத்தபடி பேசின புலவர் மாலை போட்டவுடன் கழற்றி வைத்தார்: "நமக்கு மிகவும் அன்பாக மாலை போடுகிறார்கள். அதைப் போட்டுக்கொண்டே இருந்தால் இதழ்கள் உதிர்ந்துவிடும். மாலை கசங்கிப் போகும். மரியாதையைக் காட்ட அவர்கள் போட்டால்

நாம் வணங்கி ஏற்றுக்கொள்கிறோம். நானே அணிய வேண்டும் என்ற சுயநலம் எனக்கு இல்லை. என் வீட்டில் உள்ள பெண்களும் குழந்தைகளும் அணிந்துகொண்டால் அழகாயிருக்கும். ஆகையால் கசங்காமல் கழற்றி வைத்தேன். அன்பர்கள் போட்ட மாலையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வதுதான், அவர்கள் அன்பைப் பாராட்டுவதற்குச் சிறந்த அடையாளம் என்று நான் கருதுகிறேன்'' என்று தம் கருத்தைச் சொன்னார்.

இறுதியில் திருப்புகழ் மணியவர்கள் பேசினார். ''புலவர் அவர்கள் மாலையைக் கழற்றாமல் போட்டுக்கொள்வதுதான் மரியாதை என்று சொன்னார். கழற்றினவர்கள் எல்லோரும் போட்டவர்களை அவமதித்து விட்டார்கள் என்று தொனிக்கும்படி பேசினார். அன்பினால் ஒருவர் மற்றொருவரைப் புகழ்வதும் மரியாதை செய்வதும் வழக்கம். அப்படிப் புகழும்போதோ, உபசாரம் செய்யும் போதோ சிறிதும் அடக்கம் இல்லாமல் அந்தப் புகழ் முழுவதற்கும் நாம் உரியவர்கள் என்று காட்டிக்கொள்ளலாமோ! 'நீங்கள் அதிகமாகப் புகழ்கிறீர்கள்; எனக்கு அவ்வளவு தகுதி இல்லை' என்று சொன்னால் அவர்களை அவமதித்ததாக ஆகுமா? அது நம் அடக்கத்தைத் தானே காட்டும்? அதுபோல, அவர்கள் தம் அன்பைக் காட்ட அழகான மாலை போடுகிறார்கள். 'எனக்கு இது ஏற்றதுதான்' என்று போட்டுக்கொண்டே இருந்தால் அகங்கார உணர்ச்சியென்று தோன்றும். கழற்றி வைத்தால், 'இதைப் போட்டுக்கொள்ள எனக்குத் தகுதி இல்லை' என்ற அடக்க உணர்ச்சியைக் காட்டுவதாக இருக்கும்'' என்றார்.

சில சமயங்களில் துணிச்சலாக ரோஜாப்பூ மாலையைப் போட்டுக்கொண்டே இருந்தால் வீட்டுக்குப் போகும்போது வெறும் நாருடன்தான் போவோம். சென்னையில் அந்த நாருக்குத்தான் கிராக்கி. பெண்பிள்ளைகள் நாரைப் பத்திர

மாகப் பாதுகாத்து வைத்திருப்பார்கள். நாரின் பெருமையை நானும் அறிவேன். வெளியூரில் யாரேனும் நண்பர்கள் என்னுடன் பேசிப் பழகிய பிறகு என் பழக்கத்தால் தாங்கள் பயன்பெற்றதாகச் சொல்வார்கள். அப்போது, "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றது போல உங்களுடன் பழகி எங்களுக்கும் மதிப்பு உண்டாயிற்று" என்பார்கள். நான் உடனே, "நீங்கள் நார் என்பது உண்மை பூ உதிர்ந்துவிடும். நார்தான் நிற்கும். நான் ஊருக்குப் புறப்பட்டுப் போகிறவன். நீங்கள் நிலையாக இங்கே இருப்பவர்கள்" என்பேன்.

ரோஜாப்பூ மாலைக்குப் பதிலாக மல்லிகை மாலை, செவ்வந்திமாலை வாங்கிப் போட்டால் பூ உதிர்வதில்லை. ஆனால் அப்போதும் ஆபத்து இருக்கிறது. எங்கள் ஆசிரியப் பெருமான் சொன்ன நிகழ்ச்சி ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

சைவ மடாலயங்களில் விழாக்காலங்களில் ஆதீனத் தலைவர்கள் கொலு இருப்பது வழக்கம். ஞானசிரியராகிய தலைவர் மலரால் அலங்கரித்த மண்டபத்தில் எழுந்தருளியிருப்பார். அவருக்கு மாலைகள் அணிந்து சுற்றிச் சூழப் பூச்சரங்களாலும் பூப்பட்டைகளாலும் அலங்கரித்துப் பூசை செய்வார்கள். உற்சவமூர்த்திக்கு அலங்காரம் பண்ணுவதுபோலச் செய்வார்கள். குருமகா சந்நிதானம் கண்ணை மூடிக்கொண்டு ஆடாமல் அசையாமல் வீற்றிருப்பது வழக்கம்.

பழங்காலத்தில் திருவாவடுதுறையில் ஒரு சமயம் கொலு நடைபெற்றது. அப்போது இருந்த ஞானசிரியரைக் கொலுவில் அமர்த்தி வழிபட்டார்கள். செவ்வந்திப் பூவும் மல்லிகைப்பூவும் கொண்டு சுற்றிச் சூழ அலங்கரித்திருந்தார்கள். கொலு மூன்று மணிக்குமேல் நடந்தது.

கொலு முடிந்தவுடன் மெல்லச் சுற்றியுள்ள அலங்காரங்களைக் கலைக்கச் செய்து மகா சந்நிதானம் அவர்கள் கீழே இறங்கி வந்தார் சற்றே சினத்தோடு, "என் உடம்பெல்லாம் பாருங்கள்" என்றார் சிறிய சிறிய தடிப்புகள் இருந்தன. "இத்தனை நேரமும் செவ்வெறும்புகள் கடிப்பதைப் பொறுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். பூவைக் கவனித்துப் பார்த்து அலங்காரம் பண்ணக்கூடாது?" என்று கேட்டாராம். மல்லிகைப்பூப் பட்டைகளைச் சாத்துவதற்குமுன் கீழே வைத்திருக்கிறார்கள். அவற்றில் செவ்வெறும்புகள் புகுந்துகொண்டன. அப்படியே கொலுவில் வைத்துவிட்டார்கள்! பாவம்! ஞானசிரியர் அத்தனை நேரம் எறும்புக்கடியைச் சகித்துக் கொண்டிருந்திருக்கிறார்! அவருடைய உயர்ந்த பக்குவத்தை அது காட்டியது. தேகம் வேறே, நாம் வேறே என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் அத்தனை நேரம் சகித்துக்கொண்டிருக்க முடியுமா?

மாலைக்குப் பதிலாக ஆடைகளைப் போடும் வழக்கம் இப்போது வந்திருக்கிறது. நல்லதுதான். மாலை சிறிது நேரத்தில் வாடிவிடும். ஆடை பிறகும் பயன்படும். இருந்தாலும் மாலை போடுவதைத்தான் மரியாதையாக நினைக்கிறார்கள். மாலை மரியாதை என்றே சொல்கிறது வழக்கம் அல்லவா?

ஒரு சமயம் மாலையும் ஆடையும் எதிர்பாராத வகையில் எனக்குக் கிடைத்தன. அது மிகவும் சுவையான நிகழ்ச்சி.

மயிலாப்பூரில் தெற்கு மாடவீதியில் வெள்ளீசுவரர் கோயில் என்ற ஆலயம் இருக்கிறது. அங்கே ஒரு சமயம் ஒட்டக்கூத்தர் திருநாளைக் கொண்டாடினார்கள். அப்போது இந்து சமய அறநிலைய ஆணையராக இருந்த திருநரசிம்மன் அவர்கள் தலைமை தாங்கினார். நானும் வேறு சிலரும் பேசினோம்.

கூட்டம் தொடங்குவதற்குமுன் தலைவருக்கும் பேச்சாளர்களுக்கும் சுவாமி தரிசனம் செய்து வைத்தார்கள், கோயில் அறங்காவலர்கள். தலைவருக்குப் பிரசாதமாக மாலையையும் ஒரு பட்டையும் போட ஏற்பாடு செய்திருந்தார்கள். எல்லோரும் சுவாமி சந்நிதியில் நின்று தரிசனம் செய்தோம். பிரசாதம் வழங்கும்போது ஒரு தட்டில் பிரசாதம், மாலை, பட்டு எல்லாம் எடுத்துக்கொண்டு திரு நரசிம்மனுக்கு முன்வந்தார்கள். அவர் சட்டென்று அந்தப் பட்டை எடுத்து அருகில் நின்றுகொண்டிருந்த எனக்குப் போட்டுவிட்டு மாலையையும் எடுத்துப் போட்டார். அறங்காவலர்களுக்கு எப்படி இருக்கும்? எனக்கு மிகவும் தர்மசங்கடமாக இருந்தது, போட்டதை எடுத்து மறுபடியும் அவருக்குப் போடுவது நாகரிகமாகத் தோன்றவில்லை.

சுவாமி தரிசனம் ஆனபிறகு கூட்டம் தொடங்கியது. தலைவர் உரை முடிந்ததும் நான் பேசத் தொடங்கினேன்.

"இப்போது நாம் ஒட்டக்கூத்தர் திருநாளைக் கொண்டாடுகிறோம். சிறிது நேரத்துக்குமுன் இறைவன் சந்நிதியில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அது ஒட்டக்கூத்தர் காலத்து நிகழ்ச்சி ஒன்றை நினைக்கச்செய்தது. ஒட்டக்கூத்தர் மூன்று சோழர்கள் காலத்தில் வாழ்ந்தவர். அவர்களில் இடைப்பட்டவனாகிய இரண்டாம் குலோத்துங்கனுக்கு அவர் ஆசிரியராகவும் இருந்தார்; அவைக்களப் புலவராகவும் விளங்கினார், ஒருநாள் அரசவையில் பல புலவரும் பிறரும் கூடியிருந்தார்கள். குலோத்துங்கன் சிங்காதனத்தில் வீற்றிருந்தான். ஒட்டக்கூத்தர் அவன் புகழைப் பாடத் தொடங்கினார். 'தன் அரண்மனை வாயிலில் தொங்கும் ஆராய்ச்சிமணியின் நா என்றும் அசையாதபடி (யாருக்கும் குறையில்லா

மல் செய்து) இவ்வுலகமெல்லாம் பரந்த குடையைத் தரித்த பிரான்'' என்ற பொருள் அமையப் பாதிப் பாட்டைச் சொன்னார்.

**" ஆடும் கடைமணி நாஅசை**
**யாமல் அகிலம்எல்லாம்**
**நீடும் குடையைத் தரித்தபிரான்...''**

தொடர்ந்து பாட்டை அவர் சொல்வதற்குள், குலோத்துங்க சோழன் தானே அந்தப் பாட்டின் பிற்பாதியைச் சொல்லி விட்டான். 'தினந்தோறும் புதிய கவிதையைப் பாடும் கவிப் பெருமானாகிய ஒட்டக்கூத்தனுடைய பாத தாமரைகளைத் தலையில் அணியும் குலோத்துங்க சோழனென்று என்னை உலகினர் சொல்வார்கள்' என்ற பொருளை அமைத்து,

**"என்றும் நித்தம்நவம்**
**பாடும் கவிப்பெரு மான்ஒட்டக்**
**கூத்தன் பதாம்புயத்தைச்**
**சூடும் குலோத்துங்க சோழன்என்**
**றேஎனைச் சொல்லுவரே''**

என்று சொல்லி முடித்தான். அவையினர் குலோத்துங்க சோழனுடைய குரு பக்தியை மெச்சினார்கள்.

"குலோத்துங்கன் தனக்கு வந்த புகழ்மாலையை ஏற்றுக் கொள்ளாமல் மாற்றி ஒட்டக்கூத்தருக்கே அதை அணிந்து விட்டான். இங்கே ஆண்டவன் சந்நிதியில் தமக்குப் போட இருந்த பட்டையும் மாலையையும் தலைவர்கள் எனக்குப் போட்டுவிட்டார்கள். அந்த நிகழ்ச்சியும் இந்த நிகழ்ச்சியும்ஒரு வகையில் ஒப்புமை உடையனவாகத் தோன்றுகின்றனவல்லவா? அங்கே பாட்டு; இங்கே பட்டு."

அவையினர் இதைக் கேட்டுக் கைதட்டி ஆரவாரித்தார்கள். நானும் ஒருவிதமாக அந்தச் செயலுக்கு விளம்பர

மும் நன்றியுணர்வும் விளங்கும்படி செய்துவிட்ட மகிழ்ச்சியை அடைந்தேன்.

வேறு ஒரு கூட்டத்தில் பெரிய மாலை ஒன்றைப் போட்டார்கள். கூட்டம் முடிந்து வரும்போது அந்த மாலையைக் கையில் எடுத்துக் கொண்டேன். அருகில் நின்ற என் அன்பர் சட்டென்று கை நீட்டி அதை வாங்கிக் கொண்டார். "நான் பூபாரம் தாங்க மாட்டேனென்று வாங்கிக் கொள்கிறீர்களா?" என்று சொல்லிப் புன்முறுவல் பூத்தேன்.

என்னுடைய மணி விழாவில் இலங்கையிலிருந்து வந்த இராசேந்திர குருக்கள் என்ற அன்பர் மிகப் பெரிய மாலைகளாக வாங்கி எனக்கும் என் மனைவிக்கும் அணிவித்தார். அவருக்கு அப்படி ஓர் ஆசை. எத்தனை பெரிய மாலையாக இருந்தால் என்ன? இரண்டு நாளுக்குமேல் இருக்குமா?

அந்த அன்பர் மற்றொரு காரியமும் செய்தார். எங்களுக்கு மாலைகளை அணிவித்தவுடன் அந்தக் கோலத்தில் ஒரு போட்டோவை எடுக்கச் செய்தார். அதில் ஒரு பிரதி எனக்குக் கொடுத்து என் வீட்டில் மாட்டும்படி என் பிள்ளைகளிடம் சொன்னார். அவர் ஒரு பிரதியைக் கொண்டு சென்று யாழ்ப்பாணத்தில் நீர்வேலியில் உள்ள தம் இல்லத்தில் மாட்டி வைத்திருக்கிறார்.

அவர் போட்ட மாலை இரண்டு நாளுக்கு மேல் இல்லை. ஆனால் அந்த மாலையின் வடிவம் இன்னும் போட்டோவில் அவர் அன்பைக் காட்டிக் கொண்டு விளங்குகிறது.

# காது குத்தாதே!

"எனக்குக் காது குத்தாதே; எனக்கு எல்லாம் தெரியும்" என்று அன்பர்கள் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஒருவரை நம்முடைய கருத்துக்கு இணங்கச் செய்வதற்காக நாம் காரணங்களை எடுத்துச் சொல்லும்போது, நாம் சப்பை கட்டுவதாக எண்ணி அப்படிச் சொல்வது வழக்கம். காது குத்துவதற்கும் நம்முடைய கருத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்கும் என்ன சம்பந்தம்?

இன்னும் சில சமயங்களில், "ஏன் அப்பா, எனக்குக் குல்லாப் போடுகிறாய்?" என்று நாம் கேட்பதுண்டு. அப்போதுகூட நம்மைத் தம்வழிப் படுத்துவதற்காக யாரேனும் ஒருவர் நம்மைப் புகழ்ந்தால் அப்படிச் சொல்கிறோம். குல்லாப் போடுவதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

மேலே சொன்ன காது குத்துவதும், இந்தக் குல்லாப் போடுவதும் வெவ்வேறு செயல்களைச் சொல்லளவில் குறித்தாலும், இரண்டும் கிட்டத்தட்டத் தம்முடைய கருத்துக்கு இணங்கும்படி செய்வதையே புலப்படுத்துகின்றன. இரண்டுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

இந்த இரண்டும் மதமாற்றம் செய்பவர்களின் செயல்களிலிருந்து எழுந்த வார்த்தைகள். இந்துக்களாக இருந்தவர்களை முகம்மதியர்களாக மாற்றும்போது அவர்களுக்கு

முஸ்லிம் உடை அணிவித்தார்கள்; குல்லாப் போட்டார் கள்; இந்துவைத் தம்முடைய மதத்துக்கு மாற்றினார்கள். இந்த மாற்றத்தையே குல்லாப் போடுதல் குறிக்கிறது. அவ்வாறே முஸ்லிமாக இருந்த ஒருவரை இந்துவாக்கி அவர் காதில் துளையிட்டுக் கடுக்கன் போட்டார்கள். முஸ் லிம்களில் ஆடவர்கள் காது குத்திக் கொள்வதில்லை. ஆகவே அவர்களை இந்துக்கள் ஆக்கும்பொழுது மதம் மாறி யதற்கு அடையாளமாகக் காது குத்தினார்கள். மத மாற்றத் துக்கு அறிகுறிகளான குல்லாப் போடுவதும் காது குத்துவ தும் மனத்தை மாற்றச் செய்யும் முயற்சியைக் குறிப்பவை யாகப் பிற்காலத்தில் வந்துவிட்டன.

பூச்சாண்டி என்ற சொல்லை நாம் அடிக்கடி குழந்தை களிடம் சொல்லிப் பயமுறுத்துகிறோம். அதுகூட மதமாற்ற முயற்சியிலிருந்து வந்த வார்த்தைதான். பூச்சு என்றால் திருநீறு பூசுவதைக் குறிக்கும்; திருநீறு பூசுபவர் ஆண்டி; அவரே பூச்சாண்டி. சைவர்கள் பலம் பெற்றிருந்த காலத் தில் சைனர்களையும் வைணவர்களையும் மதம் மாற்றித் திருநீறு பூசச் செய்தார்கள். அப்படிச் செய்த சைவர்களை மற்றவர்கள் பூச்சாண்டி என்று சொன்னார்கள். இப்போது சைவர்களே தம் குழந்தைகளுக்குப் பூச்சாண்டி காட்டு கிறார்கள்! எப்படி அந்தச் சொல் வந்ததென்று யோசித்தால் அதைச் சொல்வார்களா?

வைஷ்ணவர்கள் மற்றவர்களை மதமாற்றம் செய்த போது அவர்களுக்கு நாமம் போட்டார்கள். அதையே இப்போது, "என்ன, அவனுக்கு நாமம் போடுகிறாயா?" என்று மனம் மாற்றி ஏமாற்றும் செயலைக் குறிக்கச் சொல்லுகிறோம்.

இவையெல்லாம் அந்தக் காலத்தில் மதம் மாற்றிய முயற்சிகளைக் குறிப்பவை. அந்த முயற்சிகள் மாறி அந்த

அடையாளங்கள் மாறினாலும் அவற்றினூடே உள்ள பொதுக் கருத்தாகிய மனம் மாற்றுதலைக் குறிக்க அந்த வார்த்தைகளெல்லாம் இப்போதும் வழங்கி வருகின்றன.

சமயபேத உணர்வால் மிகவும் வேடிக்கையான சம்பவங்கள் நிகழ்வதுண்டு, ஒரு சைவரிடம் ஓர் இளைஞன் போனான். சைவர், "உன் பேர் என்ன அப்பா?" என்று கேட்டார். அந்த இளைஞன், "சிவராமலிங்கன்" என்றான். கேட்ட சைவர் மிகவும் குதூகலத்துடன் கையைக்கொட்டி, "அப்படித்தான் நசுக்க வேண்டும்; அப்படித்தான் நெருக்க வேண்டும்!" என்றாராம். இளைஞன் ஒன்றும் தெரியாமல் விழித்தான். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான். "இந்தப் பக்கம் சிவன்; அந்தப் பக்கம் லிங்கன்; இரண்டு பேருக்கும் நடுவில் ராமன் அகப்பட்டு நசுங்குகிறான்; அதுதான் சரி" என்று சைவர் விளக்கினாராம்; பாவம்! அந்த இளைஞனுடைய தந்தையார் சைவ வைஷ்ணவ சமரச எண்ணத்தோடு சிவராமலிங்கன் என்று தம் மகனுக்குப் பெயர் வைத்திருக்க, அந்தச் சைவர் ராமனை நசுக்க அப்படி வைத்ததாகக் குதூகலித்தாராம்.

மத பேத உணர்ச்சியில் சைவரோ, வைஷ்ணவரோ, சைனரோ, பௌத்தரோ, கிறிஸ்தவரோ யாரும் விலக்கு அல்ல.

ஒரு வைஷ்ணவர் ஸ்ரீரங்கத்தில் இருந்தார். அவருக்குச் சிறுநீர் கழிக்கும் உணர்ச்சி வந்தால் அங்கிருந்து திருவானைக்காவலுக்கு ஓடி வந்து அவ்வூர்க் கோயிலின் திருமதில் சுவருக்குக் கீழே இருப்பாராம். ஒரு நாள் அப்படிச் சிறுநீர் கழித்தபோது மதில் மேல் ஒரு காக்கை தத்தித் தத்தி நடந்து கொண்டிருந்ததாம். அப்போது பெயர்ந்திருந்த கல்லொன்றைக் காலால் இடறவே, அது கீழே இருந்த வைஷ்ணவர் தலையில் விழுந்து காயம் உண்டாக்கியது;

தலையிலிருந்து ரத்தம் வழிந்தது. அதைக் கண்ட வைஷ்ணவர் கோபம் அடையவில்லை. "சபாஷ், காக்காய்! நீ சீரங்கத்துக் காக்கையாகத்தான் இருக்கவேணும். நீ இப்படியே இந்த மதிற் சுவரை மேலே இடி; நான் கீழே இடிக்கிறேன்" என்றாராம்!

இப்படி நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது. சமயபேத உணர்வு எவ்வளவு பைத்தியக்காரத்தனமான விளைவை உண்டாக்கும் என்பதைப் புலப்படுத்த இப்படி எவ்வளவோ கதைகள் வழங்குகின்றன. "அரிசிவாரு என்று வைஷ்ணவர்கள் சொல்லமாட்டார்கள். இடையே சிவா என்ற சொல் வருகிறதல்லவா? அமுதுபடி எடு என்று தான் சொல்வார்கள்" என்று சும்மா கற்பனையாகச் சொல்வதுண்டு.

திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கர் வித்துவான் தியாகராச செட்டியார். அவர் பச்சைச் சைவர். பிள்ளையவர்கள் புராணங்களில் விஷ்ணுவையும் வைஷ்ணவர்களையும் தாழ்வாகச் சொல்லும் இடங்கள் உண்டு. அவற்றைப் பார்த்துச் செட்டியார் மகிழ்ச்சி அடைய மாட்டாராம். "இவ்வளவு சாமானியமாகவா சொல்கிறது? கடுமையாகச் சொல்ல வேண்டாம்?" என்பாராம். என்னுடைய ஆசிரியப் பிரான் இந்தச் செய்தியைச் சொன்னார்கள்.

ஒரு முறை தியாகராச செட்டியார் ஒரு வைஷ்ணவ அன்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த ஒரு குழந்தை அழுக்குப் பண்ணிவிட்டது. அந்த வைஷ்ணவர் சும்மா இராமல், "உங்கள் பெருமான் பூசும் திருநீற்றைக் கொண்டு வந்து அதன் மேலே போடச் சொல்லுங்கள்" என்றார். அவர் சாம்பலையே இடக்காகத் திருநீறு என்று குறித்தார். செட்டியார் சும்மா விடுவாரா?

"அது வேண்டாம். உங்கள் பெருமாளையே மறுபடி வராகாவதாரம் எடுத்துவரச் சொல்லுங்கள்" என்றாராம்.

சில சைவர்கள் தம் குழந்தைகளுக்குத் திருமாலின் பெயரை இடுவதில்லை. ஒருகால் அவர் வைத்தாலும் தீவிர வைணவர்கள் சைவப் பெயரை வைப்பதில்லை. என்னுடைய ஆசிரியப் பெருமானாகிய ஐயரவர்களுக்குரிய பிள்ளைத் திருநாமம் வேங்கடராமன். வீட்டுப் பெரியவர் களுடைய பேராதலின் அதைச் சொல்லக் கூடாதென்று சாமா என்று வீட்டில் உள்ளவர்கள் அழைப்பார்கள்.

ஐயரவர்கள் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களிடம் மாணாக்கராகச் சேர்ந்தபோது அவர்களுடைய பெயர் வேங்கடராமன் என்பதை அறிந்து, "வேறு பெயரால் உம்மை அழைப்பதுண்டோ?" என்று கேட்டாராம். "சாமா என்று வீட்டில் அழைப்பார்கள்" என்றார் மாணாக்கர். "அந்தப் பெயர் எதைக் குறிக்கிறது?" என்று ஆசிரியர் கேட்டார். "சாமிநாதன் என்ற பெயரையே அப்படிக் குறுக்கி வழங்குவார்கள்" என்று மாணாக்கர் சொன்னார். "அப்படியானால் உமக்குச் சாமிநாதன் என்ற பெயரே இருக்கட்டும். அப்படியே நான் அழைக்கிறேன்" என்றார். அது முதல் ஐயரவர்களுக்கு வேங்கடராமன் என்ற பெயர் மறைந்து சாமிநாதன் என்ற பெயரே நிலை பெறுவதாயிற்று. ஐயரவர்கள் இளம் பருவத்தில் படித்த புத்தகத்தில் 'வேங்கடராமன்' என்ற பெயரை எழுதியிருப் பதை நான் பார்த்திருக்கிறேன்.

இதைச் சொல்லும் பொழுது ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. ஒரு முறை ஐயரவர்கள் இராமேசு வரத்துக்குச் சென்றிருந்தார்கள். நானும் உடன் போயிருந்

தேன். இராமேசுவரத்தில் இராமநாத சுவாமியைத் தரிசித்துக் கொண்டோம். பிறகு தனுஷ்கோடி சென்று நீராடி விட்டு வரலாமென்று புறப்பட்டோம். அப்போதெல்லாம் இராமேசுவரத்தில் மிகுதியான உணவுச்சாலைகள் இல்லை. தனுஷ்கோடியில் நீராடிவிட்டு வந்து இராமேசுவரத்தில் உணவு கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு ஓர் உணவுச் சாலையில் எங்கள் இருவருக்குமுரிய சாப்பாட்டை எடுத்து வைக்கச் சொல்லி, அதற்குரிய பணத்தையும் கொடுத்து விட்டுப் புறப்பட்டோம்.

தனுஷ்கோடியில் நீராடி இராமர் சந்நிதி சென்று தரிசனம் செய்தோம். அங்கே ஓர் அன்ன சத்திரம் இருந்தது. ஐயரவர்கள் அதைக் கண்டவுடன் அதற்குள் நுழைந்தார்கள். அங்கே உண்ணலாம் என்ற எண்ணம். வருகிறவர்கள் பெயர்களை ஒருவர் எழுதிக் கொண்டார். ஐயரவர்கள் தம் பெயரை, 'வேங்கடராமன்' என்று சொன்னார்கள். அங்கே தூய்மையான எளிய உணவை உண்டோம்.

உண்டுவிட்டு வெளியில் வந்த பிறகு, "இராமேசுவரத்தில் ஹோட்டலுக்கு முன்பணம் கொடுத்திருக்கிறோமே!" என்று ஐயரவர்களிடம் சொன்னேன். "பணம் போனால் போகட்டும், அங்கே எத்தனையோ அசுத்தமான நிலையில் சாப்பிட வேண்டியிருக்கும். இங்கே எந்தப் புண்ணிய வானோ இந்தச் சத்திரத்தை வைத்திருக்கிறார். இங்கே கிடைக்கும் தூய்மையான உணவைச் சாப்பிட்டதனால் நமக்குத்தான் புண்ணியம்" என்றார்கள். அந்த 'வேங்கடராமன்' உண்டதால் சத்திரம் வைத்தவர்களுக்குக் கிடைத்த புண்ணியத்துக்கு அளவே இராது என்று நான் எண்ணிக் கொண்டேன்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சவேரிநாத பிள்ளை என்ற கிறிஸ்தவர் படித்து வந்தார். அவருடைய பெயரைச் சிவகுருநாதபிள்ளை என்று மாற்றித் திருநீறும் அணியச் செய்தார். ஆனால் ஒன்று சொல்லவேண்டும். வேங்கடராமனைச் சாமிநாதன் ஆக்கியதும், சவேரிநாதனைச் சிவகுருநாதனாக்கியதும் வலிந்து செய்த காரியங்கள் அல்ல. இருசாராரும் உடன்பட்டுச் செய்த செயல்களே. அதனால் தான் இன்றளவும் தமிழ் தந்த வள்ளலுக்குச் சாமிநாதன் என்ற பெயரே நிலைத்துவிட்டது.

இந்த நிலைக்கு மாறாகச் சமரச மனோபாவத்தைக் காட்டும் செயல்கள் எவ்வளவோ உண்டு. சைவர்கள் வீட்டில் கிருஷ்ணசாமியையும் ராமசாமியையும் பார்க்கிறோம். ஆதிசைவர்களில் இராமசாமிக் குருக்கள் இருக்கிறார். சிதம்பரம் தீக்ஷிதர்களில் வேங்கடேச தீக்ஷிதர் இருக்கிறார். வீரசைவர்களில் இராமசாமி அடிகளார் இருக்கிறார்.

மயிலாப்பூரில் வைஷ்ணவர்கள் வீட்டில் கற்பகம் என்ற பெயருடைய பெண்கள் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் விட ஆச்சரியமான செய்தி சுப்பிரமணிய ஐயங்கார் என்று ஒரு வைஷ்ணவர் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார். ஓர் அன்பர் எனக்கு அனுப்பிய பழைய விவாக முகூர்த்தப் பத்திரிகையில் (9-2-59) இந்த அதிசயத்தைக் கண்டேன்.

அவருடைய கனிஷ்ட புத்திரனாகிய சிரஞ்சீவி எஸ்.ஸ்ரீனிவாசனுடைய திருமணத்துக்குரிய அழைப்பு அது. அதில் அவர், 'தாசன், எம். ஏ. சுப்பிரமணிய அய்யங்கார், மதுரை' என்று கையெழுத்திட்டிருக்கிறார். அவர் மதுரையில் போக்குவரவுத் துறையில் பணிபுரிந்து விலகினவர்

என்று அந்த அழைப்பிலிருந்து தெரியவருகிறது. இந்த அழைப்பிதழை அனுப்பிய அன்பர் திரு ஆழ்வை அ. பட்சிராஜன், திருக்குறுங்குடி; அவருக்கு என் நன்றி உரியது.

காந்தியுகத்தில் சமயசமரசம் உதயமாகி விட்டது.

'ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன ஸீதா ராம்
ஈச்வர அல்லா தேரேநாம்
ஸப்கோ ஸன்மதி தே பக்வான்'

என்ற மந்திரத்தைத் தந்த அந்த மகானை வாழ்த்துவோம்.

# பெயர் படுத்தும் பாடு

என்னுடைய ஆசிரியப்பிரான் டாக்டர் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் பூவாளூர் சென்றிருந்தார்கள். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையினுடைய மாணாக்கரும் ஐயரவர்களுக்குக் கும்பகோணம் கல்லூரியில் தாம் பார்த்துக் கொண்டிருந்த தமிழாசிரியர் வேலையை வாங்கித் தந்தவருமாகிய வித்துவான் தியாகராச செட்டியாருடைய ஊர் அது. அங்கே ஐயரவர்கள் அன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது, "விராட்டி! விராட்டி!" என்று யாரோ ஒருவர் உரக்கக் கூவினார். "ஏன்?" என்று ஒருவர் அவரிடம் வந்து நின்றார். விராட்டி என்று ஏன் அந்த மனிதர் உரக்கக் கூவினார் என்பதன் உண்மை ஐயரவர்களுக்குப் பிறகு தெரியவந்தது. வீரராகவ செட்டி என்ற ஒருவரையே அந்த மனிதர் விராட்டி என்று கூவி அழைத்திருக்கிறார். அதைக் கேட்டு ஐயரவர்கள் வியந்தார்கள். வீரராகவ செட்டி என்ற அருமைத் திருநாமமே அந்த மனிதர் வாயில் அகப்பட்டு உருக்குலைந்து விராட்டி ஆகிவிட்டது!

நம்முடைய நாட்டில் ஆண்டவன் திருநாமங்களை மக்களுக்கு இட்டு வழங்குகிறோம். அதனால் அந்தத் திருநாமங்களை நாம் பலமுறை சொல்லவும் காதினால் கேட்கவும் வாய்ப்புகள் உண்டாகின்றன. இறைவன் திருநாமங்களைத்

தனியே எழுதிப் பாராயணம் செய்யாமலே, அந்த நாமங்களைச் சொல்லவும் கேட்கவும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன நாம் தெருவழியே நடந்து போகும்போது, "ஏ முருகா, ஏ ராமா, ஏ வேங்கடேசா, ஏ சிவசுப்பிரமணியா" என்று ஒருவரை ஒருவர் அழைக்கிறார்கள்; அப்போது அந்தப் பெயர்களெல்லாம் இறைவன் திருநாமங்களாய் இருப்பதனால், அவனுடைய பல திருநாமங்களைச் செவியேற்கும் நிலை நமக்கு உண்டாகிறது. உண்மையான பக்தி உடையவர்கள் அந்த நாமங்களைக் கேட்டு மனம் உருகுவார்கள். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இலார்க்கு ஆயிரம், திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்று மாணிக்கவாசகர் பாடுவதை நினைத்துக் கொள்வார்கள்.

இறைவன் திருநாமங்களை மக்களுக்கு இட்டு வழங்குவதன் நோக்கமே மாறிவிடுகிறது, அந்த நாமங்களைச் சிதைத்து வழங்குவதனால். வீரராகவ செட்டி என்ற பெயர் எங்கே? விராட்டி என்ற சிதைவு எங்கே? வீரராகவன் என்ற திருநாமம் நம்மை இராமாயணத்தை நினைக்கச் செய்கிறது; திருவள்ளூருக்கு அழைத்துச் செல்கிறது; விராட்டி என்ற வார்த்தையோ—?

அருமையான பெயர்களை எப்படியெல்லாம் சிதைத்து வழங்குகிறோம்! சுப்பிரமணியன் என்ற பெயர் இந்தச் சிதைவு முறையில் அகப்பட்டு எத்தனை வகையான வடிவங்களை எடுத்துக்கொள்கிறது! சுப்பு என்ற சிதைவுதான் அதிகம். சுப்பிரமணி, சுப்பாமணி, சுப்பிணி, சுப்புமணி, சுப்பியா, சுப்பாணி, சுப்புண்டு என்று அந்தப் பெயர் நசுங்கி உருக்குலைந்து பல வடிவங்களில் நிலவுகிறது. பரமேசுவரன் பம்மேச்சன் ஆகிறான். வேங்கடராமன், வெங்கிட்டு, வெங்கிட்டா, வெங்கட், வெங்கலக்குண்டு ஆகிறான். மகாலக்ஷ்மி மாச்சி, மாஜி, மசும் ஆகிறாள்.

எங்கள் வீட்டில் ஒரு பெண் வேலை செய்கிறாள். சுறுசுறுப்பானவள். அவளைத் தபா, தபா என்று அழைக்கிறார்கள். "எத்தனை தபா உன்னை அழைக்கிறது?" என்று சிலேடை நயத்தோடு கடிந்துகொள்கிறார்கள். அவள் பெயரை முதலில் கேட்டபோது, இந்தத் தபா என்பது எதன் சிதைவு என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன்; தெரியவில்லை; விசாரித்த பிறகுதான் தெரிய வந்தது. அவளைப் பெற்றவர்கள் தவமணி என்றுபெயர் வைத்திருக்கிறார்கள். அதுவே தபா, தபா என்று அடிபடுகிறது.

சில பெயர்கள் சிதையும்பொழுது ஒரு பகுதி மட்டும் நிற்கும். அப்போது அது சிதைவாகத் தோன்றாமல் அழகாகவே இருக்கும். சுப்பிரமணியன் என்பதை மணியன் என்றும் மணி என்றும் குறுக்கி வழங்குகிறோம். அதுவும் ஒரு வகையில் சிதைவே. ஆனாலும் அந்தச் சிதைவு தவறாகத் தோன்றவில்லை. சாம்பசிவத்தைச் சிவமென்று குறுக்குவதனால் இறைவன் திருநாமம் முற்றும் மறைவதில்லை. ஆனால் சில சமயங்களில் இவ்வாறு பெயரின் ஒரு பகுதியை வழங்குவதில் விநோதமான நிலை ஏற்படுவதுண்டு. ஆபத்சகாயம் என்பது ஒருவருக்குப் பெயர். அதைச் சுருக்கிச் சகாயம் என்று அழைக்கலாம். அது நன்றாக இருக்கும். ஆனால் ஆபத்து என்று அழைத்தால் எப்படி இருக்கும்? அதைவிடப் பெரிய ஆபத்து வேறு இல்லை!

குழந்தைப் பேச்சில் எத்தனையோ சிதைவுகளைப் பார்க்கிறோம். உம்மாச்சி என்பது கடவுளைக் குறிக்கும் குழந்தை உலகச் சொல். அது எந்த வார்த்தையின் சிதைவு என்று காமகோடி சங்கராசாரிய சுவாமிகள் ஒரு சமயம் பேசும்போது விளக்கினார்கள். உமாமகேசுவரன் என்பதே அப்படிச் சிதைந்து விட்டதாம். பார்த்தசாரதி பாச்சா வானாலும் ஜகந்நாதன் ஜக்கு ஆனாலும் புரிந்துகொள்ள

முடிகிறது. உமாமகேசுவரன் என்பதுதான் உம்மாச்சி ஆயிற்று என்று நமக்கு எங்கே விளங்குகிறது?

மக்களின் பெயர்கள் மட்டும் இந்தப் பாடு படுகின்றன என்று எண்ண வேண்டாம். ஊர்களின் பெயர்களுக்கும் இந்தக் கதி நேர்வதுண்டு.

ஏழு பெரிய வள்ளல்களில் ஒருவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன். அவன் தகடூர் என்ற ஊரில் இருந்து ஆண்டு வந்த சிற்றரசன். இன்று அந்தத் தகடூரே தர்மபுரி என்று வழங்குகிறது. அவன் தகடூரில் கோட்டை கட்டி வாழ்ந்தான். அந்தக் கோட்டை இருந்த இடம் இன்றைக்குத் தர்மபுரிக்கு அருகில் இருக்கிறது. அந்த உத்தமனாகிய வள்ளல் வாழ்ந்திருந்த கோட்டையை அதமன் கோட்டை என்று வழங்கினார்கள் மக்கள். அதுவே அதன் இயல்பான பெயர் அன்று. அதிகமான் கோட்டை என்ற பெயரே அப்படிச் சிதைந்து வழங்கியது. அதிகமானை மக்கள் எச்சில் வாயால் அதமனாக்கிவிட்டார்கள். நல்ல வேளை! இப்போது பழையபடி அதிகமான் கோட்டை என்று அதன் பழைய உருவத்தைப் பொறித்திருக்கிறார்கள்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பழைய ஐயங்கொண்ட சோழபுரம் என்ற ஊர் இருக்கிறது. அதற்கு இன்று வழங்கும் பெயரைக் கேட்டாலே சங்கடமாக இருக்கிறது. ஆமாம்: இன்று அது பழைய சங்கடம் என்று வழங்குகிறது! குலோத்துங்க சோழன் இருப்பு என்ற ஊரின் பெயர் குளத்துக்கிருப்பு ஆகிவிட்டது. கோபிநாதப் பெருமாள் கோவில் கோணப் பெருமாள் கோவில் ஆகிறது.

பழைய காலத்தில் புலவர்கள் ஊர்களின் பெயர்களைப் பாட்டில் வைக்கும்போது பாட்டின் ஓசைக்கு ஏற்பக் குறுக்கி அமைப்பார்கள். தஞ்சாவூரைத் தஞ்சையென்றும்

கோயம்பத்தூரைக் கோவை என்றும் சென்னப்பட்டணத்தைச் சென்னையென்றும் திருநெல்வேலியை நெல்லை என்றும் வைத்துப் பாடினார்கள். செய்யுளில் முழுப் பெயரையும் வைப்பதைவிட இப்படி வைத்துப் பாடுவது எளிதாக இருக்கும். ஆனால் பேச்சுவழக்கில் முழுமையாக வழங்குவார்கள். இப்போது. செய்யுளில் இருப்பது போலவே உரைநடையில் எழுதும்போதும் பேசும்போதும் அப்படிச் சுருக்கிவிடுகிறார்கள். அதனால் நமக்குச் சில சமயங்களில் மயக்கம் உண்டாகிறது. தஞ்சைவாணன் கோவை என்ற நூல் தமிழ்ப் புலவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதில் வரும் தஞ்சை இன்னதென்று பல பேருக்குத் தெரியாது. அது சோழநாட்டில் உள்ள தஞ்சாவூர் அன்று; பாண்டி நாட்டில் உள்ள தஞ்சாக்கூர் என்ற ஊரையே புலவர் தஞ்சை என்று பாட்டில் வைத்திருக்கிறார்.

நாம் எழுதும்பொழுதும் பேசும் பொழுதும் இந்த முறையை மேற்கொள்ளுவதனால் சில சமயம் மயக்கம் ஏற்படுகிறது என்று சொன்னேன். என்ன மயக்கம் தெரியுமா? கோயம்புத்தூர்க்காரரும் தம்முடைய ஊரைக் கோவை என்று சொல்கிறார்; கோயம்பள்ளிக்காரரும் தம் ஊரைக் கோவை என்று குறிக்கிறார்: கோவை என்பதைக் கேட்டவுடன் இன்ன ஊர்தான் என்று திட்டமாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. புதுச்சேரியைப் புதுவை என்று குறிக்கும்போது பழக்கத்தால் நமக்கு விளங்குகிறது. ஆனால் புதுக்கோட்டையையும் புதுப்பாடியையும் புதுப்பாளையத்தையும் புதுவை என்று குறிக்கும்போது நமக்குக் குழப்பம் உண்டாகிறது. ஆகையால் இயல்பான பெயர்களையே வழங்கினால் தெளிவாக இருக்கும்.

இராமேசுவரத்துக்குத் தேவை என்று ஒரு பெயர்; தேவகோட்டையையும் தேவை என்று சிலர் குறிக்

கிறார்கள். இந்த இரண்டில் இராமேசுவரத்துக்கு ஏன் தேவை என்று பெயர் வந்தது என்பதற்கு விளக்கம் தேவை. தேவைஉலா என்று இராமேசுவரத்தில் எழுந்தருளி யுள்ள சிவபெருமானைப் பற்றிய பிரபந்தம் ஒன்று உண்டு. "வளமருவு தேவை அரசே" என்று தாயுமானவர் அங்கே எழுந்தருளியுள்ள மலைவளர் காதலியைப் பாடுகிறார். இந்த இடங்களில் தேவை என்ற பெயர் வருகிறது. அது எதன் சிதைவு என்று எவ்வளவோ காலம் ஆராய்ந்து பார்த்தேன்; தெரியவில்லை. கடைசியில் தேவநகரம் என்பதன் மரூஉ அது என்று தெரிய வந்தது. ராஜாராம் ராவ் என்பவர் இராம நாதபுர ஸம்ஸ்தானத்து வரலாற்றைப் பல ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். அதில் இராமேசுவரத் துக்குத் தேவ நகரம் என்ற பெயர் உண்டு என்று குறித் திருக்கிறார்.

இராமநாதபுரத்துக்கு முகவை என்ற பெயர் இலக் கியங்களில் வழங்குகிறது. முகவாபுரி என்றும் இருக்கிறது. இராமநாதபுரத்துக்கும் முகவைக்கும் என்ன தொடர்பு? சேதுபதி மன்னர்கள் இராமேசுவரத்திலுள்ள பெருமா னாகிய இராமநாதர் பெயரால் தம் தலைநகரத்துக்கு இராமநாதபுரம் என்று பெயர் வைத்தார்கள். செய்யுளில் அது முகவையான காரணம் பல பேருக்குத் தெரியாது.

இராமேசுவரத்துக்குப் போகிறவர்கள் பழங்காலத்தில் இராமநாதபுரம் சென்று மன்னரைக் கண்டு விடைபெற்றுப் பிறகு இராமேசுவரம் சென்று தரிசித்தார்கள். "சேதுபதி தரிசனமே இராமலிங்க தரிசனமாச் செப்பலாமே" என்று ஒரு பழம் பாட்டில் வருகிறது. இராமபிரான் தான் கட்டிய அணைக்கு மறக்குல வீரன் ஒருவனைக் காவலனாக வைத்தான் என்றும், சேதுவைக் காத்த அந்த மறவனுடைய பரம்பரை யினரே சேதுகாவலர், சேதுபதி என்ற பட்டத்துடன்

சிற்றரசர்களாக விளங்குகிறார்கள் என்றும் சொல்லு வார்கள். ஆகவே, இராமேசுவரம், தனுஷ்கோடி ஆகிய வற்றைத் தரிசிக்கச் செல்பவர்கள் முதலில் இராமநாதபுரம் போய்விட்டுப் பிறகு அவ்விடங்களுக்குப் போவார்கள். இராமேசுவரத்துக்குப் போகும்முன் முதலில் காணுவது இராமநாதபுரம். இராமேசுவர யாத்திரைக்கு முகப்புப் போன்றது இராமநாதபுரம். அதனால் முகவை என்ற பெயர் வந்தது. முகம் போன்றது என்ற பொருளை உள்ளடக்கியது அந்தப் பெயர்.

அமரர் சேதுப்பிள்ளையவர்கள் எழுதிய 'ஊரும் பேரும்' என்ற நூலில் இப்படி ஊரின் பெயர்கள் சிதைவுற்றும், மாற்றுருக் கொண்டும் வழங்குவதுபற்றிப் பல செய்திகளைக் காணலாம்.

பெயர்கள் படும் பாட்டைப் பற்றிச் சொன்னேன். பெயர்களின் முதலெழுத்தைக் குறிக்கும் (Initials) பழக்கம் ஒன்று உண்டு. கு. ப. ராஜகோபாலனைக் கு. ப. ரா. என்று சொல்கிறோம். ஊர்ப் பெயர், தந்தையார் பெயர் இவற்றின் முதலெழுத்துக்களை முதலில் எழுதிப் பிறகு தம் பெயரை எழுதுவது தமிழ்நாட்டில் பெருவழக்காக இருக்கிறது. சில பேர் ஊர்ப் பெயரைச் சேர்க்காமல் தந்தை பெயரின் முதலெழுத்தை மட்டும் போடுவது உண்டு. வ. ரா. என்பது போலப் பலர் தம் பெயரை எழுதுவார்கள். கல்கி தம் பெயரை ரா. கி. என்றும் சுருக்கி எழுதி வந்தார்.

இப்படித் தலை எழுத்துக்களைப் (Initials) போடுவதில் சில விநோதங்கள் ஏற்பட்டதுண்டு.

ஸ்ரீரங்கத்தில் சுப்பிரமணிய ஐயர் என்ற தமிழாசிரியர் இருந்தார். அவருடைய தந்தையார் பெயர் குருசாமி ஐயர். அவர் கு. சுப்பிரமணிய ஐயர் என்று தம் பெயரை எழுது

வதில்லை; குரு. சுப்பிரமணிய ஐயர் என்றே எழுதுவார். கு. சுப்பிரமணிய ஐயர் என்று போட்டு வழக்கமானால் தலை எழுத்துக்களை மட்டும் குறிக்கும்படி நேரும்போது நாற்றம் அடிக்கும் அல்லவா?

பன்மொழிப் புலவர் ஒருவர் ஒரு நூல் எழுதினார். அதில் தம் பெயரை விரிவுபடுத்தி ஊர்ப் பெயர், தந்தையார் பெயர், தம் பெயர் எல்லாவற்றையும் முழுமையாகப் போட்டிருந்தார். அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதியைத் தம் முடைய நண்பர் ஒருவர் மூலம் எனக்கு அனுப்பினார். முகப்புப் பக்கத்தைப் பிரித்துப் பார்த்தேன். பின்னத்தூர்ச் சாரநாதருடைய குமாரர் சுந்தரம் (உண்மைப் பெயர்களை இங்கே சொல்லவில்லை, ஆனால் முதலெழுத்துக்கள் மாத்திரம் அந்தப் பெயர்களில் உள்ளனவே.) என்று விளக்கமாக இருந்தது. என் மூளையில் ஒரு குயுக்தி தோன்றியது. புத்தகத்தை அளித்த அன்பரைப் பார்த்து, "ஐயா, இவர் தம் பெயரின் முதற்குறிப்பை எப்படிப் போடுவார்?" என்று கேட்டேன். அவர் சற்றே யோசித்து, பின்னத்தூரின் முதலெழுத்தாகிய பி என்பதையும், சாரநாதர் என்பதன் முதல் எழுத்தாகிய சா என்பதையும், சுந்தரம் என்பதன் முதல் எழுத்தாகிய சு என்பதையும் சேர்த்து, 'பி. சா. சு' என்று சொல்லும்போதே சிரித்து விட்டார். 'பிசாசு' என்று சொல்லி நானும் சிரித்தேன். அதன் விளைவு என்ன ஆயிற்று, தெரியுமோ? அந்த அன்பர் புத்தக ஆசிரியரிடம் போய் இந்த வேடிக்கையைச் சொல்லி யிருக்கிறார். அந்த ஆசிரியர் அத்தனை புத்தகப் பிரதிகளின் முகப்புத்தாளையும் கிழித்து எறிந்துவிட்டுப் புதிய தாளைச் சேர்த்தார். அதில் தம் பெயரை, P. S. சுந்தரம் என்று அச்சிடச் செய்துவிட்டார்.

கம்பம் போடைய நாயக்கர் பிள்ளை திருமலை நாயக்கர் தம் பெயரில் ஊர்ப் பெயரின் முதலெழுத்தைச் சேர்க்காமல்

போ. திருமலை நாயக்கர் என்று போட்டால், அதற்குக் காரணம் எதுவென்று நமக்குத் தெரியும். பெயரின் முதற் குறிப்பைப் போடும்போது அவர் 'கபோதி' ஆகாமல் 'போதி' ஆகலாம் அல்லவா?

என்னுடைய ஆசிரியப் பிரானுடைய நினைவோடு தொடங்கிய இந்தக் கட்டுரையை அவர்களைப் பற்றிய செய்தி ஒன்றோடு முடித்துக் கொள்கிறேன். அவர்கள் வே. சாமிநாதன் என்றே கையெழுத்துப் போடுவது வழக்கம். 'இனிஷியல்ஸ்' போடும்போது வே. சா. என்று போட வேண்டும். சா என்பது அமங்கலமாகத் தொனிப் பதால் அப்படி அவர்கள் போடுவதில்லை. வே. ச். என்றே போடுவார்கள். அவர்கள் குறிப்புக்கள் எழுதினால் கீழே வே. ச். என்று தம் பெயரின் முதற்குறிப்பைக் குறிப் பார்கள்.

# ஸார் பேப்பர்!

"ஸார்! பேப்பர்!"

அப்பாடி! எனக்கு உயிர் வந்தது. எத்தனை நேரம் காத்திருப்பது! ஒரு மணி நேரமாகக் காத்திருக்கிறேன். பேப்பர் வந்த பாடில்லை. கோபம் கோபமாக வந்தது. போன் பண்ணிப் பார்த்தேன். 'வந்து விடும்' என்று சொன்னார்கள். பையன் இப்போதுதான் வந்து போடுகிறான்.

"ஏன் அப்பா, இவ்வளவு நேரம்?" என்று கேட்கிறேன்.

"ஏதோ யந்திரக் கோளாறும். இப்போதுதான் தந்தார்கள்!" என்று சொல்லிக் கொண்டே அவன் போய் விடுகிறான். அவன் அவசரம் அவனுக்கு.

" காலை எழுந்தவுடன் காப்பி—பின்பு
கருத்துட னேபடிக்கும் பேப்பர்"

என்று வழக்கப்பட்டுப் போன எனக்கு அந்த நேரத்தில் காபி கிடைக்காவிட்டாலும் கவலைப்படமாட்டேன்; பேப்பர் படிக்காவிட்டால் என்னவோ மாதிரி இருக்கிறது. அட! காபி என்றால் காபிதானா? நான்தான் காபி சாப்பிடுவதில்லையே! பால் சாப்பிடுகிறேன். அதைப் பருகின கையோடே பத்திரிகையைப் படிக்க உட்கார்ந்து விடுவேன். என்னோடு பழகின எல்லாருக்கும் தெரியும், அந்த நேரத்தில் நான் என்ன செய்வேனென்று. சரியாகக் காலை ஆறு

மணிக்குப் பேப்பரும் கையுமாக எங்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

பத்திரிகை படிப்பதென்பது இன்று நேற்று வந்த பழக்கம் அல்ல. இளம்பிராயம் முதலே நாள்தோறும் விடாமல் பத்திரிகை படித்து வருகிறேன். இளம்பிராயம் என்றால் தொட்டில் பருவம் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். நாலாம் பாரம் படிக்கிற காலம் முதல் அன்றாடம் பத்திரிகை படிப்பேன். அப்போதெல்லாம் ஞாயிற்றுக் கிழமைகளில் தினப்பத்திரிகை கிடையாது. மற்ற நாட்களில் படிப்பேன்.

ஊரில் படித்துக்கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் காலைப் பத்திரிகைகள் இல்லை. சென்னையில் மாலையில் வெளிவரும் செய்தித்தாள் தபாலில் மறுநாள் வெளியூருக்கு வரும். தபாலில்தான் வரும். கடைகளில் பத்திரிகைகளை விற்பதில்லை. சந்தா செலுத்தித் தபால் மூலம் வருவித்துத்தான் படிக்க வேண்டும். ரேடியோ இல்லாத காலம். ஆகவே எல்லாரும் பத்திரிகையை எதிர் பார்த்து நிற்பார்கள். எல்லாரும் பத்திரிகை வருவிக்க மாட்டார்கள். கிராமத்தில் இரண்டொரு பேர்களே வருவித்துப் படிப்பார்கள்; படித்துவிட்டுப் பிறருக்கும் படிக்கக் கொடுப்பார்கள்.

எங்கள் ஊரில் ஒரு செட்டியார், காங்கிரஸ்காரர், பத்திரிகை வாங்கினார். பிறகு நிறுத்திவிட்டார். இளைஞர்களெல்லாம் சேர்ந்து 'திலகர் வாசகசாலை' என்று ஆரம்பித்தோம். அதற்குச் சுதேசமித்திரன் பத்திரிகையை வருவித்தோம். பாதிச் சந்தாவுக்கு அதைக் கொடுத்தார்கள். வாசகசாலை வேலை செய்யாமல் நின்ற பிறகும் அது அரை விலையிலே வந்துகொண்டிருந்தது. அந்தச் செட்டியாரே வாசகசாலையின் தலைவர்.

அந்தக் காலத்தில் சுதேசமித்திரன் பிரபலமான பத்திரிகை. இங்கிலீஷில் ஹிந்து. நான் சுதேசமித்திரனைத் தான் படித்து வந்தேன். பிறகு யாருக்காவது இங்கிலீஷ் பத்திரிகை வந்தால் அதை வாங்கிப் படிப்பேன். சென்னைக்கு வந்த பிறகுதான் ஹிந்துவை நாள்தோறும் படிக்கும் பழக்கம் ஏற்பட்டது. அதுவும் காலைப் பத்திரிகையாக மாறினபிறகு, எழுந்தவுடன் அதன் முகத்தில் விழித்த பிறகுதான் மறுகாரியம் பார்ப்பேன். ஆமாம், பேப்பர்க் காரன் பேப்பர் போட்டிருக்கிறானா என்று பார்த்து விட்டுத் தான் பல் விளக்கப் போவேன்.

பொடி போடுகிறவர்களுக்கும் புகையிலை போடுகிறவர் களுக்கும் ஒரு பழக்கம் உண்டு. பட்டணம் பொடி போடு கிறவர்கள் அதையேதான் போடுவார்கள். சிவபுரிப் புகையிலை போடுகிறவர்களுக்கு வேறு புகையிலை பிடிக்காது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் பிடிப்பு. அதுபோலத் தான் பத்திரிகை படிக்கிறவர்களும், ஏதாவது ஒரு பத்திரிகையையே படித்து வழக்கப்படுத்திக் கொள்வார்கள். அந்தக் குறிப்பிட்ட பத்திரிகையைப் படிக்காமல் வேறு பத்திரிகையைப் படித்தால் பத்திரிகை படித்ததாகவே ஒரு திருப்தி இராது. என் சொந்த அநுபவமும் அப்படித்தான். ஹிந்து படிக்காவிட்டால் திருப்தி உண்டாவதில்லை. வெளியூர்களுக்குப் போகும்போது சில இடங்களில் ஹிந்து கிடைக்காமல் போகும். கிடைக்கும் பத்திரிகையை வாங்கி வாசிப்பேன். ஊருக்கு வந்த பிறகு நான் வாசிக்காத அத்தனை நாள் ஹிந்துப் பத்திரிகைகளையும் எடுத்து, விடாமல் படிப்பேன். மற்றவர்களுக்கும் இந்த அநுபவம் உண்டென்றே நினைக்கிறேன்.

பம்பாய், டில்லி, கல்கத்தா போனால் அங்கெல்லாம் என்ன என்னவோ பத்திரிகைகள் வருகின்றன. ஹிந்து யாருக்காவது வரும். அவரைத் தேடிப் பிடித்து வாங்கி

வாசிப்பேன். தமிழ் நாட்டுச் செய்திகளை அதில்தானே பார்க்க முடியும்?

தமிழ் நாட்டில் எங்காவது வெளியூர்களுக்குப் போய் விட்டுச் சென்னைக்கு வருவேன். அநேகமாகக் காலை வண்டியில்தான் திரும்புவேன். வண்டி அரக்கோணத் துக்கோ, சின்ன ரெயிலானால் செங்கற்பட்டிற்கோ வரும் போது பேப்பர் வாங்கிப் படிப்பேன். இப்போதுதான் ஒவ்வொரு நாளும் காலைப் பத்திரிகையைத் தமிழ் நாட்டில் எந்த மூலை முடுக்குகளிலும் வாங்கலாமே! அந்த விஷயத்தில் தமிழ்நாடு முன்னேறியிருக்கிற அளவுக்கு மற்ற மாநிலங்கள் முன்னேறியிருப்பதாகத் தெரியவில்லை.

வீட்டுக்கு வந்தவுடன் அன்றைப் பத்திரிகையைப் படிக்கலாம். ஆனால் அதற்குப் பொறுமை இருப்பதில்லை. அரக்கோணத்திலோ, செங்கற்பட்டிலோ பேப்பர் வாங்குவேன். ஹிந்து வாங்கமாட்டேன். அதைத்தான் வீட்டில் போய்ப் பார்க்கப் போகிறேனே! ஆகவே வேறு எதையாவது வாங்கிப் படிப்பேன். எதிர்ப் பலகையில் அமர்ந்திருக்கும் ஆசாமி என்னைப்போலவே பத்திரிகை படிக்கும் ஆவலுள்ளவராக இருப்பார். ஆனால் என்னைப் போல அவசரக் குடுக்கை அல்ல. வீட்டுக்குப் போய்ப் படிக்கலாம் என்ற எண்ணமுடையவராக இருக்கலாம். என்றாலும் என் கையில் பத்திரிகையைக் கண்டதும் அவருடைய பத்திரிகைக் காதல் மூண்டெழும். ஆனால் காசு கொடுத்து ஒன்றை வாங்கமாட்டார். ஒரு குழந்தை தின் பண்டம் தின்கிறபோது அது கிடைக்காத மற்றொரு குழந்தை அதை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்குமே, அப்படிப் பார்த்துக்கொண்டிருப்பார். நான் பத்திரிகையை விரித்து என் முகத்தை மறைத்துக் கொண்டு படிப்பேன். முதல் பக்கத்தை முடித்துவிட்டு உள்பக்கங்களைப் படித்துக் கொண்டிருப்பேன். அந்த ஆசாமி குனிந்து குனிந்து முதல்

பக்கத்தில் இருப்பதைப் பார்ப்பார். என் கை நடுவிலே இருக்கும். தலைப்புக்களை மட்டும் பார்ப்பார் என்று நினைக்கிறேன். கையை மாற்றி வேறிடத்தில் பிடித்துக் கொண்டால் மறுபடியும் ஒரு பக்கமாகச் சாய்ந்து பார்ப்பார். எனக்கு இது தெரியும். ஆனாலும் தெரியாதவனைப் போல வெகு சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருப்பேன்.

ஒருவன் கையில் எதையாவது வைத்துக்கொண்டு உண்ணும்போது எதிரே நாக்கை நீட்டிக்கொண்டு, 'நமக்கும் சிறிது போட மாட்டானா?' என்று ஆவலோடு நாய் காத்திருக்குமே, அந்த நினைவுதான் எனக்கு வரும். அப்படியெல்லாம் ஆறறிவு படைத்த மனிதரை நினைக்கக் கூடாதுதான். என்றாலும் அந்த உபமானந்தான் தோன்றுகிறது. ஏன்? நான்கூட அப்படித்தானே? சில சமயங்களில் ஸ்டேஷனில் பத்திரிகை எனக்குக் கிடைக்காது; தீர்ந்து போயிருக்கும். அப்போது எதிரே ஒருவர் பத்திரிகை வாங்கிப் படித்துக் கொண்டிருப்பார். அந்தச் சமயத்தில் நானும் பைரவர் வாகனத்தைப் போலத்தான் அந்தப் பத்திரிகையை ஆசாபங்கத்தோடு பார்ப்பேன்.

கடைசியில் பத்திரிகையை ஒருவாறு படித்து முடித்து மடிக்கிறபோது அவர் கையை நீட்டுவார். நான் கொடுப்பதற்கு முன்பே லபக்கென்று பிடுங்கிக் கொள்பவரைப் போல வாங்கிக்கொண்டு அதில் ஆழ்ந்துவிடுவார். நான் பத்திரிகை படிக்கும்போது சில பக்கங்களை அவரிடம் கொடுத்திருக்கலாம். என் சுபாவம்: பத்திரிகை முழுவதையும் பக்கம் தவறாமல் வைத்துக்கொண்டு வரிசையாகப் படிப்பேன். நடுவில் ஒரு தாளைக் கொடுத்துவிட்டுப் படிப்பதோ, ஏதாவது ஒரு பக்கத்தைப் படிப்பதோ கிடையாது. முதலிலிருந்து முடிவு வரையில் முறை பிறழாமல் சாங்கோபாங்கமாகப் படிக்கவேண்டும். அப்படி என்ன பழக்கம் என்று கேட்கலாம். அதற்குக் காரணம் சொல்ல

எனக்குத் தெரியாது. ஆனால் யாராவது வீட்டில் பத்திரிகையில ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு மற்றதை எனக்குக் கொடுத்தால எரிச்சல் எரிச்சலாக வரும்.

வாசகசாலை முதலிய பொது இடங்களில் படிக்கிறவர்கள் தனித்தனியே பிரித்துப் படிப்பார்கள்; ஒவ்வொரு தாளாகக் கிழித்துப் படிப்பார்கள். காசு கொடுத்து வாங்காமல் ஓசியில் படிக்கிறவர்கள் பழக்கம் அது நான் சொந்தமாக விலை கொடுத்துப் பத்திரிகை வாங்கும்போது அதை என் விருப்பப்படியே படிப்பதை யார் தடுக்க முடியும்?

ஒரு சமயம் செங்கற்பட்டில் பத்திரிகை வாங்கினேன். அதை என் ஆசனத்தில் வைத்துவிட்டுச் சிறிது அந்தப் பக்கம் போனேன். அருகில் இருந்த நண்பர், "படிக்கலாமா?" என்று கேட்டார். "தாராளமாகப் படிக்கலாம்" என்றேன். அவர் எடுத்துப் படிக்கத் தொடங்கினார். நான் போய்விட்டு இரண்டு நிமிஷத்தில் வந்தேன். அந்த மனிதர் வெகு சுவாரசியமாகப் பத்திரிகையை விரித்து முகத்தை மறைத்தபடி வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தார். நான் வந்தது தெரிந்திருக்கலாம். ஆனாலும் அவர் பேப்பரை என்னிடம் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் மறந்து விட்டவரைப் போல அதில் ஆழ்ந்திருந்தார். நான் சிறிது கனைத்துக் கொண்டேன். அது அவர் காதில் விழுந்தாலும் விழாதவர் போலவே படித்துக் கொண்டிருந்தார். நானும், 'அவர் என்னதான் செய்கிறார், பார்க்கலாம்' என்று இருந்தேன். தாம்பரம் வருகிறவரைக்கும் அந்தப் பத்திரிகையைச் சக்கை வேறு சாறு வேறாக உறிஞ்சிவிட்டு, தாம்பரம் ஸ்டேஷன் வந்தவுடன், "மன்னிக்க வேண்டும். இந்தாருங்கள்" என்று கொடுத்தார். உடனே அங்கே இறங்கி விட்டார். இல்லாவிட்டால் மேலும் படித்துக் கொண்டே இருந்திருப்பார். அவர் படிக்கிற ஜோரைப்

பார்த்து, 'இது தாமே வாங்கின பத்திரிகை என்ற நினைவில் நாம் பொருத்ததை மறந்துவிட்டாரோ?' என்று எண்ணினேன். அப்படியானால் அவர் ஸ்டேஷனில் இறங்கும்போது கையோடே எடுத்துக் கொண்டல்லவா போயிருப்பார்? நான் மிகவும் பொறுமைசாலி என்பதையும் தியாகபுத்தி உள்ளவன் என்பதையும் எப்படியோ தெரிந்துகொண்டு அதைப் படித்திருக்கிறார்!

பத்திரிகையை ஒவ்வொரு நாளும் படிக்கிறேன். தினமுமா முக்கியமான சமாசாரம் வருகிறது? தினமுமா மந்திரிகள் ராஜீநாமாச் செய்கிறார்கள்? தினமுமா புயல் வருகிறது? ஆனால் பத்திரிகைக்காரர்கள் எப்படியோ பக்கங்களை நிரப்பிவிடுகிறார்கள். எதிர் வீட்டு நண்பர் என்னைப்போல விழுந்து விழுந்து செய்தித்தாளைப் படிக்க மாட்டார். என்னைக் கண்டால், "என்ன ஸார் சமாசாரம், பேப்பரில்?" என்று கேட்பார்.

"நான் ஓர் இழவும் இல்லை" என்பேன். அதாவது அன்றைப் பத்திரிகையில் சுவாரசியமான செய்தி எதுவும் இல்லை என்று அர்த்தம். அந்த இழவு என்ற வார்த்தைக்கு அர்த்தம் இல்லை. என்றாலும் ஒருவகையில் அதற்கு அர்த்தம் உண்டென்றே சொல்ல வேண்டும். யாராவது பெரிய மனிதர்கள் இறந்துபோன செய்தி பேப்பரில் வந்தால், நானே வலிய எதிர் வீட்டுக்கார நண்பரை அழைத்து, "சமாசாரம் தெரியுமோ? இன்னார் காலமாகி விட்டாராம்!" என்பேன். அந்த இழவுச் செய்தி பத்திரிகைக்குச் சுவையூட்டுவது போலத் தோன்றும்!

பத்திரிகை, படிப்பதற்கு உபயோகப்படுவது மட்டுமா? சில சமயங்களில் அவசரமாக டிக்கெட் வாங்கும்போது படுக்கை வசதிக்குரிய டிக்கெட் கிடைக்காது. உட்கார்ந்து போகத்தான் முடியும். இரவில் எப்படியோ சமாளித்துக் கொண்டு கீழே படுத்து உறங்க வேண்டியிருக்கும். மாலைப்

பத்திரிகையை ஸ்டேஷனில் படித்துவிட்டுப்பிறகு அதையே விரிப்பாக விரித்து அதன்மேல் படுத்துக் கொள்ளலாம். துணி அழுக்கு ஆகாது. பத்திரிகைக்குக் கொடுத்த விலைக்கு அதிகமாகவே பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேல்நாட்டில் பத்திரிகைகளைப் படித்தவுடன் அப்படி அப்படியே அதை வண்டியில் போட்டு விட்டுப் போய்விடு கிறார்கள். இங்கே அப்படிச் செய்ய முடியுமா? மறந்து போய் யாராவது வைத்துவிட்டுப் போனால் அதையும் எடுத்துக் கொண்டு வரத்தான் தோன்றும். பழைய பேப்ப ரோடு சேர்த்துக் கடையில் போடலாமே!

குழந்தை குட்டிகளோடு செல்கிறவர்களுக்கு, அதுவும் கைக் குழந்தையோடு பயணம் செய்கிறவர்களுக்குத் தின சரிப் பத்திரிகை எப்படியெல்லாம் உபயோகப்படுகிறது! கந்தைத் துணிகளையெல்லாம் சேர்த்துக் காகிதம் செய்கிறார் களாம். அந்தக் காகிதத்தில் துணியின் அம்சம் இருக்கத் தானே இருக்கிறது? ஆகையால் அதையே துணியாக எண் ணித் தாய்மார்கள் பயன்படுத்துவதில் என்ன தவறு?

எஸ். வி. வி. அவர்கள் பத்திரிகைகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அவர் அலுவலகத்துக்குப் போகும்போது அவர் மனைவி தயிருஞ்சாதத்தைப் பத்திரி கைக் காகிதத்தில் பொட்டலம் கட்டித் தருவாராம். ஒரு நாள் பொட்டலத்தைப் பிரித்தபோது இலை கிழிந்திருந்த படியால் சாதம் பிதுங்கிச் செய்தித் தாளில் ஒட்டியிருந்த தாம். அந்த இடத்தில் ஒரு மந்திரியினுடைய படம்! "மந்திரி வாயில் என் தயிருஞ்சாதம்!" என்று எழுதியிருந்தார். அவர் தயிருஞ்சாதத்தை மந்திரி சாப்பிட்டாலும் சாப்பிட லாம். என் கதை வேறு. நான் ஒரு முறை ஊருக்குப்போகும் போது ராத்திரியில் உண்ணும்படி என் மனைவி சாம்பார் சாதம் கட்டித் தந்தாள். மேலே பத்திரிகைத் தாள். நான்

ரெயில் வண்டியில் அதைப் பிரித்தேன். சாதம் இலையினின்றும் பிதுங்கிப் பத்திரிகையில் ஒட்டியிருந்தது. ஒரு வெங்காயத் தாளும் சிறிது சாதமும் ஒட்டியிருந்தன. அங்கே ஒரு படம். சரியாக அந்தப் படத்தில் உள்ளவர் வாயில்தான் வெங்காயம் புகுந்திருந்தது. படம் யாருடையது தெரியுமோ? வெங்காயத்தின் மணத்தையே அறியாத ஒரு சந்நியாசியின் படம்!

# புரியாத சங்கடம்

இரண்டு பேர் ஒரு சத்திரத்துத் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் தெலுங்கர்; அவருக்குத் தமிழ் தெரியாது. அவர் கையில் ஒரு நீண்ட தடி வைத்திருந்தார். அதன் ஒரு பக்கத்தில் ஒரு வளையம் இருந்தது.

மற்றொருவர் தமிழர். அவருக்குத் தெலுங்கு தெரியாது. அவர் காதில் கடுக்கன் அணிந்திருந்தார். இரண்டு பேரும் வயது முதிர்ந்தவர்கள்.

இரவு நேரம் அது. தெலுங்கர் தம் தலைமாட்டில் தடியை வைத்திருந்தார். சுவரோரமாக அதைப் படுக்க வைத்திருந்தார். வளையம் உள்ள பக்கத்தை வெளியே நீட்டி, மற்ற நுனியைத் தலைமாட்டில் வைத்துப் படுத்திருந்தார். வளையம் இருந்த நுனிக்குச் சற்றுத் தள்ளித் தமிழர் படுத்திருந்தார். அவர் சற்றே புரண்டார். தடியின் வளையம் நிமிர்ந்திருந்தது. புரண்டபோது அந்த வளையத்தில் கடுக்கன் மாட்டிக் கொண்டது. மறுபடியும் புரண்டபோது தடி அசைந்தது. தெலுங்கர் தடி அசைவதை அறிந்து, மற்றவர் எடுக்கிறாரோ என்று எண்ணி, "நாதிரா" (என்னுடையதடா) என்று தெலுங்கில் சொன்னார். கடுக்கன் அகப்பட்டுக்கொண்ட சங்கடத்தில் தமிழர், "காதுரா" என்றார். தெலுங்கில் காதுரா என்றால்

இல்லையடா என்று பொருள். காதுரா என்பதைக் கேட்ட தெலுங்கர், இவன் இல்லையென்கிறனே என்று ஆத்திரத்தோடு தடியை இழுத்தார். தமிழர், "ஐயையோ! காதுரா!" என்று அலறினர்.

ஒருவர் மொழியை ஒருவர் புரிந்து கொள்ளாததனால் வந்த சங்கடம் இது.

கன்னடம் பேசும் மாத்துவர்கள் வீட்டில் பெரிய விருந்து நடந்தது. பெரும்பாலும் கன்னடம் பேசுபவர்களே விருந்துண்டார்கள். அவர்களின் நடுவில் ஒரு தமிழர் இருந்தார். அவருக்குக் கன்னடம் தெரியாது. சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஒருவர் பாத்திரத்தில் எதையோ கொண்டு வந்து, "சாக்கா, பேக்கா" என்று கேட்டார். தமிழர் இரண்டு விதப் பட்சணங்களில் எது வேண்டுமென்று கேட்கிறார் என்று எண்ணிக் கொண்டார். "சாக்கில் ஒன்று போடு; பேக்கில் ஒன்று போடு" என்றார். பரிமாறினவருக்குத் தமிழும் தெரியும். அவர் பக்கென்று சிரித்து விட்டார். கன்னடத்தில் சாக்கா என்றால் போதுமா என்றும், பேக்கா என்றால் வேண்டுமா என்றும் பொருள். போதுமா, இன்னும் வேண்டுமா என்று பரிமாறினவர் கேட்டார். அவர் பேச்சுப் புரியாத சங்கடத்தால் தமிழர் இரண்டுவிதப் பண்டங்கள் என்று நினைத்துக்கொண்டார்.

கம்பரைப்பற்றிய கதைகளில் ஒன்று. அவர் சில காலம் தெலுங்கு தேசத்துக்குப் போய்த் தங்கினர். ஒரு நாள் இரவு ஒரு வீட்டுத் திண்ணையில் போய்ப் படுத்துக் கொண்டார். அந்த வீட்டுக்காரி திம்மி என்பவள். அவள் பாதிராத்திரியில் கதவைத் திறந்து பார்த்தாள். "ஏமிரா, ஓரி?" (என்னடா, நீ யார்?) என்று கேட்டாள். கம்பருக்குத் தெலுங்கு தெரியாது. திருதிரு என்று விழித்

தார். திம்மிக்குச் சந்தேகம் வந்துவிட்டது. "எந்துண்டி வஸ்தி?" (எங்கிருந்து வந்தாய்?) என்று மறுபடியும் கேட்டாள். அதற்கும் அவரால் பதில் சொல்ல முடியவில்லை. ஏதோ சைகை செய்தார். அவள் கோபமாகப் பதில் சொல்லிவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு போய்விட்டாள். இரவில் அவருக்குத் தாகம் ஏற்பட்டது. கதவைத் தட்டினார். திம்மி எழுந்து வந்து கதவைத் திறந்து நாய் போலச் சீறினாள்; என்ன என்னவோ தெலுங்கில் பேசி வைதாள். அவர் சைகையால் தாகம் என்பதைக் குறிப்பித்தார். அவள் அதைக் கவனிக்கவே இல்லை. படபடவென்று தெலுங்கில் பேசிவிட்டுக் கதவை மூடிக் கொண்டு போய்விட்டாள். இரவெல்லாம் கம்பருக்குத் தூக்கமே இல்லை. வேறிடத்துககுப் போய்ப் படுக்கலாம் என்றாலோ, தெரியாத ஊரில் எங்கே போவது? இங்கே ஒரு திம்மி வந்ததுபோல அங்கே ஒரு பொம்மி வந்தால் என்ன செய்வது? இவளாவது வார்த்தையளவிலே நின்றாள். அந்தப் பொம்மி கையில் எதையாவது எடுத்து வந்துவிட்டால்?

எப்பொழுது விடியும் என்று காத்திருந்து விடிந்தவுடன் அவர் புறப்பட்டுவிட்டார். அன்று இரவு மொழி தெரியாமல் தாம் பட்ட அவஸ்தையை ஒரு பாட்டிலே வைத்துப் பாடினார்.

"ஏமிரா வோரி என்பாள்;
எந்துண்டி வஸ்தி என்பாள்;
தாம்இராச் சொன்ன எல்லாம்
தலைகடை தெரிந்த தில்லை;
போம்இராச் சூழும் சோலை
பொரும்கொண்டைத் திம்மி கையில்
நாம்இராப் பட்ட பாடு
நமன்கையில் பாடு தானே!"

[இராச்சூழும் சோலை பொரும் கொண்டை-இரவைப் போல இருள் சூழ்ந்திருக்கும் சோலையைப் போன்ற அடர்ந்த கூந்தலை உடைய.]

திம்மி என்ற பொதுமகளோடு கம்பர் ஓரிரவைக் கழித்ததாகவும், அப்போது பட்ட அவஸ்தையைக் குறித்து இப்படிப் பாடியதாகவும் சிலர் சொல்லுவதுண்டு. எப்படி யானால் என்ன? பாஷை புரியாத சங்கடத்தில் அவர் அகப் பட்டுக் கொண்டு விழித்தார் என்பது உண்மை.

ஓர் ஆங்கிலேயர் பல ஆண்டுகளுக்கு முன்னால் திரு வல்லிக்கேணி ரோடில் நடந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது ஒரு சாஸ்திரிகள், ஏதோ அவசரமாகப் போகிற வர் வெகு வேகமாக அவரைக் கடந்து சென்றார், அந்த அவசரத்தில் அந்த வெள்ளைக்காரரை இடித்துக்கொண்டு போனார். அதனால் ஆங்கிலேயர் கையிலிருந்த பொருள் கீழே விழுந்து, அவருக்குக் கோபம் வந்துவிட்டது. ஆங் கிலத்தில் இரண்டு மூன்று வசைகளைச் சொன்னார். அதைக் கேட்ட சாஸ்திரிகளுக்கும் கோபம் வந்துவிட்டது. அவருக்கு அதிகமாக வசவு வார்த்தைகள் சொல்லிப் பழக்கம் இல்லை. என்றாலும் கோபம் கொண்டவராய். "கத்திரிக் காய், வாழைக்காய், புடலங்காய், பறங்கிக்காய், பூஷணிக் காய், அவரைக்காய், பாகற்காய்" என்று படபடவென்று சொன்னார். அவர் சொல்லும் தொனியினால் அவர் தம்மை வைகிறாரென்று எண்ணிக்கொண்டார் வெள்ளைக்காரர். அவருக்குக் கோபம் வரவில்லை; வியப்புத்தான் உண்டா யிற்று. "அடா! தமிழில் வைய இத்தனை வார்த்தைகள் இருக்கின்றனவா!" என்றுதான் அவர் ஆச்சரியப்பட் டாராம்.

கும்பகோணம் ஆஸ்பத்திரிக்கு ஒரு முதியவர் தம் பேரனை அழைத்துக் கொண்டு மருந்து வாங்கப் போனார். அவர் கிராமத்திலிருந்து வந்திருந்தார். ஆஸ்பத்திரியையே

பார்த்ததில்லை. டாக்டரிடம் உடம்பைக் காண்பித்தார். அவர் மருந்து எழுதிக் கொடுக்க, அதைக் கம்பவுண்டரிடம் காட்டி மருந்து வாங்கிக்கொண்டார். ஆஸ்பத்திரியையும் அங்குள்ள அமைப்புக்களையும் பார்த்து அவர் வியப்பில் மூழ்கியிருந்தார். வீட்டுக்குத் திரும்பும்போது தம் பேரனை ஆஸ்பத்திரியைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தார்.

"என் மார்பில் குழாய் வைத்துப் பார்த்தாரே, அவர் யார்?"

"அவர்தாம் ஸர்ஜன்."

"அவருக்கு என்ன சம்பளம்?"

"ஐந்நூறு ரூபாய் இருக்கும்."

"மருந்து கொடுத்தாரே; அவர் யார்?"

"அவர் கம்பவுண்டர்."

"அவருக்குச் சம்பளம்?"

"அறுபது ரூபாய் இருக்கும்."

"அட! அறுபது ரூபாய் வாங்குகிறவனை மரியாதை யோடு கம்பவுண்டர் என்கிறாய்; ஐந்நூறு ரூபாய் வாங்குகிற வரை ஸர்ஜன் என்று மரியாதையில்லாமல் ஒருமையில் சொல்கிறாயே!"

"பின்னே எப்படிச் சொல்ல வேண்டும், தாத்தா?"

"பெரிய உத்தியோகஸ்தரை ஸர்ஜர் என்றும், மருந்து தந்தவரைக் கம்பவுண்டன் என்றும் சொல்" என்று தாத்தா சொன்னபோது பேரன் சிரிக்காமல் என்ன செய் வான்? பாஷை புரியாத சங்கடந்தானே இதுவும்?

என்னுடைய ஆசிரியப் பெருமானாகிய மகாமகோ பாத்தியாய டாக்டர் ஐயரவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது.

12

ஆயினும், அவர்கள் கல்லூரியில் பாடம் சொல்லிக் கொடுத்தபோது மாணுக்கர்கள் மிகவும் ஆர்வத்தோடு கேட்பார்கள். ஆங்கிலப் பேராசிரியருக்கு உள்ள மதிப்பு அவர்களுக்கும் இருந்தது.

ஒரு நாள் அவர்கள் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். செய்யுட்பாடம் நடந்து கொண்டிருந்தது. 'அண்டருலகத்தெவரும்' என்று பாட்டில் ஒரு பகுதி வந்தது. ஐயரவர்கள் ஒரு மாணுக்கனைப் பார்த்து, "அண்டர் உலகம் என்றல் என்ன?" என்று கேட்டார்கள். அவன் உடனே, "அடியில் உள்ள பாதாளலோகம்" என்றன். அண்டர் என்பது தேவரைக் குறிக்கும். அண்டர் உலகம் என்றல் தேவலோகம் என்று பொருள். ஆனல் அந்த மாணுக்கனே, 'பாதாள உலகம்' என்றன். அது கேட்டு மாணுக்கர்கள் சிரித்தார்கள். அவன் ஏன் அப்படிச் சொல்கிறன் என்று ஐயரவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு பையன் அந்த மாணுக்கன் சொன்னதற்குரிய காரணத்தை எடுத்துச் சொன்னபோதுதான் உண்மை விளங்கிற்று. ஆங்கிலத்தில் அண்டர் (under) என்றல் அடி என்று பொருள். ஆகவே அண்டர் உலகம் என்பதற்கு அடியில் உள்ள பாதாள லோகம் என்று அவன் பொருள் சொல்லியிருக்கிறன்.

மற்றெரு சமயம் மாநிலக் கல்லூரிக்குக் கவர்னர் வந்தார். ஐயரவர்கள் அங்கே தமிழாசிரியராக இருந்தார்கள். அவர்கள் தமிழிலுள்ள பழைய நூல்களைப் பதிப்பித்து நாட்டில் ஓர் இலக்கிய எழுச்சியை உண்டு பண்ணியவர்கள் என்று கவர்னர் அறிவார். ஆகவே அவர்கள் பாடம் சொல்லிக்கொண்டிருந்த அறைக்கு வந்தார். அவர் வரக்கூடும் என்று எண்ணிய ஆசிரியப் பிரான் சில ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு வந்து மேசையில்

வைத்திருந்தார்கள். கவர்னர் அவர்களைக் கண்டு, "இப்போது என்ன ஆராய்ச்சி செய்து வருகிறீர்கள்?" என்று கேட்டார். பதிப்பைப் பற்றி விசாரித்தார். அப்போது ஆங்கிலப் பேராசிரியர் மொழிபெயர்ப்பாளராக உடனிருந்து, ஒருவர் சொல்வதை மற்றொருவருக்கு எடுத்துச் சொல்லி வந்தார். ஐயரவர்கள் ஓர் ஏட்டுச் சுவடியை எடுத்துக் காட்டினார்கள். அதைப் பிரித்தும் காட்டினார்கள். கவர்னர், "இந்தச் சுவடிகள் உங்களுக்கு எங்கே கிடைத்தன?" என்று ஆங்கிலத்தில் கேட்டார். சுவடி என்று சொல்லாமல் பனை ஓலைகள் என்ற தொடரை (cudjan leaves)ச் சொன்னார். மொழிபெயர்த்த பேராசிரியருக்கு அந்த ஆங்கிலத் தொடருக்குரிய தமிழ் வார்த்தை தோன்றவில்லை. "இந்தச் **சருகுகளை** எல்லாம் எங்கே சம்பாதித்தீர்கள்?" என்று மொழிபெயர்த்தார். பனை ஓலையைச் சருகு என்று அவர் சொன்னதும் ஐயரவர்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அடக்கிக் கொண்டார்கள். பாவம்! எதற்கு எது சரியான வார்த்தை என்று புரியாத சங்கடத்தால் பேராசிரியர் ஓலைச் சுவடியைச் சருகாக்கி விட்டார்.

நான் பல ஆண்டுகளுக்குமுன் முதல் முதலாகப் பம்பாய்க்குச் சென்றேன். பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் என்னைப் பேச அழைத்திருந்தார்கள். பம்பாய் நகரைச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற விருப்பம் எனக்கு உண்டாயிற்று. மாலையில்தான் கூட்டம் நடந்தது. ஆகையால் பகல் நேரங்களில் ஒவ்வொரு நாளும் சில அன்பர்கள் எனக்காக லீவு எடுத்துக்கொண்டு என்னுடன் வந்து நகரத்தைச் சுற்றிக் காட்டினார்கள்.

ஒரு நாள் மலபார் ஹில்லுக்குப் போனோம். அங்கே மகாத்மா காந்தி தங்கியிருந்த பிர்லா மாளிகைக்குப் போக

எண்ணினேன். ஒரு பங்களாவில் காவல் காத்து நின்ற தர்வானிடம் நண்பர்கள் ஹிந்தியில் பிர்லா மாளிகை எங் கிருக்கிறதென்று கேட்டார்கள். அவன் ஓரிடத்தை அடையாளம் சொன்னான். அதன்படி போய்ப் பார்த்தால் அது பிர்லா மாளிகை அல்ல; ஜின்னா இருந்த இல்லம். தர்வானிடம் எங்களுக்குக் கோபம் கோபமாக வந்தது. நாங்கள் கேட்டதொன்று, அவன் சொன்னது வேறொன் றாக இருந்ததனால் கோபம். திரும்பி வந்தோம். எங்க ளுக்குத் தவறான வழியைக் காட்டிய தர்வான் நின்ற பங்களா வழியாகவே மீண்டோம். அப்போது, "நான் ஒரு வேடிக்கை செய்கிறேன். நீங்கள் சிரிக்காமல் கவனி யுங்கள்" என்று சொல்லிவிட்டு அந்தத் தர்வானைப் பார்த் துச் சிரித்தபடியே பேசத் தொடங்கினேன். "முட்டாள் பயலே! நாங்கள் ஒன்று கேட்க நீ ஒன்று சொன்னாயே! மூடா!" என்று சிரித்துக்கொண்டே சொன்னேன். நான் முகமலர்ச்சியோடு சிரித்தபடியே சொல் வதைக் கண்டு அவன் தன்னைப் பாராட்டுவதாக எண்ணிக் கொண்டான். "அச்சா! அச்சா!" என்று புன்ன கையுடன் தலையை ஆட்டினான். அந்த இடத்தை விட்டுப் போன பிறகு உடன் வந்த நண்பர்கள் அடக்கி வைத்தி ருந்த சிரிப்பைக் கொட்டினார்கள். நான் பேசுவது அந்தக் காவலனுக்குப் புரிந்திருந்தால் என்னைச் சும்மா விட்டிருப் பானா?

"தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு" என்று சொல் கிறார்கள். ஒரே மொழியைப் பேசுகிறவர்களிடையே கூடச் சில பகுதிகளில் இருப்பவர் பேசும் சில பேச்சுக்கள் மற்றப் பகுதியினருக்கு விளங்குவதில்லை. சென்னை ரிக்ஷாக்காரர், "கீது" என்றால் திருநெல்வேலிக்காரர், "இருக்கிறது" என்று புரிந்து கொள்ள முடிகிறதில்லை.

நான் சிறு பையனாக இருந்தபோது சம்பந்த முதலியார் எழுதிய நாடகங்களைப் படித்தேன். எங்கள் ஊர் சேலம் மாவட்டத்தில் உள்ள மோகனூர். சென்னைப் பக்கத்துப் பேச்சுப் புரியாது. சம்பந்த முதலியார் நாடகங்களில் உரையாடலினிடையே, 'போய்க்கினு, வந்துக்கினு, பேசிக்கினே' என்று வரும். முதலில் அவை எனக்கு விளங்கவில்லை. சென்னைக்கு வந்த பிறகே, 'போய்க்கிட்டு' என்று எங்கள் ஊரில் சொல்வதையே 'போய்க்கினு' என்று சொல்கிறார்கள் என்று புரிந்தது. மேலும் ஆராய்கையில் தெலுங்கு மொழியில், 'போய்க்கொனி' என்று வழங்குவதும் தெலுங்கு நாட்டை அடுத்த சென்னையில் 'போய்க்கினு' என்று வழங்குவதும் ஒன்றுக்கொன்று உறவுள்ளன என்ற தொடர்பும் தெரிய வந்தது.

யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் தமிழர்கள். அவர்கள் பேசும் தமிழில் பல சொற்கள் நமக்கு விளங்காதவை. நாம் 'பேசிக் கொண்டிருந்தேன்' என்பதை அவர்கள் 'கதைத்துக் கொண்டிருந்தேன்' என்பார்கள்: இங்கே கதைத்தல் என்றால் கதைவிடுதல் அல்லது பொய் கூறுதல் என்று பொருள்படும். பாரதியார் கூட அந்தப் பொருளில்தான், 'உறவென்றும் நட்பென்றும் கதைக்கிறான்' என்று ஆள்கிறார். 'பேசினான்' என்றால் அங்கே வைதான் என்று பொருள் கொள்வார்கள், 'தூங்கினான்' என்று உறங்குவதைச் சொல்கிறோம். அவர்கள் 'நித்திரை கொண்டான்' என்றே சொல்வார்கள். தூங்கினான் என்பதற்குத் தூக்குப் போட்டுக்கொண்டான் என்று அவர்கள் அர்த்தம் பண்ணிக் கொள்வார்கள். 'சோப்பு நான் உபயோகிப்பதில்லை' என்று நாம் சொல்வதை அவர்கள், 'சோப்புப் பாவிப்பதில்லை' என்பார்கள்.

முதல் முதலாக நான் இலங்கைக்குப் போயிருந்த போது யாழ்ப்பாணத்துக்கும் போனேன். அங்கே நீர்

வேலி என்னும் இடத்தில் உள்ள இராசேந்திர குருக்கள் என்பவர் வீட்டில் தங்கியிருந்தேன். அதன்பின் எப்போது யாழ்ப்பாணம் போனாலும் அவர் வீட்டிலேதான் தங்கு வேன். அவர் எனக்கு நெருங்கிய நண்பராகி விட்டார்.

முதல் முதலில் அங்கே போயிருந்தபோது இராசேந் திர குருக்களிடம் அவருடைய குடும்ப நலனைப்பற்றி விசா ரித்தேன். அவர் தம் சகோதர சகோதரிகளைப்பற்றியும் தந்தையாரைப் பற்றியும் சொன்னார். பேச்சினிடையே, "ஒரு தங்கை மோசம் போய்விட்டாள்" என்றார். அதைக் கேட்டு எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'அவள் ஒழுக்கம் தவறி எங்கோ ஓடிவிட்டாள் என்றல்லவா தோன்றுகிறது? அதைப் போய் என்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் என்ன?' என்று யோசித்தேன். அதற்கு மேல் அதைப்பற்றித் தூண்டித் துருவிக் கேட்கக் கூடாது என்று சும்மா இருந்துவிட்டேன்.

பிறகுதான் உண்மை தெரிய வந்தது. யாழ்ப்பாணத் துக்காரர் பேச்சு வழக்கைப் புரிந்துகொண்ட பிறகு, மோசம் போனாள் என்பது இறந்து போனாள் என்ற பொருளில் வருகிறது என்பது தெளிவாயிற்று. மோட்சம் போனாள் என்பதுதான் அப்படியாயிற்றுப் போலும்! நான் எண்ணியது என்ன? உண்மையான பொருள் என்ன? புரிந்து கொள்ளாத சங்கடத்தினால் நான் முதலில் எப்படி யெல்லாம் தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன்!

இலங்கைக்குக் கலைமகள் பத்திரிகை போகிறது. அங்கே ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். ஒருமுறை எங்கள் அலுவலக மானேஜர் ஏஜெண்டுகளுக்கு ஒரு சுற்றறிக்கை

விட்டார். "உங்கள் ஊரில் இன்னும் அதிகமான பிரதிகள் விற்க ஏற்பாடு செய்யவேண்டும்" என்பது அதன் சாரம். அங்கங்கே உள்ள ஏஜெண்டுகள் தங்கள் யோசனைகளைத் தெரிவித்திருந்தார்கள். யாழ்ப்பாணத்து ஏஜெண்டும் ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

மானேஜர் அதை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்தார். "இதைப் பாருங்கள் ஸார்! இந்த ஏஜெண்டு போக்கிரித்தனமாக எழுதியிருப்பதைப் பாருங்கள்" என்று கடிதத்தைக் காட்டினார்.

"எல்லாரும் பாவிக்கும் புடைவை விற்கும் கடைகளிலும் பத்திரிகைகளைக் கொடுத்து விற்பனவு செய்யச் செய்கிறோம். இன்னும் மிச்சம்பேர் வாங்கும்படி தெண்டிக்கிறோம்!" என்று அந்தக் கடிதத்தில் இருந்தது.

"பாவிக்கும் புடைவை விற்கிறதாவது! வாங்கும்படி தெண்டிக்கிறதாவது! இவர்கள் என்ன போலீஸ்காரர்களா?" என்று மானேஜர் சற்றே கோபக்குரலோடு சொன்னார்.

நான் வாய்விட்டுச் சிரித்தேன். "எல்லாரும் உபயோகப்படுத்தும் ஆடைகளை விற்கும் பாபுலர்ஜவுளிக்கடைகளில் பத்திரிகைகளைக் கொடுத்து விற்பனை செய்யச் செய்கிறோம்; இன்னும் அதிகம் பேர் வாங்கும்படி முயற்சி செய்கிறோம் என்ற அர்த்தத்தில் அல்லவா அவர் எழுதியிருக்கிறார்?" என்றேன் நான். புடைவை என்பது எல்லா ஆடைகளையும் குறிக்க வழங்கும் சொல் என்றும், விற்பனை என்பதே யாழ்ப்பாணத்தில்விற்பனவு என்று ஆயிற்றென்றும்,மிச்சம் என்பதற்குப் பொருள் அதிகம் என்றும், தெண்டிக்கிறோம் என்பது முயற்சி செய்கிறோம் என்ற பொருளுடைய

தென்றும் மானேஜர் புரிந்துகொள்ளவில்லை. அதனுல் அவருக்குக் கோபம் வந்தது. புரியாத சங்கடந்தானே இது?

அவ்வளவு தூரம் போவானேன்? நாமெல்லாம் 'பாட்டுப் படிக்கிருன்' என்ருல் புத்தகத்தில் உள்ள பாட்டை வாசிக்கிருன் என்றுதான் அர்த்தம் பண்ணிக் கொள்வோம். ஆனுல் திருநெல்வேலிக்காரர்களோ பாட்டுப் பாடுவதையே, 'பாட்டுப் படிக்கிருன்' என்கிருர்கள்: பாரதியாரே, "அமுது பொங்கித் ததும்புநற் **கீதம் படிப்பான்** என்று கண்ணன் பாட்டிலே அந்தத் திருநெல்வேலி முத்திரையை வைத்திருக்கிருர். அதைப் புரிந்து கொண்டால் தானே தெளிவு பிறக்கும்?

# தூங்குகிற சுகம்!

நான் யாரையும் தூங்குமூஞ்சி என்று வைகிறதில்லை. தூங்குவது என்னவோ தவறான காரியம் என்று எண்ணி னால்தானே அப்படி வையத் தோன்றும்? மனிதன் அநுப விக்கும் சுகங்களில் நன்றாக அயர்ந்து தூங்கும் சுகத்துக்கு இணையாக ஏதாவது உண்டா? சில வகையான சுகங்களைச் சில பருவத்தில்தான் அநுபவிக்க முடியும். ஆனால் குழந்தை முதல் கிழவன் வரைக்கும் எல்லாரும் துயிலினால் சுகம் அடைகிறார்கள். பசியாற உணவு உண்ணுவதும் தன்னை மறந்து தூங்குவதும் கண்கண்ட சுகத்தைத் தருபவை. தெரியாமலா தாயுமானவர், "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்று சொன்னார்?

எல்லாருமே இரவில் நன்றாக உறங்கிச் சுகம் பெறு கிறார்கள் என்று சொல்ல முடியாது. தூக்கம் வரவில்லையே என்று ஏங்குகிறவர்களே பல பேர். யாராவது தொழிலாளி வெட்டின கட்டை போலச் சுகமாகப் படுத்து உறங்கும் போது அத்தகையவர்கள் கண்டால் அவர்களுக்கு எத்தனை பொறாமை உண்டாகிறது, தெரியுமா? "இந்த மகானுபாவ னைப் போலத் தூங்க நாம் கொடுத்து வைக்கவில்லையே!" என்று அங்கலாய்ப்பார்கள்.

மனத்தைக் கட்டுப்படுத்தியவர்களுக்கு எந்தச் சமயத்திப் நினைத்தாலும் தூக்கம் வருமென்று சொல்கிறார்கள். நெப்

போலியன் குதிரையின்மேல் இருந்தபடியே தூங்குவானும். மகாத்மா காந்தி நினைத்தபோது நினைத்த அளவுக்குத் தூங்கு வாராம். நித்திராதேவி அவர்கள் ஆணைக்கு அடங்கி எப்படி நடந்தாள் என்ற சூட்சுமம் தெரியவில்லை.

நன்றாகத் தூக்கம் வருகிறவர்களுக்கு மெத்தை வேண் டும் என்பது இல்லை; தலையணை வேண்டுமென்பதில்லை. எந்த இடத்திலும் அவர்கள் தூங்கி விடுகிறார்கள். ஆனால் பல பேருக்கு அப்படி இல்லை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாகப் படுத்தால்தான் உறக்கம் வரும். வெளியூர்களுக் குப் போகும் பழக்கம் இல்லாதவர்களுக்கு இடம் மாறிப் படுத்தால் தூக்கம் வராது. சிலருக்கு இரண்டு மூன்று தலை யணைகளை உயரமாக வைத்துக் கொண்டு படுத்தால்தான் துயில் கொள்ள முடியும். சிலருக்கு அதிக உயரமே கூடாது. சிலர் கையையே தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டு தூங்கி விடுகிறார்கள். அவர்கள் மகா பாக்கியசாலிகள். சிலர் தங்கள் தலைமேல் தலையணையை வைத்தபடியே தூங்குவதை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் தலைக்குக் கீழும் தலை யணை இருக்கும்; தலைக்கு மேலும் இருக்கும்.

சிலர் இடப்பக்கமாக ஒருக்களித்துத் தூங்குவார்கள்; சிலர் வலப்பக்கமாகத் திரும்பி உறங்குவார்கள். மல்லாக்கப் படுத்தால்தான் சிலருக்குத் தூக்கம் வரும். சிலர் குப்புறப் படுத்துக்கொண்டு உறங்குகிறார்கள்; அப்படி உறங்குவது உடம்புக்கு நல்லதல்ல என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இடப்பக்கமாகத் திரும்பிப் படுப்பதுதான் ஆண்களுக்கு நல்லதாம்.

"இடது கையில் படுப்போம்" என்று தேரையர் சொல் கிறார். ஆனால் அந்தத் தேரையரைக் கேட்டுக் கொண்டா நமக்குத் தூக்கம் வருகிறது?

சில பேருக்குத் தூக்கம் வருவிக்கும் மருந்து புத்தகங்கள். புத்தகத்தைப் படித்துக் கொண்டே தூங்கிப் போய்விடுவார்கள். எங்கள் ஆசிரியப் பெருமான் டாக்டர் ஐயரவர்கள் நண்பகலில் உண்டவுடன் சிறிது படுத்து இளைப்பாறுவது வழக்கம். அப்போது யாரையாவது பாடம் கேட்கச் சொல்வார்கள். பாடம் சொல்லிக் கொண்டே உறங்கி விடுவார்கள்; அல்லது யாரையாவது எந்தச் செய்யுள் நூலையாவது படிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டே துயிலில் ஆழ்ந்து விடுவார்கள்.

சிலருக்கு வெளிச்சம் இருந்தால் உறக்கமே வராது. பகலில் தூங்க வேண்டுமானால், கண்ணைக் கட்டிக் கொண்டு தூங்குவார்கள். இன்னும் சிலருக்கு இராத்திரியில் விளக்கு இருந்தால்தான் தூக்கம் வரும். ஒரு கணவனுக்கு விளக்கு இருந்தால் உறக்கம் வராது. மனைவிக்கோ விளக்கு இருக்க வேண்டும். அவன் எழுந்தால் விளக்கை அணைத்து விடுவான். அவன் மனைவி எழுந்தால் மறுபடியும் விளக்கை ஏற்றி விடுவாள். இப்படி மாறி மாறிச் செய்தால் இரவு முழுவதும் அவர்கள் தொடர்ந்து தூங்கமுடியுமா?

எப்போதும் வெளியூர்களுக்கு ரெயிலில் போகிறவர்களிற் சிலர் வண்டியில் படுத்தவுடன் தூங்கிவிடுகிறார்கள். ரெயிலின் சப்தம் அவர்களுக்குத் தாலாட்டுப் போல இருக்கும் போலும்! அவர்கள் தம் வீட்டில் உறங்கும்போது யாரையாவது ஒரு கட்டையை எடுத்துத் தட்டிக் கொண்டிருக்கும்படி செய்துதான் தூங்க முடியும் என்று நினைக்கிறேன். சத்தம் இல்லா விட்டால் அவர்களால் தூங்க முடியாதே!

தூங்கும்போது குறட்டை விடுகிறவர்கள் தம்மை மறந்து தூங்குகிறவர்களாக இருப்பார்கள். அந்தக் குறட்டையின் சுரபேதத்தாலேயே அவர்களுடைய தூக்கத்தின்

செறிவை அளவெடுத்து விடலாம். குறட்டை நின்றால் தூக்கத்தின் மயக்கம் சிறிது குறைந்திருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம். குறட்டை விடுவதில்தான் எத்தனை விதமான பேதங்கள்! சிலபேர் ராக ஆலாபனை மாதிரி நீண்டு குறட்டை விடுவார்கள். சிலபேர் துரிதகால சுரம்போல ஒலியெழுப்புவார்கள். சிலர் குறட்டை விடும்போது மோட்டார் சைக்கிள் விடுவதுபோல இருக்கும். அம்மியில் அரைப்பது போன்ற ஒலியை எழுப்புகிறவர்களும் இருக்கிறார்கள்

என்னுடைய இளம் பிராயத்தில் எனக்கு உண்டான. அநுபவத்தைச் சொல்கிறேன். நான் ஓர் ஊருக்குப் போயிருந்தேன். அந்த ஊரில் திருடர் பயம் அதிகம் என்று கேள்விப் பட்டிருந்தேன் இராத்திரி நான் படுத்துத் தூங்கினேன். நள்ளிரவில் ஏதோ சத்தம் கேட்டு விழிப்புக் கொடுத்தது. கரகர என்ற ஒலி கேட்டது. பிறகு கடுக்கடுக் என்ற தொனி வந்தது. யாரோ திருடர்கள் வந்து கன்னம் போடுகிறார்கள் என்றே எனக்குப் பட்டது. நடுநடுவிலே கிசுகிசு கிசுகிசு என்ற ஓசை கேட்டது. இரண்டு மூன்று திருடர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள், இரகசியமாக என்று எண்ணினேன். சிறுபிள்ளை நான். எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. யாரையாவது எழுப்பலாம் என்றால், அந்தத் திருடர்கள் என்னை அமிழ்த்தி வாயில் துணி அடைத்து விட்டால்? சத்தம் கேட்கக் கேட்க என் வயிறு குழம்பிக் கொண்டே இருந்தது. 'நிச்சயமாகத் திருடர்கள் கன்னம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்; விடியற் காலையில் என்ன என்ன திருட்டுப் போயிற்றென்று தெரியவரும்' என்று எண்ணிப் பலமாக மூச்சுக்கூட விடாமல் படுத்திருந்தேன். எப்போதப்பா விடியும் என்று காத்திருந்தேன்.

விடிந்தது. அந்த வீட்டில் இருந்த என் நண்பனுடைய சிறுவனிடம், "இராத்திரி திருடன் வந்தானா? என்ன திருட்

டுப் போயிற்று?'' என்று கேட்டேன். அவன் திருதிருவென்று விழித்தான். "நீ என்ன சொல்கிறாய்? திருடன் வருகிறதாவது!'' என்றான். "பின்னே இராத்திரி கன்னம் போடுகிற சத்தமும் கிசுகிசு என்று பேசுகிற சத்தமும் கேட்கவில்லையா?'' என்றேன். அவன் சற்று நிதானித்தான். பிறகு இடியிடி என்று சிரித்தான்.

"எங்கள் மாமா ஊரிலிருந்து வந்திருக்கிறார். அவர் போட்ட குறட்டையைக் கேட்டு நீ பயந்து போயிருக்கிறாய்!'' என்று அவன் கூறியபோதுதான் எனக்கு உண்மை விளங்கிற்று. 'அப்படி எப்படி அவரால் இடைவிடாமல் நிதானமாகக் குறட்டை விடமுடிகிறது?' என்று நினைத்தேன்.

குறட்டை விடுபவர்களின் மனைவிமார் இரவு நேரங்களில் மிகவும் துன்பப்படுவார்கள் என்று நினைத்திருந்தேன். குறட்டை விடும் நண்பர் ஒருவரையே கேட்டேன். "ஏன் ஐயா, உம்முடைய குறட்டையைச் சகித்துக்கொண்டு எப்படி ஐயா உம்முடைய மனைவி தூங்குகிறாள்?'' என்றேன். அவர் என்ன சொன்னார் தெரியுமோ? "ஆரம்ப காலத்தில் கொஞ்சம் கஷ்டப்பட்டாள். பிறகு பழகிவிட்டது. அது மட்டுமல்ல. இப்போதெல்லாம் நான் குறட்டை விட்டால்தான் அவளுக்கு நன்றாகத் தூக்கம் வருகிறதாம்!'' என்றாரே பார்க்கலாம். இவர்கள் அல்லவா உண்மையான வாழ்க்கைத் துணைவர்கள்?

தூக்கம் வருவதற்காக எத்தனையோ விதமான மருந்துகள் வந்திருக்கின்றன. வாழ்க்கையில் அளவுக்கு மிஞ்சிய சுறுசுறுப்புள்ளவர்களுக்கு உறக்கம் எளிதில் வருகிறதில்லை. அவர்களின் கெடுபிடியால் தூக்கம் அவர்களை விட்டு எங்கேயோ ஓடி விடுகிறது. அத்தகைய பெரிய மனிதர்கள்

ஒவ்வொரு நாளும் இஞ்செக்ஷன் போட்டுக் கொண்டுதான் உறங்குவார்கள்.

தூக்கம் வராமல் இரவுப் பொழுதைக் கழிப்பது போன்ற சங்கடம் வேறு இல்லை. காதலர்கள் ஒருவரை ஒருவர் பிரிந்தால் இரவெல்லாம் தூங்க மாட்டார்களாம். இராத்திரி ஒரு யுகம் போல இருக்குமாம். இலக்கியங்களில் இந்த உறக்கமில்லாத அநுபவத்தைப்பற்றி நூற்றுக் கணக்கில் பாடல்கள் இருக்கின்றன. கம்பராமாயணத்தில் ராமனும் சீதையும் சந்தித்த பிறகு இரவு முழுவதும் அவர்கள் தூங்கவில்லையாம். கொட்டுக் கொட்டென்று விழித்திருந்து பொழுதைப் போக்கினார்களாம்.

இராமாயணத்தில் இரண்டு பாத்திரங்கள். ஒருவன் பதினான்கு வருஷம் தூங்காமலே இருந்தானாம். எப்படித் தான் இருந்தானோ? லக்ஷ்மணனை உறங்காவில்லி என்று சொல்கிறார்கள். ஒரு நாள் சரியானபடி தூக்கம் இல்லா விட்டால் மறுநாள் நமக்குக் கொட்டாவியாக வருகிறது. ஒரு வேலை ஓடுவதில்லை. ஏதோ சொப்பனத்தில் நடப்பது போல இருக்கிறது.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் எழுதிய திகம்பர சாமியார் என்ற நாவலில் படித்த ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. ஒருவரிடமிருந்து உண்மையைக் கக்குவதற்காக இரண்டு மூன்று நாள் தூங்க விடாமலே செய்தார்களாம். அவர் தம்மை அறியாமலே தூக்கம் இல்லாத மயக்கத்தில் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாராம்.

இராமாயணத்தில் மற்றொரு பாத்திரம் கும்பகர்ணன். அவன் தூங்குவதற்காகவே பிறந்தவன். மற்ற ராட்சசர்களைவிட அவன் நிச்சயமாகக் குறைவாகத்தான் பாவம் செய்திருக்கவேண்டும். அவன் வாழ்நாளில் பெரும் பகுதி

தூக்கத்தில்தானே கழிந்துவிட்டது? பாவம் செய்வதற்குரிய சந்தர்ப்பம் அவனுக்குக் குறைவுதானே? உண்மையைச் சொல்லப் போனால், தூங்கும்போது திருடனானாலும் குழந்தையானாலும் சந்நியாசியானாலும் கொலைகாரனானாலும் எல்லோரும் ஒரே நிலையில், எந்தப் பாவமும் செய்யாமல் இருக்கிறார்கள். தூக்கத்துக்கு அத்தனை மகிமை!

தூக்கம் வராத சங்கடத்தைப் போலப் பெரிய துன்பம் வேறு இல்லை என்று சொன்னேன். அநுபவித்தவர்களுக்கு அந்த வேதனை நன்றாகப் புரியும். எல்லாரும் தூங்குகிறார்கள். நாம் மட்டும் விழித்துக்கொண்டிருக்கிறோம். கடிகாரத்தின் டக் டக் ஒலி தெளிவாகக் கேட்கிறது. எப்போதோ இடையில் சிறிது கண் அயர்கிறோம். மறுபடியும் விழிப்பு. இராத்திரிப்போது நீள்கிற மாதிரி தெரிகிறது. கடிகாரம் மணி அடிக்கிறது. ஒவ்வொன்றாக எண்ணுகிறோம். நான்கு மணி ஆகியிருக்கும் என்று எண்ணுகிறோம். சீக்கிரம் விடிந்து விடும் என்ற நம்பிக்கை. மணி அடித்துக் கொண்டே இருக்கிறது. நான்கைத் தாண்டிவிட்டது. ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது—இன்னும் முடியவில்லை. பத்து, பதினொன்று, பன்னிரண்டு. சே! இப்போது தான் பன்னிரண்டு ஆகிறது. இன்னும் விடிய ஐந்து மணி நேரம் இருக்கிறது. அதற்குள் சிறிது மயக்கம். மறுபடியும் மணி காதில் விழுகிறது. ஒரே மணி அடிக்கிறது. 'ஓ! சற்றே உறங்கிவிட்டோம். நாலரை மணியாக இருக்கும்; அடுத்தது ஐந்து மணிதான்' என்று எண்ணி ஆவலோடு விடியற்காலத்தை எதிர்பார்க்கிறோம். மறுபடியும் ஒரு மணி அடிக்கிறது. 'ஓ முன்பு அடித்தது ஒரு மணி; இது ஒன்றரை மணி' என்று நினைத்து வேதனை அடைகிறோம். அடுத்தது இரண்டு மணி அடிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். மறுபடியும் அந்தப் பாழும் ஒற்றை மணியே அடிக்கிறது. அப்போதுதான் உண்மை தெரிய

வருகிறது. பன்னிரண்டு மணி அடித்த பிறகு நாம் ஒன்றும் அதிகமாகத் தூங்கிவிடவில்லை. சில நிமிஷங்கள் கண் அயர்ந்திருக்கிறோம். தொடர்ந்து பன்னிரண்டரை மணி, ஒரு மணி, ஒன்றரை மணி என்று மூன்று முறை அந்த ஒற்றை மணி கேட்கிறது.

அப்படியானால் விடிவதற்கு இன்னும் நெடுநேரம் இருக்கிறதே!

இப்படி அவஸ்தைப்பட்டவர்களுக்குத் தெரியும், தூக்கத்தின் சுகம் இன்னதென்று. "தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக் காலம்?" என்று யாரோ பாடியிருக்கிறார்கள். அந்தத் தூங்காத தூக்கமெல்லாம் நமக்கு வேண்டாம். நமக்குத் 'தூங்கித் தூங்கியே சுகம்' பெற வேண்டும். அந்தக் காலமே நல்ல காலம்.

# தலையும் தவலையும்

"நேற்று இந்த வீட்டுக்குத் திருடன் வந்தான். இங்கே உள்ள அத்தையம்மாளின் தலை போயிற்று" என்று கடிதம் வந்தது. சம்பந்தப்பட்டவர்கள் அடித்துப் புடைத்துக் கொண்டு கடிதம் எங்கிருந்து வந்ததோ அந்த ஊருக்கு ஓடினார்கள். அத்தையம்மாள் கொலை செய்யப்பட்டாள் என்ற எண்ணத்தோடு போனார்கள். ஆனால் அந்த வீட்டுக்குள் நுழைந்தபோது அங்கே துயரச் சூழ்நிலையே இல்லை. அத்தையம்மாளே அவர்களை எதிர்கொண்டழைத்தாள். அவளைக் கண்டவுடன் சென்றவர்கள் எல்லாம் திடுக்கிட்டுப் போனார்கள்.

உண்மை இதுதான். அத்தையம்மாள் தான் வாழ்ந்த காலத்தில் ஒரு தவலையை வாங்கி வைத்துப் பாதுகாத்தாள். அவள் வாழ்விழந்தபிறகு அந்தத் தவலையோடு தன் பிறந்த வீட்டுக்கு வந்தாள். அங்கும் அதைக் கண்போலப் பாதுகாத்தாள். அந்தத் தவலையைத் திருடன் திருடிக்கொண்டு போய்விட்டான். கடிதம் எழுதின பையன், 'தவலை போயிற்று' என்பதற்குப் பதிலாக, 'தலை போயிற்று' என்று எழுதிவிட்டான். அதனால் வந்த விளைவு இது!

பேச்சிலும் எழுத்திலும் இப்படி எழுத்துப் பிழைகள் நேரும்போது எவ்வளவோ சங்கடங்கள் உண்டாகின்றன. இப்போதெல்லாம் அச்சுத் தொழில் மிகவும் விரிந்து

விட்டது. எதை எடுத்தாலும் அச்சுப் போட்டுவிடுகிறார்கள். எழுதுகிறவர்கள் பிழையுடன் எழுதினாலும் அதைப் பதிப்பிக்கிறவர்கள் பிழைகளைத் திருத்தி அழகாக அச்சிட வேண்டும். பிழை திருத்தாமல் அச்சுப் பிழைகளுடன் இருக்கும் புத்தகத்தைப் பார்த்தால் எனக்கு அம்மை வார்த்த முகந்தான் நினைவுக்கு வருகிறது.

சிறந்த பதிப்பாசிரியர்கள் அச்சுப் பிழைகளைக் கவனமாகத் திருத்துவார்கள். அச்சுப் பிழைகளை 'அச்சுப் பிசாசு' (Printer's Devil) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அச்சுக் கோப்பவரோ, அக்சடிப்பவரோ என்ன செய்வார்? 'புரூப்' பார்க்கிறவர் நன்றாகப் பார்த்தால் புத்தகம் பிழையில்லாமல் இருக்கும். பழைய காலத்தில் அச்சகங்களில் நன்றாகப் படித்தவர்களே அச்சுக் கோப்பார்கள். அதனால் பிழைகள் இருப்பதில்லை. அந்தக் காலத்தில் இன்னார் அச்சுக் கோத்தார் என்று புத்தகத்திலே வெளியிட்டிருப்பார்கள். அச்சுத் தொழிலுக்கும் மதிப்புண்டு என்பதை அது காட்டும். இப்போதோ அப்படி எதிர்பார்க்க முடியாது. அவசர அடியில் தவலை போவதற்குத் தலை போவதே அதிகமாக இருக்கிறது.

என்னுடைய ஆசிரியப்பிரான் அந்தக் காலத்தில் கலைமகளில் முதல் கட்டுரையை எழுதி வந்தார்கள். ஒரு கட்டுரையில், 'மாலை நேரத்தில் சுமங்கலிகள் விளக்கேற்றினார்கள்' என்று எழுதியிருந்தார்கள். ஆனால் 'புரூப்'பில் சுமங்கலிகள் அமங்கலிகள் ஆகிவிட்டார்கள். 'பாரம் புரூப்' வரைக்கும் அந்தப் பிழை வந்துவிட்டது. வேகமாக எழுதும்போது சு என்பதற்கும் அ என்பதற்கும் வேறுபாடு தெரியாது. அச்சுக் கோப்பவர் இயந்திரம்போல வேலை செய்கிறவராகையால் பொருளில் சிந்தை செலுத்தாமல் அ என்றே நினைத்துக்கொண்டு அடுக்கிவிட்டார். 'அமங்கலிகள் விளக்கேற்றினார்கள்' என்று அமைந்து

விட்டது. அந்தத் தவறு எப்படியோ இரண்டு முறை என் கண்ணிலும் உதவியாசிரியர் கண்ணிலும் படாமல் போய் விட்டது. 'பாரம் புரூப்' வந்தபோதுதான் கண்ணில் பட்டது. அப்போதும் படாமல் இருந்தால் என்ன ஆகி யிருக்கும்?

நான் எழுதிய புத்தகம் ஒன்றில் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்ற சேர மன்னனைப் பற்றிய செய்தி வருகிறது. அவனுக்கு வானவரம்பன் என்பது ஒரு சிறப்புப் பெயர். அவனுடைய புகழும் ஆணையும் வானம் வரையில் சென்றவை என்ற கருத்தையுடையது அந்தப் பெயர். புத்தகத்தை என் நண்பர்களும் நானும் 'புரூப்' பார்த்தோம். புத்தகம் வெளியாயிற்று அதைப் புரட்டிப் பார்த்தேன். வானவரம்பன் என்ற பெயர் எப்படி மாறியிருந்தது தெரியுமா? **வானர வம்பன்** என்று இருந்தது! வான வரம்பன் எங்கே? வானர வம்பன் எங்கே? இரண்டு எழுத்துக்கள் இடம் மாறி விட்டதனால் இந்த விபரீதம் நேர்ந்துவிட்டது.

மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டாம். 'மூணும் மூறை பகர்த்தும் போழ், ஸமுத்ரம் மூத்ரமாகுன்னு' என்பது அது. 'மூன்றும் முறை எழுதும்போது ஸமுத்ரம் மூத்ரமாகும்' என்பது பொருள். ஏட்டுச் சுவடியைப் பார்த்து ஒருவன் பிரதி பண்ணினன். அதில் ஸமுத்ரம் என்ற வார்த்தை இருந்தது. எழுதுகிற வேகத்தில் அவன் ஸகரத்தை விட்டு விட்டு முத்ரம் என்று எழுதிவிட்டான். அந்தப் பிரதியைப் பார்த்து மற்றொருவன் படியெடுத்தான். அவன் முத்ரம் என்ற வார்த்தையைப் பார்த்தான். அப்படி ஒரு வார்த்தை இல்லையே என்று மூத்ரம் என்று எழுதி விட்டான். மூலப்பிரதி ஒன்று, படியெடுத்த பிரதிகள் இரண்டு. மூலத்தில் ஸமுத்ரமாக இருந்தது மூன்றுவது அவதாரத்தில் மூத்ரமாகிவிட்டது. இரண்டும் உப்புநீர்

தானே என்று வேடிக்கையாகச் சமாதானம் சொல்லலாம். ஆனால் பொருள் எப்படியெல்லாம் விபரீதமாகிவிடுகிறது! இதனால்தான், "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்ற பழமொழி எழுந்தது. எழுதினவன் செய்தது பிரதிபேதம்; படித்தவன் பண்ணினது பாடபேதம்.

சொற்பொழிவாற்றுகிறவர்கள் பாடம் பண்ணின பாட்டில் ஒரு சொல்லையோ தொடரையோ நினைவு வராமையால் மாற்றிச் சொல்லிவிடுவார்கள். அதைக் கேட்டவர்கள் அதுவும் ஒரு பாடம் என்று எண்ணுவார்கள். அப்படித்தான் பாடபேதங்கள் வந்திருக்கின்றன.

எழுதும்போது லகரத்துக்கு ளகரமும் ளகரத்துக்கு லகரமும் வந்துவிட்டால் நேர் மாறான பொருள் உண்டாகும் இடம் பல. தெரியாத பையன் கடிதம் எழுதுகிறான். 'உங்கள் உடம்பைப் பார்த்துக் **கொல்ல** வேண்டும்' என்று எழுதுகிறான். பார்த்துக் **கொள்ள** வேண்டும் என்று எழுத நினைத்தவன், பிழையாக அப்படி எழுதிவிடுகிறான். இரண்டுக்கும் எத்தனை வேறுபாடு!

பேச்சிலேதான் நாம் எத்தனை பிழைகளைப் பண்ணுகிறோம்! தமிழுக்கே சிறப்பான எழுத்து என்று நாம் பெருமையடித்துக் கொள்ளும் ழகரம் பலபேருக்குச் சரியாக வருவதில்லை. அதைச் சிறப்பு ழகரம் என்று சிலர் சொல்வார்கள். ஒரு பேராசிரியர் சிறப்பு ழகரத்தைப்பற்றிப் பேசுவார். "தமிளுக்கே உரிய சிறப்பு ளகரம் எப்படியெல்லாம் கவிஞர்கள் வாக்கில் அளகாக வருகிறது! குளலும் யாளுமென் றிளையன குளைய மளலை மென்மொளி கிளிக்கிருந்தளிக்கின்ற மகளிர் என்பதில் சிறப்பு ளகரம் எவ்வளவு எளிலாக அமைந்திருக்கிறது!" என்பார். அவருக்கே தாம் தவறாகச் சொல்கிறோமே என்று தெரியாது.

ழகரத்தைச் சரியாக உச்சரிப்பதாகவே அவர் பாவித்துக் கொள்வார். திருநெல்வேலி மாநிலத்தில் கிழவி கிளவியா கிருள். சென்னையிலோ கெய்வியாகிருள்; பழம் பயம் ஆகிறது. ழகரம் இவர்கள் வாயில் நுழையாது என்ப தில்லை. வேண்டாத இடத்தில் அது வந்து நிற்கும். பைப் என்று தண்ணீர்க் குழாயைச் சொல்கிறோம். அதைச் சென்னையில் 'பழுப்பு' என்று பலர் சொல்கிருர்கள். குழாயைக் குயாய் என்று சொல்லும் அவர்கள் திருவாக்கில் வேண்டாத இடத்தில் ழகரம் வந்து தோன்றுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சிலபேர் திருவாயில் ழகரம் ஷகரம் ஆகிவிடுகிறது. திருவிழாவைத் திருவிஷா என்கி ருர்கள். உஷஸ் என்பதை உழையென்றும் கஷாயம் என்பதைக் கியாழம் என்றும் தமிழ்ப் புலவர்கள் ஆள்வ துண்டு. ஷகரத்துக்கு ழகரம் மாற்ருக வரும். அதற்குப் பழி வாங்குவதுபோல இவர்கள் ழகரத்துக்கு ஷகரத்தைக் கொண்டுவந்து, திருவிழாவைத் திருவிஷா ஆக்கிவிடு கிருர்கள்!

ணகரத்துக்கும் னகரத்துக்கும் வேறுபாடு தெரியாமல் சிலர் பேசுகிருர்கள். "செங்கோல் மண்ணன் ஆளும் மன்னில் குடிமக்கள் நன்ருக வாழ்வார்கள்" என்பதில் ணகரமும் னகரமும் தம்முள் பரிவர்த்தனை செய்துகொள் கின்றன!

இப்படி வந்த பிழைகளில் சில நாளடைவில் நிலையாக நின்றுவிடுகின்றன. இப்போதெல்லாம் நாம் உளுந்து என்றுதான் சொல்கிறோம். ஆனால் அதன் இயல்பான உருவம் 'உழுந்து' என்பதுதான். இப்போதோ 'உழுந்து' என்று சொன்னால் தவறுபோலத் தோன்றுகிறது; 'அழுத் தந்திருத்தமாக உழுத்தம்பருப்பு என்ருன்' என்று பரிகாசம் செய்கிறோம்.

தவருன உச்சரிப்பைக் குறித்துப் பரிகாசமாக வழங்கும் உதாரணங்கள் சில உண்டு. அதிகமாக வட சொற்களைத் தவருகச் சேர்த்துப் பேசும் பேர்வழிகளைப் பரிகசிக்க ஒரு வாக்கியம் வழங்குகிறது. "ஆஷ்டுக்குட்டி வேஷ்டியைத் தின்கிறது; ஓஷ்டு ஓஷ்டு என்கிருன்" என்பது அது. அப்படியே மிகவும் சுத்தமாகத் தமிழ் பேசுவதாக எண்ணிக்கொண்டு பேசுகிறவர்களைப் பரிகசிக்க எழுந்த வாக்கியம் இது: "கன்றுக்குட்டி மன்றைத் தின்று மன்று மன்ருப் பேன்றது."

பல ஆண்டுகளுக்கு முன் சேந்தமங்கலம் என்ற ஊரில் சில இளைஞர்களுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லி வந்தேன். அவர்கள் வாயில் லகர ழகர ளகரங்கள் சரியாய் வர வில்லை. அவர்களுக்கு அந்த எழுத்துக்களின் உச்சரிப்புச் சரியாக உச்சரிக்கும்படி செய்ய என்ன வழி என்று ஆராய்ச்சி செய்தேன். அருணுசல புராணத்தில் ஓர் அருமையான பாடல் கிடைத்தது. உண்ணுமுலையம்மை துதி அது. அதில் நிறைய லகர ளகர ழகரங்கள் வரு கின்றன. அந்தப் பாடலைப் பலமுறை அவர்களைப் படிக்கச் சொன்னேன். கடைசியில் சரியானபடி உச்சரிக்க முடிந் தது. அந்தப் பாடல் வருமாறு,

**காரொழுகும் குழலாளைக் கருணைவழிந்**
**தொழுகும்இரு கடைக்கண் ணுளை**
**மூரலிள நிலவொழுகப் புழுகொழுக**
**அழகொழுகும் முகத்தி ஞளை**
**வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்**
**தெரியாத மருங்கு லாளைச்**
**சீரொழுகும் பதத்தாளை அருணைஉண்ணு**
**முலையாளைச் சிந்தை செய்வாம்.**

இந்தப் பாட்டை ஒருவர் சரியாகச் சொல்லத் தெரிந்து கொண்டால் லகர ளகர ழகர பேதங்கள் நன்ருக விளங்

கும்படி உச்சரிக்க முடியும். அதுவும், "மூரலிள நில வொழுகப் புழுகொழுக அழகொழுகும் முகத்தினை" என்ற இரண்டாவதடி அவர்கள் நாக்கில் புரண்டால் ரோட்ரோலர் புரண்ட சாலை மாதிரி உச்சரிப்புச் சரியாகி விடும்.

அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில், "முருகன் புகழை எழுத்துப் பிழையறக் கற்க வேண்டும்" என்று ஒரு பாட்டில் சொல்கிறார்:

**அழித்துப் பிறக்கவொட் டாஅயில்**
**வேலன் கவியையன்பால்**
**எழுத்துப் பிழையறக் கற்கின்றி**
**லீர்! எரி மூண்டதென்ன**
**விழித்துப் புகையெழப் பொங்குவெங்**
**கூற்றன் விடுங்கயிற்றால்**
**கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன்**
**றோகவி கற்கின்றதே?**

என்பது அந்தப் பாட்டு. இந்தப் பாட்டில் அவர் ஏழு ழகரங்களை வைத்திருக்கிறார். இதை முதல் பாடமாகப் படித்துவிட்டு அருணாசல புராணக் கவியை அடுத்த பாடமாகப் படித்தால் ஓரளவு எழுத்துப் பிழையின்றி ழகர ளகர லகரங்களை உச்சரிக்க முடியும் என்று எண்ணுகிறேன்.

# பேசத் தெரியாதவர்களும் தெரிந்தவர்களும்

"பேசப் போகிறாயா, சாகப் போகிறாயா"? என்று ஒரு பழமொழி உண்டு. 'மேடையிலேறிப் பேசுவது சங்கடம்; அதைவிடச் சாவது மேல்' என்ற கருத்தை உடையது அது. ஆனால் சில பேர் சாமானியமாக ஒருவரோடு ஒருவர் பேசும்போதே உளறிக் கொட்டிக் கிளறி மூடு கிறார்கள். இன்னும் சிலபேர் பேசும்போது, "ஏண்டா இவன் பேசுகிறான்?" என்று நினைக்கும்படி, சந்தர்ப்பத் துக்கு ஒவ்வாதபடி பேசுகிறார்கள். சில சமயங்களில் அசம்பா விதமாகவே பேசிவிடுகிறார்கள். அப்படிப் பேசி வருகிறவர் களைப்பார்த்தால், 'யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால், சோகாப்பார் சொல்லிழுக்குப் பட்டு" என்று சொன்ன திருவள்ளுவர் வாயில் ஒரு வீசைச் சர்க்கரையை, மன்னிக்க வேண்டும், ஒரு கிலோ சர்க்கரையைப் போட வேண்டுமென்று தோன்றுகிறது.

ஒரு மனிதர் தம்முடைய பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்தார். பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண்ணைப் பார்ப்பதற்கு ஒரு நாளைக் குறிப்பிட்டு எழுதி னார்கள். பெண்ணைப் பெற்றவர் அந்த நாள் சௌகரியப் படாதென்றும், அடுத்த வாரம் ஒரு நாளில் வரலாமென்றும் எழுதினார். அப்படியே அவர்கள் பெண்ணைப் பார்க்க

மறு வாரம் வந்தார்கள். பேச்சுவாக்கில், "போன வாரம் வேறு வேலை இருந்ததோ?" என்று பெண்ணைப் பெற்ற தகப்பனாரைக் கேட்டார், பிள்ளையைப் பெற்றவர். அந்த மனிதர், "அந்த இழவை ஏன் கேட்கிறீர்கள்? என் பங்காளி ஒரு பிசாசு வந்து சேர்ந்தான். ஏதோ ஒரு கேஸ் சம்பந்தமாக இங்கே வந்து உட்கார்ந்துகொண்டு என் பிராணனையே வாங்கிவிட்டான். அவனை அனுப்புவதற்குள் என் தாலி அறுந்து போயிற்று" என்று ஆத்திரத்தோடு சொன்னார்.

பிள்ளை வீட்டுக்காரர்கள் இந்தப் பேச்சைக் கேட்ட பிற்பாடு அங்கே சம்பந்தம் செய்ய விரும்புவார்களா? மணம் பேச வந்தவர்களிடம் இழவு என்றும் தாலி அறுந்து போச்சு என்றும் பேசின பிறகு அங்கே அவர்கள் இருக்கத் தான் முடியுமா?

பாலக்காட்டுப் பக்கம் ஒரு பிராமணச் செல்வர் வைதிக சிரத்தை உடையவர். வேத அத்தியயனம் பண்ணா விட்டாலும் வேத பாரங்கதராகிய ஒரு முதியவரிடம் உபநிஷத் முதலியவற்றைத் தெரிந்து கொண்டார். அந்தப் பெரியவரைத் தம்முடைய குருவாக மதித்து மரியாதை காட்டி வந்தார்.

அந்தச் செல்வர் ஒரு பெரிய வீடு கட்டினார். நிறைய மூங்கில்களைக் கொண்டு வீட்டை அமைத்தார். வீடு கட்டின பிறகு கிருகப்பிரவேசத்தன்று தம்முடைய குருவை வருவித்து உபசரித்தார். வீட்டின் பகுதிகளைக் காட்டினார். எங்கே பார்த்தாலும் மூங்கில் மயமாக இருந்தது. அந்தப் பெரியவர் சம்ஸ்கிருதம் கலந்தே பேசுகிறவர். மூங்கிலுக்கு வம்சம் என்று வடமொழியில் பெயர். அவர், "நிரம்ப வம்சக்ஷயம் ஆகியிருக்கும்போல் இருக்கிறதே!" என்றார். "நிறைய மூங்கில்களை வெட்டிக் கொண்டு வந்திருப்பீர்கள்" என்ற அர்த்தத்தில் அப்படிப் பேசினார். ஆனால் அதற்கு

அமங்கலமான பொருள் ஒன்றும் இருப்பதை அவர் கவனிக்கவில்லை. அவருக்குச் சமஸ்கிருதச் சொற்களை உபயோகிப்பதில் அவ்வளவு ஆசை!

கேட்ட செல்வர், 'இதென்னடா அபசகுனமாக இருக்கிறது; இவர் வம்சக்ஷயம் என்று சொல்கிறாரே!' என்று உள்ளூற வருந்தினார். பிறகு உபசாரம் செய்து குருநாதரை அனுப்பி விட்டார்.

குருநாதர் கூறிய வார்த்தைகள் கூரிய வாளாக அவர் உள்ளத்தை அறுத்தன. தம்முடைய வம்சம் நாசமாகி விடுமோ என்று பயந்தார். ஆகவே அந்த வீட்டை விற்று விட்டு வேறு ஒரு புதிய வீடு கட்டினார். அந்த வீட்டில் எல்லாம் தேக்குமரங்களையே பயன்படுத்தினார். ஒரு மூங்கில் கூட இல்லை.

வீடு கட்டி முடிந்ததும் கிருகப் பிரவேசம் நடந்தது. அப்போதும் தம்முடைய குருநாதரை அழைத்து வந்து காட்டினார். "இதில் ஒரு மூங்கில்கூட இல்லை" என்று சொன்னார். அந்தப் பிராமணர் என்ன சொன்னார் தெரியுமோ? "அப்படியா? இந்த வீடு நிர்வம்சமாக இருக்கிறதா?" என்றார். மூங்கிலே இல்லாதது என்ற பொருளில் தான் அவர் சொன்னார். ஆனால் அவர் முன்னே சொன்ன வார்த்தையில் சனி இருந்ததென்றால் இந்த வார்த்தையில் நஞ்சல்லவா இருக்கிறது?

ஒரு வீட்டில் ஏதோ விருந்து; சிறிய விருந்துதான்; ஐந்தாறு பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது வேறு ஒரு நண்பர் கட்டியிருக்கும் பங்களாவைப் பற்றிய பேச்சு வந்தது. "அந்தப் பங்களாவில் வரவேற்பு அறை இருக்கிறதே, அதை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்!" என்றார் ஒருவர். "அவர் பூஜை அறையைப் பார்த்தீர்களோ? அது ஒரு சிறிய கோவில். அப்

படியே விழுந்து நமஸ்காரம் பண்ணத் தோன்றும்'' என்றார் மற்றொருவர். "அவர் புத்தகங்களுக்காகவே ஓர் அறையை வைத்திருக்கிறார். சுவரோடே அலமாரிகளைப் பொருத்தியிருக்கிறார். அங்கே போனால் ஏதோ நூல் நிலையத்துக்குள் இருப்பதுபோலத் தோன்றும்'' என்றார் வேறொருவர். அப்போது ஒருவர் சொன்னார்: "அதெல்லாம் இருக்கட்டும் ஐயா! அந்தக் கக்கூஸைப் பார்த்தால் போதும், ஆ! எத்தனை வசதி...''

மற்றவர்களுக்குச் சாப்பாடு செல்லுமா? எப்போது எதைப் பேசுவது என்று தெரிந்து பேசுகிறவரா அவர்? அவர் சொன்னது உண்மையாக இருக்கலாம். ஆனால் சாப்பிடுகிறபோது நினைப்பூட்டுகிற செய்தியா அது?

பழைய காலத்திலிருந்து வழங்குகிற கதை ஒன்று உண்டு. ஒரு செட்டியாரும் ஒரு முரடனும் பயணப்பட்டுப் போனார்கள். செட்டியார் மடி நிறையப் பணம் வைத்திருந்தார். முரடன் தன் மேல்துணியில் ஒரு ரூபாயை முடிந்து வைத்திருந்தான்.

போகும்போது இருட்டிவிட்டது. ஓரிடத்தில் இரவைக் கழிக்க எண்ணினார்கள். செட்டியார் மறைவாக ஓரிடத்தில் படுத்துக் கொண்டார். முரடன் திறந்த வெளியில் படுத்துக் கொண்டான். நள்ளிரவில் திருடர்கள் அந்த வழியே வந்தார்கள், இருட்டு அதிகமாக இருந்தது வழியில் படுத்திருந்த முரடனை ஒரு திருடன் இடறினான். "இங்கே ஏதோ கட்டை கிடக்கிறது'' என்றான். விழித்துக் கொண்ட முரடன் ரோஷத்துடன், "கட்டைதான் ரூபாயை முடிந்து கொண்டு கிடக்குமோ?'' என்று கேட்டான். திருடன் அவனை அடித்து அந்த ரூபாவை அவிழ்த்துக் கொண்டான். அந்தத் திருடன் அந்த ரூபாய் செல்லுமா என்று தட்டிப் பார்த்தானும். தான் வைத்திருந்த

ரூபாயைச் சந்தேகிக்கிறான் திருடன் என்று எண்ணி மனம் பொறுமல் முரடனுக்குக் கோபம் வந்தது. "ஏய், என்ன ஐயா பார்க்கிறாய்? செல்லும் செல்லாததற்குச் செட்டியாரைக் கேள். அதோ அங்கே அவர் படுத்திருக்கிறார்" என்றானாம். மேலே என்ன நடந்தது என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அந்த முரடன் சொன்னது எல்லாம் உண்மை. ஆனால் சொல்ல வேண்டியது அவசியந்தானா?

பேராசிரியர் சுந்தரராமையர் என்பவர் பெரிய மேதாவி; கும்பகோணம் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். காந்தியடிகள் சத்தியாக்கிரகம் ஆரம்பித்த காலத்தில் அவரைச் சுந்தரராமையருக்கு அவ்வளவாகப் பிடிக்காது. ஏதோ ஒரு கூட்டத்தில் அவர் பேசினார். "இந்தக் காந்தி என்ன சொல்கிறான் என்றால் இப்படியெல்லாம் சொல்கிறான்" என்று காந்தியடிகளை ஒருமையாகச் சொன்னார். கூட்டத்தில் இருந்த ஒருவர் அப்படிப் பேசக்கூடாது என்று சொன்னார். அப்போது பேராசிரியர், "நான் கடவுளையே அவன் இவன் என்றுதான் சொல்கிறேன்" என்றார். ஆட்சேபித்தவர் உடனே, "டேய், சுந்தரராமா! பேசினது போதும், உட்காரடா" என்றார். பேச்சுக்குப் பதில் பேச்சு வந்துவிட்டது!

இப்படி இல்லாமல் சிலருடைய பேச்சுக் கேட்கக் கேட்க இனிமையாக இருக்கும். விரோதம்போல முதலில் தோன்றிப் பிறகு வியப்பையும் இன்பத்தையும் உண்டாக்கும்படி பேசுவார் சிலர். அந்தப் பேச்சில் முதலில் எத்தனைக் கெத்தனை ஐயமும் கோபமும் உண்டாகுமோ பிறகு அவ்வளவும் மாறி மகிழ்ச்சியும் மதிப்பும் உண்டாகும்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் என்பவர் பரமாசாரியராகத் திகழ்ந்த காலம் அது. மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

ஆதீன வித்துவானாக விளங்கினார். மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் மாணவராக அந்தக் கவிஞரிடம் படித்து வந்தார்.

சுப்பிரமணிய தேசிகர் எப்போதும் கற்றவர்கள் இடையில் இருந்து காலத்தைக் கழிப்பார். ஒரு நாள் வடமொழி தென்மொழிப் புலவர்கள் சூழ ஆதீனத் தலைவர் வீற்றிருந்தார். அவர் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், பக்தி, கொடை யாவற்றிலும் சிறந்தவர். அவையில் இருந்தவர்கள் தத்தமக்குத் தோன்றியபடி அவரைப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். அவருடைய தமிழ்ப் புலமையை ஒருவர் புகழ்ந்தார்; வடமொழி அறிவை மற்றொருவர் எடுத்துரைத்தார்; பூஜை செய்யும் சிறப்பை வேறொருவர் பாராட்டினார். இப்படி ஐந்தாறு பேர் சிறப்பித்துப் பேசினார்கள்.

அந்தக் கூட்டத்தில் அக்கினிலிங்க சாஸ்திரிகள் என்று ஒருவர் இருந்தார். அவர் முதியவர். அவர் ஒன்றும் பேசவில்லை. அருகில் இருந்த ஒருவர், "நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே?" என்று அவரைக் கேட்டார். "எல்லோரும் சொல்லட்டும்; பிறகு சொல்கிறேன்" என்றார். பலரும் பேசி முடித்த பிறகு அவர் பேசத் தொடங்கினார்.

"இதுவரைக்கும் எல்லாரும் நம் மகா சந்நிதானத்தின் பெருமைகளையே எடுத்துச் சொன்னார்கள். எல்லாம் சரிதான். ஆனால் இவர்களால் முடியாதது ஒன்று உண்டு. அந்த விஷயத்தில் இவர்களை விட முன் இருந்த சந்நிதானம் கெட்டிக்காரர்" என்றார்.

அதைக் கேட்டு எல்லோரும், "என்ன இப்படிப் பேசுகிறார்?" என்று அவரையே உற்றுப் பார்த்தார்கள்.

அவர் சற்றே கனைத்துக்கொண்டார். பிறகு, "நான் சொல்வதைக் கேட்டு, இப்படிப் பேசுவது அநுசிதம் என்று பலரும் நினைக்கலாம். ஆனால் உண்மையைச் சொல்லத் தானே வேண்டும்? எனக்கு மூடி மறைக்கத் தெரியாது" என்று சொல்லிச் சிறிதே நிறுத்தினார்.

மற்றவர்களுக்கு ஆவலும் ஆத்திரமும் ஒருங்கே எழுந்தன. அவர் தொடர்ந்தார்:

"இவர்களைக் கண்டுபிடித்துத் தமக்குப்பிறகு பண்டார சந்நிதிகளாக வரவேண்டுமென்று முன் இருந்த மகாசந்நிதானம் தேர்ந்தெடுத்ததே, அது எவ்வளவு பெரிய காரியம்? அப்படி இவர்களால் செய்ய முடியுமா? இவர்களைப்போல வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியுமா?" என்று கேட்டபோது அவையிலுள்ள அத்தனை பேரும் 'ஹாஹா!' என்று ஆரவாரித்தார்கள். அத்தனை பேருடைய பாராட்டையும் அந்தக் கிழவர் பேச்சு விழுங்கிவிட்டது.

சுப்பிரமணிய தேசிகரே மிகவும் இனிமையாகப் பேசுகிறவர். ஒருசமயம் திருவாங்கூர் திவானாக இருந்த மாதவராவ் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வந்திருந்தார். ஆதீனத் தலைவர் அவரை வரவேற்று உபசரித்தார். பொன்னாடை போர்த்துக் கவுரவித்தார். பிறகு, "ராயரவர்கள் எத்தனையோ இடங்களில் எவ்வளவோ மரியாதைகளைப் பெற்றிருக்கக்கூடும். ஆனால் நாம் போர்த்திய இந்த ஆடையே எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கும். அப்படி இருக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்" என்றார்.

அதைக் கேட்ட திவானுக்குச் சற்றே முகம் சிணுங்கியது. 'என்னடா இவர் தம்முடைய பொன்னாடையைத் தாமே பாராட்டிக் கொள்கிறார்?' என்று நினைத்தார்.

அப்போது, "ராயரவர்கள் நாம் சொன்னதைப்பற்றி ஆலோசிக்கிறாற்போல் இருக்கிறது. தாங்கள் பெற்ற

தோடா, பொன்னுடை முதலியவற்றையெல்லாம் வைத்துக் கட்ட இது உபயோகமாக இருக்கும் என்ற எண்ணத் தைத்தான் சொன்னேம். எவ்வளவோ அருமையான துப்பாட்டாக்களை யெல்லாம் வாங்கியிருப்பீர்களே! அவற்றைக் கட்டுவதற்குச் சாமான்யமான ஆடை ஒன்று வேண்டாமா?'' என்றபோதுதான் தேசிகருடைய சாதுர்யம் அங்கிருந்த யாவருக்கும் புலப்பட்டது.

ஒருவன் வீட்டில் தன் மனைவி உணவு படைக்க உண்ணுகிருன். அப்போது கடுக்கென்று கல் அகப்படு கிறது. கோபத்தால், "என்ன இப்படிக் கல்லைப் போட் டிருக்கிருய்?'' என்ருல் அந்தப் பெண்மணி முகம் வாடி விடும். அவள் கண்ணில் நீர் துளிக்கும்.

சுவையாகப் பேசுகிறவன் ஒருவன் அத்தகைய சந்தர்ப் பத்தில் என்ன சொன்னுன் தெரியுமா! "ஆஹா! அந்தக் காலத்தில் அநசூயை நாரதர் கொடுத்த இரும்புக் கடலையை வறுத்துத் தந்தாளாம். நீ கல்லையே சமைத்து விட்டாயே!'' என்ருன். அதைக் கேட்ட அந்தப் பெண்மணி புன்முறுவல் பூத்து, "போங்கோ' என்று கூறி, தலையைத் திருப்பிக் கொண்டாள். அப்போது அந்த முகத்தில் நாணமும் மலர்ச் சியும் விரிந்தன.

இரண்டு ஆடவர்களும் சொன்ன கருத்து ஒன்றுதான்; உணவிலே கல் இருக்கிறது என்பதைத்தான் இருவரும் சொன்னுர்கள். ஆனல் முன்னவன் சொல்லையே கல்லாகப் போட்டான். பின்னவனே கல்லையே குழைத்துச் சுவை ஊட்டிவிட்டான். அவனல்லவா பேசத் தெரிந்தவன்?

# டிரிங் டிரிங்!

அன்று அந்த நண்பர் வந்திருக்கிருரா, இல்லையா என்பதை அறிந்து கொள்ள வழியில்லை. அவரைப் பார்க்க வேண்டியது அவசியமாக இருந்தது. நேரே போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று டாக்ஸியில் ஏறிக்கொண்டு போனேன். அவர் வரவில்லை. அவர் வந்து தங்கும் இடம் ஒரு டாக்டர் வீடு. டாக்டரிடம் அவர் வந்தாரா என்று கேட்டபோது, "அவர் எங்கே ஸார், சொன்னபடி வருகிருர்? நீங்கள் மயிலாப்பூரிலிருந்து வீணுக வந்து அலைவது தான் மிச்சம். டெலிபோன் பண்ணிக் கேட்டிருந்தால் நான் சொல்லியிருப்பேனே! பாவம்! உங்களுக்கு வீண் அலைச்சல்" என்ருர்.

"டெலிபோன் இருக்கிற இடம் தேடிப்போய்ப் பேச வேண்டுமே!" என்று முணுமுணுத்தேன்.

வேறு ஒரு சமயம், அவசரமாக ரெயிலுக்குப் போக வேண்டியிருந்தது. ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருந்தேன். அதை ஒரேயடியாக முடித்து விடவேண்டும் என்று தோன்றியது. அதை முடிப்பதாக இருந்தால் ரெயிலுக்குப் போக முடியாது. எங்கும் மழை பெய்து பல இடங்களில் உடைப்பு எடுத்திருந்ததனுல் சரியான நேரத்தில் ரெயில்கள் புறப்படுவதில்லை, வருவதில்லை என்று பத்திரிகையில் பார்த்தேன். அப்படியானுல் நான் புறப்

பட வேண்டிய வண்டியும் தாமதமாகப் புறப்படுமா? எத்தனை மணி கழித்துப் புறப்படும்? ஒன்றும் தெரிய வில்லை. யாரையாவது போய்க் கேட்டுவரச் சொல்லலாம் என்றால், எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்திலேயா இருக்கிறது? ஆறு மைல் போக வேண்டும். எழுதினதைப் பாதியில் நிறுத்திவிட்டுப் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டேன். அங்கே போனால், இரண்டு மணி கழித்தே ரெயில் புறப்படும் என்று தெரிந்தது. பிளாட்பாரத்தையே என் அறையாக்கிக்கொண்டு எழுத உட்கார முடியுமா? இது வீட்டிலேயே தெரிந்திருந்தால் எழுதி முடித்துக்கொண்டு வந்திருக்கலாமே என்று தோன்றியது. வீட்டிலே தெரிந்திருந்தால்தானே?

'டெலிபோன் இருந்தால் ரெயில் புறப்படும் நேரத்தைத் திட்டமாகத் தெரிந்து கொள்ளலாம்' என்று ஒரு நினைவு வந்தது.

இப்படி எத்தனையோ சமயங்களில் டெலிபோன் இல்லாக் குறை பெருங்குறையென்று தோன்றலாயிற்று. டெலிபோன் இருந்தால் இருந்த இடத்திலிருந்தே நண்பர் களுடன் பேசலாம். அவசரமாக அச்சேறும் புத்தகத்தில் இன்ன பிழையைத் திருத்த வேண்டுமென்று போனிலே சொல்லலாம். மிகவும் அவசரமாக இருந்தால் வெளியூரில் உள்ள நண்பர்களுடன் டிரங்க் டெலிபோனில் பேசலாம். இப்படி நூற்றுக்கு மேற்பட்ட அநுகூலங்கள் டெலிபோனால் கிடைத்துவிடும் என்பதை எண்ணிப் பார்த்தேன். டெலிபோன் இல்லாமல் வாழ்நாளை வீணுக்கு வதாகவே பட்டது. அலைச்சல், பணச்செலவு, வீண் காலம் போக்குதல், நினைத்ததைச் செய்யமுடியாத சங்கடம் இத்தனை இடையூறுகளும் டெலிபோன் என்னும் ஒரே வரத்தால் போய்விடும் என்பதை நான் உணர்ந்து கொண் டேன்.

'டெலிபோன் வேண்டும்; நான் பொதுநல வேலைகளில் ஈடுபட்டவன். சொற்பொழிவாற்றுபவன்' என்று என் பிரதாபங்களையெல்லாம் எழுதி விண்ணப்பம் செய்து கொண்டேன். நான் எழுதியவற்றை ஒப்புக்கொண்டு எனக்கு ஒரு டெலிபோன் கொடுத்துவிட்டார்கள்.

டெலிபோன் என் வீட்டுக்கு வந்த அன்று ஏதோ ஒரு தேவதையே பிரசன்னமானது போன்ற உற்சாகம் எனக்கு. ஒரு பெருமிதம்; இனிமேல் உலகம் அத்தனையோடும் தொடர்பு வைத்துக்கொண்டு விடலாம் என்று ஒரு கற்பனை. முதல் நாள் டைரெக்டரியைப் பார்த்துப் பார்த்து எனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் பேசினேன். எனக்கு டெலிபோன் வந்துவிட்டதை வலியச் சொன்னேன். "நல்ல காரியம்; இனி எனக்கும் அலைச்சல் குறைவு" என்று சிலர் சொன்னார்கள். "இத்தனை நாள் வைத்துக் கொள்ளாதது பெரிய தப்பு" என்று நெருங்கிய நண்பர் ஒருவர் செல்லமாகக் கடிந்து கொண்டார்.

எங்கேயாவது வெளியிலே கூட்டங்களுக்குப்போவேன். யாராவது, "உங்களைப் பார்க்கவேண்டும், பார்க்க வேண்டும் என்று எண்ணுகிறேன்; ஒழியவே இல்லை. எப்போது வந்தால் சௌகரியமாக இருக்கும்?" என்பார். "நீங்கள் வந்து அலைய வேண்டிய அவசியமில்லை. டெலிபோனிலே பேசலாம்; எனக்கு டெலிபோன் இருக்கிறது" என்று சொல்லி டெலிபோன் எண்ணையும் சொல்வேன்.

எங்காவது டெலிபோன் உள்ள இடத்துக்குப் போனால், "கொஞ்சம் டெலிபோனில் பேசலாமா?" என்று கேட்பேன்; "தாராளமாகப்பேசுங்கள்" என்பார்கள். நான் என் வீட்டுக்கு டெலிபோன் பண்ணுவேன், என் மனைவி, "ஹலோ" என்று மெல்லிய குரலில் பேசுவாள். "யாராவது வந்தார்களா? டெலிபோன் ஏதாவது வந்ததா?" என்று

கேட்பேன். அவள் சிரித்துக் கொண்டே, "ஒன்றும் இல்லை" என்பாள்.

நான் இல்லாதபோது டெலிபோன் மணி அடித்தால் குழந்தைகள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு ஓடிப் போய் டெலிபோனை எடுப்பார்களாம். கடைசிப் பையன் எடுத்தால் பள்ளிக்கூடத்தில் ஒப்பிப்பது போல, "ஜே. முருகன்" என்று சொல்வான். இந்தத் தொந்தரவு தாங்காமல் என் மனைவி, "நீங்கள் போகும்போது உங்கள் அறையைப் பூட்டிக்கொண்டு போய்விடுங்கள். இந்தக் குரங்குகள் பண்ணுகிற குறும்புகள் என்றால் பொறுக்க முடியவில்லை. ஒரே ரகளையாக இருக்கிறது" என்றாள்.

ஒரு நாள் பூட்டிக்கொண்டு போனேன். வெளியிலிருந்து வந்தேனோ இல்லையோ, என் மனைவி சண்டையிடத் தொடங்கிவிட்டாள். "டெலிபோன் மணி லபோ லபோ என்று அடித்துக் கொண்டிருக்கிறது. யார் கூப்பிட்டார்களோ, தெரியவில்லை. நீங்கள் அறையைப் பூட்டிக் கொண்டு போய்விட்டீர்கள். டெலிபோன் இருந்து என்ன பிரயோசனம்?'" என்று இரைந்தாள்.

"நீதானே, இந்த வால்கள் சும்மா இருப்பதில்லை, ஆகையால் பூட்டிக்கொண்டு போங்கள் என்று சொன்னாய்?" என்று கேட்டேன்.

"ஏதோ வார்த்தைக்குச் சொன்னால் நீங்கள் இப்படியா செய்வது? எதிர்வீட்டுப் பெண் யாருடனோ பேசவேண்டுமென்று படியேறி வந்தாள்; ஒரு நாளும் வராதவள் வந்தபோது கதவு பூட்டியிருக்கிறது என்று சொல்லி அனுப்பி விட்டேன்; அப்போது எவ்வளவு அவமானமாக இருந்தது தெரியுமா?"

அப்போதுதான் அவள் கோபத்துக்குக் காரணத்தைத் தெரிந்துகொண்டேன். பூட்டுவதை விட்டுவிட்டேன்.

இப்போதும் யாரிடம் பேசினாலும் எனக்கு டெலிபோன் இருக்கிறதென்றும் எப்போது வேண்டுமானாலும் பேசலாமென்றும் சொல்லி வைத்தேன். எத்தனையோ அலைச்சலை மிச்சப்படுத்திக் கொண்டதாகவே எண்ணினேன்.

எனக்கு டெலிபோன் இருப்பதை அன்பர்கள் அறிந்து கொண்டார்கள்; அடிக்கடி கூப்பிட்டார்கள். சாப்பிட்டுக் கொண்டிருப்பேன்; அப்போது டிரிங் டிரிங் என்று மணி அடிக்கும். குழந்தைகள் ஓடுவார்கள்; டெலிபோனை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு, "அப்பா, அப்பா!" என்று கத்துவார்கள். "யாரோ கூப்பிடுகிறார்கள்; சீக்கிரம் சாப்பிட்டு வா" என்று கூவுவார்கள். டெலிபோனில் கூப்பிட்டவர் அந்தக் கூப்பாட்டைக் கேட்டிருப்பார்; அவர் சிரித்திருப்பார். அவசர அவசரமாகச் சாப்பிட்டு வந்து பேசுவேன்; ஒன்றும் இராது; ஏதோ தப்பு எண்ணாக இருக்கும்!

மத்தியான்ன வேளையில் அலுப்பாகக் கொஞ்சம் படுத்துக்கொள்ளலாம் என்று கட்டையைக் கிடத்துவேன். அப்போது பார்த்து, 'டிரிங், டிரிங்' என்று அடிக்கும். 'இந்தச் சனியனை ஏண்டா வைத்தோம்!' என்று தோன்றும். டெலிபோனை எடுத்து வைத்துவிட்டுக் கொஞ்ச நேரம் படுத்திருக்கலாம் என்று எண்ணுவேன். கழுத்தைத் திருகிப் போட்டால் பேச்சு வராது அல்லவா? அது போலத் தான் 'ரிஸீவரை' எடுத்துக் கீழே வைப்பேன். அரைமணி கழித்துப் பழையபடி வைத்துவிட்டால் ஓர் அன்பர் குறை கூறுவார். "அதென்ன ஸார், மணிக்கணக்காகக் கூப்பிடுகிறேன்; உங்கள் டெலிபோன் எப்போதும் இயங்கிய வண்ணமாகவே இருக்கிறது" என்பார். அவர் சொல்வது முக்கியமான சமாசாரமாக, உடனே புறப்பட்டுப் போக வேண்டிய காரியமாக இருக்கும். 'முன்பே தெரிந்திருந்தால்

நிதானமாகப் போகலாமே!' என்று வருந்துவேன். அது யார் தவறு?

ஏதாவது சுவாரசியமாக எழுதிக்கொண்டிருப்பேன். எதையாவது எழுதினால் ஒரேயடியில் எழுதி முடித்தால் தான் எனக்கு ஓடும். நடுவிலே நிறுத்தினால் முன்பு எழுதியதைக் கிழித்துப் போட்டுவிட்டுப் புதிதாகத்தான் எழுதுவேன். இப்படியே வழக்கமாகி விட்டது. பாதி எழுதிக் கொண்டிருக்கும்போது 'டிரிங், டிரிங்' அடித்தால் கவனிக்க மாட்டேன். கூப்பிடுகிறவர் விடாக்கண்டராக இருந்து விட்டால் ஆபத்துத்தான். டெலிபோன் வைத்த புதிதில் வீணாகானமாக ஒலித்த அந்த மணி இப்போது நாராசமாக இருக்கும். பல்லைக் கடித்துக்கொண்டு எடுத்து, "யார்?" என்று கேட்பேன். கல்கத்தாவிலிருந்து வந்திருக்கும் நெருங்கிய நண்பர், தம் குடும்ப சமாசாரத்தைச் சொல்வார்; எப்போது வந்து பார்க்கலாம் என்று கேட்பார். என் கோபம் மாறிவிடும். அவர் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராக இருப்பார். பேசி முடித்துவிட்டு மீண்டும் தொடர்ந்து எழுதத் தொடங்கினால் மூளை 'பிரேக்' போட்டது போல நின்றுவிடும்.

எங்கள் எதிர் வீட்டில் ஒரு பெரிய கம்பெனி மானேஜர் இருக்கிறார். அவருக்கு இன்னும் டெலிபோன் வரவில்லை. அவருடைய மனைவி இளம் பெண். அவளுக்குப் பல தோழிமார்கள். அந்தப் பெண்மணி கையில் பதினைந்து நயா பைசாவை வைத்துக்கொண்டு வருவாள். அவள் வரும் போதே என் மனைவி அவளை எதிர்கொண்டு அழைப்பாள். பெரிய வேலைக்காரர் மனைவி எளிதில் வந்து விடுபவளா? டெலிபோனைச் சாக்கிட்டாவது வருகிறாளே என்று என் மனைவிக்கு மகிழ்ச்சி. "காசு கீசு வேண்டாம்" என்பாள் அவள். அந்தப் பெண்மணி கேட்கமாட்டாள்.

"கொஞ்சம் இந்தப் பக்கம் வருகிறீர்களா?" என்று என் மனைவி என்னிடம் வந்து மெல்லச் சொல்வாள். எதிர்

வீட்டு மங்கை டெலிபோனில் பேசவேண்டுமே; அதற்காகத்தான். நான் எதையாவது ஆழ்ந்து படித்துக் கொண்டிருப்பேன்; அல்லது எழுதிக் கொண்டிருப்பேன். அப்போது இந்த இடையீடு. நாகரிக மங்கைக்கு உதவி செய்வது ஆண்மைக்கு அழகல்லவா? அதோடு என் வீட்டு ராணியின் பலத்தோடு புகும்போது நான் மறுக்க முடியுமா? பேசாமல் எழுந்து கூடத்துக்குச் செல்வேன். டெலிபோனை என் மேஜையின்மீது பொருத்தியது தவறோ என்று ஆராய்வேன். அந்தப் பெண்மணி ஒரு நிமிஷமும் பேசுவாள்; பத்து நிமிஷமும் பேசுவாள். அது யாருடன் பேசுகிறளோ, அதைப் பொறுத்தது. பழைய கல்லூரித் தோழியாக இருந்து விட்டாலோ கேட்க வேண்டாம்; தமிழ் பாதி, இங்கிலீஷ் பாதி, சிரிப்புப் பாதி, கொஞ்சலான மிரட்டல் பாதி- இப்படியாக இருபது நிமிஷம் அந்த நிகழ்ச்சி நிகழும்.

எங்கள் பக்கத்து வீட்டில் என் நெருங்கிய நண்பர் இருக்கிறர். அவருக்குச் சென்னையில் உறவினர்கள் அதிகம். அவர்கள் அதிகமாக அங்கெல்லாம் போவதில்லை. அதற்கும் சேர்த்து அவருடைய தாயாரும் மனைவியும் போய்ப் பார்த்துப் பேசிவிட்டு வருவார்கள். அவர்களில் இரண்டு பேர் வீட்டில் டெலிபோன் இருந்தது. அந்த வீடுகளில் யாருக்காவது ஜலதோஷம் பிடித்தாலும் போதும்; என் டெலிபோனுக்குத் தலைவலி வந்து விடும்.

டிரிங், டிரிங்... டக்... "யாரது?"

"கொஞ்சம் பக்கத்துவீட்டு அத்தையைக் கூப்பிடுகிறீர்களா?" என்று ஒரு பெண் குரல் கேட்கும். நான் ஜன்னல் வழியாகப் பக்கத்து வீட்டுக்காரரைக் கூப்பிட்டுச் செய்தி சொல்வேன். அந்த அத்தை வந்து பேசுவாள்; அவள் மருமகள் வந்து பேசுவாள். அரைமணி என் வேலை கெட்டு விடும்.

இந்தத் தொந்தரவுகளையாவது சகித்துக் கொள்ளலாம். வேறு ஒருவகைத் தொல்லையை எண்ணும்போதுதான் எரிச்சல் எரிச்சலாக வருகிறது. அவசர அவசரமாக ஒருவர் கூப்பிடுவார். அவருக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இராது. அவர் டெலிபோன் வழியாகப் பேசத் தெரிந்தவர்; நான் டெலிபோன் வசதி உள்ளவன்; அவ்வளவுதான். அவர், "ஸார், ஸார், ஓர் உபகாரம்: என்னை மன்னித்துக் கொள்ளவேண்டும்; அந்த நாலாந் தெருவிலுள்ள...... அவரைத் தயை செய்து கூப்பிடவேண்டும். ஒரு முக்கியமான சமாசாரம். உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறதற்கு வருந்துகிறேன். யாரையாவது அனுப்பி அவரை அழைத்துவரச் சொல்லுங்கள். பெரிய உபகாரம்" என்று கெஞ்சுவார். மனிதர் ஏதோ சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருப்பார் என்று தோன்றும், பையனை விட்டு அவரை அழைத்துக் கொண்டு வரச் சொல்வேன். அவர் வந்து பேசுவார். இன்னும் ஒரு வாரம் கழித்து எங்கோ போவதாக ஏற்பாடானதை, இரண்டு நாள் தள்ளிப் போட்டிருப்பதாகச் சொல்லுவார், அவசரப்பட்ட ஆசாமி. இதற்குத்தான் இத்தனை கெஞ்சல், இத்தனை கொஞ்சல்!

மணி இரவு பதினொன்று; டிரிங் டிரிங் கேட்கும்; நான் எடுக்க மாட்டேன்; என் மனைவி எடுத்துக் கேட்பாள், "பாவம்! யாருக்கோ உடம்பு சரியில்லையாம்!" என்று என்னிடம் இரக்கத்தோடு சொல்வாள், "இது டாக்டர் வீடு அல்லவே!" என்று நான் சொல்வேன். "அவர்களுக்கு யாரோ இங்கிருந்து வரவேண்டுமாம்" என்று அவள் கூறுவாள். "நீ போகப் போகிறாயா?" என்று கிண்டல் பண்ணுவேன், "நன்றாயிருக்கிறது நீங்கள் பேசுவது! ஆபத்து ஸம்பத்து என்பது எல்லோருக்கும் உள்ளது தானே? மனிதர்களுக்கு மனிதர் உபகாரம் பண்ணி விட்டால்..." "சொல்லுங்கள்... நாலாந்தெருவா?... ராமகிருஷ்ணா... அத்தையா... ருக்மிணி அம்மாளா?....

வரச்சொல்கிறேன்'' என்று அவளே பேசி முடித்து விடுவாள். அவசர அவசரமாகப் பையனை எழுப்பி அந்த நள்ளிரவில் நாலாந்தெருவில் உள்ள ருக்மிணியம்மாளை உடனே மண்ணடிக்குப் போகும்படி சொல்லி அனுப்புவாள்.

பகல் பதினொரு மணி. பையன்கள் பள்ளிக்கூடம் போய் விட்டார்கள், வீட்டில் நான் மட்டும் தனியாக இருந்தேன். டெலிபோனில் யாரோ கூப்பிட்டார்கள். யாரோ ஒருவர் விம்மினபடியே பேசினார். "ஸார், ஸார். அந்த ஐந்தாந் தெருவில் என் தம்பி...... இருக்கிறான், அம்மா செத்துப் போய்விட்டாள் என்று சொல்லி உடனே வரச் சொல்லுங்கள்.''— அவர் அழுதுகொண்டே சொன்னார். ஐந்து தெருத் தாண்டிச் சமாசாரம் சொல்ல யார் ஆள்? ஆள் இல்லை என்று சொல்லுகிற செய்தியா அது? அந்த அம்மாள் காலை வேளையிலே செத்துப் போயிருக்கக் கூடாது? அப்போது எங்கள் பையன்களில் ஒருவனிடம் சொல்லி அனுப்பலாமே!

இப்போது வேறு என்ன செய்கிறது? ரிஸீவரைத் தனியே வைத்துவிட்டு, பனியனோடு வேகமாகப் போனேன். ஐந்தாந் தெருவுக்குப் போய்ச் சமாசாரம் சொன்னேன். நல்ல சமாசாரம் அல்லவா? அந்த மனிதர் வந்தார். அந்தக் கண்ணராவியில் நான் அலைந்தது கூட மறந்து போய் விட்டது.

வேலை கெடுகிறது; தூக்கம் கெடுகிறது; சம்பளம் இல்லாத வேலைக்காரனாக உழைக்க வேண்டியிருக்கிறது! இத்தனை தொல்லைகளையும் பொறுத்துக் கொண்டு அந்த டெலிபோனை வைத்திருப்பானேன் என்று பல சமயங்களில் தோன்றுகிறது. ஆனாலும்......

டிரிங்...டிரிங்...

டெலிபோன்தான்; பேசிவிட்டு வருகிறேன்.